padippakam

# மக்கள்...
# மக்களால்...
# மக்களுக்காக...



வி. ஜீவகுமாரன்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

மக்கள்... மக்களால்... மக்களுக்காக...

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# மக்கள்...
# மக்களால்...
# மக்களுக்காக...

வி. ஜீவகுமாரன்

மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்

32/9 ஆற்காடு சாலை சென்னை 24

தமிழ்நாடு இந்தியா

படிப்பகம்

padippakam

**Makkal... Makkalal... Makkalukkaha...**
(Novel)

By
**V. Jeevakumaran ©**

**Illustration : Vinoth Kamaraj (BFA)**

**First Edition**
March 2009

Mithra : 186
ISBN : 978 - 81 - 89748 - 73 - 9

Publication Editor
**Espo**

Mithra Books are Published by
**Dr. Pon Anura**

Pages : 352
Price : Rs. 190 /-

Printed & Published by
**Mithra Arts & Creations Pvt Ltd.,**
32/9 Arcot Road, Kodambakkam,
Chennai - 600 024.
Ph : 2372 3182, 2473 5314
www.mithra.co.in

படிப்பகம்

padippakam

# என்னுரை...

யாவும் கற்பனை அல்ல என்ற எனது முதலாவது தொகுதிக்கு நல்ல வரவேற்பையும் காத்திரமான விமர் சனங்களையும் முன்வைத்த அனைத்து வாசகர் களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த நூலினுள் நுழைகின்றேன்.

தீபம் ரீ. வி.யின் நேர்காணல் உட்பட, பல நேயர்களால் யாவும் கற்பனை பற்றிய விமர்சனத்தில் முன்வைக்கப் பட்ட ஒரே கேள்வி : எதற்காக எம் தேசத்தின் சமகாலப் போர்ச் சூழலை நான் பிரதிபலிக்கவில்லை என்பது தான்.

அதற்கான ஒரே பதில்... போராட்டச் சூழலில் இருந்து தப்பி, ஐரோப்பியச் சூழலில் இருந்துகொண்டு, அவர் களின் இரத்தமும் சதையும் தோய்ந்த வேதனைகளுக்கு நான் கற்பனை வடிவம் கொடுக்க விரும்பவில்லை என்பதுதான்... அவர்களின் சோகங்களை, வேதனை களை எழுத எம் மண்ணில் ஆயிரம் பேனாக்கள்

படிப்பகம்

இருக்கின்றன... இந்தியன் ஆமியின் கவசவாகனங்கள் மக்கள் மீது ஏறிச் சென்றது புலம் பெயர்ந்த எங்களுக்கு ஒரு செய்தி. புலத்தில் இருப்பவர்களுக்கோ ஆழமாகப் படிந்துவிட்ட தழும்பு. இந்த வேதனைகளை அவர்கள் தான் வெளிப்படுத்த வேண்டும்... நாம் வெளிப்படுத்த விரும்பினால் அதுக்கு உயிர் இராது... எனவேதான் நாட்டில் நிகழும் நிகழ்வுகளை எனது கதைக் கருவுக் காகக் கையாடல் செய்ய விரும்பவில்லை.

மாறாக... புலம்பெயர்ந்த மக்களின் மறைமுகமானதோ... அன்றி நேரடியான உதவிகள் எம் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றன என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல் மக்களைச் சந்திக்கும் இயக்கங்களின் பிரதிநிதிகளின் நடவடிக்கைகள் காரணமாக இந்தஆதரவாளர்கள் போராட்டப் பாதையில் இருந்து விலகிச் செல்வதும்... மாற்றுச் சக்திகளின் இழுப்பில் போய்... இனத்திற்கே துரோகிகள் ஆவதும் ஐரோப்பிய நாடுகளில் கண்கூடு.

இந்து சமயத்தின் அழுத்தங்களில் இருந்து விடுதலை யடைய... அல்லது அதன்மீது தங்களின் அதிருப்தியை அல்லது தம் கோபத்தைக் காட்டுவதற்கு மக்கள் முஸ்லீம் சமயத்துக்கும் கிறிஸ்தவ சமயத்திற்கும் மாறியதுபோல புலம் பெயர்ந்த நாடுகளில் அழுத் தங்கள் காரணமாக மக்கள் வேறு வழிகளுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது கண்கூடு.

சுமார் கால் நூற்றாண்டு காலமாக ஐரோப்பியத் தளத்தில் நிற்கும் மக்களுடன்... அல்லது ஐரோப்பிய வாழ்க்கை முறையை உள்வாங்கி... தாய் மண்ணில் நின்று சற்று அந்நியப்பட்டுவிட்ட ஐரோப்பியத் தமிழர்களுடன் ஐரோப்பியத் தளத்தில் நின்றுதான் பேச வேண்டுமே தவிர, ஒரு யாழ்ப்பாண அல்லது வன்னி மண்ணின் களத்தில் நின்று பேசினால் அப்பேச்சு விரைவில் முறிவடைந்து போய்விடும் - கடந்தகால எம் சமாதானப் பேச்சு வார்த்தைகள் போல...

எனவேதான், இந்தக் கதையை பூரணமாக வாசித்த பின்பு, மக்களுக்காக மக்களை மக்கள் அணுகும் முறைகளை மீண்டும் ஒரு தடவை பரிசீலனை செய் வீர்கள் ஆயின் இக்கதையினை நான் எழுதியதற்கான நோக்கம் நிறைவு பெறும் என நிம்மதி கொள்வேன்.

இக்கதைக்கு உயிரும் உணர்வும் கொடுக்க எம் தாய்மண்ணில் நிகழ்ந்த கடந்த கால சம்பவங்களை எடுத்துக் கொண்டேன்... இன்றைய புலம் பெயர்ந்த தமிழர்களின் மூலம் இலங்கையின் தமிழ்ப் பிரதேசங் கள் என்பதால்... அவர்கள் இங்கு வாழ்ந்தாலும் அவர்களின் சுயம் அங்கிருந்து பெற்றுக்கொள்ளப் பட்டதால் எனது கதையின் களமும் இலங்கை யிலும் ஐரோப்பாவிலும் உருவாக்கப்பட்டுள்ளது. அது வழமைபோல என் கதைகளில் இருந்து பிரிக்கப்பட முடியாது போகின்றது.

## நன்றிக்குரியவர்கள்

இந்த நூலின் ஆக்க காலங்களில் என்னுடன் வாதிட்டு இதனை ஒரு முழுமையான படைப்பாகக் கொண்டுவர உதவிய என் நண்பர்கள் அனைவருக்கும்...

இந்த இருபத்தைந்து வருட காலத்தில் மறந்துபோன பிரதேச வழக்கிலுள்ள சொற்கள் என் பேனா முனைக்குள் நின்று சிக்கடித்தபொழுது அவற்றை அவ்வப்போது தேடித்தந்த இங்கிருப்போருக்கும்... அங்கிருப் போருக்கும்...

இலங்கையில் நடந்த கலவரங்கள்... தீவைப்புகள் போன்றவற்றின் சரித்திரப் பின்னணிகளையும் கால கட்டங்கள் பற்றிய விபரங்களையும் தந்துதவிய நூலகவியலாளரும், நூல் தேட்ட வரிசை ஆசிரியருமான திரு. என். செல்வராஜா அவர்களுக்கும்...

பிஞ்சுக்கரம் தொட்டு அரிசி மீது “அ” கற்றுக்கொடுத்த எனக்கு, ஈர் பத்து வருடங்களுக்குப் பின்பு தன் கையினால் தூரிகை பிடித்து ஓவியம் வரைந்து இந்த நாவலுக்கு தன் அன்பை காணிக்கை செய்த என் மகன் முறையான வினோத் காமராஜாவுக்கும்...

இந்த நாவல் சில சர்ச்சைகளை ஏற்படுத்தும் எனத் தெரிந்தும், நல்ல ஓர் இலக்கியப் படைப்புக்கு உறுதுணையாக நின்று முன்னீடு எழுதி இதனைப் பிரசுரிக்கும் என் மதிப்புக்குரிய இலக்கியச் சண்டியக்

காரன் திரு. எஸ். பொ. அவர்களுக்கும், அவரது நிறுவனத்தைச் சார்ந்த அனைத்து ஊழியர்களுக்கும்...

இந்த நூலின் இறுதிக்கட்டப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபொழுது எழுந்த பெரும் நேர நெருக் கடியில் இருந்து என்னை விடுவிப்பதற்காக, என் அன்றாடப் பணிகள் அனைத்தையும் தானே பொறுப் பேற்று, இந்த நூல் நல்ல முறையில் வெளிவரு வதற்கு தோன்றாத்துணையாக விளங்கியவரும்... என் எழுத்துகளுக்கு என்றும் முதல் விமர்சகராக விளங் கும் என் சின்னவயது இலக்கியத்தோழி கலாநிதி ஜீவகுமாரனுக்கும்... வழமைபோல அவர்களுடன் இருக்க வேண்டிய நேரத்தை உங்களுடன் இருக்க அனுமதித்த மிதிலா – மீராவிற்கும் என் நன்றிகள்...

இங்ஙனம்
**வி. ஜீவகுமாரன்**
புவியியல் சார்ந்த கணனிப் பதிவு பொறுப்பாளர்
(Administrator : Geographic Information System
Odsherreds Municipal Council)
புலம் பெயர்ந்தோருக்கான அரச நூலக தமிழ்ப்பகுதி ஆலோசகர்
(State Library for immigrants - Denmark)

முகவரி :
Hojvangsparken - 7
4300 Holbaek
Denmark
தொலைபேசி : 0045 - 59 46 45 47
கைத்தொலைபேசி : 0045 - 22 30 31 34
மின்னஞ்சல் : jeevakumaran5@yahoo.com

padippakam

# முன்னீடு

மானிடத்தை ஆராதனை செய்து, மக்களின் சம உரிமைகளுக்காக ஆத்மார்த்தமாக உழைத்த உலகப் பெருந்தலைவர்களுள் ஆபிரகாம் லிங்கன் முக்கியமானவர். இன்று அமேரிக்கா தன்னை உலகப் போலீஸ்காரனாக நியமித்து, உலகின் அரசியல் தன்னையே மையமாகக் கொண்டு நிகழுதல் வேண்டும் என்கிற ஆணவத்தில் கூத்தாடுவதினால், ஆசிய மக்கள் லிங்கனின் மாந்தநேயப் பங்களிப்பினை உரிய முறையிலே மகிமைப்படுத்தாதிருத்தல் துரதிர்ஷ்ட வசமானது.

இந்த ஆண்டில் அமேரிக்காவின் அதிபராக ஒபாமா என்னும் கறுப்பர் பதவியேற்கும் அற்புதத்திற்கு கால்கோள் நாட்டியவரும் லிங்கனே! அமேரிக்காவின் பதினாறாவது அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட அவர், இரண்டரை நூற்றாண்டு காலம் அமேரிக்க மண்ணிலே நிலை கொண்டிருந்த அடிமை முறையை ஒழித்து, விமுக்தி அறிக்கையைப் (Emancipation Proclamation) பிறப்பித்து, அமேரிக்க யாப்பிலே பதின்மூன்றாவது திருத்தத்தைக் (Amendment) கொண்டு வந்தார். அதுவரையில் ஒன்றேகால் கோடி ஆபிரிக்கர்கள் அடிமைகளாக அமேரிக்க மண்ணிற்குக் கொண்டு வரப்பட்டார்கள் என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. தமது கொள்கைக்காக, மாந்தநேய ஊழியத்திற்காக, படுகொலை செய்யப்பட்ட முதலாவது அமேரிக்க அதிபரும் அவரேயாவர்.

“நமது சுதந்திரப் பிரகடனத்தில் விவரிக்கப்பட்டுள்ள வாழ்தல், சுதந்திரம், மகிழ்வினைப் பின்தொடருதல் ஆகிய உரிமைகள் ஏன் நீக்கிரோக்களுக்கு இருத்தல் ஆகாது என்பதற்கு உலகில் எந்த நியாயமும் இல்லை. வெள்ளைத்தோல் மனிதனுக்கு உள்ள இந்த உரிமைகளுக்கு, அவனும் (அடிமையும்) அதே அளவு உரிமை

படிப்பகம்

யுடையவன்... எண்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கண்டத்திலே ஒரு புதிய தேசத்தை உருவாக்கிய நமது மூதாதையர் சுதந்திரத்தை மனதிற்கொண்டு, எல்லா மனிதர்களும் சமமாகவே படைக்கப்பட்டவர்கள் என்கிற கருத்துக்கு அர்ப்பணம் செய்தார்கள்... யாராவது அடிமைத்தனத்தை நியாயப்படுத்திப் பேசுவதைக் கேட்டால், அந்த அடிமைத்தனம் அவன்மீது தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்க்கப்படுதல் வேண்டும் என்கிற வலுவான உத்வேகம் எனக்குப் பிறப்பதுண்டு... மற்றவர்களுக்கு சுதந்திரத்தை மறுப்பவர் கள், சுதந்திரத்தை அநுபவிக்க அருகதையற்றவர்கள்... உங்கள் உள்ளத்திலே மனிதர் சகலரும் சுதந்திரமானவர்களாகவும் சமமான வர்களாகவும் படைக்கப்பட்டவர்கள் என்ற சந்தேகத்திற்கு இடமற்ற சுதந்திர தீபம் சுடரும் என்ற நம்பிக்கையுடன் விடை பெறுகிறேன்" என்றெல்லாம், ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்னரே பேசிய மாந்தநேயர். இன்று ஜனநாயகம் என்னும் பெயரால், சிங்கள இனவாத மேலாதிக்கத்தை நியாயப்படுத்தும் தெற்காசிய மக்கள் சகலரும் ஆபிரகாம் லிங்கனின் வாழ்வையும் வாக்கையும் மறுவாசிப்புக்கு உட்படுத்துதல் வேண்டும் என்கிற எழுச்சி என்னை அறியாமலே இந்நூலினை வாசிக்கும் பொழுது என்னுள் எழுந்தது. இன்னுமொன்று. இனவாதச் சிங்கள அரசியல்வாதிகள் புத்தரின் அகிம்ஸா வேதத்தை முழுசாகவே விழுங்கிய செமியாக் குணத்தைப் போக்க, லிங்கனின் கொள்கைகளைக் கஷாயமாக்கிக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மகாகொடுமை.

மார்க்ஸியவாதியாக என் ஞானத் தேடல்களை இன்றளவும் மேற்கொள்ளும் எனக்கு, ஆபிரகாம் லிங்கனின் அரசியல் ஆளுமை மீது ஏற்பட்டுள்ள மயல் முரண்பட்டதாகத் தோன்றவுமில்லை.

"உழைப்பு, மூலதனத்திற்கு முற்பட்டதும், அதிலிருந்து சுயாதீன மானதுமாகும். உழைப்பின் கனியே மூலதனம். உழைப்பு முதலிலே தோன்றியிருக்காவிட்டால், மூலதனம் தோன்றியிருத்தல் சாத்தியமல்ல. உழைப்பு, மூலதனத்திலும் மேன்மையானது; எனவே, அதுபற்றி நாம் அதிகமான அக்கறை செலுத்துதல் வேண்டும்" என்று மார்க்ஸிய வேதம் பரவுவதற்கு முன்னரே பேசிய அவர், "நான் நிகழ்வுகளை வழிநடத்தினேன் என்று உரிமை பாராட்டமாட்டேன்;

மிகத் தெளிவாக நிகழ்வுகளே என்னை வழிநடத்தியுள்ளன என்பதை உணருகிறேன்" என எளிமையான உண்மை பேசும் அரசியல்வாதி யாக வாழ்ந்தார். அவரே மிகவும் எளிய, ஆனாலும் அர்த்தம் செறிந்த முறையில் ஜனநாயகம் என்பது 'The government of the people, by the people and for the people' என அறிக்கை செய்தார். அதன் தமிழாக்கம் போன்று இந்நூலின் தலைப்புத் தோன்றலாம்.

ஆனால், இது தமிழ் புனைவு இலக்கியத்திற்கு வந்துள்ள புதிய நாவலாகும். சென்ற ஆண்டில் 'யாவும் கற்பனை அல்ல' என்கிற புதுப்புனைவினைத் தந்த, டென்மார்க்கில் புலம்பெயர்ந்து வாழும் வி.ஜீவகுமாரன் என்கிற இலக்கியப் படைப்பாளி இந்த ஆண்டில் தமிழுக்குத் தந்துள்ள புதுப்படைப்பு இது. புலம்பெயர்ந்து வாழும் இலக்கியப் படைப்பு ஊழியர்கள் எத்தகைய இடர்பாடுகளின் மத்தியிலே இலக்கியப் படைப்பு முயற்சியை மேற்கொள்ளுகிறார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களுக்கு அது பணியல்ல; பாடு. இந்நிலையில், ஒரே ஆண்டில் ஜீவகுமாரன் இத்தனை பக்கங்களிலே இந்நாவலை எழுதியுள்ளமை என்னைப் பிரமிப்பில் ஆழ்த்துகின்றது.

நாவலை வாசித்து அதில் மூழ்கியபொழுது நெகிழ்ந்தேன். நல்ல இலக்கியம் நெகிழ்ச்சியை ஏற்படுத்துதல் வேண்டும் என்று நம்புபவன் நான். அத்துடன் மகிழ்ந்தேன். புலம்பெயர்ந்த எழுத்தா ளர்கள் கதை சொல்வதற்குப் புதிய படுதாவைத் தேடுவார்கள்; புதிய சங்கதிகளைச் சொல்ல முனைவார்கள்; இலக்கியத்திற்கு புதிய வடிவங்களும் சொற்களும் சேர்க்க விழைவார்கள் என்கிற என் எதிர்வு கூறலை எண்பிக்கும் புனைவுகளுள் 'மக்கள்... மக்களால்... மக்களுக்காக...' என்னும் இந்த நாவல் முக்கியமானது என்பதினால் மகிழ்ந்தேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 'மாயினி' என்கிற என் நாவல் பிரசுரமாகியது. அதற்கு எழுதிய என் 'முன்னீடு'வில் 'இறுதியாக ஒன்று. தமிழிலே முதலாவது அரசியல் நாவல் ஒன்றினை எழுதும் முயற்சி என்று மட்டும் இதனைப் பாராட்டமாட்டேன். மகா கசப்பான உண்மைகளின் கோப்பாகவும், சமகால இலங்கை அரசியல் பற்றிப் படிக்கப்போகும் வருங்கால மாணாக்கர்களுக்கு வரலாற்று ஆவண மாகவும் இந்நூல் அணுகப்படுதல் வேண்டும்' என எழுதினேன்.

padippakam

இந்த வாசகம் அட்சரம் பிசகாது வி.ஜீவகுமாரனின் இந்த நாவலுக்கும் பொருந்துகின்றது. இலங்கையின் அண்மைக்கால அரசியல் என்னும் படுதாவிலேதான் கதை நெய்யப்பட்டுள்ளது. கதை சொல்லியே கதையின் நாயகன். சுதந்திரத்துக்குப் பின்னர் சிங்களர் நடத்தும், அறமும் – அறிவும் – நாகரிகமும் சாராத அரசியல் எவ்வாறு ஈழத்தமிழ் இனத்தைப் பாதித்ததோ, அவ்வாறே அந்த இனத்தைச் சேர்ந்த தனி மனிதரையும் பாதித்துள்ளது. அந்த நிகழ்வுகள் வரலாறு போன்று அல்லாது, தனி மனிதர் வாழ்க்கையைப் பாதித்த அரசியலாகவே கையாளப்பட்டுள்ளன. என் மாயினியில் அரசியல் வாதிகளின் செயற்பாடுகள் காட்டமாக விமர்சிக்கப்பட்டுள்ளன. என் பாணி வேறு. இங்கு அது தவிர்க்கப்பட்டு, ஈழத்தில் தமிழினத்தை அடிமைகளாக்க நடைபெறும் வலோற்காரம் எவ்வாறு தமிழ் மக்களுடைய வாழ்க்கைப் போக்குகளைப் பாதிக்கின்றது என்பதை நேர்மையாகவும் நேர்த்தியாகவும் சித்திரித்துள்ளார். அத்துடன் அந்த அரசியலின் நீட்சியாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் உருவாகிக் கொண்டிருக்கும் அவலச் சூழலையும் ஜீவகுமாரன் தமது நாவலுக்கான பாடுபொருளாக்கியுள்ளார். சகோதரச் சண்டை புலம்பெயர்ந்த நாடுகளுக்குக் கடத்தப்பட்டுள்ளது என்பது போன்ற ஒரு கோலம் காட்டினாலும், இறுதியில், அனைத்துக் குளறுபடிகளையும் உற்பவித்து, பிரசவித்து, ஆட்சிக்குக் கொண்டுவந்துள்ளதில் கண்ணுக்குச் சடுதியாகப் புலனாகாத ஓர் அமைப்புக்குப் பங்குண்டு என்பது சுட்டப்பட்டுள்ளது. ஆழமாகச் சமுத்திரத்தில் அமிழ்ந்துள்ள பனிக்கட்டிப் பாறையின் சிறிய முகடு மேலே தெரிவதுபோல அந்த அமைப்பினைச் சார்ந்தவர்களை ஜீவகுமாரன் அடையாளம் காட்டியுள்ளார். இந்தச் சடுதியான திருப்பம் என்னுள் பல மாறுபட்ட நினைவுக் கோலங்களை மத்தாப்பாக விசிறியது.

ஆபிரகாம் லிங்கன் என்கிற பாரிய அரசியல் ஆளுமையின் படுதாவிலே, இந்தியாவின் பிரதமராகச் சில காலம் பதவி வகித்த மொறாா்ஜி தேசாய் என் நினைவுக்கு வந்தார். தம்மை சர்தார் பட்டேலின் அரசியல் வாரிசு எனக் கற்பித்து நேருவுக்கே குடைச்சல் தந்த அரசியல்வாதி. நேருவின் பின்னர் தாமே பிரதமராவதற்குத் தகுதி யானவர் என அடம்பிடித்தவர். பின்னர் இந்திரா காந்தி கொண்டுவந்த

படிப்பகம்

எமர்ஜென்ஸி ஆட்சிக்கு எதிராக எழுந்த எதிர்ப்பு அலையின் காரணமாக 1977 ஆம் ஆண்டில், தமது 81 வயதில் பிரதம மந்திரியானவர். 1979 பிப்பிரவரி மாதம், ஜெயவர்த்தனா அதிகாரத்தில் இருந்தபொழுது, இலங்கைப் பாராளுமன்றத்திலே உரையாற்றிய பெருமையோ அன்றேல் சிறுமையோ அவருக்கு உண்டு.

ராஜீவ் காந்தி காலத்தில் இலங்கைக்கு 'இந்திய அமைதிகாப்புப் படை' அனுப்பப்பட்ட பொழுது, அவர் பின்வருமாறு இலங்கைப் பிரச்சினை குறித்துத் திருவாய் மலர்ந்தருளினார். "இந்திய அரசாங்கம் இதில் தலையிட்டிருக்கவே கூடாது. நம் மக்கள் வேறு நாட்டில் இருந்தால் மெஜாரிட்டியின் ஆதிக்கத்தையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். விரும்பவில்லையென்றால் திரும்பிவிட வேண்டியது தானே? பஞ்சாப் தீவிரவாதிகளுக்கு ஸ்ரீலங்கா உதவி செய்தால் நாம் ஒப்புக்கொள்வோமா? தமிழர்களுக்கு சொத்துகளும் முதலீடும் அங்கிருந்தாலும், சிங்களவர்களின் சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் கட்டுப்பட்டுத்தானாக வேண்டும்..." தமிழர்கள் இந்தியாவிலிருந்து அங்கு குடியேறி வணிகம் செய்து சிங்களரைச் சுரண்டும் ஒரு கூட்டம் என்று அவர் சத்திய விசுவாசமாகவே நம்பினார். இந்தியா என்பது பரதகண்டத்திலிருந்த பல நாடுகளை இணைத்து, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட நாடு. ஆனால், கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே இலங்கையில் தமிழ் இனம் வாழ்ந்து வந்தது. 'கிறிஸ்து சகாப்தத்திற்கு ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்பே இலங்கையில் வடக்கில் நகுலேஸ்வரமும், கிழக்கில் கோணேஸ்வரமும், மேற்கில் கேதீஸ்வரமும் முனீஸ்வரமும், தெற்கில் தொண்டேஸ்வரமும் தமிழர்களின் ஆலயங்களாகச் சிறப்புற்றுத் திகழ்ந்தன' என சிங்கள வரலாற்றாசிரியர் பீரிஸ் கூறியுள்ளார். பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து 1619 வரை, இறைமை சுகித்த தமிழர் இராஜ்யம் ஒன்று இலங்கையிலிருந்தது. போத்துக்கீசரின் பீரங்கித் தாக்குதலுக்குத்தான் அது அடிபணிந்தது. வரலாற்று உண்மைகள் இவ்வளவு தெளிவாக இருக்கும்பொழுது, மொரார்ஜி காலந் தொடக்கம், இன்றளவும் அதிகாரம் சுகிக்கும் இந்திய அரசியல்வாதிகள் ஈழத்தமிழரின் வரலாற்றை அறியாத பேதையராகவே வாழ்கிறார்கள். இது எத்தகைய கொடுமை? அண்மைக்காலத்தில்

இந்திய அரசு அரசியல் தலைமைத்துவம் தனது ஆளுமையை இழந்து, ஊழலிலே திளைக்கும் அதிகாரவர்க்கத்தின் கைப்பாவை யாகவே மாறியுள்ளதோ என அறிவுலகம் கலங்க நேரிடுகின்றது.

'முன்னீடு'வில் வைக்கப்படும் இந்த மேலதிகத் தகவல்கள் இந்த நாவல் எழுதப்பட்டுள்ள அரசியல் பின்னணியைத் தெளிவாக அறிவதற்கும், இந்த நாவலிலே புரையோடியுள்ள அரசியல் சூக்குமங்களைச் சுவைப்பதற்கும் உதவும் என நம்புகின்றேன்.

மரபு வழியில், ஜாதிய ஆசாரங்களைப் பேணும் யாழ்ப்பாணத் தில் — சங்கானை என்னும் சந்தைப் பட்டினத்தில் — பிறந்த மேட்டுக் குடியைச் சார்ந்த ஒருவனுடைய கதை இது. அவனுடைய காதல் நிறைவேறாது போகின்றது. ஜாதிய இறுக்கத்தில் வாழும் அம்மா. மறுபுறமாகத் தெளிவாகவும் துணிவாகவும் சிந்திக்கும் அப்பா. ஆனாலும் 'அப்பா என்ன கம்பீரம் – அம்மா என்ன அழகு' என்கிற வாத்சல்யம் மகனுக்கு உண்டு. இந்தக் குடும்பத்தில் பிறந்த கதாநாயகன் இலங்கை அரசியலிலே சிங்கள இனவெறி புகுத்திய வன்முறையினால் பாதிக்கப்பட்டு, புலம்பெயர்ந்த வாழ்க்கையை மேற்கொள்ளும் ஒரு சாதாரண ஈழத்தான் கதை.

கதையில் நிகழ்வுகள் மிக இயல்பாகக் கோவைப்படுத்தப் பட்டுள்ளன. அப்பாவுக்கு ஏற்பாடு செய்த ஒப்பரேஷன் பலப்பல மணி நேரங்கள் சுணக்கமடையும்பொழுது, ஏற்படக்கூடிய தவிப்புகள் மிக யதார்த்தமானவை. காலை எட்டு மணிக்கு என அறிவிக்கப்பட்ட ஒப்பரேஷனுக்கு இரவு ஒன்பது மணிக்கு என்னை ஒப்பரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் சென்றார்கள். நான் பட்ட அவஸ்தைகளை நேரில் பார்த்ததுபோல, அவர் எழுதும் பாங்கம் மிகவும் அருமை. காதல் என்பது உடலாசைகளுக்கு அப்பாலான புனிதமாகப் பாராட்டுதலும், ராசாத்தியின் குடும்பத்துக்குச் செய்யப்படும் உதவிகளும் யதார்த்தமானவையா எனக் கேட்கவேண்டாம். மனிதநேயத்தினை முதன்மைப்படுத்தும் ஓர் இலட்சியஜீவியின் ஆராதனையாக இதனைக் கொள்ளுதல் வேண்டும். நட்புக்கு இலக்கணமாக மூர்த்தி. இந்தச் சொற்ப பாத்திரங்களை வைத்துக் கொண்டு, கதையை சுவாரஸ்யமாக வாசிக்கக்கூடிய லாவகத்தில் எழுதியுள்ளார். புலம்பெயர்ந்த எழுத்தாளர்களுள் கவனிக்கத் தக்க

padippakam

நாவலாசிரியராக ஜீவகுமாரன் தம்மை நிலைநாட்டியுள்ளார் என நான் நம்புகின்றேன்.

இலங்கை, டென்மார்க் ஆகிய இரண்டு களங்களில் கதையின் பெரும்பகுதி நகர்த்தப்படுகின்றது. அமைதியாக நகர்ந்து கொண்டிருந்த நாவலின் பிற்பகுதி சடுதியான காட்சி மாற்றங்களின் ஊடாக, மர்ம நாவலின் விறுவிறுப்பினை மிக நொய்மையாகத் தூவி, சராசரி வாசகனையும் தமது படைப்பிலே ஈர்ப்பு கொள்ளும்படி செய்வதிலும் நாவலாசிரியர் வெற்றிபெறுகின்றார்.

புலம்பெயர்ந்து பல்லாண்டுகளானாலும், ஈழத்தமிழர்கள் ஈழ மண்வாசனையுள்ள சொற்களையே தமது வாழ்க்கையில் பயன்படுத்துகிறார்கள். அஃது அவர்களுக்கு இயல்பாகவும் வாகாகவும் அமைந்துவிட்ட ஒன்று. அந்தத் தமிழை அந்நியப்படுத்திவிட்டால், அவர்களுடைய படைப்புகள் செயற்கைத்தன்மை பெற்றுவிடும். அன்னநடை அபிநயிக்க விழைந்த காகத்தின் கதையாகிவிடும். இந்த உண்மையை நன்கு உணர்ந்தவராக ஜீவகுமாரன் தமது தமிழ் நடையை அமைத்துள்ளார்.

புலம்பெயர்ந்தோரின் தமிழ்ப் படைப்புகள் தனித்துவப் பிரிவாக படிக்கப்படுகின்றன. அநுபவிக்கப்படுகின்றன. விமர்சிக்கப்படுகின்றன. புலம்பெயர்ந்தோர் தமிழ்ப் படைப்புகளுக்குச் செழுமை சேர்க்கும் ஜீவகுமாரனின் தமிழ் ஊழியத்தை மனசார வாழ்த்துதும். Vaanam. dk இணையதளத்தின் மூலம் டென்மார்க் வாழ் இளங்கவிஞர்களின் ஆக்கமாக 'மெல்லத்தமிழ் இனித் துளிர்க்கும்' என்கிற நூலை வெளியிட்டுள்ளார். அது மகா முன்னுதாரணமான ஆக்கப்பணியாக அமைதமையைப் பாராட்டவும் இந்த இடம் வசதியானது.

**எஸ். பொ**

13 A Welby Street
Eastwood 2122
Australia
☎: (612) 9874 3856

படிப்பகம்

padippakam

முதலாவது பாகம்

# அம்மாவுக்கு

படிப்பகம்

padippakam

அன்புள்ள அம்மாவுக்கு, இந்தக் கடிதம் உங்கள் கைகளில் கிடைக்கும்பொழுது நான் தற்கொலை செய்து கொண்டிருப்பேன். அல்லது கொலை செய்யப்பட்டிருப்பேன்.

ஒரு கோழை என்ற பெயருடன் தற்கொலை செய்வதா அல்லது கொலை செய்யப்பட்ட பின்பு அவர்கள் எனக்கு சூட்ட இருக்கும் துரோகி என்ற அவப்பெயருடன் எங்கள் சந்ததி முழுக்க வாழவேண்டுமா என்று தெரிய வில்லை.

எனது மரணத்தால் உலகம் ஒன்றும் ஸ்தம்பித்து நிற்கப் போவதில்லை. உண்மை கள் மறைந்துவிட்டது அல்லது மறைக்கப் பட்டுவிட்டது என்று யாரும் தலைதலை யாய் அடித்துக்கொண்டு இருக்கப் போவ தில்லை.

காடாத்து, எட்டுச் சடங்கு, அந்தியேட்டி, ஆட்டத்திவஷம் என என் நினைவுகளும் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து விடும்.

அம்மா நீதான் அதிகமாய் அழுவாய். அப்பா இருந்திருந்தால் இன்னும் கவலைப் பட்டிருப்பார். நல்ல காலம் போய்ச் சேர்ந்து விட்டார்.

படிப்பகம்

padippakam



வாழ்க்கை என்பது எப்பொழுதும் நேர்கோடுகளாய் இருந்து விடுவதில்லை. ஒரு கணித மாணவன் இந்த வரைகோடு இப்படித்தான் நேர்கோடாய் இருக்க வேண்டும் என்று புள்ளிகள் போட்டு விரும்பியவாறு கோடுகள் போடலாம். ஆனால் வாழ்க்கையில் போடும் புள்ளிகளில் எங்கோ தவறுகள் வந்துவிடுகின்றன. எனவேதான் வாழ்க்கையின் கோடுகளில் வளைவுகள் வந்து விடுகின்றன.

ராசாத்தியோடு நேர்ந்தது என் வாழ்வில் பெரிய வளைவு என்று சொன்னால் இப்பொழுது ஏற்பட்டிருப்பது பெரிய ஒரு முறிவு.

அதுதான் இந்த மரண சாசனம். என் மரணத்துக்குப் பின்னால் என்னை வெட்டிக் கொத்திக் கூறுபோடாமல் இருக்க நான் முன்னெச்சரிக்கையுடன் எழுதும் இந்த மரண சாசனம்.

இந்த முன்னெச்சரிக்கை எனக்கு முன்பேயிருந்திருந் தால் இந்தக் கடிதத்துக்குத் தேவை வந்திராது.

மனத்தில் எழுந்த எண்ணங்கள் எழுத்துகளாய் காகிதத்தில் பதியத் தொடங்கியது...

அம்மா... உனக்கு ஞாபகம் இருக்கா?

நீயும் அப்பாவும் ஆறுமாத விசாவில் டென்மார்க்கிற்கு என்னுடன் வந்திருந்தபொழுது, அப்பாக்கு 65 வயது. எனக்கு 31 வயது. ஏற்கனவே சலரோகம் இருந்த அப்பாக்கு குதிக்காலில் பெரிய புண் வந்து காலை எடுக்க வேணும் என்று டெனிஷ் மொழியில் டாக்டர் சொன்னதை நான் தான் விக்கி விக்கி அவருக்கு மொழி பெயர்த்தேன்.

படிப்பகம்

padippakam



என்னை அவர் பக்கத்தே கூப்பிட்டு பக்கத்தில் அணைத்த படி, "கவலைப்படாதே" என்றார்.

யாரால் முடியும்? 65 வயதிலேயே தன் நடமாட்டத்தை இரண்டு சக்கர நாற்காலியினுள் ஒடுக்கப் போகின்றோம் என்ற எந்தக் கவலையையும் எனக்குக் காட்டாது எனக்கு ஆறுதல் சொன்னார்.

எனக்கு அப்பாவைப் பார்த்துக் கொண்டு அதிக நேரம் நிற்க முடியவில்லை.

"அப்பா சோட் லீவு எடுத்துக்கொண்டு வந்தனான். பின்னேரம் அம்மாவையும் கூட்டிக் கொண்டு வாறன்" என மனமறிந்து ஒரு பொய்யைச் சொல்லியபடி கலங்கிய கண்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு வெளிக்கிட்டன்.

"கொம்மா கவலைப்படுவா. சாப்பிடாமல் அழுது கொண்டு இருப்பா. அதுபடியாலை சாப்பிட்டபிறகு ஆறுதலாய் சொல்லு."

"ஓம்" எனத் தலையாட்டினேன்.

"காலைப் போத்தி விட்டுட்டுப் போ."

காலை போர்க்க பெட்சீற்றை எடுத்தேன். புண் மணக்கத் தான் செய்தது.

இன்னும் இரண்டு நாளைக்குத்தானே அப்பாவின் கால் களைப் பார்க்க முடியும்.

எனக்கு என்னவோ செய்தது.

அப்பாவின் கால்கள்!

வெள்ளைக்கார நேவியில் இருந்தபொழுது கம்பீர மாக வீறு நடை போட்ட கால்கள்... என்னைப் பள்ளிக் கூடத்துக்கும் சந்தைக்கும் கோயில் திருவிழாக்கும் சைக்கிளில் வைத்துக்கொண்டு உழக்கித் திரிந்த

படிப்பகம்

padippakam



கால்கள்... எங்கள் அனைவரின் உடுப்புகளையும் தோய்த்து முடித்து அம்மாக்கு பெரிய வாளியில் தண்ணி மொண்டு குசினியடிக்கும் கிணற்றடிக்கும் ஓடிய கால்கள்... இப்படி ஓடி ஓடித் திரிந்த கால்களின் அடிப்பாதத்தில் புண் வந்து அது பெருத்து... இப்பொழுது...

என்னைக் கவலைப்படாது போய்விட்டு வா என்று சொன்ன அவரது தைரியத்தின் ஏதோ ஒரு துளி என்னுள் எங்கேயோ ஒளிந்து கொண்டிருக்க வேண்டும்... இல்லாவிட்டால் அது எங்கிருந்து எனக்கு வந்தது?

இல்லாவிட்டால் எப்படி அவர்களிடம் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டிருக்க முடியும்?

“எந்த விடுதலை இயக்கங்கள் ஆயினும் அவர்கள் பிழை விடும்பொழுது அவர்களையே கேள்வி கேட்கும் குறைந்த பட்ச ஜனநாயக உரிமைகள் ஆவது மக்களுக்கு வேண்டும். அஃதில்லையாயின் சிங்களவனிடமே அடிமையாக இருந்திருக்கலாமே!”

இஃதொன்றும் பெரிய சபையைக் கூட்டி அல்லது நீங்கள் நல்லவர்களா? அல்லது அவர்கள் நல்லவர்களா? என்ற வாக்குவாதத்தில் எழுந்த கருத்து அல்ல. சிவராசா அண்ணையின் இருபத்தைந்தாவது கலியாண விழா வுக்குப் போயிருந்த பொழுது சாப்பாடு முடிந்த பின்பு பீடா போட்டுக்கொண்டு ஊர் உலக அரசியல் கதைத்துக் கொண்டிருந்தபொழுது தானாகவே எழுந்த வாக்கு வாதத்தில் எழுந்ததுதான்.

எங்கள் மேசைக்கு அடுத்த மேசையில்தான் அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

அதில் அநேகமானோரை எனக்கும் தெரியும்; என்னை அவர்களுக்கும் தெரியும்.

படிப்பகம்

padippakam



ஒருவர் மட்டும் புதிய முகம்.

ஆனால் அவரைச் சுற்றித்தான் அனைவரின் கவனமும்; அவரின் கதையளுக்கு தலையாட்டல்களும் ஆமோதிப்பு களும் என தொடர்ந்துகொண்டிருந்தது. அவர்களது மேசையின் அரசியல் விவகாரங்களும் விவாதங்களும் எங்கள் மேசையில் இருந்தவர்களை கொஞ்சம் கொஞ்ச மாகக் கவர்ந்திழுக்க, எங்கள் கதிரைகளும் கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து கொள்ள இரண்டு மேசையும் ஒன்றாக சேர்ந்தது.

நான் முன்பு வசித்த நகரத்தில் நல்லாய்ப் போய்க் கொண்டிருந்த தமிழ்ச் சங்கத்திலும் தமிழ் வகுப்பிலும் இரண்டு இயக்கங்கள் முட்டிக் கொள்ளப் புறப்பட, சுந்தர ராமசாமியின் புளியமரம் போல அவை இரண்டின் ஆயுளுமே முடிந்தன. அதற்குப் பிறகு நான் எதிலுமே கலந்து கொள்வதில்லை... கலந்துகொண்டாலும் முட்டிக் கொள்வதில்லை... இது அநேகம் பேருக்குத் தெரியும்.

ஆனால் அது இல்லாமல் போனதில் எனக்கு என்றுமே வருத்தம்தான். அதன் காய்ச்சல் என்றுமே எனக்குள் இடைக்கிடை விட்டு விட்டு காய்ந்து கொண்டிருந்ததுண்டு.

நான் அவர்களது எந்தச் சம்பாஷணையிலும் கலந்து கொள்ளாமலும் எந்த தலையாட்டல்களிலும் சேராமலும் எல்லாத்தையும் கேட்டுக்கொண்டு கை துடைக்கும் கடதாசியில் காகிதக் கப்பல் செய்து கொண்டிருந்தேன்.

“என்ன மாஸ்டர் எவ்வளவு சீரியசாய் கதைத்துக் கொண்டு இருக்கிறம். நீங்கள் சின்னப் பிள்ளை போலை கப்பல் செய்து விளையாடிக் கொண்டு இருக்கிறியள்?”

அந்த புதிய முகத்தின் வலக்கைப் பக்கம் கேட்டது.

படிப்பகம்

padippakam



நானும் சிரித்துக் கொண்டு, “இதிலை இருந்து கொண்டு கதைச்சு என்ன பிரயோசனம். ஒன்றில் அங்கேயே செத் திருக்க வேணும். இல்லாட்டி ஏதோ ஒரு இயக்கத்துக்கை போய் நாங்களே அடிபட்டு எங்கடை கைகளாலை நாங்களே செத்திருக்க வேணும். அல்லது ஆமியால செத்திருக்க வேணும். இப்ப அப்பா, அம்மா இரண்டு பேருக்கும் நூறாயிரம் குறோன்கள் ஸ்பொன்சர் செய்து தான் ரூரிஸ்ட் விசாவிலை கூப்பிட்டது... கைமாத்தாய் தந்தவர் நெருக்கிறார்... அதுதான் பாங்கிலை லோன் எடுப்பம் எண்டு யோசித்துக் கொண்டு இருக்கிறன்.”

“அப்ப நாங்கள் இங்கை இருந்துகொண்டு போராட்டத்தை முன்னெடுக்கிறது பிழை எண்டு சொல்லுகிறியளோ?”

“அது உங்கடை விருப்பம். உங்கடை சுதந்திரம்” நான் நழுவப் பார்த்தேன்.

“அப்ப நீங்கள் எங்கடை முன்னெடுப்புகள் ஒண்டிலை யிலும் பங்கு கொள்ள மாட்டியளோ?”

“நாங்கள் இப்ப ஒரு ஜனநாயக நாட்டிலை வந்து இருக்கிறம். ஒரு ஜனநாயக நாட்டை உருவாக்கப் போறம் என்று நீங்கள் நிற்கிறியள். அந்த வகையிலை முன்னெடுப்புகளிலை பங்கு பற்றுவது, பங்கு பற்றாதது என்ரை விருப்பம் அல்லது ஜனநாயக உரிமை இல்லையா?”

பக்கத்தில் இருந்த என் நண்பன் மூர்த்தி மெதுவாய் தொடையில் கிள்ளினான்.

அந்தப் புதிய முகத்தின் முகம் சற்று இறுகிக் கொண்டு வந்தது.

“நீங்கள் ஊரிலை எந்த இயக்கம்?”

நான் சிரித்துக் கொண்டு, “நான் நிச்சயமாய் எந்த இயக்கத் திலும் இருக்கவில்லை. அப்பிடித்தான் இருந்திருந்தாலும்

படிப்பகம்

padippakam



முன்பின் தெரியாத உங்களுக்கு என்ரை தனிப்பட்ட விசயங்களை சொல்ல வேண்டும் என்றும் இல்லை.”

இன்னும் அவனின் முகம் இறுகியது.

“என்னை எதிர்த்தோ கதைக்கிறீர்? நான் என்ன இயக்கம் எண்டு தெரியுமோ?”

குரலில் மிரட்டல் தொனி தெரிந்தது.

“நீங்கள் எதுவுமாய் இருங்கோ. ஆனால் எந்த விடுதலை இயக்கங்கள் ஆயினும் அவர்கள் பிழைவிடும் பொழுது அவர்களையே கேள்வி கேட்கும் குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகள் மக்களுக்கு வேண்டும். அஃதில்லையாயின் சிங்களவனிடமே அடிமையாக இருந்திருக்கலாமே?”

வழமையாக எதுவும் பேசாத, கதைக்காத நான் அப்படிக் கதைத்தபோது மேசையைச் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் திகைத்துப் போயிருக்க வேண்டும்.

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. என் கைகள் காகிதக் கப்பலைப் புரட்டிக் கொண்டிருந்தது.

கல்யாண விழாவுக்கு வந்தவிடத்து தேவையில்லாத ஒரு விவாதம் எனப்பட்டாலும் மனதின் எங்கோ ஒரு மூலையில் அடங்கியிருந்த அடக்குமுறைகளுக்கு எதிரான என் மனச்சாட்சியின் குரல் ஒலித்ததாக எனக்குப்பட்டது.

நான் கதைத்தாயிற்று.

இப்போது அந்தப் புதியவனின் முறை.

என்ன சொல்லப் போகிறான் என அனைவரும் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான்.

“உம்மோடை ஒரு நாளைக்கு தனியாய்க் கதைக்க வேணும்.”

படிப்பகம்

padippakam



இது சமசரமா? இல்லை மிரட்டலா?

நேரே நிமிர்ந்து அவன் கண்களைப் பார்த்தேன்.

"ஹலோ... உங்களை எனக்கு முன் பின் தெரியாது. இதிலை எல்லோரும் இருந்து கதைச்சியள். என்னையும் தேவையில்லாமல் இழுத்தியள். நானும் கதைச்சன். நான் கதைச்சதுகளிலை எந்தப் பிழையும் இல்லை எண்டு இப்பவும் உறுதியாய் இருக்கிறன். இதுக்குப் பிறகு நீங்களும் நானும் தனிப்பட்ட முறைகளிலை கதைக்கிறது எல்லாம் தேவையில்லாத வேலை."

அவனின் கண்கள் தாழ்ந்தன.

"சரி உதுகளை விடுங்கோ. அங்கை பிறசண்ட் கொடுத்து படம் எடுக்கத் தொடங்கீட்டினம்." மூர்த்தி இறுக்கத்தை தளர்த்தினான்.

எல்லோரும் எழுந்து கொண்டார்கள்.

அவனுக்குப் பின்னால் நாலைந்து பேர்.

"ஆளிலை கொஞ்சம் கண் வைச்சிருக்க வேணும்."

மற்றவர்களிடம் அவன் சொன்னது எனக்கும் மூர்த்திக்கும் கேட்டது.

"அப்பாக்கு எப்பிடியடா இருக்கு?" — அம்மா கேட்டா.

"நல்லகாலம் நேரத்துக்குக் கொண்டு போனது. இல்லா விட்டால் ஏற்பு வைச்சு உயிரே போயிருக்கும்... சரி... சாப்பிட்டியளோ?"

அப்பா சொன்னது ஞாபகத்துக்கு வந்தது.

"இல்லை... நீயும் வரட்டும் எண்டு பார்த்துக்கொண்டு இருந்தனான்."

"சரி... சோத்தைப் போடுங்கோ..."

படிப்பகம்

padippakam



அன்று பின்னேரம் ஆஸ்பத்திரிக்கு அம்மாவுடன் காரில் போய்க் கொண்டிருந்த பொழுது மெது மெதுவாக அப்பா வின் கதையை உடைத்தன். அம்மா ஏதும் பேசவில்லை. மௌனமாக இருந்தா. கண்கள் மட்டும் கலங்கியிருந்தன.

"அந்த மனுஷன் வாழ்க்கையில் நல்லாய் கஷ்டப் பட்டுட்டுதடா. உன்னைப் பார்க்க வந்தது ஒண்டுதான் அந்தாளுக்கு சந்தோசம். இப்ப அதுவும் போட்டுதடா... என்ன... நடந்து வந்த மனுசனை இப்ப வண்டியிலை வைச்சு உருட்டிக் கொண்டு போகப் போறன்."

அம்மாவின் குரல் விக்கித்தது.

கார் ஆஸ்பத்திரி வாசலுக்கு வந்து விட்டது.

"நீங்களும் அழுது அந்தாளையும் கவலைப்பட வையா தையுங்கோ."

காரை ஒரு மரநிழலில் நிற்பாட்டி விட்டு மேலே போனம்.

மூர்த்தியும் மனைவியும் கீழே வந்து கொண்டிருந்தார்கள்.

"அப்பாவைத்தான் பார்த்திட்டு வாறம்."

மூர்த்தியின் மனைவி அம்மாவின் கைகளை ஆதர வாகப் பிடித்தாள்.

"என்ன பிள்ளை செய்யுறது..." அதுக்கு மேல் அம்மாவால் கதைக்க முடியவில்லை.

மூர்த்தி மெதுவாகச் சொன்னான்.

"அண்டைக்கு சிவராசா வீட்டுப் பார்ட்டி ஆக்களை மேலை கண்டனான். தாரையோ வருத்தம் பார்க்க வந்திருக்கினம் போலை கிடக்கு. நீ ஒண்டும் முட்டிக் கொள்ளாதை."

"எனக்கென்ன விசரோ மூர்த்தி..."

படிப்பகம்

padippakam



"அப்பிடியில்லையடா... அவை அப்பிடித்தான்..."

"என்னப்பா ஏதும் பிரச்சனையோ..." மூர்த்தியின் மனைவிதான் கேட்டாள்.

"ஒண்டுமில்லையப்பா நீ வா."

மூர்த்தியும் மனைவியும் நகர்ந்தார்கள்.

நானும் அம்மாவும் அப்பாவின் கட்டிலடிக்கு மெதுவாய் போய் நின்றோம்.

அப்பா பின்னேர நித்திரை கொண்டு இருந்தார்.

எனக்கு ஞாபகம் இருந்த நாள் தொட்டு அப்பா பின்னேர நித்திரை கொள்வது வழக்கம். சின்னனில் என்னையும் இழுத்துக்கொண்டு போய் தன் பக்கத்தில் வைத்துப் படுப்பது வழக்கம். எப்போது கண்ணயர்வார் எனப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு நான் எழும்பி ஓடி விடுவேன். எல்லாம் நேற்றுப் போல் இருக்கின்றது.

அடுத்த கட்டிலில் டெனிஷ் ஆள் ஒற்றைக் காலால் கெந்தியபடி தனது சக்கர நாற்காலியில் உட்காரு கின்றார்.

நாளை மறுநாள் அப்பாவும் இப்படித்தானே? மனம் கணக்குப் போடுகிறது.

நாங்கள் போய் நின்ற அசுமாத்தம் அப்பாக்கு தெரிந்திருக்க வேண்டும். திடுக்கிட்டு முழிப்பது போலைப் பார்க்கிறார்.

"கொஞ்சம் முதுகை நிமிர்த்தி இருத்திவிடடா."

நிமிர்த்தி விட்டேன்.

அம்மாவை கொஞ்சநேரம் பார்த்தார்.

"என்ன எல்லாம் சொன்னவனோ?"

அம்மா தலையாட்டினா.

படிப்பகம்

padippakam



"நீ உதுக்கெல்லாம் கவலைப்படாதை. ஊரிலை எத்தினை குஞ்சு குருமனுக்கு கால் எல்லாம் பறக்குது. நான் கிழட்டுக் கட்டை."

அப்பாவிலை நேவியிலை இருந்த துணிவு தெரியுது.

இந்த துணிவு அல்லது இறுமாப்பு என்னுள் எங்கேயோ இருந்திருக்க வேண்டும். அல்லது, எனக்கேன் பிரச்சனை? எனக்கேன் பிரச்சனை? என்று எல்லோரும் ஒதுங்கிப் போகிற சில விடயங்களிலை எனக்கு மட்டும் ஏன் ஒதுங்கிக் கொள்ள முடியாது இருக்கு.

எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு!

அப்ப எனக்கு ஒன்பது வயது. ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். சங்கானையில் இருந்து காலை 7.15க்குப் புறப்படும் 771ம் பஸ்ஸில்தான் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குப் போவது வழமை. ஆனாலும் ஒரு பத்து பதினைந்து நிமிஷத்துக்கு முன்னால் சந்தைக்குப் போய் அங்கு நடைபெறும் வியாபாரங்கள், பேரங்கள், மரக்கறிகளை அடுக்கி வைத்திருக்கும் வடிவுகள், பலாக்காயைப் கீறி மணக்க மணக்க விற்கும் பாங்கு... எல்லாத்துக்கும் மேலாக மற்றவனை நோகப்படுத்தாமல் உலாவரும் தூஷணங்கள், நக்கல் எல்லாத்தையும் உள்வாங்கிக்கொண்டு பஸ்ஸில் போனால்தான் அன்று பள்ளிக்கூடம் போன மாதிரி இருக்கும்.

அப்படித்தான் ஒரு நாள்... ஒரு வயோதிபர் தலையில் கடகத்தில் இருந்த கீரையில் இருந்து தண்ணீர் கொட்டக் கொட்ட... உடம்பு முழக்க நனைய நனைய... இடுப்பில் இருந்த வேட்டியை ஒரு கையால் பிடித்தபடி மற்ற கையால் கடகத்தைப் பிடித்தபடி ஓட்டமும் நடையும் கலந்த வேகத்துடன் வந்து கொண்டிருந்தார்.

படிப்பகம்

padippakam



வாசலில் வரித்துண்டு போடுபவனுக்கு பக்கத்தில் நின்ற தம்பையன் கிழவனாருக்கு ஒரு கை குடுத்து இறக்கிவிட முன்பே காரைநகர் வியாபாரிகள் கூடிவிட்டார்கள். என்ன விலை என்ற கேள்விக்கு கிழவனார் பதில் சொல்ல முதல் தம்பனே ஒரு விலையை சொல்லிப் போட்டு தரகு கூலியாய் இரண்டு கட்டு கீரையை கையில் எடுத்துக் கொண்டான்.

“நான் தாருக்கும் விற்கேல்லை. தம்பையா அந்தக் கீரைக்கட்டை கீழை வை.”

“என்ன மரியாதையில்லாமல் கதைக்கிறாய் கிழட்டுப் பிண்டம்” என்றவாறு கிழவனாரின் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது.

என் கன்னம் வலித்தது.

காலை வெயில் சுட்டெரித்தது.

யாரும் எதுவும் கதைக்கவில்லை. ஆளுக்காள் எட்டவாகப் போனார்கள்.

கிழவன் தன்னை சுதாரிக்க முடியாமல் கோபத்தாலும், இயலாமையாலும் நடுங்கிக் கொண்டு நின்றார்.

தம்பையன் எறிந்துபோட்டுப் போன கீரைக்கட்டு நிலத்தில் கிடந்தது. நான் அதை எடுத்து கிழவனின் கடகத்தினுள் வைத்துவிட்டு பள்ளிக்கூடம் போனேன்.

தம்பையன் என்னை முறைத்துப் பார்த்துக்கொண்டு நின்றான்.

அன்று முழுக்க என்னால் பள்ளிக்கூடத்தில் படிக்க முடியவில்லை. ஒன்று மட்டும் உண்மை. எனக்கு மட்டும் அன்று தம்பையனின் வயதாயிருந்திருந்தால் அவனுக்கு நான் அடித்திருப்பேன்.

படிப்பகம்

padippakam



"என்னடா யோசித்துக்கொண்டு நிக்கிறாய்! காலையும் போர்த்திப்போட்டு உந்த ஜன்னல் கேட்டினையும் இழுத்துப் போட்டுப் போ."

சங்கானையில் இருந்து டென்மார்க்குக்குத் திரும்ப ஒரு கணம் எடுத்தது.

"நாளைக்குப் பின்நேரம் வாறனப்பா."

"நாளையிண்டைக்கு லீவோ போட்டனி?"

"ஓமப்பா"

நாளையிண்டைக்குத்தான் அப்பாக்கு கால் ஒப்பரேஷன்.

"நாளைக்கு வரேக்கை கையோடை ஒருக்கா கமராவையும் எடுத்துக் கொண்டு வா."

"ஏனப்பா?"

"இந்த இரண்டு காலும் தெரிய வடிவாய் ஒருக்கா படம் எடுக்க வேணும்."

அம்மா அழத்தொடங்கினா.

பக்கத்துக் கட்டில் டெனிஷ் கிழவன் எங்களைப் பரிதாப மாய்ப் பார்த்தான்.

நான் அறையை விட்டு வெளியே போய்விட்டேன்.

வீட்டை வந்த பொழுது இரவு எட்டு மணியாகி விட்டது. ஆனாலும் சம்மர் காலம் ஆதலால் வெளிச்சம் இருந்தது — ஊரிலை செக்கல் பொழுது போலை.

சேட்டைக் கழற்றி சோபாவில் போட்டுவிட்டு வெறும் பெனியனுடனும் சாரத்துடனும் ஒரு கதிரையை எடுத்துக் கொண்டுபோய் சடைத்திருந்த அப்பிள் மரத்துக்கு அடியில் போட்டுவிட்டு கண்ணை மூடிக்கொண்டு இருந்தேன்.

படிப்பகம்

padippakam



பின்னேரக் குளிர்காற்று மனதுக்கு கொஞ்சம் இதமாய் இருந்தது.

கண்ணை மூடிப்பார்த்தேன். அது இன்னமும் இதமாய் இருந்தது.

ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் அலைந்த களை... அயர்ந்து கொண்டு போகின்றேன் போலும்...

தமிழாராய்ச்சி மகாநாடு கடைசிநாள் போல கிடக்குது. அப்பாவின் கைகளைப் பிடித்தபடி ஊர்வலங்கள், ஊர்திகள், மூலைக்கு மூலை மேடைப்பேச்சுகள், நாடகங்களை புதினம் பார்த்தபடி போய்க்கொண்டிருக்கின்றேன்.

இப்படி ஒரு சனக்கூட்டத்தை என்றுமே நான் காணவில்லை. நல்லூர் திருவிழாவிலைதான் சனக்கூட்டத்தை பார்த்திருக்கின்றேன். இது பத்து நல்லூர் திருவிழாக் களுக்கு சமன்.

சனக்கூட்டங்களுக்கு நடுவால் நசிந்து நசிந்து போய் முற்றவெளியடியிலை கூடியிருந்த அந்த சனவெள்ளத்துக்கு நடுவே அமர்கின்றேன்.

யார் யார் எல்லாமோ பேசுகிறார்கள். கைதட்டுகள் வானைப்பிளக்கின்றன. தமிழ், தமிழ் என்ற வார்த்தைகள் மட்டும் இப்பவும் என் காதுகளுக்குள் கேட்டுக்கொண்டே இருக்கின்றன. அப்பொழுது எனக்கு 14 வயது. எஸ். எஸ். சி. சோதினை எழுதிவிட்டு முடிவுகளுக்காகக் காத்திருந்த நேரம். தமிழ் எனக்கு நல்லாத் தெரியும். விருப்பமான பாடமும் கூட. அந்த வயதில் நானும் அந்த மேடையில் ஏறிப் பேச ஆசைப்பட்டேன். இப்ப எனக்கு பெரிதாக என்ன பேசினார்கள் என ஞாபகம் இல்லை.

ஆங்காங்கே இருந்து விழும் வாணங்கள் மேகத்தில் வெடித்துச் சிதறும் அழகிலும் ஒளியிலும் இன்னும் முற்றவெளி அழகாய் இருந்தது.

படிப்பகம்

padippakam



கைதட்டல்களுக்கும் வாணவேடிக்கை சத்தங்களுக்கும் இடையில் கோட்டைப் பக்கத்தால் வந்த வெடிச்சத்தம் கொஞ்சம் வித்தியாசமாய் இருந்தது.

சனம் எல்லோரும் கலவரப்பட்டார்கள்.

“சுட்டுக்கொண்டு வாறாங்கள் ஓடுங்கள்...” என ஓர் அவலக்குரல் ஒலிபெருக்கியில் ஒலித்ததுதான் எனக்கு ஞாபகம். அப்பா என் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடுகிறார். எந்தப் பக்கம், எந்த திசை எதுவுமே இருட்டில் தெரியவில்லை. சனங்கள் ஒண்டை ஒன்று இடித்தபடி, இடிபாட்டில் விழுந்த சிலர் எழும்ப முதல் அவர்களை மிதித்தபடி சனங்கள் ஓடிக்கொண்டு இருந்தார்கள்.

அந்த இருட்டில் ஓடி ஓடி நாங்கள் வந்து ஏதோ ஒரு றோட்டில் ஏறியபொழுது அது யாழ்ப்பாண ரவுனில் இருந்து 2 மைல் தூரத்தில் இருந்தது. றோட்டெல்லாம் சனங்கள்... பதற்றத்துடன்...

“அப்பா சைக்கிள்...”

“சைக்கிள் கிடந்தால் போகுது. நாளைக்கு எடுக்கலாம்” என்று அப்பா சொல்லிக்கொண்டு என்னையும் கையில் பிடித்துக் கொண்டு நடந்தே சங்கானைக்கு வந்துவிட்டார்.

வழியில் வந்த கார், வான் எல்லாத்தையும் மறித்துப் பார்த்தம்... எதுவும் நிற்கவில்லை... அனைத்தும் சனங்களை அள்ளி அடைச்சுக்கொண்டு போய்க்கொண் டிருந்தன. ஏழு கட்டை தூரத்தையும் நடந்து வர நாலு மணித்தியாலம் எடுத்தது...

பதினொரு பேருக்கு கிட்ட இடுபாட்டிலை செத்துப் போச்சி னமாம் என யாரோ சொல்லிக்கொண்டு போனார்கள்.

படிப்பகம்

padippakam



அம்மாவும் மாமாவீட்டு ஆட்களும் எங்களைக் காண வில்லை என்ற ஏக்கத்தில் ஒழுங்கை முகரியில் அரிக்கன் லாம்புடன் நின்று கொண்டிருந்தார்கள்.

என்னைக் கண்டவுடன் அம்மா வந்து கட்டிக்கொண்டு அழத்தொடங்கினா.

"ஏன் உந்த செக்கலுக்கையும் குளிருக்கையும் படுத்துக் கிடக்கிறாய். வருத்தம் தேடப்போறியே..." அம்மா தட்டி எழுப்பியபோதுதான் தமிழாராச்சி மகாநாட்டில் இருந்து கொண்டு நின்றேன் என்ற நினைவு வந்தது... இல்லை... அப்பாவுடன் நான் நெருங்கியிருந்த ஓர் இரவு அது... அந்தக் கலவரம்... இரவில் சனங்களுடன் ஓடியது எப்பவாவது கனவில் வந்து போகும்... இன்று பகலில் வந்து போயிருக்குது.

"இந்தா... தாரோ உனக்கு கடிதம் போட்டிருக்கினம். இலங்கையில் இருந்துதான் வந்திருக்குப் போலை."

கடிதத்தைத் திருப்பிப் பார்த்தேன்.

ராசாத்தி தான் போட்டிருந்தாள்.

அவளின் அழகிய கையெழுத்து இன்னும் மாற வில்லை.

கடிதத்தைத் தந்துவிட்டு அது யாரிடம் இருந்து வந்தது என்று அறியும் ஆவலில் அம்மா நின்று கொண்டிருந்தா.

"அது உங்களுக்குத் தெரியாத ஆள்" மனமறிஞ்சு சொன்ன பொய்.

நம்பிக் கொண்டு வீட்டுக்குள் போனா.

படிப்பகம்

padippakam



அம்மா எனக்கு ஆயிரம் நன்மைகள் செய்திருந்தாலும், எனக்குச் செய்த ஒரே ஒரு துரோகம் ராசாத்தியை என்னிடம் இருந்து பிரிச்சது தான்.

அந்த உள்காயம் இப்பவும் எனக்குள்ளை இருக்கிறது எண்டதை அவா நன்கு அறிவா. ஆனாலும் மௌனம் காக்கின்றா. தான் கண்ணை மூடுகிறதுக்கு இடையிலை நான் எப்படியும் யாரையும் கட்டுவன் என்ற நம்பிக்கையை கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து வருகிறா எண்டதும் எனக்குத் தெரியும்.

ராசாத்தி எங்கடை வீட்டுக்கு மா இடிக்கிற பாக்கியத்தின்ரை மகள். நான் மூன்றாம் வகுப்பு படிக்கேக்கை அவள் நான் படித்த தமிழ் கலவன் பாடசாலையில் முதலாம் வகுப்பு படிச்சிக்கொண்டிருந்தாள்.

அவள்தான் பள்ளிக்கூடத்திலேயே வெள்ளை... அப்படி ஒரு வெள்ளை... ஒரு பள் பிள்ளை... ஐயர் பிள்ளை போலை... எங்கள் சாதிக்கை அப்பிடி ஒரு பிள்ளையைக் கண்டதாக எனக்கு இப்பவும் நினைப்பில்லை... தாய் மா இடிக்க வீட்டுக்கு வரும்போதெல்லாம் தாயுடன் சேர்ந்து வந்து என்னுடன் குரும்பையும் குச்சியும் கொண்டு தேர் கட்டி விளையாடுவாள்.

அப்பிடித்தான் ஒரு நாள் தேரிலை இருக்கிற சாமிக்கு படைக்க என தன் வீட்டில் இருந்து வாழைப்பழம் எடுத்து வந்திருந்தாள். படையல் விளையாட்டு முடிய தானே வாழைப்பழத்தைப் பிரித்து தனக்கு சின்னப் பாதியையும் எனக்கு பெரிய பாதியையும் தந்தபொழுது அம்மா கண்டுவிட்டா. உந்த எளிய சாதியளிட்டை வேண்டிச் சாப்பிடுகிறியோ என்றபடி அம்மா ஒரு பத்திரகாளி அம்மனின் ஆவேசத்துடன் எனக்கு விட்ட அடியிலை வாழைப்பழம் எங்கேயோ போய் விழுந்தது.

படிப்பகம்

padippakam



ராசாத்தி பயத்திலை ஓடி விட்டாள்.

அடுத்த அடுத்த தடவைகள் பாக்கியம் மாவிடிக்க வரும் போது ராசாத்தியைக் கூட்டிவரவில்லை. அம்மாதான் கூட்டிவர வேண்டாம் எனச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் பள்ளிக்கூடத்திலை காணும்போது ஓடிவந்து கதைப்பாள். சிலவேளை பள்ளிக்கூடத்திலை இடை வேளையின்பொழுது கொடுக்கிற பாணிலும் அரை வாசியை எனக்குத் தந்துவிட்டுப் போவாள்.

ஐந்தாம் வகுப்புச் சோதினை பாஸ்பண்ணிய பின்பு... அடுத்து வந்த ஆடி விடுமுறையில் அப்பாக்கு கொழும்புக்கு வேலை மாற்றம் வர நானும் அம்மாவும் அவருடனே போய் விட்டோம்.

பின்பு இடைக்கிடை பள்ளிக்கூட லீவில் யாழ்ப்பாணம் வந்து போனாலும் ராசாத்தியைக் காணவில்லை.

81ம் ஆண்டு என்று நினைக்கின்றேன். அட்வான்ஸ் லெவல் சோதினையை எழுதிவிட்டு மூன்று மாதம் கொழும்பில் இருக்க அலுப்படிக்கும் என்பதனால் நான் யாழ்ப்பாணத் திலை அம்மம்மாவுடன் போய் இருக்கின்றேன் என்று வந்து விட்டேன்.

அம்மா கொழும்பில் அப்பாவுடன்.

எப்பிடியும் கம்பஸ் கிடைக்கும் எண்டது உறுதி. அதுவரை எனக்கு சங்கானை தேவைப்பட்டது... சந்தை... வயல்கள்... பனைகள்... அதன் நடுவே அமைந்திருந்த முருகன் கோயில்...

அம்மம்மாவுடன் நான் நின்ற நாட்களில் எனக்கு ராஜ மரியாதைதான்...

செத்துப்போன அம்மப்பா சேர்மன் என்பதாலும்... இப்பவும் பொருளாதாரத்தால் கீழ் இறங்கிவிடாமல் ஊரிலேயே

படிப்பகம்

padippakam



பெரிய வீடு என்னும் கௌரவத்தை அம்மம்மா காப்பாற்றி வந்ததாலும்... மேலாக நானும் படித்து கம்பஸ் போக இருப்பதாலும் அந்த மரியாதையை ஊர் எங்களுக்குத் தந்தது... யாராவது தர மறந்தாலும் அம்மம்மா ஞாபகப் படுத்தி வேண்டிக் கொள்ளுவா.

அதில் அம்மம்மா கெட்டிக்காரி...

அதைவிடவும் அம்மம்மாவின் உபசரிப்பு என்னைத் திக்குமுக்காடச் செய்தது.

நான் நின்ற நாட்கள் முழுக்க இராசவள்ளிக்கிழங்கு... பனங்கிழங்கு துவையல்... ஒடியல் கூழ்... இன்னும் என்னென்னவோ... காலை தொடக்கம் மாலைவரை என்னை கவனிப்பதைவிட அவாவிற்கு வேறு வேலையே இருக்கவில்லை.

மீன் விற்க வாறவனிடம் கூட இன்ன மீன் இன்ன நாளைக்கு வேண்டும் என்று அட்டவணைப்படுத்தி... அல்லது அவனை ஆக்கினைப்படுத்தி வேண்டி எனக்கு சமைத்துத் தந்து கொண்டிருந்தா... மீன்காரனுக்கும் தெரியும்... சொல்லி விட்ட மீன் கொண்டு வராட்டி அடுத்த இரண்டொரு நாளைக்கு அந்த ஒழுங்கையில் தான் மீன் வியாபாரம் செய்ய ஏலாது என்று.

இது தவிரவும் அக்கம் பக்கத்து சொந்தக்காரர்களும் நான் வந்து நிற்பதால் காலையில் அல்லது பின்னேரங்களில் தங்கள் வீட்டில் விசேடமாகச் செய்யும் பலகாரங்களைக் கொண்டு வந்து எனக்கு என்று சொல்லி அம்மம்மாவிடம் கொடுத்து விட்டுப் போவார்கள்.

பலகாரங்களை சிரித்த முகத்தோடு வேண்டிக் கொண்டாலும், “கவனமடா... கம்பஸ்க்கு போக இருக்கிற

படிப்பகம்

padippakam



மாப்பிளை எண்டு உன்னிலை உங்கை கனபேருக்கு கண் கண்டியோ...” என அம்மம்மா என்னை எச்சரித்தும் கொள்வா.

இந்த உபசாரங்களாலையும் அளவுக்கு மீறிய நித்திரை யாலும் நான் நல்லாய் பெருக்கத் தொடங்கீட்டன்... அம்மம்மாவும் இதைக் கவனித்துவிட்டுதானே சொன்னா, “பள்ளிக்கூடத்து பொடியள் எங்கடை பனங்காணிக்கை பின்னேரத்திலை விளையாடுறதுகள்... நீயும் படுத்துப் படுத்துக் கிடக்காமல் போய் கொஞ்சம் வேர்க்க விறுவிறுக்க விளையாடு... மற்றது பாத்தியோ... சொல்ல மறந்திட்டன்... எங்கடை பசுபதி மாமா நேற்றுக் கண்டாப்போலை சொன்னவர்... நீ சும்மாதானே இருக்கிறாய்... இஞ்சை நிக்கிறவரை தன்ரை ரியூட்டரிலை வந்து கணக்குப் படிப்பிக்கச் சொல்லி... கணக்கு வாத்தி ஒழுங் கில்லையாம்...”

எனக்கும் பொழுது போகும் என ஒத்துக்கொண்டேன்.

இது போதும் அம்மம்மாக்கு... அடுத்த ஒரு மாதத்திற்கு என் பெருமைகளை ஊராருக்குச் சொல்லி தம்பட்டம் அடிப்பதற்கு...

வருடப் பிறப்புக்கு அடுத்த கிழமை தொடங்குவதாக ஒத்துக் கொண்டேன்.

கொழும்பு ரியூட்டரிகளில் படித்தது வேறு... இப்பொழுது படித்ததை படிப்பிக்க இருப்பது வேறு... சில பாடங்களை நான் படித்தபொழுது இதை வேறுவிதமாக விளங்கப் படுத்தினால் எல்லோருக்கும் விளங்குமே என எனக்குள் நினைத்துக் கொள்வேன்.

இப்போ அதற்கு ஒரு சந்தர்ப்பம் வந்தபொழுது மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டேன்.

படிப்பகம்

padippakam



அண்டைக்கு வருஷப்பிறப்பு. அம்மம்மா ஐயரிட்டை போய் மருந்துநீர் வேண்டிக்கொண்டு வா என அதிகாலையில் இருந்தே நச்சரித்து நச்சரித்து எழுப்பிக் கொண்டிருந்தா. நானும் எட்டுமணிவரை போர்வைக்குள் இருந்து வெளிவர மனமில்லாமல் உழன்றுவிட்டு கோயிலுக்கு சைக்கிளை எடுத்துக் கொண்டு போனேன்.

எனக்கு ஏமாற்றம்தான் காத்திருந்தது. மணி ஐயர் மருந்து நீர் அண்டாவை வசந்த மண்டபத்தில் கவிழ்த்து வைத்து விட்டு மூலஸ்தானத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

கோயில் கரையில் நின்றிருந்த வில்வமரத்தடியில் சாத்தி வைக்கப்பட்டிருந்த எனது சைக்கிளை எடுக்க திரும்பிய பொழுது முன்மண்டபத் தூணடியில் நின்றிருந்தபடி "வேணுமெண்டால் இதிலை அரைவாசியை கொண்டு போங்கோ" என ராசாத்தியின் குரல் கேட்டது.

என்னால் நம்பவே முடியவில்லை.

குறுகுறுத்த கண்ணும் மாறாத புன்சிரிப்பும் கொண்ட அதே ராசாத்தி... என்னுடன் தேர்கட்டி விளையாடிய அதே ராசாத்தி... பாவாடை சட்டையில் இருந்து தாவணிக்கு மாறியிருந்தாள்.

என் கண்களை அவளை விட்டு விலத்தாமல் அவள் கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லாமல் அவள் கையில் இருந்த செம்பில் இருந்த மருந்து நீரையும் வேண்டாமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றேன்.

அவளும் அதை அவதானித்திருக்க வேண்டும்.

"எப்பிடி சோதினை நல்லாய் எழுதினீங்களோ" என அவளாக என்னை இந்த உலகத்துக்கு இழுத்து வந்தாள்.

படிப்பகம்

padippakam



கடந்து போன ஆறு வருடத்து புதினங்களையும் அரை மணித்தியாலத்துள் கதைத்து முடித்துவிட்டு அவள் நடக்கத் தொடங்க நானும் சைக்கிளை உருட்டிக்கொண்டு பக்கத்தால் நடக்கத் தொடங்கினேன்.

"தாரும் பார்த்தாலும் சரியில்லை. நீங்கள் முன்னாலை போங்கோ."

குரலில் ஒரு சின்ன கண்டிப்பும் என்னிலும் தன்னிலும் கொண்ட அக்கறையையும் அவளில் காண முடிந்தது.

சைக்கிளை கால்கள் உழக்கியது. அது என்னை வானத்தில் மிதத்திச் சென்றது. வீட்டுக்கு வரும்பொழுதுதான் யோசித்தேன்... என்னைப்பற்றி, என் கொழும்பு படிப்பு பற்றி, நான் சோதினை நன்றாகச் செய்துவிட்டு நல்ல ரிசல்ட்டை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன் என எல்லாம் என்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டு இருந்திருக்கிறேனே தவிர அவளைப் பற்றி ஏதும் கேட்காமல் வந்து விட்டேனே என்று.

அடுத்தநாள் சிவத்த அரிசியை ஊறப் போட்டுவிட்டு அதை இடித்து வறுப்பதற்கு அம்மம்மா பாக்கியத்தை பார்த்துக் கொண்டிருந்தா.

பாக்கியத்துக்கு பதிலாக ராசாத்திதான் வந்திருந்தாள்.

தலையெல்லாம் அழகாய் சீவி... பொட்டு வைத்து... அரைத்தாவணியில் சரியாக சங்கீதம் படிக்கப் போகும் ஐயர் குடும்பத்துப் பிள்ளைகள் போலை... என் கண்கள் அவளின் அழகில் இருந்து விலக கஷ்டப்பட்டன.

"என்ன கொம்மா உன்னையே அனுப்பினவா" என்றபடி அம்மம்மா வெளியில் வந்தா.

படிப்பகம்

padippakam



“ஓம். நேற்று புல்லுப் பிடிங்கிக்கொண்டு வரேக்கை நல்லாய் நனைஞ்சிட்டா... காச்சல் ஆக்கிப் போட்டுது... அதுதான் என்னை அனுப்பினவா...” என்றபடியே வீட்டுத் தாழ்வாரத்தில் கிடந்த உரலை உருட்டிக் கொண்டு முன் முற்றத்துக்கு வந்தாள்.

அவள் மா இடிப்பதும்... அம்மம்மா அவளுடன் ஊர்க் கதைகள் கதைத்தபடி மா அரிப்பதும்... பின் இருவருமாய் இருந்து மா வறுப்பதும்... ஒரு அழகிய மாலை நேரக் கவிதை போல் இருந்தது.

அடுப்பின் வெக்கையில் அவள் நெற்றியும் முகமும் சிவந்து நெற்றியில் சின்ன சின்னத் திவலையாக வியர்வை படிவதும் அதை மாவரித்துக்கொண்டே புறங்கையால் துடைப்பதும் என களைப்பிலும் அவள் அழகாகவே இருந்தாள்.

அம்மம்மா எழுந்து வீட்டுக்குள் ஏதோ எடுக்கப் போன சந்தர்ப்பத்தில் நானாகவே அவளிடம் பேச்சுக் கொடுத் தேன்.

“நீ இந்த முறை 10ம் வகுப்பு சோதினை எடுக்க வேணு மல்லோ...”

“போனமுறை எடுத்தனான்... பெயில்... இப்ப ரியூசனுக்கும் போறனான்...”

“எங்கே...”

“சந்தையடியிலைதான்... பசுபதி ஐயாண்டை ரியூட்டரி யிலை...”

மனதுள் சிரித்துக் கொண்டேன். நான் கணக்குப் பாடம் படிப்பிக்க இருக்கின்றேன் என ஏதும் சொல்லவில்லை... சஸ்பென்சாய் இருக்கட்டும் என்று...

படிப்பகம்

padippakam



"எல்லாப் பாடத்துக்கும் போறனியோ..."

"ஓம்... ஆனால் கணக்குக்குத்தான் வாத்தியார் ஒழுங்கில்லை... அடுத்த கிழமை தாரோ வருகினம் எண்டு சொல்லிச்சினம்..."

அப்பொழுதும் நான் எதுவுமே சொல்லவில்லை...

"கணக்குப் பாடம் விருப்பமோ?"

"சீ... சரியான கஷ்டம்... சின்னனிலை இருந்து கணக்கு மட்டும் அடிச்சுப் போட்டாலும் வராது... எல்லாரும் உங்களைப் போலை கெட்டிக்காரரோ..."

"நல்ல வாத்தியார் கிடைச்சால்..."

"அப்ப நீங்கள்தான் வரவேண்டும்" என்றுவிட்டு கலகல வென்று சிரித்தாள்.

அம்மம்மா கொஞ்சம் முழிசிக்கொண்டு வருமாப் போலிருக்க நான் எழுந்து போய் விட்டேன்.

அடுத்த ஐந்து நாளும் சந்தர்ப்பவசமாகவோ அன்றில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டோ ராசாத்தியை அடிக்கடி சந்திக்கத் தொடங்கினேன்.

தாயுடன் சந்தைக்குப் போகும்பொழுது... தனியாக பள்ளிக்கூடம் செல்லும்பொழுது... வெள்ளிக்கிழமை பின்னேரத்தில் முருகையா கோயிலடியில்... சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நாங்கள் புட்போல் விளையாடுற பனை வெளிக் காணியடியிலை...

நான் படபடப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த திங்கள் கிழமை வந்தது.

படிப்பகம்

padippakam



சற்று வேளையாகவே பசுபதி மாமாவின் ரியூட்டரிக்குப் போய் அவரின் ஒவ்வீசில் கதைத்துக் கொண்டு இருந்தேன். அங்கிருந்து பார்த்தால் அங்கு வரும் மாணவர் - மாணவிகள் அனைவரும் தெரிவார்கள்.

வகுப்பு தொடங்க ஒரு பத்து நிமிடத்துக்கு முன்பாக கலகலவென்று மற்றைய பெண் பிள்ளைகளுடன் சிரித்துக் கதைத்துக் கொண்டு ராசாத்தி வருவது தெரிந்தது.

அதிகமான ஆண்பிள்ளைகள் சைக்கிளில் இருந்து கொண்டு பெண்பிள்ளைகளுக்கு பகிடி விட்டுக்கொண்டு இருந்தார்கள்.

கொழும்பில் சிங்களப் பெண்களுக்கு நானும் சேர்ந்து பகிடி விட்டதையும் ஒரு சிங்களப் பெண் என்னைப் பார்த்து நல்லெண்ணை என்ன விலை எனத் திருப்பிக் கேட்டதையும் நினைத்துப் பார்த்தேன்.

வகுப்பினுள் மாணவர்கள் வந்ததும் அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக பசுபதி மாமா என்னைக் கூட்டிச் சென்றார்.

என்னைக் கண்டதும் ராசாத்தியின் முகத்தில் தோன்றி மறைந்த அத்தனை வேறுபட்ட உணர்வுகளையும் என்னால் எழுத முடியாது.

நான் அவளைப் பார்த்து எனக்குள் சிரித்தது மட்டும் எனக்கு நினைவிருக்கு.

என்னைக் கோபமாகவோ... அன்றிச் செல்லமாகவோ... பார்த்து முகத்தைச் சுழித்துவிட்டு அவள் புத்தகத்தை எடுத்து முன்னால் வைத்தாள்.

படிப்பகம்

padippakam



மொத்தம் இருபது பிள்ளைகள். ஐந்து பெண் பிள்ளைகளும் பதினைந்து ஆண் பிள்ளைகளும். பெண் பிள்ளைகள் வரிசையாக முன்வாங்கில் எனது மேசைக்கு முன்பாகவும் ஆண்பிள்ளைகள் பின் வாங்குகளிலும்...

பாடம் தொடங்கியது...

அதற்குப் பின் ராசாத்தி எனக்குத் தெரிந்த பிள்ளை என்பதே மறந்துபோய்விட்டது. அத்தனை பிள்ளைகளும் என் கட்டுப்பாட்டுக்குள்... சந்தோசமாக நான் படிப்பித்ததை உள்வாங்கிக்கொண்டு இருந்தார்கள்... அதை அவர்கள் முகம் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது...

அது எனக்குப் பெருமையாக இருந்தது.

சுமார் முக்கால் மணித்தியாலம் படிப்பித்துவிட்டு கடைசிக் கால் மணித்தியாலம் அவர்களுக்கு கரும்பலகையில் கணக்கு கொடுத்துவிட்டு, அப்பாடா என்றபடி நின்று படிப்பித்த களை போக கால்களை நீட்டியபடி கதிரையில் இருந்தேன்.

முன்னேயிருந்த ராசாத்தியின் கால்களில் என் கால்கள் பட்டிருக்க வேண்டும்.

“சொறி” என்று மன்னிப்புக் கேட்கும் தோரணையில் சொன்னேன்.

கணக்கு கொப்பியினுள் தலையைப் புதைத்திருந்தவள் மெதுவாக நிமிர்ந்து, “பறவாயில்லை” என்றாள்.

அவளது இரண்டு கண் இமைகளும் வெட்டிக் கொண்டன.

எனக்குள் பட்டாம் பூச்சிகள் பறந்தன.

அத்துடன் அன்றைய பாடம் முடிந்தது.

படிப்பகம்

padippakam



வீட்டுக் கணக்குகள் கொடுத்து விட்ட ஞாபகம்.

அன்றைய இரவு என்னுடன் எனக்குப் போராட்டம்... நான் எங்கு போய்க்கொண்டிருக்கிறேன் என்று...

ராசாத்தியை நான் விரும்புகின்றேனா?

என்னையே எனக்கு நம்பமுடியவில்லை...

இது சாத்தியமா? நடக்குமா?

ராசாத்தியின் வாழ்க்கையோடை விளையாடிப் போடாதே... போடாதே என எனக்கு நான் எச்சரித்துக் கொண்டேன்... ஆனாலும் நான் கேட்குமாப்போல் இல்லை...

அந்த தெய்வீக முகம்... கலகலப்பான கள்ளமற்ற சிரிப்பு... பால் போன்ற அவளின்ரை நிறம்... ஒரு ஐயர் பெண்ணின் வசீகரம்... அனைத்தும் சேர்ந்து என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

அன்று இரவு நான் ஒழுங்காய் தூங்கினேன் என நினைக்கவில்லை.

அடுத்தநாள் பின்னேரத்துக்காய் காத்திருந்தேன்.

வகுப்புத் தொடங்கியது...

முதல்நாள் கொடுத்த வீட்டு வேலையை வேண்டிப் பார்த்துக் கொண்டு வந்தேன்.

ராசாத்தியைத் தவிர எல்லோரும் செய்துகொண்டு வந்திருந்தார்கள்.

எங்கிருந்து அப்பிடி ஒரு கோபம் வந்ததோ தெரியாது... ராசாத்திக்கு நல்ல பேச்சு... பரம்பரை பரம்பரையாய்

படிப்பகம்

padippakam



எங்கடை வீடுகளிலை மா இடிச்சுக் கொண்டும் புல்லுப் பிடுங்கிக் கொண்டும் இருக்கப் போறியோ என்று...

விக்கி விக்கி அழத் தொடங்கினாள்...

எனக்கு கை நடுங்கியது...

எனது சத்தம் கேட்டு பக்கத்து வகுப்பில் படிப்பித்துக் கொண்டிருந்த ரீச்சர் வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போனா.

பிறகு நான் அமைதியானேன்...

அவளின் நன்மைக்கே நான் ஏசியிருந்தாலும் அந்தளவு தூரம் ஏசியிருக்கக் கூடாது எனப்பட்டது.

ஆனாலும் நான் அறிந்த காலம் தொடக்கம் எங்கடை வெள்ளாள வீடுகளுக்கு அடிமைக் குடியள் போல அதுகள் படுகிற கஷ்டங்களை... அவமதிப்புகளை... கண்ணாலே பார்த்து... பார்த்து... அவர்களுக்காக வேதனைப்பட்ட வேதனையின் வடிவம்தான் எனது அந்தக் கோபத்துக்குக் காரணமாய் இருந்திருக்க வேண்டும்.

என்னையும் சமாளித்துக் கொண்டு அன்றைய பாடத்தை எடுத்து முடித்தேன்.

அன்று முழுக்க அவள் விக்கி விக்கி அழுது கொண்டேயிருந்தாள் என நினைக்கின்றேன். வகுப்பு முடிந்து எல்லோரும் எழுந்து முன்னுக்குப் பின்னாக வெளியேறிக்கொண்டிருந்தபொழுது அவளைப் பேசிய தற்காக “சொறி” என்று சொன்னேன்.

அவள் என்னை முறைத்துப் பார்த்தபடி, “எல்லாம் உங்களாலைதான்” என்று கோபமாகச் சொல்லிவிட்டு திரும்பிப் பார்க்காமல் போய் விட்டாள்.

படிப்பகம்

padippakam



நான் என்ன செய்தேன்?

இரவு முழுக்க என்னையே நான் கேட்டுக் கொண்டேன்.

அவளிடம் கேட்க வேண்டும் என அடுத்த நாளுக்காய் காத்திருந்தேன்.

பாட இடைவேளையின்பொழுது எல்லா மாணவர்களும் கிணற்றடியில் தண்ணீர் அள்ளிக் குடிக்கப் போன வேளையில் தனியாக இருந்த அவளிடம் நான் என்ன செய்தேன் எனத் துணிந்து கேட்டேன்.

நிமிர்ந்து பார்த்துவிட்டு, "எனக்கு பயமாய் கிடக்கு" எண்டாள்.

அவள் கை மெதுவாக நடுங்கியது.

"என்ன சொல்லுறாய்?"

"உங்களுக்குத் தெரியும்... தெரியாதமாதிரி நடிக்கிறிங்கள்..." உறுதியாகச் சொன்னாள்.

அவள் என்னை நன்கு படித்திருக்க வேண்டும்... அல்லது அவளால் அப்பிடி உறுதியாய் சொல்லியிருக்க முடியாது.

"உங்களாலைதான் நான் கணக்குச் செய்யேல்லை... என்னைக் குழப்பிக் கொண்டேயிருந்தியள்... அதுக்கு அப்பிடியே பேசுறது..."

என் மனதுக்குள் மத்தாப்புகள் ஆயிரம்...

ஆயினும் நான் அவளை அப்படிப் பேசியதற்காக மனம் வருந்தியது...

"சொறியடா..." என வாய் முணுகியது.

படிப்பகம்

padippakam



"எல்லாத்துக்கும் ஒரு சொறி..." சொல்லிவிட்டுக் கலகல வென்று சிரித்தாள்.

எனக்கு உயிர் திரும்பி வந்தது.

எனக்குள் எழுந்த சஞ்சலம் அவளையும் சஞ்சலப் படுத்திய பின்பு நான் பின்வாங்குவது எந்த முறையிலும் நியாயம் இல்லை... எது வந்தாலும் போராடுவம் என எனக்கு நான் சொல்லிக் கொண்டேன்.

இதற்குப் பின்பு கால்கள் தானாய் போய்ப் பட்டது... கொப்பி வேண்டும்பொழுது கைகளும் பட்டது... ஆனால் சொறி மட்டும் கேட்கவில்லை... அவளும் ஒன்றும் சொல்ல வில்லை.

நல்ல ஞாபகம் இருக்கு... அன்று சப்பறத்திருவிழா... இரவிரவாக நாடகங்கள், நடனங்கள்... சுத்துவட்ட கிராமம் முழுக்க சங்கானையில் கூடி இருந்தது.

ஜெனரேற்றர் தந்த மின்சார வெளிச்சத்தில் மேடையும், பெற்றோமாக்ஸ் தந்த வெளிச்சத்தில் வீதியெங்கும் உள்ள கடைகளும், அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் கடலைக்கார ஆச்சிகளின் வியாபாரமும் நடந்து கொண்டு இருந்தது.

என் கண்கள் ராசாத்தியைத் தேடியபடி...

சாதிச்சண்டை ஒருக்கால் சங்கானையைக் குதறிப் போட்டு ஓய்ந்து இருந்தாலும் சனம் என்னவோ அந்த இடைவெளியைக் கட்டிக் காத்தபடிதான்... தங்கள் தங்கள் சாதிகளுடன் அவர் அவர்கள் குழுமியிருந்தார்கள்... தேத்தண்ணிக் கடையிலும், கோயில்களிலும்தான் சமபந்திப் போசனம் நடந்ததே தவிர அவற்றின் எல்லை களுக்கு அப்பால் ஆளுக்கால் அவர் அவர் செம்பு தண்ணி பெருமைகளைப் பேசியபடிதான்...

padippakam



ராசாத்தி தன் வயதொத்த பெண்பிள்ளைகளுடன் ஒரு மூலையில் இருந்து நாடகம் பார்த்துக்கொண்டிருந் ததைக் கண்டுவிட்டேன். என்னைத் திரும்பிப் பார்க்க மாட்டாளோ என மனம் படபடக்கத் தொடங்கியது.

அவள் பார்க்கவேயில்லை. ஆனால் என் கண்கள் அவளிடம் இருந்து விலத்தவேயில்லை.

ஒரு நாடகம் முடிந்து மற்ற நாடகம் தொடங்கவிருந்த இடைவெளி என்று நினைக்கின்றேன்.

ராசாத்தி அவள் தோழிகள் கூட்டத்துடன் கடலை வேண்டப் போவதைக் கண்டுவிட்டு நானே முந்திப் போய் ஒரு பை கடலையை வேண்டி வைத்துக்கொண்டு நின்றேன். அவளின் தோழிகள் ஆளுக்காள் கடலையும் தும்பு முட்டாசும் வேண்டிக்கொண்டு நின்றபொழுது அவளின் கையினுள் நான் வேண்டி வைத்திருந்த கடலைப் பையினைத் திணித்தேன். யாரோ எவரோ எனத் திடுக்கிட்டுத் திரும்பியவள் என்னைக் கண்டதும் மௌன மானாள்.

கடலைப் பை இருட்டினுள் கைமாறியது.

பரிமாறிய போது இரு கைகளும் தாமாகவே ஸ்பரிசித்ததை இருவருமே உணர்ந்து கொண்டோம்.

அவள் மீண்டும் தன் இடத்துக்குத் திரும்பி விட்டாள்.

என் கண்கள் அவள் மேலேயே.

அவள் கண்களும் இடையிடையே என் மேல்.

அந்தப் பார்வையின் ஏக்கங்களினுடனே அன்றைய சப்பறத்திருவிழா கழிந்தது.

படிப்பகம்

padippakam



பின்பு வந்த தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா இரண்டும் எங்கள் உலகம் தான்.

தாயிடமிருந்து பிரிந்து பிரிந்து என்னருகில் வந்தாள். கைகளில் எது எது அந்தந்த வேளைகளில் இருந்ததோ அவை அனைத்தும் ஆளுக்காள் கைகளுக்கு அரை வாசியாக மாறின.

கடைசியாக என் கையில் இருந்த பாதி குச்சி ஐஸ்கிறீம் கூட அவளிடம் போனது.

ராசாத்தி என்ற காற்று... ராசாத்தி என்ற இரத்த ஓட்டம் என்னை முழுமையாக அந்த இரண்டு நாட்களிலும் நிரப்பிக் கொண்டிருந்தது.

அடுத்து வந்தது... பூங்காவனம்!

அது வராமல் இருந்திருக்கலாமோ என இன்றும் நான் நினைப்பதுண்டு.

பூங்காவன இரவுத் திருவிழா... அன்றும் சப்பறத் திருவிழா போல சனக்கூட்டம். என் கண்கள் ராசாத்தியைத் தேடிய படி... அவள் தோழிகளுடன்... தாயுடன்... யாருடனும் ராசாத்தியைக் காணவில்லை... தம்பியாரை தேர் முண்டியடியில் கண்டன்.

“ஏன் கொக்கா கோயிலுக்கு வரேல்லை?”

“அது தனக்கு விருப்பமில்லை எண்டு அழுதுகொண்டு இருக்கு.”

“ஏனடா...”

“தேருக்கு எங்கடை அச்சுவேலி ஆட்கள் வந்தவை...

படிப்பகம்

padippakam



அவைக்கு அக்காவைப் பிடிச்சுப் போச்சுது. பொடியன் கொழும்புக்கு லொறி ஓடுறவன். உடனையே ஐயா, அம்மாவோடை கதைச்சு நேற்றைக்கு தீத்தம் முடிய சோறு குடுத்தாச்சு. இனி ஐயனார் கோயில் ஆடு வெட்டு முடிய கலியாணம் எண்டு அவையின்ரை பகுதி ஆட்கள் சொல்லிப்போட்டுப் போகினம்."

எனக்கு என் தலையை யாரோ வெட்டி எறிந்தது போலக் கிடந்தது.

"அக்காக்கு அதிலை விருப்பமில்லை - அதுதான் அழுது கொண்டு இருக்குது... கோயிலுக்கும் வரேல்லை." சொல்லிக் கொண்டே போனான். ஆனால் எதையுமே நான் உள்வாங்கவில்லை.

நான் தேர் முண்டியடியிலையே விறைத்தவாறே உட்கார்ந்திருந்தேன்.

என்னுள் நிறைந்து என்னை உப்பவைத்த அந்தக் காற்று என்னைவிட்டுப் போக...

காற்றுப் போன பலூனாக நானும்...

"ராசாத்தி நீ வேண்டும்... நீ என்ரை ராசாத்தி... நீ எனக்கு வேண்டும்..."

மனம்... அறிவு... எதுவும் சொல்வதைக் கேட்கும் நிலையில் நான் இருக்கவில்லை.

சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடினேன்.

பனை வடலிகள், தோட்டங்கள், குறுக்கு ஒழுங்கைகள் எல்லாவற்றையும் ஊடறுத்துக்கொண்டு சைக்கிள் பறந்தது...

படிப்பகம்

padippakam



"ராசாத்தி நீ வேண்டும்... நீ என்ரை ராசாத்தி... நீ எனக்கு வேண்டும்..."

ராசாத்தி வீடு இருண்டு இருந்தது. சைக்கிளின் அரவம் கேட்டு இரண்டு நாய்கள் குரைத்துக்கொண்டு ஓடி வந்தன. நான் அமைதியாக ராசாத்தி வீட்டு தட்டிப்பட லடியில் நின்றேன்.

ராசாத்தியின் குடிசை வீட்டினுள் இருந்து அரிக்கன் லாம்பின் திரி தூண்டடப்படுவதை நன்கு அவதானிக்க முடிந்தது.

ராசாத்திதான் வெளியே வருகிறாள்.

அவளின் அதட்டலில் நாய்கள் அடங்கி விடுகின்றன. ராசாத்தி என்னைக் கண்டு விட்டாள்.

பரபரக்க என்னிடம் ஓடி வருகிறாள். நானும் துணிவாக அவர்கள் வீட்டு தட்டியைத் தாண்டிக்கொண்டு போய் அவளை அணைத்துக் கொள்கின்றேன். அவளது கண்ணீர் தோய்ந்த முகம் என் கைகளில்...

"பிள்ளை தாராக்கும்..." குடிசையில் இருந்தபடி பேத்தியின் குரல்.

"அது கோவிலுக்கு உதாலை ஆட்கள் போகினம்."

ராசாத்தியின் பதிலில் கிழவி மௌனம் ஆகின்றாள்.

அவளின் கை என்னைப் பிடித்தபடி தேம்புகிறது. என்னை விட மறுக்கிறது.

என் கைகளும் இப்போ அவளை அணைக்கின்றன.

நான் செய்வது சரியா? பிழையா?... அவள் செய்தது சரியா? பிழையா?...

படிப்பகம்

padippakam



எதுவுமே புரியவில்லை.

வீட்டின் தாழ்வாரத்தின் இருட்டினுள் இருவருமே ஒளிந்து கொண்டோம்.

என் ராசாத்தியும் - நானும்.

கட்டுண்டு இருந்தோம்.

18 வயது ஆணும் 16 வயதுப் பெண்ணும் - இயற்கையின் பிடியில்.

எவ்வளவு நேரம் போயிருக்கும் என்று தெரியாது.

நாய்கள் மீண்டும் குரைக்கத் தொடங்கின.

ராசாத்தியின் தாய் பாக்கியமும் தகப்பன் செல்லனும் தம்பியாரும் கோயிலால் திரும்பியிருக்க வேண்டும்.

"ஆற்றை சைக்கிளாக்கும்" - செல்லனின் குரல் கேட்டது.

நாய்கள் நானும் ராசாத்தியும் இருந்த தாழ்வாரத்தை நோக்கிப் பாய்ந்து வந்தன.

எங்கிருந்து வந்த பலமோ... நான் என்னை சுதாரித்துக் கொண்டு எழும்பி பின்பக்க வடலியின் ஊடே ஓடி விட்டேன்...

"சொல்லடி தாரவன்... சொல்லடி தாரவன்..." என்ற பாக்கியத்தின் குரல் அன்று இரவு முழுக்க கேட்டுக் கொண்டே இருந்தது.

அன்றிரவு நான் நித்திரை கொள்ளவில்லை.

ராசாத்தியை நினைத்து மனம் பயந்து கொண்டிருந்தது.

உண்மையைச் சொன்னவளோ? பொய்யைச் சொன்ன வளோ?

படிப்பகம்

padippakam



கண்கள், உடம்பு அனைத்தும் எரிந்து கொண்டிருந்தன.

கோழை போல ஓடிவந்துவிட்டேனா என உள்மனம் உறுத்தியது.

உடம்பின்ரை எரிவிலும் உள்ளத்தின்ரை போராட்டத்திலும் மேலாக ராசாத்தியின்ரை நினைவிலும் அன்று முழுக்க உழன்று கொண்டு இருந்தேன்.

பின்னேரம் செக்கலை நெருங்கிக்கொண்டு இருந்தது.

செல்லனும் பாக்கியமும் என் சைக்கிளுடன் வந்தார்கள்.

அம்மம்மா தானே முந்திக்கொண்டா... "நானும் இவனிட்டை கேட்டனான் சைக்கிள் எங்கை எண்டு. கோயிலடியிலை காத்து போட்டு எண்டவன். நல்ல காலம் நீ கொண்டந் திட்டாய் செல்லன்."

அம்மம்மா சொல்லி முடிக்க முதலே பாக்கியம் ஓடி வந்து என் காலைக்கட்டிக்கொண்டு அழத் தொடங்கினாள்.

"என்ரை ராசா என்ரை பிள்ளையை விட்டுப் போடு... அரசல் புரசலாய் கதையள் வரத்தொடங்கவே உங்கடை அம்மா கொழும்பிலை இருந்து ஆட்களை விட்டு எங்களைக் கொளுத்திப் போடுவம் எண்டு வெருட்டினவா... கோயிலிலை நீங்கள் ஒண்டாய் திரியக் கண்ட பயத் தோடைதான் நாங்கள் அச்சுவேலியானுக்கு சோறு குடுத்தனாங்கள்... இப்ப ஏதும் எண்டால் அவங்களே என்ரை பிள்ளையையும் எங்களையும் வெட்டிப் போடு வாங்கள்... அவளை காலமையே கொண்டு போய் அச்சுவேலியிலை விட்டுட்டுதான் நாங்கள் இஞ்சை வாறம்... என்ரை துரையல்லோ... என்ரை பிள்ளையை ஊருக்கு காவு கொடுத்திடாதை..."

படிப்பகம்

padippakam



அம்மா திரைமறைவிலை நடாத்தின நாடகங்களை இன்று வரை நான் மன்னிக்கவேயில்லை.

நான் இன்னொரு கலியாணம் செய்யாமல் இப்படி வாழுறதுக்குக் காரணம் ராசாத்தியிலை நான் வைச்சிருந்த காதல்... இன்னமும் ராசாத்தி என்னுடையவள் எண்ட நினைப்பு... அந்த இரவு... ஐம்பது வீதம் எண்டால், உன்னாலைதான் நான் இன்றுவரை கலியாணம் செய் யேல்லை என அம்மாவைக் குற்றவாளியாக்கிப் பழி வாங்கும் என் கோபம் ஐம்பது வீதம்.

கையிலிருந்த ராசாத்தியின் கடிதத்தைப் பிரிக்கின்றேன்.

கடவுளே... ராசாத்திக்கு ஏன் இப்பிடிச் சோதினைகள் வரவேணும்...

காலையோடை கள்ளிறக்கப் போன செல்லனை பாளைக்குள் இருந்த பறைநாகம் கொத்திப் போட்டுதாம்... வாய்க்காலும் மூக்காலும் நுரை தள்ள பனையடியிலையே மூச்சு போட்டுதாம்... மற்றது ராசாத்தியின் மூத்த மகன் - 16 வயது - இயக்கத்துக்குப் போட்டானாம்.

அழுது... அழுது... எழுதியிருந்தாள்.

செக்கல் மறைந்து இரவாகும் வரை அந்த மரத்துக் கடியில் போடப்பட்ட சாய்மணைக்கதிரையில் அப்படியே இருந்தேன்.

குளிரும் தொடங்கி விட்டது.

ராசாத்தியின் மகன் இயக்கத்துக்குப் போட்டான் என்பது என்னை ஏதோ சூனியத்துக்குள் இழுத்துக் கொண்டு போய் விட்டது போல இருந்தது.

படிப்பகம்

padippakam



“விட்டுக்கை வாவன்... ஏன் குளிருக்கை கிடந்து கொப்பாவைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக் கிறாய்... அது அவற்றை கால பலன். நீயும் அதையே யோசிச்சு வருத்தம் தேடப் போறியோ...”

எழுந்து வீட்டுக்குள் போனேன்.

அம்மா சோறும் கணவாய் கறியும் சமைத்து வைத்திருந்தா. நேற்று கொலண்ட்காரற்றை மீன் வான் வந்தது எண்டு அம்மா சொன்னவா... டென்மார்க்காரருக்கு நல்ல மீன், கணவாய், நண்டு கிடைக்கிறது எண்டால் கொலண்டில் தான் இருந்து வரவேண்டும்.

இப்பிடித்தான் பெரிய மீன், அல்லது பெரிய அளவிலை ஊரிலை கூழ் காச்சுறது எண்டால் நாங்கள் காலமையே ஆனைக்கோட்டை சாவக்காட்டுச் சந்தைக்கோ... அல்லது இன்னும் விசேசமாய் வேணுமெண்டால் பாசையூருக்கோ போறது வழக்கம்.

அங்கே மீனை கூறுபோடும் பாங்கு... வள்ளத்தடியே கூடும் சனங்களும்... ஏலங்களும்... கொழும்புக்கு மீன் வேண்டி ஏற்றும் வியாபாரிகளும்... அவர்களின் ஐஸ் பெட்டிகள் அடங்கிய மீன் லொறிகளும்... காலைப் பொழுது அப்படி ஒரு கலகலப்பாய் இருக்கும்.

அடிக்கடி அப்பாவுடன் அல்லது அயல்வீட்டு சந்திரன் ஆட்களுடன் நானும் மீன் வேண்டுவதற்காக அவர்கள் சைக்கிளில் தொத்திக் கொண்டு போய் விடுவேன்.

ஆனால் ராசாத்தி என்னை விட்டுப் போன பின்பு எந்த கலகலப்பான விசயங்களுக்கும் நான் போகாமல் இருந்தேன்... அது காலமை 10.30 படக்காட்சி எண்டாலும் சரி... சாமம் சாமமாய் நடக்கும் கோயில் திருவிழா

படிப்பகம்

padippakam



எண்டாலும் சரி... ஏன், இப்பிடியான மீன் வேண்டுறதுக்கு சாவக்காட்டு சந்தை, பாசையூர்வரை, சைக்கிளில் உழக்கித் திரிவது எண்டாலும் சரி... எதுக்குமே எனக்கு மனம் இருக்கவில்லை... சின்ன வயதிலேயே ஒரு தேவதாஸ் கோலம் போலை...

"சாப்பிடன் ஆறப்போகுது..." அம்மா அவசரப் படுத்துகிறா...

டெலிவிசனிலை அரசி தொடர் போய்க்கொண்டு இருக்குது. எதையுமே நம்புறதுக்கில்லை... கூட்டிக் கழித்துப் பார்த்தால் எல்லாத் தொடரிலும் ஆளுக்காளுக்கு இரண்டு மனுசிமார் அல்லது புருஷன்கள்... மகாபாரதம், இராமாயணம் மாதிரி... மூலக்கதை ஒன்றும் கிளைக்கதைகள் ஆயிர மாயிரமாய் நூறு, இருநூறு என தொடர்களின் எண்ணிக்கைகள் வளர்ந்துகொண்டுபோக எங்கடை சனங்கள் சோபாவுக்குள் சிறைப்பட்டுக்கொண்டு இருக்குதுகள்.

அரசி முடிய வேறு ஓர் தொடர் தொடங்குகிறது... ஏதோ குடிசையெல்லாம் எரிகிறது... எனக்கும் சாப்பிட்ட களை யில் கண்கள் செருகுகின்றன...

அப்பாவும் அம்மாவும் வந்து நிக்கினம். 1981 எண்டு நினைக்கிறன். 1977ல் தமிழ்நாட்டுக் கோரிக்கையை முன் வைத்து அனைத்து இடங்களையும் தமிழர் கூட்டணி வென்ற கையுடன் நடந்து முடிந்த கலவரமும்... போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று ஜனாதிபதி போட்ட தூபம்... நூற்றுக்கு மேற்பட்ட தமிழரை நாடு முழுக்க காவு கொடுத்து ஆறிய கையுடன்... நடாத்தப்படும் பிரதேசசபைத் தேர்தல்.

படிப்பகம்

padippakam



அப்பா பழைய தமிழ் காங்கிரஸ் ஆள். ஜி. ஜி. பொன்னம்பலம் எண்டால் போதும். தன்னுடையதும், அம்மாவுடையதும் வோட்டு கூட்டணியுள் நிற்கும் பழைய ஒரு காங்கிரஸ் கைக்கு போடவேண்டும் என்ற பிடிவாதத்திலையும்... என்னை பழையபடி கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்ற தீர்மானத்துடனும் வந்திருந்தார்கள்.

அம்மாவுடன் நான் பெரிதாய் எதுவுமே கதைக்க வில்லை. என்னுடைய தேவதாஸ் கோலத்தை அம்மம்மா அம்மாக்கு சொல்லியிருக்க வேண்டும். அம்மாவும் பெரிதாய் கதைக்கவில்லை - நான் ஆத்திரப்படுவேன் என்றோ... அல்லது முடிந்துபோன விடயத்தை ஏன் கிளறுவான் என்றோ...

யாழ்ப்பாணம் எல்லாம் தேர்தல் சூடு. தமிழர் கூட்டணியே வெல்லும் என்ற உறுதிப்பாடு. எங்கு திரும்பினாலும் வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும் என்ற பாடல் வரிகள்தான்.

அப்பா கொழும்பால் வந்து நிற்கும்பொழுதெல்லாம் கூழ் காச்சுவது அம்மம்மாவின் வழக்கம். இம்முறையும் அப்படியே... அம்மம்மாவே சொன்னா சாவக்காட்டுச் சந்தைக்கு போட்டு வரச் சொல்லி... எனக்கு மனம் இல்லா விட்டாலும் அப்பாவுக்காக சைக்கிளை எடுத்துக்கொண்டு காலையிலேயே கிளம்பினேன்.

றோட்டில் ஏதோ ஒரு பயங்கர அமைதி தெரிந்தது.

அதே மாதிரி எதிர்ப்பக்கத்தால் ஓடும் மினிபஸ்களில் மிதமிஞ்சிய பீதியும் இருந்தது.

சாவக்காட்டுச் சந்தைக்குக் கிட்டவாகப் போகப் போக சனங்களின் பதைபதைப்பு அதிகமானது போல இருந்தது...

படிப்பகம்

padippakam



சந்தையும் பெரிதாய் கூடவில்லை.

பாசையூருக்குப் போவோம் என சைக்கிளைத் திருப்பிய படி... யாரிடம் கேட்போம் என்று நினைக்க முதல் யாழ்ப் பாண ரவுன் பக்கமாக இருந்து வானத்தில் புகை கிளம்பிக் கொண்டு இருந்தது.

எனக்கு திக் என்று இருந்தது.

ஆனாலும் சைக்கிளைத் திருப்பி வீட்டுக்கு போகத் தோன்றவில்லை.

இன்னும் கிட்டவாகப் போய் நடந்ததைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது.

கிட்டப் போகப் போக ஓரிடத்தில் இருந்து எழும்பிய புகை இப்பொழுது மூன்று இடத்தில் இருந்து எழுந்து வருமாப்போல் இருந்தது.

ஆம்!

ஒன்று ஈழநாடு ஒவ்வீஸ்!

இரண்டு யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்ட்!!

மூன்றாவதாய்... கடவுளே... யாழ்ப்பாண லைபிரரி!!!

யாழ்ப்பாணத்தை நான் நெருங்க நெருங்க மக்கள் யாழ்ப்பாண ரவுனை விட்டு வெளியேறிக்கொண்டு இருந்தார்கள்.

அனைவரின் முகங்களிலும் கலவரங்கள்.

எங்கே நோக்கி என் சைக்கிளை உழக்குகின்றேன் என எனக்கே தெரியவில்லை...

படிப்பகம்

padippakam



பஸ் ஸ்ராண்ட் முன்னே இருந்த கடைகள் எரிந்து போய் இருந்தன.

பூபாலசிங்கம் புத்தகசாலையில் இருந்து புத்தகக் கட்டுகளை எடுத்து றோட்டுக் கரையில் போட்டிருந்தார்கள். எல்லாமே அரைவாசி எரிந்தபடி... அதிலிருந்து எழுந்த சாம்பலும் புகையும் எல்லோர் முகங்களிலும் உடுப்புகளிலும் படிந்தபடி...

அதில் மேலும் நிற்க முடியவில்லை...

சைக்கிளை லைபிரரிப் பக்கம் திருப்பினேன்.

அந்த அழகிய வெள்ளைக் கட்டடம்... அதன் முன்னே யிருந்த கலைவாணி... எல்லாமே புகை மூட்டத்துள்...

இயலாமையில் மக்கள்...

97,000 புத்தகங்களைத் தின்றுவிட்டு தீ புகைந்து கொண்டிருந்தது.

அது எனக்குள் வெம்மையையும் வேதனையையும் வளர்த்துக் கொண்டு இருந்தது.

யார் யாருக்கு வைத்த தீ?

யார் குடியைக் கெடுக்க எவன் கொடுத்துவிட்ட தீப்பந்தம்?

யாழ்ப்பாணம் எரிகிறது! வீரகேசரியின் தலைப்பானது.

அதை எழுத பாவம் ஈழநாடு இருக்கவில்லை...

எரிந்த அச்சகத்தின் மிஞ்சிய பாகங்களை மனோகரா தியேட்டருக்குக் கிட்டவாகக் கொண்டுபோய் இறக்கிக் கொண்டு நின்றார்கள்.

படிப்பகம்

padippakam



"தம்பி ஏன் சோபாவிலை படுத்திருக்கிறாய். உள்ளுக்கை போய் படன்."

அம்மா தட்டி எழுப்பியபோது திடுக்கிட்டு முழிச்சன்.

ஆனாலும் என் யாழ்ப்பாணம் அன்றிரவு முழுக்க வந்தபடிதான்.

இன்றும் நாளையும் அப்பாக்காக வேலைக்கு லீவு போட்டிருந்தாலும் வழமையாக எழும்பும் நேரத்துக்கே எழும்பி விட்டன்.

நாளைக்கு நடக்க இருக்கும் ஒப்பிரேசனைப் பற்றி இன்று 2 - 3 டாக்டர்களுடன் அப்பா கதைக்க வேண்டியிருக்கும்.

நான்தான் எல்லாத்தையும் அப்பாக்கு மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டியிருக்கும்.

மொழிபெயர்ப்பும் எனக்கு புதிதில்லை. ஆனால் அப்பாக்கு அதைச் செய்வதுதான் கடினம்.

நேற்றும் இப்படித்தான்...

இந்த இடத்திலைதான் மயக்க ஊசி போடுவினம்... இந்த இடத்திலைதான் வெட்டுவினம்... இந்த இடத்தில்தான் மடித்து தைப்பினம்... அடுத்த நாள் கால் இருந்த இடத்திலை, அதுவும் காலில் புண்ணிருந்த இடத்தில் வலிக்கும் போல் என்று உணர்வு இருக்கும்... அப்பாடா... அப்பாடா...

வெட்டியெறிஞ்சுபோட்டு அப்பாவை நிம்மதியாய் இருக்க விடுங்கோடா எனக் குழறவேணும் போலை இருந்தது.

எனக்கே இந்த வேதனை எண்டால் அப்பாக்கு எப்பிடி இருக்கும். ஆனால் அவரின் முகத்தில் எதுவுமே தெரியாது.

படிப்பகம்

padippakam



கம்பராமாயணக் கதை கேட்டுக்கொண்டு இருப்பது போல இருப்பார்.

அப்படி ஒரு மன இறுக்கம்.

அவர் ஆசைப்பட்டபடியே எனது கமராவை எடுத்து ஞாபக மாக வைத்துக்கொண்டேன். அப்பாவின் கால்களைப் படம் எடுக்கும் பொழுது நிச்சயமாய் என் கைகள் நடுங்கும் எனத் தெரியும். எனவே பன்னிரண்டு மணிக்குப் பின் மூர்த்தியை யும் ஆஸ்பத்திரிக்கு வரச்சொல்லிக் கேட்டிருந்தேன்.

அவனும் ஓம் எனச் சொல்லியிருந்தான்.

காலை எட்டு மணியாகி விட்டது.

நான் வெளிக்கிட்டுக்கொண்டு நின்றேன். அம்மா கதவடியில் வந்து நின்றா.

ஏன் என்பது போல அவாவைப் பார்த்தேன்.

"நானும் வரட்டோ..." தயங்கித் தயங்கிக் கேட்டா.

அப்பா காலோடு இருக்கும் கடைசி வேளைகளில் அவருடன் இருக்க விரும்புகிறார் போலும்... ஓம் எனத் தலையாட்டினேன்.

"பொறு... கெதியாய் வெளிக்கிட்டுக்கொண்டு வாறன்..."

எனது மேசை மீதிருந்த அப்பா - அம்மாவின் படம் என் கண்களில் தட்டுப்பட்டது. அது நான் பிறக்க முதல் கொழும்பில் எடுத்துக்கொண்ட படம்.

அப்பா என்ன கம்பீரம் - அம்மா என்ன அழகு.

இப்போ இருவரும் மாறிவிட்டார்கள் — காலம் போட்ட கரிக்கோடுகள் இருவரிலுமே நன்கு தெரிந்தன... இது நான் பிறக்க முதல் எடுத்த படம் - 1958.

படிப்பகம்

padippakam



தாங்கள் 58ல் கொழும்பில் வாழ்ந்த கதைகளை கதையாக எனக்கு சொல்லுவார்கள்.

பக்கத்து வீட்டுச் சிங்களச் சனங்கள் அம்மாக்கு ஈரப்பிலாக்காய் சமைக்க காட்டிக் கொடுத்தது... அம்மா அவர்களுக்கு ஒட்டிமீனிலை சரக்குத் தண்ணி வைக்க காட்டிக் கொடுத்தது... இரண்டு குடும்பங்களும் கதிர் காமத்துக்குப் போனது... கண்டிப் பெரஹறா பார்க்கப் போனது... இப்படி கதைகதையாக...

கிட்டடியில் கூட ஒரு நாள் அப்பா சொல்லிக்கொண்டு இருந்தார்... றாலாமிக்கு கொஞ்ச காசு அனுப்ப வேணுமடா... ஆனால் எங்கை இருக்குதுகளோ தெரியாது... அதுகள் மட்டும் அண்டைக்கு இல்லாட்டி... இண்டைக்கு நான் எங்கை?... கொம்மா எங்கை?...

முதல்நாள் இரவு றாலாமிதான் அப்பாக்கு வந்து சொன்னவராம், “மாத்தையா இண்டைக்கு வேலைக்கு போகாதையுங்கோ... பொலனறுவையிலை பெரிய பிரச்சனை நடக்குதாம்... கரும்புத் தோட்டத்திலை வேலை செய்த ஆட்களை அடிச்சுப் போட்டாங்களாம்... றெயினிலை வந்த சனங்களை நம்மாக்கள் வெட்டிப் போட்டாங்களாம்... பெரிய பிரச்சனை வரும் போலை கிடக்காம்...” என்று.

ஆனால் அப்பா கேட்கவில்லை. அடுத்த நாள் வழமை போலை வேலைக்குப் போய்விட்டார்.

பொலனறுவையில் முதல்நாள் இரவு தொடங்கிய கலவரம் அடுத்த நாளுக்கிடையில் பாணந்துறையென்றும், ஹிக்கடுவையென்றும் ஆங்காங்கே வெடிக்கத் தொடங்கி கடைசியில் கொழும்பையும் அண்மித்தது. பாணந்துறை யில் ஒரு ஆசிரியையின் மார்பகங்களை தமிழர் வெட்டி

படிப்பகம்

padippakam



விட்டார்கள் என்ற ஆளும் கட்சியின் பொய்ப்பிரசாரம், எரியத் தொடங்கி விட்டிருந்த கலவரத் தீக்கு எண்ணை வார்க்கத் தொடங்கியது.

அன்று பின்நேரம் அப்பா வேலையால் வரவேண்டிய நேரத்துக்கு வரவில்லை. அம்மா தனியே... அப்பாக்கு ஏதும் நடந்து விட்டதோ என றாலாமி வீட்டாரும் கவலை யில்... இருட்டு ஆக ஆக அம்மாவின் கலவரத்தை றாலாமி நன்கு புரிந்து கொண்டவராய் தன் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

சுமார் மூன்றுமணி நேரத்திற்குப் பின்பு றாலாமியின் மோட்டார் சைக்கிள் சத்தம் ஒழுங்கை முகரியில் கேட்டது. றாலாமியின் மனுஷியும் அம்மாவும் எட்டிப் பார்த்தார்கள். மோட்டார் சைக்கிள் கொஞ்சம் தள்ளாடியபடி வந்து கொண்டிருந்தது. றோட்டு லைற் வெளிச்சத்தில் அப்பா பின்னே இருப்பது தெரிந்தது. அப்போதுதான் அம்மாக்கு நெஞ்சினுள் தண்ணி வந்தது.

வீட்டை நெருங்கியதும் அப்பா மோட்டார் சைக்கிளில் இருந்து பாய்ந்து இறங்கி றாலாமியையும் மோட்டார் சைக்கிளையும் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டார். றாலாமி அப்பாவின் கையில் மயங்கிச் சாய்ந்தார்.

“மகே அம்மே” என றாலாமியின் மனைவியும் மகளும் கலவரப்பட்டார்கள்.

றாலாமியின் மோட்டார் சைக்கிளின் பின் இருந்த அப்பாவை நோக்கி காடையர்கள் வீசிய வாளை றாலாமிதான் கையால் பிடித்தாராம்.

அப்பா கவலைப்பட்டு கதைகதையாகச் சொல்லுவார்.

படிப்பகம்

padippakam



தான் பின்னேரம் வேலை முடிந்து வீட்டுக்கு வர பஸ் ஸ்ராண்டில் வந்து நின்றபொழுது பறைத்தமிழன் என்று காடையர்கள் துரத்தத் தொடங்கியது தொடக்கம்... அடுத்த மூன்று மணித்தியாலமாக சந்து பொந்துகள் எல்லாம் உயிருக்கு பயந்து பயந்து ஓடி... கடைசியில் மீண்டும் தனது வேலை இடத்துக்குப் போய்ச் சேர்ந்த பொழுது, றாலாமி கேற் வாசலில் அமைதியில்லாது நடந்து கொண்டு இருந்தாராம்.

றாலாமியுடன் அப்பா வீட்டை வந்து அரைமணித்தியாலத்துக்குப் பிறகு வேலையிடத்துக்குள் காடையர்கள் புகுந்து அங்கிருந்த தமிழ் வேலையாட்களை வெட்டினவர்களாம் என்று அப்பா சொல்லும்பொழுது அப்பாவும் றாலாமியை நினைத்து கண் கலங்குவார்.

கலவரம் நடக்கட்டும் என்று வேண்டும் என்றே அரசாங்கம் கண்ணை மூடிக்கொண்டிருந்த அந்த ஆறு நாளும் றாலாமி குடும்பம்தான் அப்பாவையும் அம்மாவையும் தங்கள் வீட்டுக்குள் மறைத்து வைத்திருந்தவர்களாம்.

இனம், மதம், மொழி என்பற்றைக் கடந்து மனித நேயத்துடன் அப்பா அம்மாக்களுக்கு உதவிய அந்த றாலாமி குடும்பத்தையும், சிவராசா வீட்டு இருபத்தைந் தாவது கலியாண வீட்டில் சந்தித்த அந்த என் தேசத்து உறவையும் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது.

"என்ன எங்கடை படத்தைப் பார்த்துக்கொண்டு நிக்கிறாய்?"

நான் திரும்பினேன்.

"பாத்தியே கொப்பரை என்ன கம்பீரமாய் நிமிந்து நிக்கிறார்."

படிப்பகம்

padippakam



“நிக்கிறார்” என்ற சொல் இன்னும் இரண்டு நாளைக்குத் தானே.

என் மனம் நெருடியது.

இருவருமாய் போய் காரினுள் ஏறினோம்.

காலை ஒன்பது மணியிலிருந்து அப்பாவின் அடுத்த நாள் ஒப்பிரேஷக்கான சோதினைகள் தொடங்கிவிட்டன. இரத்தசோதனை செய்பவர்கள், எக்ஸ்ரே எடுப்பவர்கள், வாட் டாக்டர்கள், மயக்கமருந்து கொடுக்க இருக்கும் டாக்டர்கள், சத்திர சிகிச்சை செய்ய இருக்கும் டாக்டர்கள் என அடுத்து அடுத்து அனைவரும் வந்து போய்க்கொண்டு இருந்தார்கள். நான்தான் அனைவருக்கும் மொழி பெயர்ப்பு.

இவை முடிய அப்பாக்கு மத்தியானச் சாப்பாடு வந்தது.

“கொஞ்சம் நீங்களும் சாப்பிடுங்கோவன்.”

தன் சாப்பாட்டின் ஒரு பகுதியை எங்களிடம் நீட்டினார்.

அதுதான் அப்பா.

நான் கீழே போய் கன்ரீனில் சாப்பிட இருப்பதாகச் சொன்னேன்.

அம்மா அப்பாவின் சாப்பாட்டையோ அல்லது கன்ரீனில் என்னுடன் வந்தோ சாப்பிட மறுத்துவிட்டா. இனி அவா வீட்டை வந்து தோய்ந்து குளித்துதான் சாப்பாடு.

நேரத்தைப் பார்த்தேன். மதியம் ஒரு மணியாகியது. இரண்டு மணிக்கு படமெடுக்க மூர்த்தி எப்பிடியும்

படிப்பகம்

padippakam



வந்துவிடுவான். அதற்கு முதல் கன்ரீனில் போய் சாப்பிட்டு வந்துவிடுவோம் என்ற நினைப்பில் கீழே போனேன்.

அங்கு அவர்கள் — குறிப்பாக அவன் — நாலைந்து பேராக கன்ரீனில் கோப்பி குடித்துக்கொண்டு இருந்தார்கள். மூர்த்தி முதல்நாள் சொன்னது ஞாபகம் வந்தது... "அண்டைக்கு சிவராசா வீட்டுப் பார்ட்டி ஆக்களை மேலை கண்டனான். தாரையோ வருத்தம் பார்க்க வந்திருக்கினம் போலை கிடக்கு. நீ ஒண்டும் முட்டிக் கொள்ளாதை."

அவர்களைக் கவனிக்காத மாதிரி இரண்டு ரோஸ் பாண்களையும் அன்றைய புதினத்தாளையும் தேநீரையும் வேண்டிக்கொண்டு போய் தனிய ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டேன்.

ரோஸ் பாணைக் கடித்தபடி பேப்பருக்குள் மூழ்கினேன்.

ஐரோப்பிய - அமெரிக்க - ஆசிய செய்திகளை கண்கள் மேய்ந்து கொண்டிருந்தன.

செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின்பு அகில உலகமே பயங்கரவாதம் பற்றி அதிக உஷாராகியிருந்தது. அதில் டென்மார்க் மட்டும் விதிவிலக்காக இருக்கவில்லை.

டென்மார்க்கின் துப்பறியும் துறை அனைத்து வெளி நாட்டு மக்கள் மீதும் பிரத்தியேகமாக கண்களை வைக்கத் தொடங்கியிருந்தது. இது அகதி முகாமில் இருப்பவராய் இருந்தாலும் சரி... நிரந்தர வதிவிட வாய்ப்பு பெற்றிருந்த வராய் இருந்தாலும் சரி... டென்மார்க்கில் பிரஜாவுரிமை கிடைக்கப் பெற்றவராய் இருந்தாலும் சரி... ஏன், மேலாக இரண்டொரு மாத விசாவில் உல்லாசப் பயணியாய் வந்தவராய் இருந்தாலும் சரி... டென்மார்க்கின் உளவுத் துறை பாரபட்சம் இல்லாமல் ஊன்றியே கவனிக்கத் தொடங்கியிருந்தது.

படிப்பகம்

padippakam



பத்திரிகையின் அடுத்த பக்கத்தைப் புரட்டும்பொழுது அவர்கள் என்னைப் பார்த்து ஏதோ கதைத்துக் கொண்டிருப்பது போலத் தெரிந்தது.

நான் நிமிர்ந்து பார்க்க, அவர்கள் பார்வை வேறு ஒரு பக்கமாய் திரும்பியது.

மீண்டும் நான் பத்திரிகையுள் மூழ்கினேன்.

ஆனால் மனம் மட்டும் இப்போது அவர்களைச் சுற்றி.

எனக்கு முன்னால் யாரோ ஒருவர் வந்து இருப்பது போலத் தெரிந்தது.

நிமிர்ந்து பார்த்தேன்.

அந்த நாலைந்து பேரில் என்னைத் தெரிந்த ஒருவன்.

"என்ன மாஸ்டர் ஆஸ்பத்திரியிலை..."

"ஓம். அப்பாக்கு சுகமில்லை. வைச்சிருக்கிறன்..."

"ஆ... ஏதும் சீரியஸோ..."

"இல்லை" என்பது போலத் தலையாட்டினன்.

"மாஸ்டர் நேரம் இருந்தால் பின்னேரம் வொலிபோல் கிறவுண்டடிப் பக்கம் வாங்கோவன்."

"ஏன்" என்பது போல நிமிர்ந்து பார்த்தேன்.

"ஒரு கூட்டம் வைச்சிருக்கிறம். இரண்டொரு பெரியாக்களும் வருகினம். நாட்டிலை எங்கட அடுத்தடுத்த திட்டங்களைப் பற்றி சொல்லப் போகினம். நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப் போகினம். அதுதான் உங்களைப் போலை படிச்சாக்களும் பங்களிப்பு செய்தால் நல்லது எண்டு கருதுறம்."

படிப்பகம்

padippakam



எனக்கு முன்னாலை இருந்த பேப்பரை அவனுக்கு முன்னாலை தள்ளி விட்டன்.

"பார்த்தீங்களா... நீங்கள், டென்மார்க்கிலை எல்லாச் சுதந்திரமும் இருக்குது, எல்லாம் செய்யலாம் எண்டு நினைக்கிறீங்கள். கொஞ்சம் கவனமாய் இருங்கோ. மற்றது அண்டைக்கு சிவராசா அண்ணை வீட்டடியிலை சொன்னது தான். என்னை எதுக்கையும் இழுக்காதையுங்கோ..."

"என்ன மாஸ்டர் ஆக எழுப்பம் காட்டுகிறீங்கள்."

எனக்கு சுள் எண்டது.

"நான் இப்ப ஆஸ்பத்திரிக்கு அப்பாவைக் கொண்டு வந்தனான். தயவு செய்து நீங்களாகவே வந்து என்னோடை முட்டாதையுங்கோ. பிளீஸ், எனக்கே புரியாத உங்கள் அரசியலுக்கை நான் கடைசி வரை வரப்போறதில்லை. என்னை டிஸ்டர்ப் பண்ணாதையுங்கோ."

"அங்கை போராட்டம் ஒண்டு நடக்கிறதாலைதானே இஞ்சை நீங்கள் சுகமாய் இருக்கிறியள்?" என்னை மடக்கு மாய்ப் போல் கேட்டான்.

"அது உங்களுக்குப் பொருந்துமோ தெரியாது. நான் இஞ்சை வராட்டிலும் நல்லாய்தான் இருந்திருப்பன்."

"படிச்ச திமிருலை கதைக்கிறியளா?"

"இல்லை... இஞ்சை நீங்கள் எல்லாரும் நல்லாய் இருக்கிறம் எண்டே நினைக்கிறியள். காரும் பணமும் வாழ்க்கை இல்லை... புலம் பெயர்ந்த எங்கடை வாழ்க்கையிலை எத்தனையை இழந்திட்டம் தெரியுமோ?"

என் குரல் உயர மற்றவர்களும் அவனுக்கு உதவியாக கிட்ட வந்தார்கள்.

படிப்பகம்

padippakam



"என்ன பிரச்சனையோ..."

"சீ... சீ... நானும் மாஸ்டரும் நாட்டுப்பிரச்சனையளைப் பற்றிக் கதைக்கிறம்."

அவன் கொஞ்சம் அடக்கி வாசிக்க முயன்றான்.

எனக்கு அவ்விடத்தை விட்டு விலக வேணும் போல் இருந்தது. ஆனால் எழுந்து போனால் பயந்து போகிறன் எண்டு நினைத்து விடுவார்கள் என்ற காரணத்தால் அப்படியே இருந்தேன்.

"சரி நாங்களும் கதைக்கிறம்" என்றவாறு அனைவரும் சுற்றி இருந்தார்கள்.

அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை ஊகித்து விட்டேன்.

விதண்டாவாதங்கள் வரப்போகுது... அடிபிடி வரப்போகுது... யார் வெல்லப் போகிறமோ... தோற்கப் போகிறமோ... எங்கள் நாட்டுப் பெயர் நாளை பத்திரிகைகளில் வரப்போகுது.

"இதிலை அடிபாடு தொடங்கி நீங்கள் எந்த இயக்கத்துக் காக என்னை வலுக்கட்டாயமாக இழுக்கிறியளோ அதுக்கு அவமானப் பெயரை தேடித்தரப் போறியளோ இல்லையோ என முடிவெடுத்துப் போட்டு என்னிலை கையை வையுங்கோ. அப்பிடி கையை வைச்சால் என்னை உயிரோடை விட்டு வைச்சிடாதையுங்கோ."

அடுத்த வினாடி அத்தனை கதிரைகளும் காலி.

நானும் எனக்குள் ஒரு திமிருடன் சிரித்தபடி அப்பாவின் மேல் வாட்டிற்குப் போனேன்.

படிப்பகம்

padippakam



இரண்டு மணிக்கு வருவதாய் சொல்லியிருந்த மூர்த்தி முதலே வந்து அப்பாவுடனும் அம்மாவுடனும் கதைத்துக் கொண்டு நின்றான்.

என் முக இறுக்கத்தை மூவரும் அவதானித்திருக்க வேண்டும்.

"என்ன நடந்தது?" மூர்த்திதான் கேட்டான்.

"அப்பாவின் யோசனையில் இருந்தனான்" என்ற பதிலை அப்பாவும் அம்மாவும் நம்பினாலும் மூர்த்தி நம்புமாப் போல் தெரியவில்லை.

"பேந்து சொல்லுறன்" - மெதுவாய் அவன் காதுகளில் சொன்னேன்.

பின்பு படம் எடுக்கும் மூர்த்தியின் படலம் தொடங்கியது.

அப்பாவைத் தனியே... அப்பாவையும் அம்மாவையும்... அப்பாவையும் அம்மாவையும் என்னையும் சேர்த்து... காலுக்கு கொடுக்கப்படும் பிரியாவிடையைப் பார்க்க மனம் பெரிதும் கஷ்டமாய் இருந்தது.

நாளை... இன்னும் 24 மணித்தியாலத்தின்பின் இந்த இடம் வெற்றிடமாகி... கதிரையில் இருந்து சக்கர நாற்காலிக்கு... எழுந்து நின்ற அவரை இனி தூக்கி இருத்தி... அதற்கு மேல் நினைக்க முடியவில்லை. அங்கு தொடர்ந்தும் நிக்க மனம் ஏவவில்லை. கன்ரீன் சம்பவம் காரணமோ தெரியாது.

புறப்படத் தயாரானோம்.

"நாளைக்கு கொம்மாவை கூட்டிக் கொண்டு வராதை."

அப்பாவின் உணர்வுகளை என்னால் புரிய முடிகிறது.

தலையாட்டி விட்டு அம்மாவும் மூர்த்தியும் பின் தொடர படிகளில் இறங்கினேன்.

படிப்பகம்

padippakam



வீட்டிற்கு வந்து சேரும் வரை ஆஸ்பத்திரியில் நடந்த அந்தச் சம்பவம் விரும்பியோ விரும்பாமலோ... புற்றுக் குள்ளால் எட்டிப் பார்க்கும் பாம்பு போல என்னுள் எட்டி எட்டிப் பார்த்தது. அடிபட்ட பாம்பு கட்டாயம் ஒரு நாள் என்னைக் கொத்தப் பார்க்கும் என்று என் மனத்தின் அடியில் ஓர் எச்சரிக்கை.

அந்த யோசனையில் சிவத்த சிக்னலில் காரை எடுத்து விட்டேன்.

நல்ல காலம் - எதிரில் வந்த கறுப்பன் பிறேக்கை போட்டுவிட்டான். அந்தக் கையுடன் ஏதாவது தூஷணத் தால் பேசுவான் என எதிர்பார்த்தேன். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. நடுவிரலை மட்டும் தூக்கிக் காட்டிவிட்டுப் போய்விட்டான்.

"கவனமாய் ஓட்டப்பு... கொப்பான்றை விதியை தாரா லும் மாத்தேலாது... அதை யோசித்து நீயும் காலைக் கையை உடைக்கப் போறியோ... உன்னைப் பார்க்க யார் இருக்கினம்."

அம்மாவின் "யார் இருக்கினம்" என்ற கேள்வியில் நான் கலியாணத்துக்கு தொடர்ந்து மறுத்து வருகிறதை மீண்டும் ஒரு தரம் குத்திக்காட்டியது போல இருந்தது.

திரும்பி அவாவை முறைத்துப் பார்த்தேன்.

தலையைக் குனிந்து கொண்டா...

'நீ மட்டும் என்ரை சின்னவயது ஆசையிலை மண் அள்ளிப் போடாட்டி எனக்கும் ராசாத்திக்கும் இரண்டொரு பிள்ளையாவது இருந்திருக்கும்' மனது சொல்லிக்

படிப்பகம்

padippakam



கொண்டது. அவளும் புருஷனையும் சாகக் கொடுத்து... பிள்ளையையும் இயக்கத்துக்குப் போக விட்டுட்டு... இப்பிடி தனிய... நான் அனுப்பிற மாதக்காசிலை வயிற்றைக் கழுவுற வாழ்க்கை வாழவேண்டி வந்திராது.

மனத்துக்குள் அம்மாவை ஏசிக்கொண்டேன்.

வீட்டை வந்து உடுப்புகளைக் கழற்றிக் கட்டிலில் போட்ட பொழுது முதல்நாள் இரவு முழுக்க திரும்பித் திரும்பி வாசித்துவிட்டு தலைமாட்டடியில் போட்டுவிட்டு மறந்து போன ராசாத்தியின் கடிதம் கண்களில் பட்டது.

நல்ல காலம் அம்மா அறைக்குள் வரவில்லை. வந்திருந் தால் இப்பவும் நான் அவளோடை பிழையான தொடர்பு வைத்திருக்கின்றேன் என நினைத்து அவளைத்தான் பேசுவா.

கடிதத்தை எடுத்துக்கொண்டு மீண்டும் ஒரு தடவை படிப்பதற்காகக் கட்டிலில் படுத்துக் கொண்டேன்.

அன்புடன் என்று தொடங்கி...

அன்றைக்கு அரசடி அம்மன் கோயில் தீர்த்தம். இவன் ரெக்னிக் கொலிச்சாலை வரவில்லை. ரெக்னிக் கொலிச் முடிய கோயிலடிக்கு போட்டான் என்றுதான் நினைத் திருந்தன். இரவாகியும் அவன் வரவில்லை. பக்கத்து வீட்டு பறுவதம் அக்காதான் இவனைக் கோயிலடியிலும் காணவில்லை என்று சொன்னா... எனக்கு மனம் பதட்டப் படத் தொடங்கியது. அக்கம் பக்கங்களில் அவன்ரை கூட்டாளியளின்ரை வீட்டை போய்க் கேட்டுப் பார்த்தன். அன்று அவன் ரெக்னிக் கொலிச்சுக்கு வரவேயில்லையாம்... எனக்கு வயிற்றுக்குலை நடுங்கத் தொடங்கீட்டுது — ஏதும் ஆமி கீமி பிடிச்சுக்கொண்டு போட்டுதோ என்று. பச்சை

படிப்பகம்

padippakam



மண்ணை ஏன் அவன்கள் பிடிச்சுக்கொண்டு போறாங்கள் என மனம் மறுதலித்தது. கடைசியாக இரவு பத்து மணியிருக்கும். அக்கம் பக்கமெல்லாம் எங்கள் வீட்டு முற்றத்தில்... இரண்டு பேர் வந்தாங்கள். இனி மகனைத் தேட வேண்டாம் எண்டு சொல்லிப் போட்டு போனாங்கள். நான் கத்தியழுதததுதான் நினைவிருக்கு. அவங்கள் இருட்டுக்கை இருட்டாய் மறைஞ்சிட்டாங்கள்...

இனி நான் என்ன செய்யப் போறன்?... இனி ஒரு நாளைக்குக் கொண்டுவந்து வாங்கிலை கிடத்துவாங்கள்... அவரை கொழும்பாலை கொண்டுவந்து கிடத்தியது போலை...

என்ரை நிலையை நினைச்சு கவலைப்பட வேண்டாம். இதை உங்களுக்கு எழுதவேண்டாம் எண்டுதான் நினைச்சன்... ஆனாலும் என்ரை கவலைகளை உங்களிட்டை சொல்லாமல் யாரிட்டைச் சொல்லுறது?... வேறு என்ன?... போனமாசம் நீங்கள் அனுப்பிய காசு இந்த முறை நேரத்துடன் வந்து கிடைத்தது...

இப்படிக்கு ராசாத்தி என கடிதம் முடிந்திருந்தது.

ராசாத்தி... ராசாத்தி... என வாய் முணுமுணுக்க கண்ணயரத் தொடங்கியது.

அவரை கொழும்பாலை கொண்டுவந்து கிடத்தியது போலை... அவரை கொழும்பாலை கொண்டுவந்து கிடத்தியது போலை... என்ற அந்த வரிகள் அந்தப் பயங்கரத்துக்குள் என்னை இழுத்துக் கொண்டு போனது... அதுக்கு நானும் தான் சாட்சி...

அந்த எழுபத்தொன்பது யாழ்ப்பாணக் கலவரத் தோடை நானும் அப்பா அம்மாவோடை கொழும்புக்கு வந்திட்டன். எனக்கும் கொழும்பு யூனிவேசிற்றிதான்

padippakam



கிடைச்சிருந்தது. ராசாத்தியின் பிரிவு... அல்லது இழப்பு... அல்லது அம்மாவின்ரை சதி எல்லாம் என்னை ஓர் நடைப்பிணம் போலை ஆக்கிவைத்திருந்தது. யூனிவே சிற்றியில் படிச்சுக்கொண்டு இருந்தாலும்... பாடங்களில் கிளாஸ் அடித்துக்கொண்டு இருந்தாலும் மனது வாழ்க்கையுடன் ஒட்ட மறுத்தது.

பின்னேரத்தில் விளையாடித் திரிந்த வொலிபோல், கிறிக்கட் எதிலுமே மனம் ஒன்ற மறுத்தது. ஆனால் தற்செயலாக ஒரு நாள் கை தானாகவே ஒரு கவிதை எழுதியது. அதுவும் ராசாத்தியின் நினைவில்...

*உனக்கு மாதவிலக்கு*
*என்பதே இல்லை!*
*மாதம் முப்பது நாளும்*
*என்னுடனேயே தூங்குகின்றாய்!!*

கொப்பியின் பின்பக்கத்தில் இந்தக் கிறுக்கலைப் பார்த்து விட்ட என் சக நண்பன் யூனிவேசிற்றியின் ஆண்டு மலருக்கும் கொழும்பில் இருந்து வெளியாகும் ஒரு இலக்கிய சஞ்சிகைக்கும் அனுப்பிவிட்டான்.

நம்பவே முடியவில்லை.

அந்தக் கவிதையே அந்த ஆண்டு சிறந்த கவிதையாகத் தேர்வு செய்யப்பட்டு பாராட்டப்பட்டது. அதன்பின் எழுது மாறு பல வற்புறுத்தல்கள்... வரவேற்புகள்... இலக்கிய உலகத்தின் பல நண்பர்களின் அறிமுகங்கள்... ஆனால் எந்த எழுத்தின் ஒரு வரியிலோ அன்றி மூலையிலோ ராசாத்தியின் ஒரு முகம் தெரியும். அவளைத் தொடும் உதாரணங்கள் என் கவிதைக்கு வலுச்சேர்க்கும். அது காதல் கவிதையாய் இருந்தால் என்ன? போர்க் கவிதை யாய் இருந்தால் என்ன?

படிப்பகம்

padippakam



*மதகுகளை உடைத்து விடுங்கள்*
*மதம் பிடித்த யானைகளைக் கொன்றுவிடுங்கள்*
*அப்பொழுது தான்*
*ஆற்றங்கரையில் நானும் நீயும் காதல் செய்யலாம்!!*

இந்தக் கவிதைக்காக 4ம் மாடிவரை கொண்டு போய் விசாரணை செய்யப்பட்டேன். அல்லது மிரட்டப்பட்டேன். எந்த இயக்கத்துக்கும் எனக்கும் என்ன தொடர்பு என ஆயிரமாயிரம் கேள்விகள்... பதில் ஒன்று தான். கடைசியாக மாதம் ஒரு தடவை வெள்ளவத்தை பொலிஸ் ஸ்டேசனில் வந்து கையெழுத்துப் போடும்படி கட்டளையிடப்பட்டு விடுதலை செய்யப்பட்டேன்.

பொலிஸ் ஸ்டேசனில் இருந்து விடுதலை செய்யப்பட்டாலும் என் இலக்கியத் தோழர்கள் என்னை விட்டபாடில்லை. தொடர்ந்து எழுதினேன். கொழும்பில் இருந்து வந்த அத்தனை சஞ்சிகைகளிலும் எழுதினேன். இலக்கியக் கூட்டங்களில் முன்வரிசையில் இருக்கும் ஒருவனாக எல் லோராலும் அறியப்பட்டேன். என் எழுத்துகளை இலவச மாக வாங்கிப் போனவர்கள் பின்பு அதற்கு ஒரு விலையும் தரத்தொடங்கினார்கள்.

ஆம்! கம்பசின் முதல் ஆண்டில் ஆரம்பித்த என் பொழுதுபோக்கு இலக்கியம் இறுதி ஆண்டை நெருங்கிய பொழுது வருமானம் தரும் இலக்கியமானது.

அத்தனைக்கும் சொந்தக்காரி அவளே...

ஆனால் எங்கிருக்கிறாள்... எப்படியிருக்கிறாள் என்ற தகவலோ ஏதும் இல்லை... யாரிடம் போய்க் கேட்பது? 81ல் யாழ்ப்பாணத்தை விட்டு வெளிக்கிட்டது தொடக்கம் நான் ஊருக்குப் போகவேயில்லை. நானும் என் கவிதைகளும்... கம்பஸ் வாழ்க்கையும்... ராசாத்தியின் நினைவுகளும்...

படிப்பகம்

padippakam



அவளுக்கு பிள்ளைகள் பிறந்திருக்கும் என ஒரு நாள் திடீரென மனது நினைத்துக் கொண்டது.

நான் நினைத்து ஒரு வாரம் இல்லை. புதுவருஷத்துக்காக அப்பாவும் அம்மாவும் யாழ்ப்பாணம் போயிருந்தார்கள். என்னையும் கேட்டார்கள். மறுத்து விட்டேன். அவர்கள் வற்புறுத்தவும் இல்லை. அன்று கோயில் கரையில் நின்றிருந்த வில்வமரத்தடியில் சாத்தி வைக்கப்பட்டிருந்த எனது சைக்கிளை எடுக்கத் திரும்பியபொழுது முன் மண்டபத் தூணடியில் நின்றிருந்தபடி ‘வேணுமெண்டால் இதிலை அரைவாசியை கொண்டு போங்கோ’ எனச் சொன்ன ராசாத்தியின் குரல் மட்டும் இப்பொழுதும் எனக்கு கேட்டுக் கொண்டே இருக்குது.

புதுவருஷத்தன்று கதிரேசன் மண்டபத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒரு கவியரங்கை ஒழுங்கு செய்திருந்தது. நானும் கவிதை வாசிப்பதாக ஏற்பாடு. எனவே நானும் காலையில் எழும்பி குளித்துவிட்டு அப்பா வேண்டி வைத்திருந்த புதுச்சேட்டையும் போட்டுக் கொண்டு முதலில் பொன்னம்பலவேணேஸ்வர் கோயிலுக்குப் போயிட்டு கதிரேசன் மண்டபத்துக்குப் போவதற்காக வீதியில் இறங்கினேன்.

பொன்னம்பலவேணேஸ்வர் கோயில் வீட்டுக்கு கிட்டத்தான்... கூப்பிடு தொலைவில்.

கோயிலை அண்மிக்க அண்மிக்க றோட்டில் கூட்டம் கூடிக்கொண்டே சென்றது.

கற்பூரம் விற்போர், கடலை விற்போர், அர்ச்சனைத் தட்டம் விற்போர் என தெருவோர வியாபாரிகளும், தனியேயும், குடும்பம் குட்டிகளுடன் புது ஆடைகள் அணிந்தும் அநேகர் கோயிலை நோக்கி நடந்து கொண்டு இருந்தார்கள்.

படிப்பகம்

padippakam



குடும்பம் குட்டிகளுடன் போவோரைப் பார்த்தபொழுது என் மனது என்னையும் ராசாத்தியையும் சேர்த்து இணைத்துக் கொண்டது.

"அப்பா ஐஸ்கிறீம் வேண்டித் தாங்கோ" என ஒரு சிறுவனின் பிடிவாதமும், "டே கோயிலாலை போகேக்கை வேண்டித் தரலாம்" என்ற கண்டிப்பான மறுதலிப்பும் எனக்குப் பின்னால் கேட்டுக் கொண்டே வந்தது.

என்னையும் அப்பாவையும் ஒருக்கால் மனது நினைத்துச் சிரித்துக் கொண்டது.

காலங்கள் மாறினாலும் அப்பாக்களுக்கும் பிள்ளை களுக்கும் இடையில் உள்ள ஐஸ்கிறீம் சண்டைகள் குறைவதேயில்லை.

இப்போது அந்தப் பையனுடன் சேர்ந்து இரண்டு சின்னப் பெண்குழந்தைகளின் குரல்களும், "எங்களுக்கும் அப்பா" எனச் சேர்ந்து கொண்டன.

"ஓம்... ஓம்..." என்றவர்களின் ஒரு நிமிட மௌனம், "கோயிலாலை எப்பப்பா போவம்" என ஐஸ்கிறீமுக்கான போராட்டம் புது வடிவத்தில் முளைத்தது.

"சும்மா வாங்கடி... அச்சாப் பிள்ளைகள் அல்லோ..."

இது... இது... ராசாத்திதான்.

திரும்பிப் பார்த்தேன்.

அவளே தான்... மூன்று பிள்ளைகளுடன்... ஒரு பையன், இரட்டைப் பெண்குழந்தைகள், கையில் ஒன்று ஆணோ பெண்ணோ தெரியவில்லை... பக்கத்தே ஒரு கறுத்த தடித்த வளர்ந்த தோற்றமுடைய ஒருவன்... ராசாத்தியின் புருஷ னாகத்தான் இருக்க வேண்டும்.

படிப்பகம்

padippakam



ராசாத்தி உருமாறியிருந்தாள்... இல்லை உருக்குலைந் திருந்தாள்...

அவளும் என்னை அடையாளம் கண்டுகொண்டு விட்டாள்.

"ராசாத்தி எப்பிடி இருக்கிறாய்?"

"நல்லாய் இருக்கிறன்... இப்பவும் அச்சுவேலியிலை தான். இவற்றை தம்பி சவுதியாலை வாறார். எல்லாருமாய் கூப்பிட வந்தனாங்கள். இவர் மிளகாய் லொறி கொண்டு எப்பிடியும் கொழும்புக்கு கிழமையிலை இரண்டொரு தரம் வருகிறவர். இதுகளும் கொழும்பு பார்க்க எண்டு ஆசைப்பட எல்லோரையும் கூட்டிக்கொண்டு வந்தவர். இண்டைக்கு வருஷப்பிறப்பு... அதுதான் கோயிலுக்குப் போவம் எண்டிட்டு..."

ராசாத்தியின் புருஷன் எங்களைத் திரும்பிப் பார்த்தான்.

"இது எங்கடை ஊர் பழைய சேர்மன்ரை பேரன். கொழும்பிலை இருக்கிறார்" என தன் கணவனுக்கு அறிமுகப்படுத்தி விட்டு, "படிச்சு முடிச்சாச்சோ... அல்லது வேலை ஏதும் பார்க்கிறியளோ?..."

"இல்லை... இந்த வருஷத்தோடைதான் படிப்பு முடியுது. அதுக்குப் பிறகு தான் வேலை..."

"சின்னவளுக்கு காது குத்த அம்மா வீட்டை போனனான். கோயிலடியிலை உங்கடை ஆச்சியைக் கண்டனான். மணியகாரற்றை மகளுக்கு உங்களை பேசியிருக்காம்" எண்டாள்.

என்னையும் மீறிய விரக்திச் சிரிப்பு அவள் முகத்தைச் சுண்ட வைத்ததை நன்கு அவதானித்தேன்.

படிப்பகம்

padippakam



“வாங்கோவன் நடந்து நடந்து கதைப்பம்” அவள் கணவன் அவசரப்படுத்தினான்.

“இல்லை, நீங்கள் போங்கோ. இதிலை ஒரு ஆள் வரவேணும்” என்று ஒரு பொய்யைச் சொல்லி என்னை நானே விலத்திக் கொண்டேன்.

இன்னோர் வேதனை என்னால் இனி ராசாத்திக்கு வேண்டாம்.

அவர்கள் நடக்கத் தொடங்கினார்கள். ராசாத்தி திரும்பி என்னைப் பார்ப்பது புரிந்தது.

என்ன நினைத்தேனோ தெரியாது.

பொக்கற்றுள் கையை விட்டு மூன்று நூறு ரூபாய் தாள்களை எடுத்துக்கொண்டு விரைவாக அவர்களிடம் போனேன்.

“பார்த்தியே ராசாத்தி... உன்னோடை கதைச்சுப் போட்டு பிள்ளையளை மறந்து போனன்... இந்தாங்கோ... இந்த மாமான்ரை கைவியளக் காசு” ஆளுக்கு நூறு ரூபாயை மூவரின் கையிலும் கொடுத்தேன்.

“ஏன் இவ்வளவு காசு அதுகளுக்கு? அரைவாசியை திருப்பி வேண்டுங்கோ...”

அரைவாசி என்பது என்னை எங்கேயோ கொண்டு போனது. நிமிர்ந்து அவளைப் பார்த்தேன். எனக்கு கண்கள் கலங்கின.

“தாங்ஸ் மாமா” என்றபடியே பிள்ளைகள் முன்னே நடந்து கொண்டிருந்த தகப்பனுக்கு முன்னால் ஓடினார்கள்.

“என்ன இது சின்னப் பிள்ளை போலை” ஆதரவாகக் கேட்டாள்.

படிப்பகம்

padippakam



ஒன்றுமில்லை என்பது போலத் தலையாட்டிவிட்டு அடக்க முடியாது வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு "போயிட்டு வா ராசாத்தி" எனக் குரல் அடைக்க சொன்னபடியே நான் திரும்பி அறைக்குத் திரும்பி விட்டேன்.

அன்று கதிரேசன் மண்டபத்தில் நடக்கவிருந்த கவியரங்கத் திற்குப் போகவில்லை.

அறைக்குள்ளேயே அன்றைய என் புதுவருடம் கழிந்தது – ராசாத்தியின் நினைவுகளுடன்.

இருபது வயதுக்குள் நான்கு பிள்ளைகளுக்குத் தாயாகி... கொழும்புக்கு மிளகாய் எண்டும் மரக்கறி எண்டும் லொறியோடும் ஒருத்தனின் வருமானத்தை மட்டும் வைத்துக்கொண்டு என்ன கஷ்டப்படுகிறாளோ... அல்லது கஷ்டப்படுத்துகின்றானோ... மனம் வீணாய் சஞ்சலப்பட்டது.

நான் கேள்விப்பட்டிருந்த கொழும்பு லொறியோடும் பல றைவர்களின் கதைகள் போல ராசாத்தியின் புருஷனின் கதையும் இருந்திரக் கூடாது என மனம் கடவுளிடம் மன்றாடியது. இரவுகளில் றோட்டோரம் நிற்கும் சிங்களப் பெண்களிடம் லொறி றைவர்களுக்கு உள்ள தொடர்புகள், அவர்களை லொறிக்கு லொறி மாற்றிக் கொண்டு ஓடும் லொறிகளில் நடாத்தப்படும் விபச்சாரங்கள், அதிலிருந்து வலிய வேண்டிக்கொள்ளும் பாலியல் நோய்கள், அதைக் கொண்டு வந்து அப்பாவிப் பெண்சாதிகளுக்குக் கொடுக்கும் கொடுமைகள்...

கடவுளே ராசாத்திக்கு இப்பிடி நிலைமை வந்திடக் கூடாது.

மனம் மீண்டும் மீண்டும் கடவுளை வேண்டிக் கொண்டது.

படிப்பகம்

padippakam



யாழ்ப்பாணத்துக்கு சித்திரை வருடப்பிறப்புக்குப் போன அப்பாவும் அம்மாவும் ஒரு கிழமையுள் வந்து விட்டார்கள்.

ராசாத்தியைக் கண்டது என்னை நன்றாகக் குழப்பியிருந் தாலும் கடைசி வருட பரீட்சைக்கு என்னை நான் நன்கு தயார் செய்து கொண்டிருந்தேன். ஆனி மாதத்துக்கு இடையில் எல்லா தீசீசும் ஒப்படைக்க வேண்டும். கம்பஸிலேயே அதிக நேரம் இருந்தேன்.

வாழ்க்கையில் விழுந்த அடிக்கு இந்த புத்தகங்கள்தான் ஒத்தடம் போடும் என நம்பினேன். இன்னும் இன்னும் படிக்க வேண்டும்... இந்த கம்பஸ் லைபிரரியை இன்னும் நன்கு பயன்படுத்த வேணும். மேலும் பெரிய ஆராய்ச்சிகள் செய்ய வேணும். அதுக்கு அதி திறமையாக படித்து கிளாஸ் அடிக்க வேணும். அப்படியென்றால் எனக்கு இங்கேயே லெக்சர் செய்யும் வாய்ப்பு இருக்கும்.

வழமைபோல அன்றும் கம்பசால் பிந்தியே வந்தேன். றோட்டில் அதிகமான சனங்கள் இருக்கவில்லை. எங்கள் வீட்டுக்குத் திரும்பும் சந்தியில் ஒரு லொறியைச் சுற்றி அதிகமானோர் குழுமியிருந்தது போல இருந்தது. எட்டிப் பார்த்தேன். லொறியின் பின்சில்லு ஊத்தை தண்ணீர் ஓடும் கானுக்குள் இறங்கி விட்டிருந்தது. பலபேர் பலகையை வைத்தும், இன்னோர் லொறியால் இந்த லொறியை இழுத்துக் கொண்டும் இருந்தார்கள்.

அந்தக் கூட்டத்துள் இருந்து ஒருவனின் குரல் மட்டும் பலத்த தொனியுடன் எப்படி இழுக்க வேண்டும், எப்படி பலகைகளை முட்டுக்கு வைக்க வேண்டும் என்று முதலாளித்துவம் பண்ணிக் கொண்டு இருந்தது.

அந்தக் குரல் எங்கேயோ கேட்ட மாதிரி இருந்தது.

படிப்பகம்

padippakam



இருட்டினுள் உற்றுப் பார்த்தேன்.

தனது கையில் இருந்த சாராயப் போத்தலை மற்றவர் களுக்கும் பகிர்ந்து கொண்டிருந்தான்.

இது ராசாத்தியின் புருஷன் தான்.

"மக்காள் இந்த தம்மோடை லொறி அசையேல்லை, நீங்கள் எல்லாரும் செத்தியள்."

கல்லோயா பேசியது.

ராசாத்தியின் புருஷன் குடிக்கிறானா?

"இந்தா இறங்கி வா! நீயும் ஒரு கிளாஸ் பிடி. எப்பிடியும் இதிலை இருந்து வெளிக்கிட இன்னும் இரண்டு மணித்தி யாலம் செல்லும். அனுராதபுரம் போக விடிஞ்சிடும். குடிச்சுப் போட்டு படு."

லொறியின் முன்னால் இருந்து ஒரு சிங்களப் பெண் இறங்கி வந்தாள்.

எனக்கு உடம்பு பதறியது — ராசாத்தியை நினைத்து.

மற்ற வேளையென்றால், ஒரு நாள் அறிமுகம் என்றாலும் நானாகப் போய் ஏதாவது உதவி செய்திருப்பேன். இப்போ வெறுப்புடன் மீண்டும் இருட்டினுள் மறைந்து கொண்டேன்.

வழியெல்லாம் ராசாத்தியின் நினைவுதான்.

நான் அவசரப்பட்டதாலைதான் அவளுக்கு இந்தக் கதியோ என குற்ற உணர்வு என்னைக் குத்திக் காட்டியது.

அல்லது அம்மா செய்த சதிதான் அவளுக்கு இந்த வாழ்வோ?...

படிப்பகம்

padippakam



வீட்டை போய்ச் சேர்ந்தப்பொழுது இரவு 10 மணிக்கு மேலாகப் போய்விட்டது. வழமைபோல் அம்மா எனக்காக வாசற்படியில் பார்த்துக் கொண்டிருந்தா. எனக்கு அவாவைப் பார்க்கப் பார்க்க கோவமாய் இருந்தது.

அப்பா அறையினுள் தூங்கிக் கொண்டிருந்தார்.

முகத்தைக் கழுவிவிட்டு சாப்பிட உட்கார்ந்து கொண்டேன்.

மேசையில் வழமைக்கு மாறாக அதிக பழங்கள் இருந்தன. யாரோ வந்து போயிருக்க வேண்டும். ஆனால் யார் வந்தது என்று எனக்கு கேட்கத் தோன்றவில்லை.

மனம் ராசாத்திக்காக அழுது கொண்டிருந்தது.

அம்மா சாப்பாட்டைப் போட்டபடி... “மணியகாரமாமா வந்திட்டுப் போனவர்.”

மணியகாரற்றை மகளுக்கு உங்களைப் பேசியிருக்காம் என அம்மம்மா கோயிலடியில் வைத்து சொன்னதாக ராசாத்தி சொன்னது பொறியில் தட்டியது.

அம்மாவை நிமிர்ந்து பார்த்தேன்.

“உனக்கு ஆவணியிலை படிப்பு முடிஞ்சிடும்தானே. நல்லூர் தீர்த்தமும் முடிய நல்ல நாளாய் பார்ப்பம் எண்டு சொல்லி அனுப்பினனாங்கள்” — அம்மா சொல்லி முடிக்க வில்லை... எங்கிருந்து எனக்குள் அப்படியொரு கோபம் வந்ததோ தெரியாது.

சோறு கறியுடன் இருந்த என் சாப்பாட்டுக் கோப்பையைத் தூக்கி சுவரில் அடித்தேன்.

கோப்பை உடைந்து என் கையில் வெட்டி விட்டது.

படிப்பகம்

padippakam



இரத்தம் வழியத் தொடங்கி விட்டது.

அப்பா சத்தம் கேட்டு எழுந்து வந்தார்.

"ஒரு பச்சை மண்ணின்ரை வாழ்க்கையைப் பாழாக்கிப் போட்டியள். இப்ப கலியாணமே வேண்டாம் எண்டு இருக்கிற எனக்கு இன்னொருத்தியைக் கட்டி அவளிண்டை வாழ்க்கையையும் பாழடிக்கப் போறியளோ..."

என்னுடைய சத்தம், கையிலிருந்து வழிந்த இரத்தம் இரண்டையும் கண்டு இரண்டு பேரும் பயந்திருக்க வேண்டும்.

எதுவுமே பேசாமல் நின்றார்கள்.

நான் அறைக்குள் போய் கதவைப் படாரெனச் சாத்தினேன்.

"உனக்கேனப்பா அவன் சாப்பிட இருக்கேக்கை கலியாணக் கதையள்..."

"அப்ப ஊர் உலகம் நெருக்க நெருக்க நான் என்ன பதிலைச் சொல்லுறது... பாத்தியளே அவற்றை கோபத்தை... அந்த பள்ளியைக் கட்ட விடேல்லை எண்டு..."

எனக்கு என்ன செய்கிறன் என்றே தெரியவில்லை.

கடந்த ஐந்து வருடமாய் என்னுள் எரிந்த தீ. இப்போது அதற்கு பெற்றோல் ஊற்றின மாதிரி.

கதவைத் திறந்து கொண்டு வெளியிலை வந்தேன்.

"அவள் பள்ளிதான்... அவளவையைத்தானே தோட்ட வேலைக்கும் வீட்டு வேலைக்கும் வைச்சுக்கொண்டு உங்கடை அப்பர் ஆக்கள் சீரலிச்சவை... இப்ப கதைக்க வந்தீட்டிங்கள்."

படிப்பகம்

padippakam



அம்மா வாய் அடைத்து நின்றா.

நான் மீண்டும் என் அறைக்குள் போய்விட்டேன்.

அப்பாவும் அம்மாவும் சாப்பாட்டறையைத் துப்பர வாக்குவது கேட்டது.

“இப்ப மணியகார மாமாக்கு என்ன சொல்லுறது” அம்மா மெதுவான குரலில்.

“அவன்றை சோதினை முடியும் மட்டும் கொஞ்சம் சும்மா இரு” அப்பா கொஞ்சம் அதட்டியே சொன்னார்.

பின்பு எதுவும் சமையலறையுள் கேட்கவில்லை.

இந்த சம்பவத்துக்குப் பிறகு நான் முற்று முழுதாக வீட்டில் ஒரு அன்னியன் போலவே நடக்கத் தொடங்கினேன்.

கம்பசிலேயே என் அதிக நேரம் கழிந்தது.

வேளையுடன் போனால் நன்கு இருட்டுப்பட்ட பின்பு தான் வருவேன்.

அம்மாவும் அதிகம் பேச்சுக் கொடுப்பதில்லை — எங்கே நான் கோபப்பட்டு விடுவனோ என்று.

ஆனால் அப்பா மட்டும் வழமைபோலை என் தீசீஸ் களை வேண்டிப் பார்ப்பார். தட்டச்சில் எழுதும் பொழுது எழுத்துப் பிழையேதும் வந்திருந்தால் சுட்டிக் காட்டுவார்.

ஜூன் மாதம் முடிந்து ஜூலை மாதமும் ஓடிக்கொண் டிருந்தது.

ஜூலை 23 என்று நினைக்கின்றேன்.

படிப்பகம்

padippakam



கம்பஸ் வளாகத்துள் இருந்த புத்தவிகாரைக்குக் கிட்டவாக இருந்த பெரிய கல்லில் இருந்து ஏதோ வாசித்துக் கொண்டு இருந்தேன்.

சக சிங்கள மாணவர்கள் ஒரு வெறுப்புக் கலந்த பார்வையுடன் போவது போலத் தெரிந்தது.

எனக்குக் காரணம் தெரியவில்லை.

ஆனால் எங்கையோ ஏதோ நடந்துவிட்டது என்பதை மட்டும் அடி மனது சொல்லிக் கொண்டது.

என்ன ஏது என்று மற்றவர்களிடம் விசாரிப்பதற்காக கன்ரீன் பக்கமாய்ப் போனேன்.

தின்னவேலியில் ஓர் இராணுவத் தளபதியும் 12 சிப்பாய்களும் பலியெனவும் மற்றைய இரண்டு சிப்பாய்கள் படுகாயம் எனவும் வானொலி சொல்லிக் கொண்டிருந்தது.

கன்ரீன் நடாத்தும் தஹநாயக்கா என்னிடம் மெதுவாகச் சொன்னார்.

"தம்பி சீக்கிரமாய் வீட்டுக்குப் போங்கோ... கலவரம் வரும் எண்டு பேசிக்கிறாங்கள்."

58 என் நினைவில் வந்து போனது... அப்போது றாலாமி அப்பா அம்மாக்கு கைகொடுத்தது போலை இப்ப எனக்கு தஹநாயக்கா.

வீட்டிலும் அப்பாவும் அம்மாவும் தனியே என்ற நினைப்பில் அவசர அவசரமாக பஸ் ஸ்டாண்டை நோக்கிப் போனேன்.

எல்லா வாகனங்களும் துரித கதியில் தாறுமாறாக கோர்ன் அடித்துக் கொண்டு போய்க்கொண்டு இருந்தன.

படிப்பகம்

padippakam



வந்த பஸ்களோ... மினி பஸ்களோ... நிறுத்தாமல் போக நான் ஓர் ஆட்டோவைப் பிடித்துக்கொண்டு வெள்ளவத்தைக்குப் போனேன்.

அங்கு அப்பாவும் அம்மாவும் அமைதியில்லாமல் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார்கள்.

மூவருமாய் வீட்டுக்குள் போனாலும் அப்பா மிக அமைதியில் லாமல் திரிந்தார்.

“இந்த முறை கலவரம் வந்தால் அது 58ஐ விட மோசமாய் இருக்கும் எண்டு ஆக்கள் கதைக்கினம்.”

“இப்ப ஏதும் நடந்தால் என்ன செய்யுறது எண்டு யோசிங்கோவன்” அம்மா அவசரப்படுத்தினா.

“காலமை யாழ்தேவிக்கு யாழ்ப்பாணம் போயிடுவம்... வேறு வழியில்லை... ஆக்கள் சொல்லுறமாதிரி பிரச்சனை தொடங்காட்டி திரும்ப வருவம். இல்லாட்டி அங்கை நிண்டுட்டு வருவம்.”

“அப்ப நீங்கள் லீவு எடுக்கத் தேவையில்லையோ...”

“அது அங்கை போயும் மெடிக்கல் அனுப்பலாமப்பா... நீ இப்ப கட்டாயம் தேவையானதை மட்டும் எடுத்து வை... தம்பி நீயும்தான்...”

அப்பா சொல்லிவிட்டு வானொலிக்குப் பக்கத்திலேயே கட்டுண்டு இருந்தார் – ஏதாவது புதுச்செய்திகள் வரு கின்றதா என்று.

மீண்டும் மீண்டும் காலமையில் இருந்து வந்த அதே தின்னவேலிச் செய்தியும் கடைசியாக இறந்து போன அந்த இரண்டு இராணுவ வீரரின் மரணச் செய்தியும், பாதுகாப்பு

படிப்பகம்

padippakam



காரணங்களுக்காக தம்தம் கிராமங்களிலேயே இராணுவ வீரர்களை அடக்கம் செய்வதற்கு பதிலாக அமைதியான முறையில் கொழும்பு கணத்தை மயானத்தில் அடக்கம் செய்யப்படுவார்கள் என்ற செய்தியும் திரும்பத் திரும்ப ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

ஆங்கில, சிங்கள ஊடகங்களிலும் இதே செய்திதான்.

அப்படியே செய்தி கேட்பதுவும், றோட்டில் ஏதாவது சத்தங்கள் கேட்கின்றதா என காது கொடுப்பதும் என, கேட்பதும், தூங்குவதும்... தூங்காமலும் அன்றைய இரவு கழிந்தது...

இதே நிலையில்தான் அன்றைய இரவு எல்லாக் கொழும்புத் தமிழரும் இருந்திருப்பார்கள் என நினைக்கின்றேன்.

அதிகாலை மூன்று மணிக்கே எல்லோரும் எழும்பி வெளிக்கிட்டாயிற்று. பொதுவாக ஐந்து மணிக்கு ஆட்டோ பிடித்து கோட்டைப் புகையிரத நிலையத்துக்குப் போனால் போதும். ஆனால் அன்று புகையிரதத்திற்கு அதிக கூட்டம் இருக்கும் என்பதால் இன்னும் வேளையுடன் போதல் உசிதம் என்பதால் மூன்றரை மணிக்கே றோட்டில் இறங்கினோம்.

றோட்டில் மயான அமைதி நிலவியது.

இரண்டொரு தெருநாய்கள் மட்டும் லைற் கம்பத்துக்குக் கிட்டவாக நின்று எங்கேயோ இருந்து இழுத்து வந்த சாப்பாட்டுப் பார்சலை பிய்த்துக் கொண்டு நின்றன.

பஸ், மினி பஸ், ஆட்டோ எதுவும் றோட்டில் இல்லை.

எங்களுக்கு மனத்துள் ஒரு சின்னப் படபடப்பு.

படிப்பகம்

padippakam



இருபது நிமிடத்துக்கு மேலாக நின்றிருப்போம். எந்த அசுமாத்தமும் இல்லை.

றோட்டின் எதிர்க்கரையிலை இருந்த பேக்கறியினுள் வெளிச்சம் தெரிந்தது.

“பேக்கறி மாமாட்டை போய்க் கேட்பமோ... ஏதும் பிரச்சனையோ என்று?” நான்தான் அப்பாவிடம் கேட்டன்.

இந்த கொழும்பில் இருந்த இத்தனை வருடமும் நாங்கள் அந்த பேக்கறி முதலாளியை பேக்கறி மாமா எண்டுதான் கூப்பிடுகிறது.

பொங்கலுக்கு அம்மா அவர்களுக்கு பொங்கல் தந்து விடுவா. அவ்வாறே சித்திரை வருடப் பிறப்புக்கு அவர்கள் எங்கள் வீட்டுக்கு கேக் கொண்டு வந்து தருவார்கள்.

“ஓம் நல்ல யோசனைதான்... நீ இதிலை கொம்மா வேடை நில். நான் கேட்டுக் கொண்டு வாறன்” என அப்பா றோட்டைக் கடந்து போய் பேக்கறியின் பின்புறமாய் இருந்த கதவைத் தட்டப் போனவர் திகிலுடன் திரும்பி வந்தார்.

“கெதியாய் வீட்டை வாங்கோ... உள்ளுக்கை போய்ச் சொல்லுறன்...”

எல்லாச் சாமான்களையும் தூக்கிக் கொண்டு பரபரப்புடன் வீட்டுக்குத் திரும்பினோம்.

இப்பொழுது றோட்டில் நின்றிருந்த தெருநாய்கள் குரைத்துக்கொண்டு ஒன்றுடன் ஒன்று சண்டையிடத் தொடங்கியது.

வீட்டுக்குள் வந்தபொழுது அப்பாக்கு நன்கு வியர்த்திருந்தது.

படிப்பகம்

padippakam



"கொஞ்சம் பச்சைத் தண்ணி தா" என்று அம்மா விடம் சொல்லிவிட்டு பரபரப்புடன் அப்பா சொல்லத் தொடங்கினார்.

"இராத்திரி மெயில் றெயினிலை போன வந்த சனங்களை அனுராதபுரத்திலை வைச்சு வெட்டிப் போட்டாங்களாம்..."

"கடவுளே" என அம்மா கையிலிருந்த செம்பைத் தவற விட்டுவிட்டா.

"அதுமட்டுமில்லை... பேக்கறிமாமாட்டை கடைக்குள்ளை கன ரவுடிமார் நிக்கிறாங்கள்... எந்த எந்த றோட்டிலை தமிழாக்கள் இருக்கினம் எண்டு கதைக்கிறான்கள்.."

நகரசபையில் வாக்காளர் பட்டியல் எடுத்திட்டாங்கள் போல... எனக்கு மூளையில் பொறி தட்டியது. இனி கொழும்பில் இருப்பது புத்திசாலித்தனமில்லை எனப்பட்டது.

எங்கே ஓடுவது?... எந்தப் பக்கத்தால் ஓடுவது?

மூன்று பேரும் ஆளை ஆள் பார்த்துக்கொண்டே இருந்தோம்.

விடியத் தொடங்கியது.

"ஒவ்வீசுக்குப் போனன் எண்டால் வானை எடுத்துக் கொண்டு வந்திடுவன். கண்டி, காலிப் பக்கம் எண்டு போயிடலாம்."

"நானும் வாறனப்பா"

அப்பாவைத் தனிய விட மனம் பயப்பிட்டது

"எப்பிடியடா கொம்மாவைத் தனிய விட்டுட்டு போறது."

"அதுவும் சரி தான்."

படிப்பகம்

padippakam



“மூண்டு பேரும் மோட்டார் சைக்கிளிலை போனால் என்ன?” நான் தான் கேட்டேன்.

அப்பா அம்மாவைப் பார்த்தார்.

நான் இரண்டு பேரையும் பார்த்தேன்.

மூன்று பேரும் பெரிய ஆக்கள். ஆனாலும் அப்பாவின் ஒவ்வீஸ் மட்டும்தானே. மனம் சொல்லிக் கொண்டது.

அப்பா மோட்டார் சைக்கிளை எடுக்கப் போக நானே போய் வேண்டிக் கொண்டேன்.

நடுவில் அம்மா இருந்து என்னையும் கடைசியில் அப்பா இருந்து அம்மாவையும் இறுகப் பிடித்துக் கொண்டிருக்க மோட்டார் சைக்கிள் றோட்டில் இறங்கியது.

காலை ஐந்தரை மணி.

இப்போ பேக்கறி திறக்கப்பட்டிருந்தது.

பலர் குழுமி நின்று அவசரப்பட்டு பாண் வேண்டிக் கொண்டு நின்றார்கள்.

பேக்கறித் திருப்பத்தில் அப்பா சொன்ன அவர்கள் — அந்த காடையர்கள் — நின்றிருந்தார்கள். அவர்கள் கைகளில் இருந்த எல்லாம் பையினுள் மறைக்கப்பட்டிருந்தது போல் இருந்தது.

அவர்களைத் தாண்டி வண்டி ஒரு கணம் நகர்ந்திருக்க மாட்டாது என நினைக்கிறேன்.

ஒரு சோடாப்போத்தல் பறந்து மோட்டார் சைக்கிளுக்கு முன்னால் வெடிக்க அதிலிருந்து நெருப்புச் சுவாலை பறந்தது.

படிப்பகம்

padippakam



"ஐயோ கடவுளே" அம்மா வீரிட்டா.

நான் விழித்துக் கொண்டு அந்த நெருப்புக் கோளத்தை விலத்தி மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போனேன்.

"பிரச்சனை தொடங்கீட்டுது போல கிடக்கடா" அப்பா சொல்லும்போது வெள்ளவத்தைச் சந்தியில் இருந்த தமிழ் கடையள் எரியுமாப் போலத் தெரிந்தது.

இனி காலி வீதியால் ஓடிப்போவதும் புத்தியில்லை என மூளை எச்சரிக்க முதல் எமக்கு முன்னே போன வாகனங் கள் நிறுத்தப்படுவது போல இருந்தது. அந்த வரிசையின் முன்னே நின்ற காரை ஆட்கள் கொளுத்துமாப் போல் இருந்தது.

எதிரே வந்த வானில் இருந்த தோட்டக் கூலித் தொழிலாளர்கள், "அதாலை போகாதையுங்கோ அடிச்சுக் கொளுத்துறாங்கள்" என்று அபாயக் குரல் கொடுத்துக் கொண்டு சென்றார்கள்.

நான் பிறேக்கடித்து திடீரெனத் திருப்ப அப்பாவும் அம்மாவும் பேலன்ஸ் பிடிக்க முடியாமல் தடுமாற மோட்டார் வண்டி போய் றோட்டுக் கரையில் நிற்பாட்டி யிருந்த ஒரு குப்பை அள்ளும் வண்டியில் அடிபட்டு விழுந்தது.

அப்பாக்கு கையில் நல்ல அடி. அம்மாக்கு முழங்கையடி தேய்ந்து இரத்தம் கசிந்தது. நிற்க, பார்க்க எதுக்கும் அவகாசம் இருக்கவில்லை.

மீண்டும் அவர்களை ஏற்றிக்கொண்டு மோட்டார் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு மீண்டும் வந்த வழியால் தெகிவளைப் பக்கமாக ஓடத்தொடங்கினேன்.

படிப்பகம்

padippakam



இப்போ அதிக கடைகள் எரியுமாப் போலவும் ஆட்கள் கடைகளில் இருந்து சாமான்களை எடுத்துக்கொண்டு போவது போலவும் இருந்தது. கடைக்காரரே தங்கள் சாமான்களை எடுத்துக்கொண்டு ஓடுகிறார்களா... இல்லை... கடைகளை காடையர்கள் சூறையடித்துக் கொண்டு ஓடுகிறார்களா?

எதையும் யோசிப்பதற்கு நேரமில்லை.

இப்பொழுது எங்கள் ஒழுங்கையடியைத் தாண்டிக் கொண்டு இருந்தோம். ஒழுங்கை முகரியில் அதிகமாக ஆட்கள் கூடிநின்றது போல இருந்தது. மெதுவாக வேகத்தைக் குறைத்து ஒழுங்கைக்குள் பார்த்தேன்.

கடவுளே... எங்கள் வீடு எரிந்து கொண்டிருந்தது... எங்கள் வீட்டு பிறிச்சை நாலைந்து பேர் தூக்கிக்கொண்டு ஓடுவது தெரிந்தது.

நான் வண்டியை நிற்பாட்டவில்லை.

என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த அம்மாவின் கைகள் உதறுவதை நன்கு உணர்ந்தேன். அப்பாவின்ரை சம்பளத்தில் சிறுகச் சிறுக மிச்சம் பிடித்து கட்டிய வீடு அது. அப்பாக்கு இல்லாவிட்டாலும் அம்மாக்கு அதுதான் வாழ்வின் இலட்சியமாய் இருந்தது.

நான் தொடர்ந்து ஓடிக் கொண்டு இருந்தேன்.

"எதுவரை அப்பா ஓடுவது?" நான்தான் கேட்டேன்.

அப்பா எடுக்கும் முடிவுகளில் எப்பொழுதும் தளம்பல் இருக்காது. அம்மா போல உணர்ச்சி வசப்படமாட்டார்.

"தெகிவளைச் சேர்ச்சுக்கு விடு. பாதர்மாரிட்டை கதைச்சுப் பார்ப்பம்."

படிப்பகம்

padippakam



நல்ல யோசனையாகவே பட்டது.

நேரடியாக சேர்ச்சுக்கு மோட்டார் சைக்கிளை விட்டேன்.

சேர்ச்சின் முன் முற்றம் மக்களால் நிறைந்திருந்தது.

அதிகமானோர் காயப்பட்டு வந்திருந்தார்கள். ஆங்காங்கே ரத்தக் காயங்கள். எரிகாயங்கள்... எல்லாவற்றையும் பறிகொடுத்த வேதனைகள்... மற்றவங்கள் தம்மை அடித்துப் போட்டான்கள் என்ற கோபங்கள்... திருப்பி அடிக்க முடியாமல் போன இயலாமைகள்...

பாதர்மாரும், சிஸ்டர்மாரும் வந்தவர்களுக்கு கோப்பியும் தேத்தண்ணியும் கொடுத்து சேர்ச்சின் வழிபாட்டுக் கூடத்தினுள் விட்டுக் கொண்டு இருந்தார்கள்.

நாங்கள் மூவரும் மூலையில் இருந்த மாதா சொரூபத் துக்குக் கீழே உட்கார்ந்து கொண்டோம்.

அதிகாலை தொடக்கம் இந்த ஒரு மணித்தியாலத்துக் குள் நடந்தது அனைத்தும் கனவுபோல் இருந்தது. அம்மா வீடு எரிந்த பிரமையில் இருந்து இன்னமும் மீளவில்லை. அப்பா எதையும் வெள்ளிக்காட்டாமல் மௌனமாக இருந்தார்.

றோட்டால் அம்புலன்ஸ்களும் தீ அணைக்கும் படை வண்டிகளும் ஓடிக்கொண்டிருந்தன.

எமக்கு பக்கத்தில் இருந்த ஒருவர் தனது கை றேடியோவைத் திருகினார்.

அவரைச் சுற்றியிருந்த அனைவரும் மௌனமாகி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் செய்தியை உள் வாங்கினர்.

படிப்பகம்

padippakam



கொழும்பையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் சேர்ந்த தமிழரின் உயிர்களும் உடமைகளும் சூறையாடப்பட்டுக் கொண்டிருந்தன... தமிழரின் கடைகள் மற்றும் பெரிய தமிழ் ஸ்தாபனங்கள் கொள்ளைபடிக்கப்பட்டு எரியூட்டப் பட்டுக் கொண்டிருந்தன. தமிழர்கள் உயிருக்கு பயந்து உடமைகளை விட்டு விட்டு ஓடிக்கொண்டு இருந்தார்கள். ஆங்காங்கே கற்பழிக்கப்பட்டார்கள்.

கொழும்பில் பகல் இரண்டு மணிபோல் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் எல்லாமே அடங்கிவிடும் என சேர்ச்சில் இருந்த நாமனைவரும் நினைத்தோம்.

அதுதான் நடக்கவில்லை. அந்த ஊரடங்கு கலகக்கார ருக்கும் காடையர்களுக்குமாய் இருக்கவில்லை. அதுவே அவர்களின் கொள்ளைகளுக்குத் துணை போனது.

கொழும்பில் தொடங்கிய இந்த இனச்சுவாலை நேரம் செல்லச் செல்ல நாட்டின் மற்றைய பிரதேசங்களுக்கும் பரவத் தொடங்கியது. மாத்தளை, நாவலப்பிட்டிய, பதுளை, நுவரெலிய என தென்னிலங்கையும் எரியத் தொடங்கியது.

ஆண்டாண்டுகளாய் தங்கள் வியாபாரங்களைப் பெருப்பித்த அத்தனை வியாபாரிகளின் தேடல்களும் சூறையாடப்பட்டுக் கொண்டிருந்தன.

இந்தப் பிரதேசங்களில் பின்னேரம் 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு நாடு காடையர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது.

மக்கள் பள்ளிக்கூடங்களிலும் ஆலயங்களிலும் தஞ்சம் அடைந்தார்கள்.

படிப்பகம்

padippakam



அரச வானொலி எந்த எந்த பிரதேசங்களில் என்ன என்ன சேதம் என கணிப்பீடு செய்து காட்டிக் கொண்டிருக்க, அமைதியாய் இருந்த பிரதேசச் சிங்களவர்களும் தம் பங்குக்கு தாமும் கைகளில் கோடாலிகளை எடுத்துக் கொண்டார்கள்.

இலங்கை எரியத் தொடங்கியது.

24ம் தேதி இலங்கை முழுக்க எரியத் தொடங்கியது.

காவல்துறை கைகட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

மனித அவலத்தின் உச்சகட்டம் 25ம் திகதிதான் நடந்தது.

வெலிக்கடைச் சிறைச்சாலையினுள் பயங்கரவாதச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முப்பத்தி ஏழு தமிழ்ச் சிறைக்கைதிகள் சிங்களக் காடையர்களால் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். நாடு உறைந்து போனது.

சக கைதிகளே தமது சாவிகளைத் திருடி சிறையுடைப்புச் செய்தார்கள் என சிறையதிகாரிகள் அறிக்கை சமர்ப்பித்த பொழுது சிறையில் இருந்த மற்றைய பதினைந்து கைதிகள் உண்மை எது எனச் சொல்லத் துடித்தார்கள். அவர்களின் குரல்களும் 27ம் தேதி அதே சிறையுடைப்பு நாடகத்தால் அடக்கப்பட்டது.

இதற்கிடையில் 26ம் தேதி பின்னேரம் கொட்டியா கொழும்புக்குள் ஊடுருவிவிட்டது என்ற வதந்தி கலவரத்தின் வேகத்தை இன்னும் கூட்டிவிட்டது.

பாதுகாப்புப்படை தொடர்ந்தும் காடையர்களுக்கு பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருந்தது.

படிப்பகம்

padippakam



யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வெளியே எங்கெங்கு தமிழர்கள் இருந்தார்களோ அங்கங்கே அவர்கள் சொத்துகள், கடைகள், வாகனங்கள் ஒன்றுமே விட்டு வைக்கப்படவில்லை. அதிலும் கொழும்பு - யாழ்ப்பாண மரக்கறி, மீன் லொறிகள் அதிகம் கொளுத்தப்பட்டன. மனம் ஒரு தரம் ராசாத்தியின் புருஷனை நினைத்துக் கொண்டது.

நாங்கள் இருந்த மாதா கோயில் மண்டபமும் முற்றாக நிறைந்துவிட்டது. ஆனால் அகதிகளாக மக்கள் வந்து கொண்டே இருந்தார்கள் — அதிலும் குடும்ப அங்கத்தவர் களில் சிலரைத் தொலைத்தபடி அல்லது இழந்தபடி.

பாதர்மாரும் செஞ்சிலுவைச் சங்கமும் மக்கள் தங்கியிருந்த மற்றைய இடங்களில் தொலைந்தவர்களைத் தேடியும், இடமிருந்த வேறு இடங்களுக்கு இங்கிருந்த மக்களை இடம் மாற்றிக் கொண்டும் இருந்தார்கள்.

கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு மக்களை அனுப்பும் ஏற்பாடும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்பா கப்பலுக்கு பதிந்திருந்தார்.

நிலைமை சரிவந்தால் தானும் நானும் கொழும்புக்குத் திரும்பி வருவதெனவும் அம்மா கொஞ்ச நாளைக்கு ஊரிலேயே இருக்கட்டும் என்றும். எனக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கையில் இப்படி நடந்தது பெரிய துர்ப் பாக்கியம் எனக் கவலைப்பட்டார். அவர் வீடு எரிந்ததைப் பற்றி எள்ளளவும் அலட்டிக் கொள்ளவில்லை.

28ம் தேதி என்று நினைக்கிறன். முற்றாக இருந்த ஊரடங்குச் சட்டம் இப்போது பகலில் தளர்த்தப்பட்டது. வாக்காளர் பதிவை வைத்துக்கொண்டு அரசாங்கமே திட்டமிட்டு

படிப்பகம்

padippakam



தமிழரைப் பழிவாங்கியது அல்லது தமிழருக்கெதிரான சதியைச் செய்தது என அனைத்து உலகத்துக்கும் வெட்ட வெளிச்சமானது. அத்துடன் இலங்கைக்கு உலக நாடுகளின் நெருக்கடிகள் அதிகரித்தன.

இந்த நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் உலக நாடுகளில் நல்ல பிள்ளைப் பட்டம் எடுக்கவும் 29ம் திகதி இலங்கை பாதுகாப்புப் படை சுமார் பதினைந்து காடையர்களைச் சுட்டது. அத்துடன் இனக்கலவரம் ஓரளவு தணியத் தொடங்கியது.

காலையில் பறவைகளினதும் ஆட்டோக்களினதும் சத்தங் களைக் கேட்கக்கூடியதாய் இருந்தது. கடற்கரையில் இருந்து வரும் காற்றை அனுபவிக்கக் கூடியதாய் இருந்தது.

மாதா கோயிலில் இருந்தவர்கள் அன்றுதான் நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டார்கள். இவ்வளவு நாளும் மன்றாட்டப்பூஜையில் பங்கெடுத்தவர்கள் அனைவரும் அன்றுதான் மனநிம்மதியுடன் நன்றி சொல்லி தோஸ்திரம் செய்து கொண்டார்கள்.

காலைச் சாப்பாடு முடிய வீட்டைப் பார்த்துக்கொண்டு வருவம் என அப்பா கூப்பிட்டார். நான் வெளிக்கிட்டன். அம்மா தானும் வரப்போறன் எண்டு பிடிவாதம் பிடித்துக் கொண்டா. அப்பா மறுத்து விட்டார். அண்டைக்கு ஆபத்து நிலையில் மூண்டு பேர் மோட்டார் சைக்கிளில் போனது வேறு. இண்டைக்கு றோட்டு முழுக்க ஆமியும் பொலிசும் நிப்பான்கள் என அம்மாவை மறித்துப் போட்டு அப்பா வந்து எனக்குப் பின்னால் ஏறினார்..

றோட்டுக்கு இறங்கியபொழுது நடந்து முடிந்த இனக்கலவரத்தின்ரை கொடுமை தெரிந்தது. றோட்டு

படிப்பகம்

padippakam



முழுக்க எரிந்த கடைகளில் இருந்து இப்பொழுதும் புகை கிளம்பிக்கொண்டு இருந்தது. வீதியோரத்தில் நின்ற கொளுத்தப்பட்ட கார்கள், வான்கள், லொறிகள்...

மனிதர்களை உயிருடனும், உயிர் தப்பியவர்களின் வாழ்க்கையின் அடி அத்திவாரத்தையும் தீக்கிரையாக்கிய இனக்கலவரம் இதுவாகத்தான் இருக்கும்.

வீட்டுக்குக் கிட்டவாக வந்து விட்டோம்.

பேக்கறி திறந்திருந்தது. அதன் கல்லாப்பெட்டியில் பேக்கறிமாமா அமர்ந்திருந்தார். பார்க்க வெறுப்பாய் இருந்தது.

முன் ஒழுங்கையால் திரும்பி வீட்டு வாசலில் மோட்டார் சைக்கிளை நிப்பாட்டினம்.

அத்திவாரத்தையும் சில சுவர்களையும் தவிர எதுவுமே இருக்கவில்லை.

நெருப்பு வெக்கையில் முன்னால் நின்ற செவ்விளனி மரமும் பின்னால் நின்ற பப்பாளி மரமும் முருங்கக்காய் மரமும் கருகியிருந்தன.

நானும் அப்பாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

"இதுக்காகத்தான் கொம்மாவை விட்டுட்டு வந்தனான். மனுஷி வந்திருந்தால் உதிலை விழுந்து குழறி வருத்தக் காரியாய் போயிருக்கும்... அதுதான் நான் கூட்டிக் கொண்டு வர விரும்பேல்லை... கொழும்பு முருங்கைக் காய்கள் சரியில்லை எண்டு யாழ்ப்பாணத்திலை இருந்து தடி கொண்டு வந்து வளர்த்தவா கொம்மா..." அப்பா சொல்லிக் கொண்டு வந்து என் பின்னால் ஏறினார்.

படிப்பகம்

padippakam



அப்பா தன் வேலையிடத்துக்குப் போய் லீவு போட வேணும் என்றார்... பின் ஏதோ நினைத்துக்கொண்டு "வேண்டாமடா நீ சேர்ச்சுக்கே" விடு எண்டார்.

"ஏனப்பா?" நான் கேட்டேன்.

"என்னோடை வேலை செய்தவங்களிலை அரைவாசிப் பேருக்கு மேலை சிங்களவர். அவங்களை இண்டைக்குப் போய் பார்க்க கஷ்டமாய் இருக்கும். அதைவிட எங்கடை தமிழ் ஸ்ராவிலை எத்தனை பேர் செத்தினம் எண்ட புள்ளி விபரம் எல்லாத்தையும் கேட்டு என்னடா செய்யுறது... அண்டைக்கு விடியப்பறம் நாங்கள் வெளிக்கிட்டு இருக்காட்டி இண்டைக்கு யார் இருக்கிறம் எண்டு சொல்லத் தெரியாது..."

அப்பா சொல்லிக்கொண்டு இருக்க நான் மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டு இருந்தேன்.

சேர்ச்சுக்குப் போன பொழுது சரியாக ஒரு கிழமையால் போகும் செஞ்சிலுவைக் கப்பலில் எங்களுக்கு இடம் கிடைத்திருக்கிறது என பாதர் சொன்னார்.

ஒரு கிழமை அதிகமாகப் பட்டாலும் வேறு வழியில்லாத தால் அங்கேயே... மாதா சொரூபத்தின் கீழேயே தங்குவது என முடிவாகியது.

அன்று மத்தியானம் சாப்பிட்டுவிட்டு இருந்தபொழுது அங்கிருந்த ஒவ்வொருவரும் தாம் தாம் கேள்விப்பட்டிருந் ததையும், தமது உறவினர்களுடன் தமது தமது ஊர் களுக்குக் கதைத்தபொழுது கிடைத்த கதைகளையும் சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

ஒவ்வோர் கதைகளும் ஒவ்வோர் கொடுமைகளின் வடிவங்களே.

படிப்பகம்

padippakam



கதைகளின் ஆரம்பங்கள் வெவ்வேறாய் இருந்தாலும் முடிவுகள் பெரும்பாலும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாயும் அல்லது சூறையாடப்பட்டதாயும் இருந்தன. இதில் மனித உடமைகளும், உயிர்களும், பெண்களின் கற்பும் அடங்கியிருந்தன.

அப்பொழுது, "அனுராதபுரத்திலை ஒரு வேடிக்கை யல்லோ நடந்திருக்கு..." ஒருவர் சுவாரஸ்யமாகக் கதை சொல்லுவது போல் ஆரம்பித்தார். எல்லோரின் காதுகளும் அவரை நோக்கித் திரும்பின.

"யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் லொறி ஓடுற பொடிப்பிள்ளை ஒருத்தர் சிங்களத்தியளையும் கொண்டு திரிகிறவர். தெரியும் தானே எதுக்கெண்டு..."

எனக்கு திக்கென்றது.

காதைக் கூராக்கிக் கொண்டேன்.

"கேர்வியோ போட்ட அண்டு அவள் இருக்கிறாள் எண்ட துணிவிலை இவர் போயிருக்கிறார்... லொறி முழுக்க கொழும்புக் கடைக்காரர் யாழ்ப்பாணத்திலை இருக்கிற தங்கடை கடைக்கு ஏத்திவிட்ட துணிப்பொட்டலங்கள்... அவள் கண்வைச்சிட்டாள் போலை... எத்தினை நாளைக்கு அவளவையும் இவை குடுக்கிற ஐஞ்சுக்கும் பத்துக்கும் சாராயப் போத்திலுக்கும் ஆசைப்பட்டு றைவருக்கும் கிளீனருக்கும் பண்ணிக் கொண்டு இருக்கிறது... அன்ராச புரத்திலை இருக்கிற தேத்தண்ணிக் கடையொண்டிலை தான் இவை ஆளை மாத்திறது... றைவரும் கிளீனரும் தன்னைக் கெடுத்துப் போட்டினம் எண்டு குழறியிருக் கிறாள்... பிறகென்ன சங்குதான்... இரண்டு பேரையும் அங்கை நிண்டவங்கள் முடிச்சுப் போட்டு துணியெல்

padippakam



லாத்தையும் எடுத்துப் போட்டு அவளே லொறியையும் கொளுத்திப் போட்டாளாம்... அது மட்டுமில்லை, சிங்களத்தியை தமிழன்கள் கெடுத்துப் போட்டான்கள் எண்டதை வைச்சே அன்ராசபுரத்திலும் வவுனியாவிலும் வேலைக்கு வந்திருந்த தோட்டக்காட்டு பொம்பிளைப் பிள்ளையளையும், மனுஷியளையும் முடிச்சுப் போட்டாங்கள்...''

இது ராசாத்தியின் புருஷனாகத்தான் இருக்க வேண்டும்... அறிவு சொல்லிக் கொண்டது. மனம் அப்படி இருக்கக் கூடாது என கடவுளிடம் கெஞ்சியது.

அன்று இரவு முழுக்க எனக்கு நித்திரையே வர வில்லை.

ராசாத்தி வந்து கொண்டேயிருந்தாள் – மூத்த மகனுடனும், இரட்டைப் பெண்குழந்தைகளுடனும், கடைசிக் கைக் குழந்தையுடனும்.

டெலிபோன் மணி அடிக்க திடுக்கிட்டு முழிச்சன்.

மூர்த்திதான் மறு முனையில்.

"ஆஸ்பத்திரியாலை வந்தவுடனை இதிலை அயர்ந்திட்டன். சொல்லு என்ன விசயம்."

"ஆஸ்பத்திரியடியிலை உனக்கும் அவங்களுக்கும் ஏதும் பிரச்சனையோ..."

"இல்லை... சொல்லு..."

"நீ மறைக்கிறாய்..."

படிப்பகம்

padippakam



"இல்லையடா மூர்த்தி... தானாய் வந்து வம்புக்கிழுக்கப் பார்த்தினம்... நான் முறையாய் கதைச்சன்... ஆட்கள் மாறிட்டினம்..."

"அப்பிடி நீ நினைச்சுக் கொண்டிருக்கிறாய். பின்னேரம் வொலிபோல் கிறவுண்டுக்கை நடந்த அவையின்ரை கூட்டத்துக்கு போனனான். அங்கை கூட்டம் நடந்ததை விட நீ தார்? நீ என்ன இயக்கம்? உனக்குப் பின்னாலை யார் யார் இருக்கினம்? இதுகள்தான் கதையள்... அவங்கள் கட்டாயம் ஏதும் உனக்கு செய்ய வேணும் எண்டு நினைக்கிறாங்கள்..."

"இஞ்சை சும்மா இரடா... இப்பவும் ஏதோ 83 கலவரக் கனவுக்கைதான் இருந்தனான். அண்டைக்கு சிங்களவன் வீட்டோடை எரிச்சிருந்தால் போயிருக்க வேண்டிய உயிர் தானே... ஏன் இவைக்கு நாங்கள் பயப்பிட வேணும்..."

"டே உன்னை தார் பயப்பிடச் சொன்னது. நீ அவங் களோடை போய் முட்டுப்படுறாய்."

"யார் முட்ட வந்தது... அண்டைக்கு சிவராசா அண்ணை வீட்டை நடந்தது உனக்குத் தெரியும்... இண்டைக்கும் அது போலை ஒண்டுதான்... நீங்கள் எத்தினை குழுவாயும் நாட்டுக்காக அடிபடுங்கோ... உங்களுக்கை அடி படுங்கோ... அதுக்காக இஞ்சை வந்த எல்லாரும் உங்களுக்கு அடிபணிஞ்சு இருக்கவேண்டும் எண்டு நினையாதையுங்கோ... இதைத்தான் அண்டைக்கும் சொன்னனான்... சிங்களவனிட்டை அடிமையாய் இருந்தது முடிய தமிழனிட்டை அடிமையாய் வாழுற வாழ்க்கை எனக்கு வேண்டாம்."

"சனங்கள் உன்னைப்பற்றி என்ன கதைக்கும் தெரியுமே..."

படிப்பகம்

padippakam



"என்னத்தை கதைக்கும்? துரோகி எண்டோ?... டே... தமிழரசுக்கட்சிக்கே முழு யாழ்ப்பாணமும் வோட்டுப் போட வேணும் எண்டு நிக்கேக்கை அப்பா தமிழ் காங்கிரசுக்கு வோட்டுப் போட... அப்ப சனம் அப்பாவை உப்பிடித்தான் சொன்னது, தமிழ் தேசியத்துக்கு எதிரான ஆள் எண்டு... பேந்து தமிழரசுக் கட்சியாக்களுக்கு என்ன நடந்தது எண்டு தெரியும் தானே..."

"உந்த பழங்கதையளை விடு... கொஞ்சம் கவனமாய் இரு... மிச்சத்தை நேரடியாய் கதைக்கிறன்..."

மூர்த்தி தொலைபேசியை வைத்து விட்டான்.

அவனுக்கு என்னிலை உள்ள அக்கறை நன்கு தெரியும் — பாவம் அவன்.

தலையணிக்குள் அகப்பட்டு ராசாத்தியின் கடிதம் கசங்கிப் போயிருந்தது.

நேரத்தைப் பார்த்தேன். பின்னேரம் ஆறரை மணியா யிற்று.

மூன்று மணித்தியாலம் இதிலை படுத்திருக்கிறன்.

நித்திரை கொள்ளாது ராசாத்தி - ராசாத்தியின் புருஷன் - கலவரம் - எங்கள் கொழும்பு வீடு - தெகிவளை சேர்ச் என உழன்று கொண்டிருந்தது இன்னும் களைப்பாய் இருந்தது.

எழுந்து முகத்தைக் கழுவிப்போட்டு ஹோலுக்குப் போனேன்.

நான் எழும்பிய அரவம் கேட்டு அம்மா தேத்தண்ணியும் ஊற்றி முதல் நாள் சுட்டு வைத்திருந்த பகோடாவையும் எடுத்து வைத்திருந்தா.

படிப்பகம்

padippakam



நாளைக்கு காலையே ஆஸ்பத்திரிக்கு போக வேணும். அப்பாவை அன்றிரவு 12 மணியிலிருந்து எதுவும் சாப்பிட வேண்டாம் எண்டு சொல்லியிருக்கினம். காலை எட்டு மணியில் இருந்து எந்த நேரமும் ஒப்பிரேஷன் வாட்டுக்கு அழைத்துச் செல்லப்படலாம். அது ஒப்பிரேஷன் வாட்டுக்கு எவ்வளவு தூரம் திடீரென ஆட்கள் வருகினம் எண்டதைப் பொறுத்து இருக்கும். ஏதாவது சாலை விபத்துக்கள் நடந்து எமர்ஜென்சியாய் ஏதாவது ஒப்பிரேஷன் செய்ய வேண்டு மென்றால், அது நடக்கும். இது பிந்தும். இல்லாவிட்டால் குறித்த நேரத்துக்கே அனைத்தும் நடக்கும்.

தேத்தண்ணியையும் பகோடாவையும் சாப்பிட்டபிறகு சோபாவில் இருக்க பெரிய சோம்பலாய் இருந்தது.

அப்பாவிடம் ஒரு தடவை போயிட்டு வருவமா என மனம் கேட்டது.

நாளைய ஒப்பிரேஷனை நினைச்சு ஏதும் தனிய யோசிச்சுக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. நான் போனால் கொஞ்சம் அவருக்கு ஆறதலாய் இருக்கலாம் — மனம் மேலும் என்னை உந்தியது.

சாரத்தினுள் இருந்து ரவுசருக்குள் புகுந்துகொண்டு கார் சாவியை கையிலை எடுத்தன்.

அம்மா, “எங்கை போறாய்” என்பது போலப் பார்த்தா.

“அப்பாவிடம்” எனச் சொல்லிவிட்டு காரினுள் போய் அமர்ந்தேன்.

“இந்தா இதையும் கொண்டு போ” என கொஞ்சம் பகோடாவைச் சுற்றி எடுத்துக்கொண்டு வந்து கார் கதவைத் தட்டினா.

படிப்பகம்

padippakam



ராசாத்தியின் விடயத்தில் அம்மா ஒரு சராசரி யாழ்ப்பாணத் தாயாக நடந்ததுதான் அம்மாவிலை எனக்கிருந்த வெறுப்பே தவிர மற்றும்படி அவா என்னிலும் அப்பாவிலும் ஒவ்வோர் விடயத்திலும் காட்டின அக்கறையும் கவனமும் ஆயிரம் கோடிகளுக்கு சமன்.

அதை வேண்டிக்கொண்டு காரை ஸ்ராட் செய்து றோட்டில் இறக்கினேன்.

றோட் அமைதியாய் இருந்தது.

மழையும் பெய்து ஓய்ந்திருந்ததால் வீசிய சில்லென்ற காற்று என் நித்திரை கொண்ட சோம்பலை முறிக்க பெரிதும் உதவியது.

வாழ்க்கையின் விசித்திரங்களை எண்ணிப் பார்க்கவே எதையும் நம்ப முடியவில்லை.

எங்கேயோ ஒரு மூலையில் பிறந்து... சின்ன வயதுக் காதல் என்னை ஒரு பிரமச்சாரியாகவும்... ராசாத்தியை ஒரு விதவையாகவும்... உலகத்தின் வேறோர் மூலையில் என்னை வாழவைச்சு... என்னைப் பார்க்க எண்டு வந்த அப்பாவை... நாளைக்கு நாற்காலியில் இருத்தி...

நினைவுகளுடன் கை கோர்த்தபடி வந்ததாலோ என்னவோ ஆஸ்பத்திரிக்கு கெதியாய் வந்தது போல இருந்தது.

அப்பா என்னை எதிர்பார்க்கவில்லை

“ஏன் இப்ப இருட்டுப்படுற நேரத்திலை வந்தனி!”

“நீங்கள் சும்மா தனிய இருந்து யோசிச்சுக்கொண்டு இருப்பியள் எண்டுதான் வந்தனான்.”

படிப்பகம்

padippakam



"ஏன் நான் காலைப் பற்றியோசிப்பன் எண்டு நினைச்சனியோ... விசரா... நான் உன்னைப்பற்றித்தான் யோசிச்சுக் கொண்டு இருந்தனான்."

"ஏனப்பா எனக்கு என்ன குறை. நல்லாய்தானே நான் இருக்கிறன். நல்லாய் படிப்பிச்சுவிட்டியள். இப்ப டென்மார்க்கிலை இருக்கிற தமிழ் ஆட்களுக்கை எனக்குத் தானே கூடச்சம்பளம். பிறகென்ன யோசினை..."

"ஆனால் டென்மார்க் தமிழாக்களுக்கை ஒரு குழந்தை குட்டி இல்லாமல் தனி மரமாய் வாழுறதும் நீ ஒருத்தன் தானே."

"அதுக்கு என்னப்பா செய்யுறது."

என் கண்கள் தானாக மூடி, மூச்சும் ஒரு தரம் மேல் எழுந்து கீழ் தாழ்ந்தது.

"நீ கலியாணம் கட்டாமல் இருக்கிறதுக்கு என்ன காரணம் எண்டு எனக்கு நல்லாய் தெரியும்... அதுக்கு நீ கொம்மாவிலை எவ்வளவு கோவமாய் இருக்கிறாய் எண்டதும் எனக்குத் தெரியும்... எனக்குத் தெரிஞ்சு கொம்மா அதைச் செய்திருந்தாலும் எவ்வளவு தூரம் அதை ஆதரித்திருப்பன் அல்லது தடுத்து இருப்பன் எண்டு இப்ப எனக்குத் தெரியாது... அந்த நாள் நிலைமையள் அப்பிடி... இப்பத்தைப் போலை இல்லையடா..."

"ஆனால் அம்மா செய்த வேலையாலை அந்தப் பதினாறு வயதுப் பெட்டைக்கு ஒரு கலியாணம் நடந்து... இருபது வயதுக்கை நாலு பிள்ளையும் ஆகி தாலியையும் அறுத்துப் போட்டு நிக்குது."

அப்பா மௌனமானார்.

படிப்பகம்

padippakam



மகன் இயக்கத்துக்குப் போட்டான் எண்டதை மட்டும் நான் சொல்லவில்லை. சொன்னால் இப்பவும் எனக்கும் ராசாத்திக்கும் தொடர்பு இருக்கு என்பதைக் கண்டுபிடித்து விடுவார்.

இரண்டொரு நிமிடம் நாங்கள் எதுவுமே கதைக்க வில்லை.

அப்பாக்கு மனத்துக்கை கஷ்டமாய் இருக்குது போலை.

நான் வாட்டின் ஒரு மூலையில் இருந்த ஒரு பழைய மகசீனை எடுத்துப் புரட்டிக் கொண்டு நின்றேன்.

“சரியடா... விதி எண்டு ஒண்டு இருந்தால் தாராலை மாற்ற முடியும். இஞ்சை பார், எனக்கு கால் போகவேணும் எண்டு விதி இருந்திருக்கு. யாராலை இதை மாற்ற' முடியும்... உனக்கும் அந்தப் பெட்டைக்கும் சேர்ந்து வாழ விதியில்லை எண்டால் யார் என்ன செய்யுறது?”

அப்பா எனக்காகக் கவலைப்பட்டு என்னைத் தேற்ற முயற்சிக்கின்றார் எனத் தெரிகிறது.

“சரியப்பா உதுகளை விடுங்கோ. நாளைக்கு ஒப்பி ரேஷனைப் பற்றி யோசியுங்கோ.”

“இல்லையடா... நான் இஞ்சை வந்த நாள் தொடக்கம் சில விசயம் கதைக்கத்தான் இருந்தனான். அதுவும் கொம்மா இல்லாத நேரமாய் பார்த்து... இப்ப சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு...”

நான் என்ன என்பது போலப் பார்த்தன்.

“நீயும் இஞ்சை வந்து இப்ப கிட்டத்தட்ட 14 வருஷ மாய் போச்சு... அந்தப் பெடிச்சின்டை நினைவில்லை...

படிப்பகம்

padippakam



அல்லது கொம்மாவிலை இருந்த கோபத்திலை யாரையும் கட்டேல்லை... உங்கை பார் முன் தலைமுடியும் நரைச்சுப் போச்சு... உப்பிடியே போனால் பின்னடிக்கு உனக்கு யார் இருக்கினம். இண்டைக்கு நீ எனக்கு இருந்தபடியாலை நான் தைரியமாய் எனக்கு என்ன நடந்தாலும் நீ பார்ப்பாய் எண்டுட்டு இந்தக் கட்டிலிலை கிடக்கிறன். ஆனால் நாளைக்கு உன்னைப் பார்க்க யாரடா இருக்கினம்..."

"இஞ்சை டென்மார்க்கிலை யாரும் யாரையும் பார்க்கத் தேவையில்லை அப்பா."

"விசர்கதை கதையாதை... அப்பிடியெண்டால் டென் மார்க் சனங்கள் கலியாணம் கட்டாமல் பிள்ளையள் பெறாமலோ இருக்கினம். கலியாணம், குடும்பம் எண்டது நாங்கள் வாழுறதுக்கு ஒரு துணையடா. இதுக்கு மேலை சொல்லிப் புரிய வைக்கிற அளவுக்கு நான் ஒரு வலசுப் பிள்ளையை பெக்கேல்லையடா..." அப்பாவின் கண்கள் கலங்கின.

அப்பா கண் கலங்கிப் பார்த்தது இது இரண்டாம் தடவை. முதல் முறை நான் கம்பசில் கிளாஸ் அடித்தபொழுது. அது சந்தோசத்திலை... இது கவலையிலை.

"சரியப்பா. ஒண்டுக்கும் கவலைப்படாதையுங்கோ. நீங்கள் சுகமாய் வீட்டை வாங்கோ. பிறகு எல்லாத்தையும் பார்ப்பம்" நான் நழுவிக் கொண்டேன்.

நேர்ஸ் வந்து இரவு மருந்தைக் கொடுத்தா. மீண்டும் இரவு பன்னிரண்டு மணியிலை இருந்து எதுவும் சாப்பிடவோ குடிக்கவோ வேண்டாம் என்றுவிட்டு போனாள்.

படிப்பகம்

padippakam



"சரி... நீயும் ஏன் நிண்டு இனி மினக்கெடுகிறாய்... கொம்மாவும் பாவம்... யோசிச்சுக் கொண்டு நிப்பா. போட்டுவாவன்" நீட்டி நிமிர்ந்து படுக்கின்றார்.

"சரியப்பா" என நானும் கிளம்பினேன்.

அப்பா எப்பொழுதும் எதையும் நன்கு யோசிச்சுத்தான் கதைப்பார் அல்லது செய்வார். அப்பிடித் தான் தெகிவளை சேர்ச்சில் இருந்த கடைசிநாளும் நடந்து கொண்டார்.

ஒரு கிழமை எப்படியோ ஓடி விட்டது. பாதர் சொன்னபடி ஒரு கிழமையால் நாங்கள் கப்பலில் யாழ்ப்பாணம் போகும் நாளும் வந்தது.

அன்று விடிய அப்பா அம்மாவிடம் கையில் இருந்த காப்புகள் இரண்டைக் கழற்றித் தருமாறு கேட்டார்.

"ஏனப்பா?" நான்தான் கேட்டன்.

அம்மா ஏதும் கதைக்கவில்லை.

எந்தக் காரணமும் இல்லாமல் அப்பா கேட்கமாட்டார் என்று அம்மாக்குத் தெரியும்.

"நீங்களும் வாங்கோ" என்று அம்மாவையும் என்னையும் கூட்டிக்கொண்டு பாதரின் அறையை நோக்கிப் போனார்.

பாதர் வாசலில் யாருடனோ கதைத்துக் கொண்டிருந்தார்.

பின் எங்களின் பக்கம் திரும்பி, "நீங்கள் இண்டைக்கு யாழ்ப்பாணம் போகிறீர்கள். இல்லையா?"

"ஓம் பாதர்! போறத்துக்கு முதல் இந்த சின்ன காணிக்கையை உங்கடை சேர்ச்சுக்கு தந்திட்டுப் போக வந்தனாங்கள்."

படிப்பகம்

padippakam



என் கண்களில் கண்ணீர் கசிந்தது.

"ஆண்டவன் உங்களை ஆசீர்வதிப்பாராக" எனச் சொல்லி எங்கள் மூவரையும் பாதர் ஆசீர்வதித்தார்.

அப்பாவின் செயலை நினைத்து பெருமைப்படுவதாய் சொன்னார்.

"ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய உதவியை நீங் களும் சிஸ்டர்ஸ்மாரும் எங்களுக்கு செய்திருக்கிறியள். நாங்கள் உண்மையிலை சைவ ஆக்கள். ஆனால் உயிருக்காக ஓடி வரேக்கை எங்களை அரவணைத் தீங்களே, அதுக்கு எங்களால் முடிந்த ஒரு சின்ன காணிக்கை இது."

மதியம் செஞ்சிலுவைச் சங்கத்தின் வான் வந்தபொழுது பாதரும் வாசல்வரை வந்து வழியனுப்பினார்.

இப்போதான் கலவரத்துக்குப் பின்பு அம்மா கொழும்பைப் பார்க்கிறா.

"இதுகளை பார்க்கேக்கை நாங்கள் உயிரோடை இருக்கிறது ஏதோ ஆண்டவன் செயல்தான். அம்மாளாச்சின்ரை அருள்தான். இனி ஊருக்குப் போனால்தான் தெரியும் எங்கடை மற்ற மற்ற சொந்தக்காரருக்கு என்ன நடந்தது எண்டு... மாணிக்கராசாண்ணையின்ரை கடைதானே கண்டியிலையே பெரிசு எண்டு கதைக்கிறவை... மற்றது எங்கடை சுப்பரம்மான்ரை சுருட்டுக்கடை பாணந்துறையிலை... அந்தாளுக்கு ஒவ்வொரு நாளும் கோண்டாவிலில் இருந்து ஒரு லோடு புகையிலையல்லோ போறது. பாணி போட்டதும்... போடாததுமாக..."

அம்மா தனக்குத் தெரிந்தவர்களின் கவலையில்... எனக்கு அனுராதபுரத்தில் வெட்டிக் கொல்லப்பட்டது ராசாத்தியின்

படிப்பகம்

padippakam



புருஷனா அல்லது வேறு யாராவது தமிழ் றைவர்மாரா எண்ட எண்ணம்.

இப்பொழுது கொழும்புத் துறைமுகத்தை அடைந்து விட்டோம்.

வெவ்வேறு அகதிமுகாம்கள், கோயில்கள், பாட சாலைகளில் இருந்து எங்களைப் போலை எத்தனையோ ஆக்கள் வந்திருந்தினம். அங்குதான் கலவரத்தின் அனர்த்தங்களைப் பார்க்கவும் கேட்கவும் கூடியதாய் இருந்தது.

காயப்பட்டவர்கள், வெருட்டல்களுக்கும் - உயிர்ப் போராட்டங்களுக்கும் பயந்து மனத்தால் நன்கு தாக்கப் பட்டவர்கள், உடமைகளை இழந்தவர்கள், உறவுகளைத் தொலைத்தவர்கள் என ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் சோகங்கள்.

எந்த இருவரின் கதைகளும் ஒருமாதிரி இருக்க வில்லை.

வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு உயிர்வாழ்தலுக் காய் உடம்பை மட்டும் சுமந்துகொண்டு பயணிக்கும் எங்கள் அறுநூறு பேரையும் சுமந்துகொண்டு கப்பல் கரையில் இருந்து பிரிந்தது — தாய் மண்ணை நோக்கி.

இன்றுதான் முதன்முதலில் என்னை நான் இலங்கை யில் ஓர் அன்னியனாக உணர்ந்தேன். யாழ்ப்பாணம்தான் உனக்கு என ஏதோ ஓர் உணர்வு என்னுள் சொன்னது.

மற்றும் ஒரு வேளையாயின் இந்தக் கப்பல் பயணம், கடற்காற்று, சூரிய அஸ்தமனம், சூரியோதயம் எல்லா வற்றையும் எவ்வாறு ரசித்திருக்க முடியும். ஆனால் அன்று

படிப்பகம்

padippakam



அது வெறும் கலசம்தான். கடலில் அறுநூறு உயிர்களைக் காவிச் செல்லும் கலசம்தான்.

அடுத்தநாள் பின்னேரம் காங்கேசன்துறை. அங்கிருந்து சங்கானைக்கு கார்.

இலங்கைக் கலவரத்தின் எந்தச் சாயலும் அங்கு தெரிய வில்லை.

நாங்கள் போய் இறங்கியதும் அம்மம்மா ஓடி வந்து எங்கள் மூவரையும் கட்டிப்பிடித்து அழுதா. அயல் அட்டைகளும் புதினங்கள் அறிவதற்காக எங்கள் வீட்டுத் திண்ணையில் கூடினார்கள்.

அன்றைய பொழுது அவ்வாறே போனது.

இரவு முழுக்க எனக்கு ராசாத்தியின் புருஷனின் எண்ணம் தான்.

அடுத்தநாள் விடிய மட்டும் காத்திருந்தேன்.

அப்பா கொழும்பால் வந்திருக்கும்பொழுது பின் வளவில் இறக்கும் முதல் கள்ளில் ஒரு முட்டியை அம்மம்மா அப்பாக்காக வாங்கி வைத்துவிடுவது வழக்கம். அப்பா வீட்டில் வைத்து கள்ளு குடிப்பது ஒன்றும் அம்மம்மாக்கோ அன்றில் அம்மாக்கோ உடன்பாடில்லாத செயல். ஆனால் மாறாக கள்ளுத்தவறணைக்குப் போய் நாலுபேருடன் இருந்து குடிப்பது குடும்பத்துக்கு அவமானம் என்பதால் தான் அந்த ஏற்பாடு.

முன்பு அம்மம்மா ராசாத்தியின் தகப்பன் செல்லனுக்கு பனை மரங்களை வாடகைக்கு கொடுத்திருந்தா. எனது பிரச்சனைக்குப் பிறகு செல்லன் பகுதியில் இருந்த யாரோ ஒருத்தருக்கு கொடுத்திருந்தா.

படிப்பகம்

padippakam



கள் இறக்கிக்கொண்டு அவன் வரும் வழியில் வேணு மெண்டு எம் கிணற்றுக் கட்டிலில் இருந்தேன்.

"தம்பி ஆட்கள் நேற்றுத் தான் வந்ததாக்கும்."

"ஓம்"

"பெரியம்மா ஐயாக்கு ஒரு முட்டி குடுக்கச் சொன்னவா வாக்கும். எப்பிடித் தம்பி கொழும்பிலை பெரிய அழிவோ?"

"ஓம்... பெரிய அழிவுதான்... எங்களுக்கு வீடுதான் எரிஞ்சது... ஆனால் மலைநாட்டுப் பக்கம் கடையள் வைச்சிருந்த எங்கடை ஆக்கள் கனபேருக்கு உயிர்ச் சேதம் எண்டு அம்மம்மா சொன்னவா..."

அவன் "ஊம்" கொட்டிக் கொண்டு நின்றான்.

நான் வேணுமென்றே, "ஏன் உங்கடை ஆக்களுக் குள்ளை தாரும் கொழும்பு பக்கத்திலை...?" வேண்டு மென்றே அவனுக்கு கதை கொடுத்தேன்.

"ஏன் தம்பி பெரியம்மா சொல்லேல்லையோ... எங்கடை பகுதி செல்லன்ரை மருமேனையல்லோ அன்ராச புரத்திலை வைச்சு வெட்டிப் போட்டாங்கள்..."

கிணற்றுக் கட்டில் இருந்த நானே பின்பக்கத்தால் கிணற்றுள் விழுந்தது போல இருந்தது.

"அச்சுவேலியடிப் பொடியன். தங்கமான பிள்ளை. கொழும்புக்கு லொறி ஓடிக்கொண்டு திரிஞ்சவன். நாலு பச்சை மண்ணுகள். பொடிச்சியும் சின்னப் பெட்டை... அதுகள் எல்லாம் குழற ஈரல்குலை பதறிச்சுது தம்பி... இனி செல்லனுக்கும் பாக்கியத்துக்கும்தான் பொறுப்பு.

படிப்பகம்

padippakam



அந்தியேட்டி முடிய அச்சுவேலியான்கள் கொண்டு வந்து விட்டுட்டுப் போயிடுவாங்கள். இந்த பாளைக் கத்தியாலை அந்த சிங்களப் பொறுக்கியளைக் கிழிச்சுத் தள்ள வேணும்..."

அவன் சொல்லிக் கொண்டேயிருந்தான்.

இப்போது நான் "ஊம்" கொட்டிக் கொண்டேயிருந்தேன்.

இனக்கலவரத் தீ இப்பொழுதுதான் என்னைச் சுட்டது.

நாடு பழையபடி சாதாரண நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

கொழும்புக்குத் திரும்ப இன்னும் ஒரு கிழமைதான் இருந்தது.

அந்த மூன்று கிழமையும் நான் நடைப்பிணம்தான்.

அம்மாவோ அம்மம்மாவோ ஏதும் பேசவில்லை. எனக்கும் ராசாத்தியின் புருஷனின் கதை எதுவும் சொல்லவில்லை. ஊருக்கு வந்ததும் அவளின்ரை யோசினையாக்கும் என நினைச்சிருப்பினம்.

ஒருநாள் பின்னேரம் வடையும் சாப்பிட்டு தேத் தண்ணியும் குடிச்சு முடிய இருந்து கதைத்துக்கொண்டு இருக்கும்போது அப்பாவே சொன்னார். "இனி நீ இஞ்சை இருக்கிறது புத்திசாலித்தனம் இல்லை. இப்ப பைனல் எக்ஸாம் முடிய ஏதாவது லண்டன் எக்ஸாம் எழுதி வெளியிலை போற அலுவலைப் பார்க்க வேணும்'' என்று.

படிப்பகம்

padippakam



"என்ரை ஒரே பிள்ளையை விட்டுட்டு நான் உயிரோடை இருப்பனே..." அம்மா தொடங்கினா.

"விசர்கதை கதையாதை... அடுத்த கலவரம் எப்ப வரும்... அடுத்த தடவை யார் தப்புவம் எண்டு யாருக்குத் தெரியும். பிள்ளையைச் சிங்களவனுக்கு குடுத்துப் போட்டு வாழ்க்கை முழுக்க அழுகிறதைவிட எங்கடை பிள்ளை எங்கையோ கண் தெரியாத இடத்திலை நல்லாய் இருக்கட்டும்."

அப்பாவின் முடிவுகள் எப்போதும் திடமாயும் தீர்க்க தரிசனமாயும் இருக்கும்.

"லண்டனுக்கு சரியான காசு வருமப்பா..."

"நீ ஒண்டுக்கும் யோசியாதை. ஊர் முழுக்க எங்கடை சொத்துகள்தானே மலட்டுச் சொத்துகள் போலை கிடக்கு. அதுகளை வித்தால் லண்டன் என்ன, அமெரிக்கா வுக்கும் நீ போய் படிக்கலாம்..."

"ஊரிலை சனங்கள் எங்களை மதிக்கிறதே அந்த காணி, பூமியை வைத்துத்தானே..." அம்மம்மா இழுத்தா...

"ஏன் காணி பூமியை விப்பான். அவனுக்கு காணி, பூமியோடை லட்சம் லட்சமாய் கொடுக்க எத்தினை பேர் பார்த்துக் கொண்டிருக்கினம்." இது அம்மா தன் பங்குக்கு.

"எனக்கு உங்கடை ஒருத்தரின்ரை சொத்தும் தேவை யில்லை... அம்மா உங்களுக்கு சொன்னனான் என்ரை கலியாணக்கதை எடுக்கப்படாது என்று."

கோபத்தில் கத்திவிட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினேன்.

படிப்பகம்

padippakam



“எல்லாத்துக்கும் நீயும் கொம்மாவும் பல்லி சொன்ன மாதிரி.” அப்பா அவர்கள் இருவரையும் பேசிக்கொண்டு இருப்பது எனக்கு பின்னால் கேட்டது.

எனக்கு அம்மா, அம்மம்மாவில் இருந்த கோவத்தில் சைக்கிளில் எங்கு போகிறன், ஏது போகிறன் என்று தெரியாமல் உழக்கிக்கொண்டு இருந்தேன். அப்போதும் மனத்துள் ஒரு நப்பாசை - ராசாத்தியை ஏதாவது றோட்டு அல்லது ஒழுங்கையில் காண மாட்டேனா என்று.

கண்டு என்ன கதைக்கப் போறன் - என்ன செய்யப் போறன் என்று எதுவும் தெரியாவிட்டாலும் காண வேண்டும் என்று மட்டும் எனது மனம் சொன்னது.

கள்ளிறக்கிறவன் சொன்ன கணக்கின்படி இந்தக் கிழமை ராசாத்தியின்ரை புருஷன்ரை அந்தியேட்டி முடிஞ்சு அவள் இங்கு வந்திருக்க வேண்டும்.

அன்று மட்டுமில்லை. அந்தக்கிழமை முழுவதும் சைக்கிள் ஓடிக்கொண்டேயிருந்தது.

அவளைக் காணவேயில்லை.

பனைவெளிகளுக்குள்ளால் ஒரு நாள் அவள் வீட்டடியால் கூடப் போய்ப் பார்த்திருந்தேன்.

அவளோ அவள் பிள்ளைகளோ வீட்டில் இருக்கும் சிலமணைக் காணவில்லை.

செல்லன் திண்ணையிலும் பறுவதம் முத்தத்தில் இருப்பதையும்தான் இரண்டொருநாள் கண்டேன்.

கடைசிநாள் பின்னேரம் அப்பாவும் நானும் மட்டும் கொழும்புக்கு பஸ்ஸில் ஏறும் வரையும் நடைபெற்ற என் தேடல் தோல்வியிலேயே தொடர்ந்தது.

படிப்பகம்

padippakam



கொழும்பு வழமைக்குத் திரும்பியிருந்தது.

அப்பாவும் நானும் அப்பாக்குத் தெரிந்த தமிழ் ஆட்கள் வீட்டில் இரண்டு அறையை வாடகைக்கு எடுத்திருந்தோம். இரவில் மட்டும் சமைப்பார். காலமையும் பகலும் ஏதாவது தமிழ்க்கடைகளில் தான்.

கம்பசுக்குள் போக ஏனோ கால்கள் கூசின.

கொழும்பை சரி, கம்பஸைச் சரி முன்போல் இது என் நாடு, இது என் கம்பஸ் என உரிமை கொண்டாட மனம் மறுத்தது. ஏதோ அன்னிய மண்ணில் காலடி வைத்தது போல.

ஆனாலும் முயற்சியில் மனம் தளராத வேதாளம் போல பழையபடி தீசீஸ்களை எழுதத் தொடங்கினேன். எனது தனிப்பட்ட குறிப்புகளும், புத்தகங்களும் எரிந்து போன நிலையில் புத்தகங்களுக்காக கொழும்பு லைபிரரியிலும், கம்பஸ் லைபிரரியிலுமே அதிக நேரத்தைச் செலவிட்டேன்.

புத்தகங்கள் வாசிப்பு, எழுத்து, சாப்பாடு, இடைக்கிடை ராசாத்தியின் நினைவுகள்... இதைத்தவிர கண்ணுக்கு ஆறுதல் தேவைப்பட்டால் மட்டும் ஓரிரு மணித்தியாலம் தூக்கம்... அதுவும் கதிரையில் இருந்தபடி மேசையிலேயே தூங்கி விடுவேன்.

அப்பாதான் பாவம். தானும் நித்திரை கொள்ளாமல் எனக்கு தேத்தண்ணியும் கோர்லிக்சும் என ஊற்றித் தந்து கொண்டு இருப்பார்.

பாவம் அப்பா — அந்த மூன்று மாதங்களும்.

கடைசியாக அந்த நாளும் வந்தது.

றிசல்ட் வெளியாகின்ற நாள்.

படிப்பகம்

padippakam



பொதுவாக கோயில் குளம் என்று திரியாத அப்பா அன்று நான் எழும்ப முதல் கோயிலுக்குப் போய்விட்டு வந்திருந்தார்.

என்னப்பா பெரிய அப்பிளிக்கேஷனோ எனக் கேட்ட பொழுது எனது பிரடியில் தட்டிப் போட்டு "கெதியாய் போய் குளிச்சிட்டு வெளிக்கிடு" என்றுவிட்டு அன்று தனக்கு லீவு வேண்டும் என லீவுக்கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

அப்பாவின்ரை கனவும் என்ரை நம்பிக்கையும் வீண் போகவில்லை.

பெஸ்ற் கிளாஸ் அடித்து பாஸ் பண்ணியிருந்தேன்.

என்னைக் கீழே கண்ட என் லெச்க்சரர் சண்முகநாதன் "உன்னைத்தான் விசிற்றிங் லெச்சரராய் றெக்கமெண்ட் செய்திருக்கிறன். இந்தக் கம்பஸிலேயே நீ உன்ரை மாஸ்டர் டிகிறியை முடிக்கலாம்" என்றார்.

அப்பா என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதார்.

எனக்குப் பெருமையாக இருந்தது – இப்படி ஒரு அப்பா கிடைத்ததற்காக.

உடனேயே பக்கத்தில் இருந்த தபால் அலுவல கத்துக்குப் போய் அம்மாக்கு தந்தி கொடுத்தார், அடுத்த கிழமை நடக்கவிருக்கும் எனது பட்டமளிப்புக்கும் வரச் சொல்லி.

சுமார் இருபத்திரண்டு வருட ஓட்டம்... ஒரு மைல் கல்லைத் தொட்டுவிட்டது போல மனமும் உடம்பும் இளகியிருந்தது – ஆனால் ராசாத்தியின் நினைவுகள் தான்... நாலு பிள்ளைகள்... வருமானம் இல்லை... தகப்பன் இல்லாது கஷ்டப்படப் போகிறார்கள்... கஷ்டத்தாலை

படிப்பகம்

padippakam



கூலி வேலைக்குப் போகப்போகுதுகள்... நோ... நோ... அதுகளை நான் பார்க்க வேணும்... மனம் உறுதியாக சொல்லிக் கொண்டது.

பட்டமளிப்புக்கு அம்மாவுடன் அம்மம்மாவும் கொழும்புக்கு வந்திருந்தா. அத்துடன் அப்பாவும் அம்மாவும் தங்களுக்குத் தெரிஞ்ச ஆட்களுக்கும் கொழும்பில் இருந்த சொந்தக் காரர்களுக்கும் ஒரு ரீ பார்ட்டிக்கும் ஏற்பாடு செய்திருந் தார்கள்.

கறுத்த அங்கியும் கறுத்த தொப்பியும் கையில் சுருளாக பட்டப்பேப்பரும்... தனியாக, அப்பா அம்மாவோடு, அம்மம்மாவுடன், மற்றும் வந்திருந்த அனைவருடனும் படப்பிடிப்புகள்... கைகுலுக்கல்கள்... கலந்துரையாடல் கள்... அன்றைய நாள் நிறைவான ஒரு நாளாகவே இருந்தது. அம்மாவும் அம்மம்மாவும் மட்டும் எனக்கு கொழும்பில் சம்பந்தம் பேசிய மணியகார மாமாவுடனும் அவரின் மனைவியுடனும் விழுந்து விழுந்து கதைத்துக் கொண்டிருந்தது எனக்கு எரிச்சலை உண்டாக்கியது.

அடுத்த நாள் சாப்பாட்டுக்கு எல்லோரையும் வரச்சொல்லிப் போட்டு அவர்கள் போனதாயும் பின்பு அறிந்தேன். அப்பாவைக் கூப்பிட்டு பொறுமையாகச் சொன்னேன் — எனக்கு உதொண்டும் விருப்பமில்லை எண்டு.

அப்பா என் நியாயமான கோரிக்கைகளை என்றுமே மறுத்ததில்லை.

அம்மாவிடம் அமைதியாகவே சொன்னார், “அண்டைக்கு மாதிரி இனியும் அவன் இன்னொருதரம் கோப்பையையும் எறிஞ்சு கையையும் வெட்டிப்போட்டு நிற்க வேண்டாம். அவை கூப்பிட்டதை மதிக்கிறதெண்டால் நானும் நீயும் கொம்மாவும் போட்டு வருவம்.”

படிப்பகம்

padippakam



அப்பாடா என இருந்தது.

அடுத்தநாள் அப்பா அம்மாக்கள் மணியகார மாமா வீட்டுக்கு சாப்பிடப் போய்விட்டிருந்தார்கள்.

நான் தனியேதான் வீட்டில் இருந்தேன்.

அடுத்து என்ன என்பது பற்றி யோசிக்க அந்தத் தனிமை எனக்கு உதவியது.

அந்த யோசனைகள் என்னைப்பற்றி மட்டுமாய் இருக்க வில்லை - ராசாத்தி, அவள் பிள்ளைகளின் எதிர்காலம் எல்லாத்தையுமாய் சேர்த்து இருந்தது.

இந்த விசிற்றிங் லெக்சரர் போஸ்ட் என்ரை படிப்புக்கு அப்பாவிலை தங்காமல் இருந்து தொடர்ந்து படிக்க உதவுமே தவிர, கடைசிவரை ராசாத்திக்கு உதவப் போதாது. ஆனால் நான் தொடர்ந்து படிக்கவும் வேணும்... ராசாத்திக்கும் உதவவேணும் எண்டால் வெளிநாடுதான் என மனது உறுதியாய் நின்றது.

கொழும்புச் சம்பவத்துக்குப் பின்பு அப்பாவை விட்டுப் பிரிந்து போவது ஒன்று மட்டும் எனக்கு கஷ்ட மாக இருக்கும் என எண்ணினேனே தவிர மற்றும்படி இலங்கையில் எதுவும் என்னை ஒட்டி இழுக்கவில்லை.

யாழ்ப்பாணத்திலை நின்றபொழுது அப்பா சொன்ன லண்டன், அமெரிக்கா யோசனைகள் நல்லதாய் பட்டாலும் அது ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியை அப்பா அம்மாக்குக் கொடுக்கும். நான் ராசாத்திக்கு உதவ வேண்டும் என்றதுக்காக அப்பா அம்மாவைக் கஷ்டப் படுத்துறது நியாயம் இல்லை...

படிப்பகம்

padippakam



யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் மூர்த்தியின் ஞாபகம் வந்தது. என் சின்ன வயது தோழன். எந்தப் பெரிய படிப்பும் இல்லை. கலவரம் ஓய்ந்த அடுத்த நாளே ஏஜென்றுக்கு பத்தாயிரம் கட்டி டென்மார்க்குக்கு அகதியாகப் போயிருந்தவன்.

அவனின் கடிதத்தில் இருந்த தொலைபேசி எண்ணைக் கொண்டு தபால் கந்தோருக்குப் போனேன்.

“நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம் - எல்லாம் தொடர்ந்து படிக்கலாம் - நீ வா.”

ஒரு மணித்தியாலச் சம்பாஷணையின் சாராம்சம் இதாய் தான் இருந்தது.

எனக்கு மனது நிறைந்திருந்தது.

ஒரு நாளும் இல்லாதவாறு றோட்டுக்கரையில் வைத்துப் பூ விற்கும் ஆச்சியிடம் ஒரு முழம் பூவை வேண்டி அதே றோட்டுக்கரையில் இருந்த அந்த சின்ன அம்மன் கோயில் வாசலில் வைத்துக் கும்பிட்டு விட்டு வீடு திரும்பினேன்.

அன்று பின்னேரம் அப்பா, அம்மாக்கள் வீடு திரும்பும் வரை அந்த மல்லிகைப் பூக்களின் மணம் மணத்துக் கொண்டேயிருந்தது.

இரவு ஏழு மணி போல அப்பா அம்மாக்கள் வீட்டுக்கு வந்தார்கள்.

“நல்ல இடமடி” என்று ஏதோ கதைத்துக்கொண்டு வந்த அம்மம்மா என்னைக் கண்டதும் கதையை நிறுத்திக் கொண்டார்.

படிப்பகம்

padippakam



“வடிவாய் சாப்பிட்டனீயே தம்பி” என அம்மம்மாவே கேட்டார்.

“ஓம், மூலைக்கடையிலை கொத்து ரொட்டி சாப்பிட்டனான்.”

“எத்தினை நாளைக்குத்தான் இந்த கடைச் சாப்பாடு களோடை நீயும் கொப்பரும் காலத்தைக் கழிக்கப் போறியளோ தெரியாது.”

ஆறு முழம் கிணறு தோண்டி தண்ணி காண முதலே, முதல் ஒரு முழத்திலேயே ஐயரிட்டை பொங்கலுக்கு நாள் பார்க்கிற அம்மம்மாவைப் பற்றி எனக்குத் தெரியாதா?

நான் வீணாக ஏதும் கதைக்கவில்லை.

அப்பா வந்து காற்றோட்டத்துக்காக தாழ்வாரத்தில் கதிரையைப் போட்டுக் கொண்டு இருந்தார்.

நான் அவருக்குக் கிட்டவாக படிக்கட்டில் போயிருந்து மெதுவாகக் கதையைத் தொடங்கினேன்.

“அப்பா ஒரு பதினைஞ்சாயிரம் பிரட்டலாமோ...”

“ஏன் பிரட்டுவான்? நீ எஸ். எஸ். சி. பாஸ் பண்ணின உடனேயே உன்ரை மேல்படிப்புக்கு எண்டு என்ரை சேவிங்சிலை ஒரு பத்து போட்டு வைச்சனான். இப்ப அது எப்பிடியும் வட்டியோடை பதினைஞ்சைத் தாண்டி யிருக்கும்.”

என்னால் நம்பவே முடியவில்லை. கொழும்பிலை திரும்ப வீடு கட்டுவம் என அம்மா கேட்க தன்னிடம் காசில்லை என மறுத்த அப்பா... இப்பொழுது... எனக்கு கண்கள் கலங்கின.

“சரி விசயத்தை சொல்லு...”

படிப்பகம்

padippakam



"அப்பா நான் மூர்த்தியோடை மத்தியானம் கதைச்சனான். அவன் அங்கை வரட்டாம். தொடர்ந்து படிக்கிறதிலை ஒரு பிரச்சனையும் இல்லையாம். தானே எல்லாத்தையும் பார்க்கிறானாம்."

அப்பா கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்தார்.

பிறகு தனக்குத் தானே தலையை ஆட்டியபடி கேட்டார் — "எப்ப தம்பி காசு வேணும்?"

"நாளைக்கெண்டாலும் சரி! நீங்களும் நானுமாய் போய் ஏஜென்றோடை கதைப்பம்."

"சரியப்பா" என நான் வீட்டுக்குள் திரும்பப் போக படிக்கட்டில் இருந்து எழும்பும்போதுதான் கவனித்தேன் — சாய்மனைக்கட்டிலில் படுத்திருந்த அப்பாவின் கன்னங் கள் ஹோல் லைற்பட்டு மினுங்கின.

அப்பா அழுகிறாரா?

அடுத்த நாள் பின்நேரம் அப்பாக்கு வேலை முடிய ஏஜன்றை போய்ச் சந்தித்தோம். நடந்து முடிந்த கலவரம் காரணமாக அனைத்து நாடுகளும் இலகுவாக அகதி அந்தஸ்து கொடுக்கிறது எண்டும் என்னை ஒரு கிழமையில் பிளேன் ஏற்றுவதாயும் உறுதி அளித்தான்.

அன்றிரவு அப்பாவே விடயத்தை உடைக்க அம்மாவும் அம்மம்மாவும் வீட்டில் ஒரே செத்த வீடுதான்.

அப்பா உறுதியாக நின்றார்.

அவரே நன்மை - தீமை - என்ரை எதிர்காலம் - எல்லாத்தையும் சொன்னபிறகுதான் அம்மா ஓரளவு சமாதானமடைந்தா.

படிப்பகம்

padippakam



"நீ அம்மாவோடையும் அம்மம்மாவோடையும் ஊருக்கு போய் எல்லாருக்கும் பயணம் சொல்லிப்போட்டு வா. நான் இஞ்சை பார்க்கிற அலுவல்களை எல்லாம் பார்க்கிறன்."

அப்பாவே எங்களை யாழ்ப்பாணத்துக்கு சப்பிராவின் சொகுசு பஸ்ஸில் ஏற்றி விட்டார்.

பஸ்ஸில் அம்மாவும் அம்மம்மாவும் நல்ல நித்திரை. என் நினைவு, கனவுகள் எல்லாம் எப்படியும் ராசாத்தியைக் கண்டுபோட்டுத் திரும்பவேண்டும் என்பதுதான். ஊரில் இல்லாவிட்டாலும் அச்சுவேலிக்குப் போயாவது காண வேண்டும் என என் மனம் உறுதியாகச் சொல்லிக் கொண்டது.

டென்மார்க்குக்கு அகதியாய் போய்விட்டால் எந்தக் காலத்தில் இனி இங்கு வருவதோ?

கதையோடு கதையாக மூர்த்தி சொன்னது ஞாபகம் வந்தது. 'டென்மார்க்கிலை சிற்றிசன் கிடைக்க எப்பிடியும் 5 வருசம் செல்லும். அதுவரை இலங்கைப் பக்கம் திரும்பே லாது. அப்பா அம்மாவை வேண்டுமெண்டால் இங்கையே கூப்பிட்டுப் பார்க்கலாம். இல்லாட்டி அவையை இந்தியா, சிங்கப்பூருக்கு கூப்பிட்டு நீ போய் பார்க்க வேணும்...'

ராசாத்தியை எங்கு கூப்பிட்டு எப்போ பார்ப்பது.

பஸ்ஸின் தாலாட்டில் என் கண் அயரத் தொடங்கியது. ராசாத்தியும் என் தோள்களில் சாய்ந்துகொண்டு பயணித்துக் கொண்டிருந்தாள்.

இன்னும் சரியாக ஒரு கிழமை இருக்கிறது - நான் பிறந்த... வளர்ந்த... படித்த... இலங்கையை விட்டுப் பிரிவதற்கு.

படிப்பகம்

padippakam



அதற்கிடையில் எல்லாவற்றையும் ஒரு தரம் பார்த்து விட வேண்டும்.

காலையில் கேட்கும் கோயில் மணி... கலகலவெனக் கூடும் சந்தைகள்... சனங்கள் தொங்க தொங்க செல்லும் பஸ்கள்... ஒன்றன்பின் ஒன்றாக வேலைக்கும் பள்ளிக்கூடத்துக்கும் செல்லும் சைக்கிள்கள்... மாலையில் வீடு திரும்பும் தோட்டக்காரர்கள்... கறவை மாடுகள்... அதற்கு வேலிகளில் குழை ஒடிக்கும் பெண்டுகள்... கோயில் கதவை சாத்தி விட்டுப் போகும் ஐயர்... மாலைக்காட்சிக்கு படத்துக்குப் போகும் பரவசங்கள்... கடைசியாக பட பஸ்ஸில் நித்திரைத் தூக்கத்துடன் போகும் பயணிகள்... அனைவரையும் இந்த ஒரு கிழமையுள் பார்த்து விட வேண்டும்.

மேலாக என் ராசாத்தியை...

ராசாத்தி நீயும் என்னோடை வந்து விடு!

என்ன நினைப்பு இது என நானே தலையாட்டிய பொழுது பஸ் ஸ்ராண்டு வந்திருந்தது.

யாழ்ப்பாணம் விடிந்திருந்தது - பழைய கலகலப்புடன்...

பஸ் ஸ்ராண்டில் இருந்து வீட்டுக்கு கார் பிடித்துக் கொண்டு போனம். போகும் வழியெல்லாம் பஸ்ஸில் கடைசியாகக் கண்ட கனவில் இருந்து விடுபடுவது மிகக் கஷ்டமாய் இருந்தது.

ஆனாலும் அந்தக் கனவுடன் இன்னும் தூங்க வேண்டும் போல் இருந்தது.

ஆனாலும் இன்னும் சரியாக ஏழு நாட்கள்தான் இருக்கிறது.

தூங்குவதற்கு சரி வராது.

படிப்பகம்

padippakam



தேட வேண்டும் — ராசாத்தியைத் தேட வேணும்.

ஆலமரத்தடி தொடக்கம் இடிந்து போற நிலையிலை உள்ள அம்மன் கோயில் வரை ஊரின் ஒவ்வோர் மூலை முடுக்கையும் நான் பார்க்க வேண்டும். நான் திரும்பி வரும் போது சில வேளை இவ்வுலகில் இருந்து போய்விட்டிருக்கக் கூடிய எல்லோரையும் நான் பார்க்க வேண்டும். பெரிய வீட்டுப் பேரனோ என ஆசையாகக் கதைக்கும் அந்த இட்லி விக்கும் செல்லம்மாக் கிழவி... மூண்டு துரும்பு கிடந்தால் போதும் மடக்கி அடிக்க என, எனக்கு 304 பழக்கிய பொன்னையா கிழவன்... மீன் வேண்டப் போகும்பொழுது என்ரை பெட்டையை கட்டுறியோ என பகிடி விடும் காரைநகர் மீன்காற ஆச்சி... அப்பிடி எல்லோரையும் பார்க்க வேண்டும்.

வீட்டை போனவுடனேயே என்ன மரக்கறியள் வேண்டு வது எண்டு அம்மாவிடம் கேட்டுக்கொண்டு சந்தைக்குப் போய் விட்டேன்.

போகும் வழி — சந்தை — வரும் வழியில் எல்லாம் ராசாத்தியைக் கண்கள் தேடியபடியே.

மனம் சோரவில்லை. பதிலாக நான் பார்க்க விரும்பிய, அந்த சந்தையில் தெரிந்தவர்களுடன் நின்று ஆறுதலாகக் கதைத்தேன்... பலர் எனக்கு பட்டம் கிடைத்ததுக்கு பாராட்டு தெரிவித்தார்கள். எங்கள் ஊருக்கே என்னால் பெருமையென சந்தோசப்பட்டார்கள். அடுத்து என்ன செய்யவிருப்பதாகக் கேட்டார்கள். இன்னும் முடிவு செய்யவில்லை என மனமறிந்தே பொய் சொன்னேன். அப்பாவும் சொல்லி விட்டவர் வெளியிலை போற கதையளைக் கனக்க கதைக்க வேண்டாம் என்று.

படிப்பகம்

padippakam



எல்லா மரக்கறிகளையும் வேண்டிக்கொண்டு மீண்டும் ஒரு முறை கண்களால் துழாவிப் பார்த்தேன், செல்லன் - பாக்கியம் - அல்லது ராசாத்தியின் தம்பி கண்ணுக்குத் தென்படுகிறார்களா என்று.

யாரும் இல்லை.

வீட்டுக்குப் போய்விட்டேன்.

வீட்டில் இருந்தபோது ஏன் ராசாத்தியின் வீட்டிற்கு நேராகப் போகக் கூடாது எண்டு மனம் என்னை நோண்டியது.

வேண்டாம்... இன்னும் ஆறு நாட்கள் இருக்கு. அதைக் கடைசி ஆயுதமாய் வைச்சிருக்கலாம் என அறிவு தடுத்தது.

பத்து மணிக்குக் கிட்ட அம்மம்மாவே சொன்னா — கொழும்பிலை ஐஸ் போட்ட மீன் சாப்பிட்டு நாக்குச் செத்துப் போச்சு. போய் நல்ல மீனும் வேண்டிக் கொண்டு அரசடியிலை புல்லுக்காறியள் வந்திருப்பாளவை ஒரு கட்டு புல்லும் வேண்டிக்கொண்டு வா. உவன் கள்ளிறக்கிறவன்ரை மனுஷி நிண்டால் சொல்லு நாளை யிலை இருந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கட்டுப் புல்லை வீட்டை கொண்டு வந்து போடச் சொல்லி.”

நானும் ஓம் என்றுவிட்டு மீண்டும் சைக்கிளை எடுத்துக் கொண்டு போனேன்.

காலையிலை தோட்டங்களுக்கு புல்லுப் பிடுங்கப் போற பெண்டுகள் கூலியின் ஒரு பகுதியாக தாம் பிடுங்கிய புல்லைக் கொண்டு வந்து அரசடியில் வைத்து விற்பது வழமை. மீன் சந்தையும் பத்து மணி போல் கூட, மீன்

படிப்பகம்

padippakam



வேண்ட வருகிறவர்கள் பக்கத்தில் இருந்த அரசடியில் புல்லையும் வேண்டிக் கொண்டு போவார்கள்.

நான் மீன் சந்தைக்குக் கிட்டவாகப் போக தூரத்தில் புல்லுக் கட்டுடன் பெண்கள் போவது தெரிந்தது. புல்லின் பாரமும் றோட்டின் சூடும் தெரியாமல் இருக்க அவர்கள் ஓட்டமும் நடையுமாகச் செல்வது ஓர் அழகாய்த்தான் இருக்கும்.

இப்பொழுது நான் அவர்களுக்குக் கிட்டவாகப் போய் விட்டேன்.

நடுவில் போகும் அந்தச் சின்னப் பெண்... இது எனக்குத் தெரிந்த நடை...

கடவுளே, ராசாத்திதான். நான் சைக்கிளை பிறேக் போட்டு நிறுத்தி விட்டேன்.

காணவேண்டும் காணவேண்டும் என்று துடித்த என் மனது, கண்டால் என்ன கதைப்பது என்று ஓர் கணமேனும் நினைத்திருக்கவில்லை.

எல்லாப் பெண்களும் அரசடியில் தங்கள் புல்லுக் கட்டைப் போட்டு விட்டு சேலை நுனியை எடுத்து தங்கள் நெற்றியைத் துடைத்துக் கொண்டார்கள். அதேபோலும் அவளும்.

எனக்கு என்ன யோசிக்கிறது என்றே தெரியவில்லை. தூரத்தில் சைக்கிளை நிற்பாட்டிப் போட்டு அவளையே பார்த்துக்கொண்டு நின்றேன். புல்லு வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. அவளும் மற்றவர்கள் போலை நிலத் திலை குந்திக் கொண்டு இருந்தாள். ஆனால் மற்றவர்கள் போல் ஊர் வம்பு பேசாமல் மௌனமாக இருந்தாள். அவளின் புல்லையும் பக்கத்தே நிண்ட மனுசியே பேரம்

படிப்பகம்

padippakam



பேசி விற்றுக் கொடுத்தது போல இருந்தது.

இப்பொழுது புல்லு வேண்ட அதிகமானோர் வந்து விட்டார்கள்.

நானும் மெது மெதுவாக அவர்களுக்குக் கிட்டப் போனன்.

அவள் ஒரு புல்லுக்கட்டை விற்று விட்டாள். இன்னும் ஓர் கட்டுத் தான் இருந்தது.

சைக்கிளை ஸ்டாண்டில் நிறுத்திவிட்டு அவள் முன்னே போய் நின்றேன்.

அவள் ஒரு கணம் திகைத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அப்படியே முகம் எல்லாம் இருண்டு கொண்டு வந்தது. பொங்கி வந்த கண்ணீரை சேலைத் தலைப்பால் மறைத்துப் பார்த்தாள். முடியவில்லை போலும். அரச மரத்தடிக்குப் பின்னால் போனாள்.

விற்க வைத்திருந்த புல்லுக்கட்டை அவள் விட்டுட்டுப் போனால் யாரும் ஏதும் நினைப்பார்கள் என்பதால் நானே அதனைக் கொண்டு போய் என் சைக்கிளில் வைத்தேன்.

அவள் இன்னமும் அரசமரத்தின் பின்னே.

மெதுவாக சைக்கிளை உருட்டிக் கொண்டு அவளருகே போனேன்.

கண்கள் சிவந்து முகமெல்லாம் உப்பியிருந்தது.

“இப்ப நீ இதிலை நின்று அழவேண்டாம். பின்னேரம் போலை வீட்டடிக்கு வாறன். கொப்பர் கொம்மாட்டை சொல்லி வை. ஒரு சத்தமும் போட வேண்டாம் எண்டு.”

எங்கிருந்து வந்தது அப்படி ஒரு துணிவு எனக்கு. சொல்லி விட்டுப் போய்விட்டேன்.

படிப்பகம்

padippakam



அவள் ஓம் என்ற மாதிரியும் இருந்தது. வேண்டாம் எண்ட மாதிரியும் இருந்தது.

வீட்டை எப்படி வந்து சேர்ந்தன் எண்டு எனக்குத் தெரியாது.

அம்மம்மா "என்ன புல்லுக்கட்டோடை மட்டும் வந்திருக்கிறாய், மீன் எங்கை?" எனக் கேட்டபொழுது தான் ராசாத்தி மட்டுமில்லை, நானும் கலங்கிப் போயிருக்கிறன் என்ற உண்மை எனக்குத் தெரிய வந்தது.

"நான் மறந்திட்டன் அம்மம்மா. போய் வேண்டிக் கொண்டு வாறன்" - சைக்கிளைத் திருப்பினன்.

"வேண்டாமடா ராசா. முட்டையைப் பொரிப்பம். உனக்கும் பயணக்களைதானே. நீ உதுலை கொஞ்சத்துக்கு படு."

அது எனக்குத் தேவையாய் இருந்தது.

போய்க் கட்டிலில் படுத்ததுதான் எனக்குத் தெரியும்.

என் கண்களில் இருந்து கண்ணீர் தானாக ஓடிக் கொண்டிருந்தது.

ராசாத்தியும் இப்ப இப்படித்தான் அழுதுகொண்டி ருப்பாள்.

பின்னேரம் செக்கல் வரும்வரை பார்த்துக்கொண்டு இருந்தேன்.

வீட்டுக்கோ மற்றவர்களுக்கோ வித்தியாசம் தெரியக் கூடாது என்பதற்காக ரவுசரைப் போடாமல் சாரத்துட னேயே போய் சைக்கிளை எடுத்தேன்.

படிப்பகம்

padippakam



"எங்கை அப்பு இந்த செக்கலுக்கை போறாய்?"

என்னில் எப்பொழுதும் அதிகப்படியான பரிவு வரும் பொழுதெல்லாம் அப்பு என்று அழைப்பது அம்மம்மாவின் வழமை.

இன்னும் ஆறு நாளில் தங்களைப் பிரியப் போறன் எண்ட நினைப்போ என்னவோ அவாவுக்கு. அதனால்தான் அந்த நெருக்கம் போலும்.

"பகல் படுத்தது தலையிடிக்கிற மாதிரிக் கிடக்கு. சும்மா கோயிலடி, வயல் பக்கமாய் போட்டு வந்தால் கொஞ்சம் நல்லாய் இருக்கும்" சொல்லிக்கொண்டே சைக்கிளை எடுத்தேன்.

இப்போ நான் சின்னச் சின்ன பொய்களை சொல்லத் தொடங்கி விட்டேன் என நினைக்க எனக்கே சிரிப்பாய் இருந்தது.

மூலைக்கடை செல்லத்துரை அண்ணையின் கடை யிலை போய் பிஸ்கட்டும் வாழைப்பழமும் வேண்டிக் கொண்டேன்.

இப்போ ராசாத்தி வீட்டுக்குப் போகும் அந்த பனை வடலியூடாக... இதே பனைவெளி... அந்த இரவு... நினைவுகள் கொஞ்சம் பின்நோக்க... சைக்கிள் பெடலை கால்கள் கொஞ்சம் மெதுவாகவே மிதித்தன.

இப்பொழுது இருட்டி விட்டது.

பனைவடலிச் சைக்கிள் பாதை துலக்கமாகத் தெரிகிறது.

ராசாத்தி வீட்டுத் தாழ்வாரத்தில் அரிக்கன் லாம்பு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

படிப்பகம்

padippakam



வீட்டுப் படலையடியில் சைக்கிளைச் சாத்தினேன் — அன்று சைக்கிளைச் சாத்திய அதே இடம் என்று நினைக்கின்றேன்.

நாய்கள் குரைக்கத் தொடங்கின.

"தாராக்கும்" செல்லன்தான் திண்ணையில் இருந்து எழுந்து வந்தான்.

பின்னால் பாக்கியம்.

அதற்குப் பின்னால் ராசாத்தியும் பிள்ளைகளும்.

என்னை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும்.

"அது நான்தான்" — குரல் கொடுத்துக் கொண்டு உள்ளே போனன்.

ராசாத்தியின் பிள்ளைகள் ஓர் அன்னியனைப் பார்க்கும் தோரணையில் என்னைப் பார்த்தார்கள்.

கடைசிப் பிள்ளை அவளது கக்கத்தில்.

முன்னே நின்ற பிள்ளைகளிடம் பிஸ்கட், வாழைப்பழ பாக்கை நீட்டினேன்.

தயங்கினார்கள்.

வலுக்கட்டாயமாக மகனிடம் கொடுத்தேன்.

"வாங்குங்கோ" என ராசாத்தி சொல்ல வேண்டிக் கொண்டு மகிழ்ச்சியுடன் வீட்டுக்குள் போனார்கள்.

"தம்பி இதிலை இருந்து கதையுங்கோ..." பாக்கியம் பாயை மண் திண்ணையில் போட்டாள்.

படிப்பகம்

padippakam



நான் இருந்து கொண்டேன்.

ராசாத்தி பிள்ளையுடன் வாசல் தூணுடன் நின்றாள்.

நான் மௌனமாக அவர்களைப் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

அவர்களும் அதேபோலவே. மௌனம் எங்கள் நாலு பேரையும் ஏதும் கதைக்காமல் தடுத்துக்கொண்டு நின்றது.

கொஞ்ச நேரத்திலை செல்லனே, "தம்பி ஏதோ ராசாத்தி யோடை கதைக்க வாறன் எண்டு சொன்னனீங்களாம். நீங்கள் கதையுங்கோ... வா நீ நாங்கள் கொட்டிலுக்கை போவம்" பாக்கியத்தை பின்னேயுள்ள கொட்டிலுக்குப் போவதற்காக அழைத்தான்.

"இல்லை நீங்களும் நில்லுங்கோ..."

இதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

"என்ன விசயமாக்கும்" என செல்லன் நிலத்திலை குந்தியிருந்தான். பறுவதமும் செல்லனுக்கு பக்கத்திலை பின்னி வைக்கப்பட்டிருந்த தென்னோலையை எடுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

"நீயும் உதுலை குந்தன் பிள்ளை..." செல்லன் சொல்ல ராசாத்தி மற்ற திண்ணையில் இருந்தாள்.

"ராசாத்தியின்ரை விசயம் எல்லாம் கொழும்பிலை இருக்கேக்கை கேள்விப்பட்டனான்."

நான் சொல்லத் தொடங்க அவள் விக்கி விக்கி அழத் தொடங்கினாள்.

குழந்தை அவளைப் பரிதாபமாகப் பார்த்தது.

படிப்பகம்

padippakam



“என்ன செய்யுறது... அவளின்ரை விதி... இந்தக் கண் கெட்ட கடவுள் இந்த வயதிலை 4 குஞ்சுகளையும் குடுத்து தாலியையும் அறுத்து அவளை புல்லுக்கட்டு சுமக்க வைச்சிட்டுது...” பாக்கியம் புலம்பத் தொடங்கினாள்.

ராசாத்தி இன்னும் அழுதாள்.

அவள் கொஞ்சம் அழட்டும் என நான் பொறுத்திருந்தேன்.

“எல்லாம் கனவு போலை கிடக்குது... அச்சுவேலியான் களுக்கு அவசரப்பட்டுக் கட்டிக் கொடுத்து அடுத்து அடுத்து நாலு பிள்ளையாகி கடைசியிலை அவளின்ரை தாலியும் போய்... என்ன அருமையான பொடியன்... கொஞ்சம் தண்ணி அது இது எண்டு முஸ்பாத்தி பண்ணுவன்... கடைசியிலை சாகேக்கை அவனுக்கு அவப்பேரல்லோ குடுத்திட்டாங்கள்... லொறிக்கார முதலாளி வந்து செத்த வீட்டிலை குழறிப் போட்டுப் போனவர்...” செல்லன் சொல் லிக் கொண்டே போனான். இப்போ ராசாத்தியின் அழுகை நின்றிருந்தது.

உண்மை தெரிந்த சாட்சிகளில் நானும் ஒருவன். இப்ப அந்த உண்மையைச் சொல்லி என்ன பிரயோசனம்? நல்லவன் என்ற நம்பிக்கையோடு இருக்கிற அவர்களின் நம்பிக்கையை ஏன் நான் குழப்புவான்?

மூவரும் கொஞ்சம் அமைதியாக, “இந்த விசயம் கேள்விப்பட்ட உடனையே நான் ராசாத்தியின்ரை எதிர் காலத்தைப் பற்றி சரியாய் யோசிச்சனான்” என நான் சொல்லத் தொடங்க முதலே, “தம்பி ஏதும் விபரீதமாக சொல்லிப் போடாதையுங்கோ... எங்களிட்டை இருக்கிறது மானம் மரியாதை ஒண்டுதான்...” தாய் பாக்கியம் அவசரப்பட்டாள்.

படிப்பகம்

padippakam



ராசாத்தி குனிந்து நிலத்தைப் பார்த்தபடி இருந்தாள்.

"அவசரப்படாதையுங்கோ... ராசாத்தியின்ரை இந்த நிலைக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நானும் அல்லது எங்கடை அம்மாவும் ஒரு காரணம் எண்ட குற்ற நினைவு எனக்கு எண்டைக்கும் இருக்கு. அனுராதபுர சங்கதி கேள்விப்பட்ட உடனையே ராசாத்தி எப்படி இந்த நாலு பிள்ளைகளையும் கொண்டு வாழப்போகுது எண்டு மனம் பதைபதைத்தது... அது தான்..."

மூவரும் என்னை நிமிர்ந்து பார்த்தார்கள்.

"நான் இனி இங்கையிருந்து தொடர்ந்து படிக்கவோ வேலை செய்யவோ போறதில்லை. இனியொரு கலவரம் எப்ப வரும் எண்டும் தெரியாது... அதாலை வாற கிழமை வெளிநாட்டுக்கு போகப்போறன்... அங்கை போனபிறகு என்னாலை ராசாத்தியின்ரை பிள்ளையளுக்கு எவ்வளவோ உதவியள் செய்யலாம். இதுகள் நல்லாய் படிக்கட்டும். இவளுக்கு இந்தப் புல்லுப் பிடுங்கி விக்கிற சீவியம் வேண்டாம்..."

நான் சொல்லி முடிக்கவில்லை, ராசாத்திதான் தலை தலையாய் அடித்துக் கொண்டு குழறத் தொடங்கினாள்.

"கடவுளே... கடவுளே... நான் ஏன் பிறந்து உங்களைக் கஷ்டப்படுத்துறன்?... ஏன் எனக்காக உங்கடை படிப்பை யெல்லாம் விட்டுட்டு அங்கை போறியள்..." அவள் தேம்பித் தேம்பி அழுதாள்.

அவள் அழ அவள் கைக்குழந்தையும் அழத்தொடங்கியது. அதை அவள் சமாதானப்படுத்த முயன்றாள்.

"விசர்கதை கதையாதை ராசாத்தி... இதுதான் நான்... இண்டைக்கு திங்கட்கிழமை. நான் திரும்பி சனிக்கிழமை

படிப்பகம்

padippakam



போயிடுவன்... வெள்ளிக்கிழமை இண்டைக்கு வந்த மாதிரி ஒருக்கா இஞ்சை வருவன். நீ கொப்பரோடை போய் ஏதாவது பாங்கிலை எக்கவுண்ட் நம்பர் ஒண்டு திறந்து வை..."

செல்லனும் பாக்கியமும் திகைத்துப் போய் இருந்தது போல என்னைப் பார்த்தார்கள்.

நான் எழுந்து கொண்டேன்.

அவர்கள் மூவரும் எழுந்து கொண்டார்கள்...

"நான் போட்டு வாறன் ராசாத்தி" எனச் சொல்ல அவள் மீண்டும் விக்கியழத் தொடங்கி விட்டாள்.

செல்லனும் பாக்கியமும் என்னைக் கும்பிட கையெடுத்தது போல இருந்தது.

அவர்களின் கைகள் இரண்டையும் அப்படிச் செய்ய வேண்டாம் எனத் தடுத்துவிட்டு "கட்டாயம் பாங்க் எக்கவுண்டை திறந்து வைச்சிருங்கோ" எனச் சொல்லி விட்டுப் போய் சைக்கிளை எடுத்தேன்.

ராசாத்தி விறைத்திருந்ததுபோல நின்றுகொண்டிருந் தாள்.

திங்கள் போய் செவ்வாய் - புதன் - வியாழன் - வெள்ளி - இத்தனை நாளிலும் நான் ராசாத்தியைப் பார்க்க வேண்டும் என்றோ கதைக்க வேண்டுமென்றோ முயன்றதில்லை.

சந்தையடிப் பக்கம் அல்லது மீன்கடைப்பக்கம் போகும் போதெல்லாம் கண்கள் என்னையறியாமல் அரசடிப்

படிப்பகம்

padippakam



பக்கம் திரும்பிப் பார்க்கும் - புல்லு விற்கும் பெண்களிடையே.

ஆனால் அவளைக் காணவில்லை.

பாங்க் எக்கவுண்ட் திறக்க யாழ்ப்பாணத்துக்கு அலை கிறாள் போல என மனம் சொல்லிக் கொள்ளும்.

வெள்ளிக்கிழமை விடிய அம்மா சொன்னா, “நீ நாளைக்குப் போறதாலை மத்தியானப் பூஜைக்கு உன்ரை பேராலை லட்சார்ச்ச அருச்சனை செய்யச் சொல்லி இருக்கிறன்... அதுபடியாலை இண்டைக்கு ஒரு இடமும் திரியாதை...”

ஓம் எனத் தலையாட்டிவிட்டு பயணத்துக்குக் கொண்டு போக வேண்டிய சாமான்கள் எல்லாத்தையும் எடுத்து அடுக்கிக்கொண்டு இருந்தேன். குறிப்பாக அவ்வப் பொழுது எங்கடை ஊரை நான் எடுத்து வைத்திருந்த அத்தனை படங்களையும் கவனமாக எடுத்து வைத்திருந்தேன்.

நான் ஊருக்கும் நாட்டுக்கும் அன்னியனாகப் போகிற அந்தக் கடைசி நேரத்திலும் என் தொப்புள் கொடி உறவு போல் இருக்கப் போகிறவை அப்படங்கள்தான். உண்மை யும் அது தான். நாட்டில் இருக்கும் வரை நாமும் இலங்கை யர்கள்... யாழ்ப்பாணத்தவர்... சங்கானையர்... அதுக்குப் பிறகு எல்லாமே அந்நியமாகிப் போய்விடும்... ஒருக்கால் சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட என்று மரண அறிவித்தலில் வரலாம்.

என்னிடம் இல்லாதது ராசாத்தியின் படம் மட்டும்தான். அது எனக்குத் தேவையுமில்லை.

காலை பதினொரு மணிக்குக் கிட்டவாக கோயிலுக்குப் போக ஆயத்தமானம்.

படிப்பகம்

padippakam



அப்பொழுது அம்மம்மா, “இஞ்சை வா, நீ கோயிலுக்கு போகேக்கை இதைப்போடு” என அம்மப்பாவின் பெரிய ஒரு சங்கிலியைக் கொண்டு வந்து எனக்குப் போட்டு விட்டா.

“இது அவருக்கு என்ரை அப்பு கலியாணத்துக்கு போட்டது. உனக்கு கலியாணம் காட்சி நடக்கேக்கை தரவேணும் எண்டு வைச்சிருந்தனான். இனி அது உனக்கு நடக்கேக்கை நீ எங்கை இருக்கிறியோ... நான் எங்கை இருக்கிறனோ... இந்தா போடு” என அம்மம்மா எனக்கு போட்டுவிட்டு என் நெற்றியில் கொஞ்சிவிட்டு கண் கலங்கினா.

எனக்கும் கண் கலங்கியது.

“ஏன் அவன் டென்மார்க்குக்குப் போனால் இங்கை வராமலோ விடப்போறான் அம்மா” என அம்மம்மாவை சமாதானப்படுத்தியபடி அர்ச்சனைத் தட்டை எடுத்துக் கொண்டா அம்மா.

கோயிலில் வெள்ளிக்கிழமை என்றபடியாலை கொஞ்சம் சனமாகத்தான் இருந்தது.

சிலபேர் வேளையுடன் வந்து உள்வீதி சுற்றிக் கும்பிட்டு விட்டு வில்வமரத்துக்குக் கீழே இருந்து கதைத்துக் கொண்டு இருந்தார்கள்.

அதே வில்வமரம்... ராசாத்தி எனக்கு மருந்து நீர் தந்த அதே வில்வமரம்... இப்போ அது இன்னும் சடைத்திருந்தது.

நாங்கள் உள்ளே போய் குருக்களிடம் அர்ச்சனைத் தட்டைக் கொடுத்து விட்டு உள்வீதியைச் சுற்றி வந்தம்.

படிப்பகம்

padippakam



கோயிலில் எல்லோருக்கும் அம்மம்மாவும் அம்மாவும் நான் பெஸ்ற் கிளாஸ் அடித்த கதையைச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டே வந்தார்கள்.

வெளி மண்டபத்தில் உட்கார்ந்திருக்கும்பொழுது சில பென்சனியர்மார் என்னுடன் ஆங்கிலத்தில் உரையாடி னார்கள். அது எனக்கு கொஞ்சம் அருவருப்பாய் இருந்தாலும் அவர்களின் கேள்விகளுக்கு பதிலைச் சொல்லிக் கொண்டு இருந்தேன்.

அப்பொழுது தற்செயலாக கோயில் வெளிவீதியைச் சுற்றி யாரோ ஒரு பொம்பிளை தூரத்திலை நிண்டு கோயிலை விழுந்து கும்பிடுவது தெரிந்தது... பக்கத்தில் நிற்பது பாக்கியம்தான். கையில் கைக்குழந்தை... இது ராசாத்திதான். என் மனம் படபடத்தது.

"அது யூ நோ... செல்லன்ரை டோட்டர்... ரையிற்ஸ்க்கை புருஷனை வெட்டிப் போட்டாங்கள்... பாவங்கள்... துடக்கு எண்டபடியாலை தூரத்திலை நிண்டு கும்பிட்டுட்டு போகுதுகள்... ஐ ரோல்ட் மை வைவ்... அதுகளின்ரை பிள்ளையளை வேலைக்கு கூப்பிட்டால் அதுகள் பசியில் லாமல் வாழுங்கள் எண்டு... ஒன் தற் வே வி கான் கெல்ப் தெம்..."

எனக்கு கிழவனின் கழுத்தைப் பிடித்துத் திருக வேண்டும் போல் இருந்தது.

மெதுவாக எழுந்து கோயிலுக்குள் போய் ஒரு தூணுடன் சாய்ந்து கொண்டேன்.

என் கண்களில் கண்ணீர் ஓடியபடியே...

பின்பு எல்லாமே ஒழுங்கு முறைப்படி நடந்தது.

படிப்பகம்

padippakam



அபிசேகம், பூஜை, அர்ச்சனைகள்...

என்னால்தான் எதிலும் ஒட்ட முடியவில்லை.

ஐயர் தந்த காளாத்தியை வேண்டிக்கொண்டு தட்சணையும் கொடுத்து விட்டு ஒரு மணி போல் வெளியில் வந்தோம்.

முருகன் எண்டை பிள்ளைக்கு ஒரு குறையும் வைக்க மாட்டான் என்று அம்மாவும் அம்மம்மாவும் வழியெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தார்கள்.

எனக்கு எப்போது ஆறு மணி வரும் என்பது போல் இருந்தது.

ஆறு மணி போல் மீண்டும்... சைக்கிள்... செல்லத்துரை அண்ணையின் கடை... அதிகளவில் பிஸ்கட்டுகள்... கேக்குகள்... மீண்டும் பனைவடலி... ராசாத்தியை விட்டுப் பிரியப் போகின்ற கடைசி நாள்.

நெஞ்சு கனத்தது.

"வாங்கோ தம்பி" என்றபடியே செல்லன் வந்து தட்டியைத் திறந்தான்.

இன்று நாய்கள் குரைக்கவில்லை. என்னை அன்னியோன்னியமாகப் பார்க்கத் தொடங்கிவிட்டன போலும்.

ராசாத்தி பிள்ளையுடன் வெளியில் வந்தாள்.

குங்குமம் இல்லாத நெற்றியில் விபூதி துலக்கமாகத் தெரிந்தது.

ராசாத்தியின் பிள்ளைகள், "ஏய் கொழும்பு மாமா கனக்க பிஸ்கட் கொண்டு வந்திருக்கிறார்" என்று சந்தோச மாக வந்து வேண்டிக் கொண்டார்கள்.

படிப்பகம்

padippakam



திண்ணையில் புதிதாக மெழுகிய மண் வாசனை அடித்தது.

நான் திண்ணையில் உட்காரப்போக பொறுங்கோ என ராசாத்தி பாயை எடுக்கப் போனாள்.

“அதெல்லாம் வேண்டாம்” என நான் திண்ணையில் உட்கார்ந்து கொண்டேன்.

“பாங்குக்கு போய் எல்லாம் எடுத்தாச்சோ?”

“ஓம்” எனத் தலையாட்டினாள்.

“எடுத்திட்டு வா.”

“வேண்டாம் எண்டு நினைக்கிறன்” என்றாள் ராசாத்தி.

எனக்கு திக் என்றது...

“உங்களுக்கு எண்டு ஒரு வாழ்க்கை இல்லையோ... வாழ்க்கை முழுக்க எங்களுக்கு எப்பிடி உங்களாலை உதவி செய்ய முடியும்... நாளைக்கு உங்கடை குடும்பத்துக்கைதான் பிரச்சனை வரும்... என்ரை பிள்ளைகளுக்கும் கஷ்டம் தெரியாமல் வளர்த்துப் போட்டு பேந்து என்ன செய்யுறது?” படபட என்று ராசாத்தி பொரிந்து தள்ளினாள்.

எனக்கு ஆச்சரியமாய் இருந்தது.

ராசாத்தி இப்பிடி கதைத்து நான் பார்த்ததே இல்லை.

கதைத்துப் போட்டு கண்கள் கலங்க வீட்டினுள் போய் செய்து வைத்திருந்த கொழுக்கட்டைகளை ஒரு தட்டில் கொண்டு வந்து வைத்தாள்.

எனக்கு கோபம்தான் வந்தது.

படிப்பகம்

padippakam



கொழுக்கட்டைத் தட்டை புறங்கையால் தட்டி விட்டன்.

அது மண்ணில் போய் விழுந்தது.

அவள் திகைத்துப் போனாள்.

கண்கள் சிவக்க “கதைச்சு முடிச்சிட்டியா?... இல்லை இன்னும் இருக்கா?... இதொண்டும் உனக்காக நான் செய்யேல்லை... எனக்காக என்ரை திருப்திக்காக செய்யுறன்... உன்னை அச்சுவேலியிலை செய்து குடுத்த பிறகு நான் வாழ்க்கையிலை தாரையும் நினைச்சுப் பார்க்கேல்லை... உன்னையும் நினைச்சுப் பார்க்கேல்லை... இப்பவும் உன்னை நினைச்சு இதைச் செய்யேல்லை... அப்பிடியென்றால் நீ கட்டிப்போனபிறகும் உன்னைத் தேடி வந்திருப்பன்... கொழும்பிலை கண்டபிறகும் நான் உன்னோடை தொடர்பு கொள்ள முயற்சிக்கேல்லை... இப்ப உன்ரை புருஷன் இருந்திருந்தால் உன்ரை பிள்ளைகளைப்பற்றி நான் கவலைப்பட்டிருக்க மாட்டன்... அதுகளுக்கும் நாளைக்கு ஒரு புல்லுப் பிடுங்கிற அல்லது எங்கடை ஆட்கள் வீடுகளிலை பத்துப் பாத்திரம் கழுவுற, பாத்தி கட்டுற வாழ்க்கை வேண்டாம்...” எனக்கு கதைக்க முடியாது தொண்டை கட்டியது.

பின்பும் தொடர்ந்தேன்.

பாக்கியம் எழுந்து நிலத்தில் சிதறிய கொழுக்கட்டை களைப் பொறுக்கி வேலிக்கு கிட்டவாகப் போட்டாள்.

“கொழும்பிலை நிண்டே எனக்கு போயிருக்கத் தெரியாதோ...” தொடர்ந்தேன்.

“கோபப்படாதையுங்கோ” என கையெடுத்துக் கும்பிட்டாள்.

படிப்பகம்

padippakam



திரும்பவும் குசினிக்குள் போய் இரண்டு கொழுக் கட்டையை மாத்திரம் எடுத்துக்கொண்டு வந்து வைத்தாள்.

அவளது வறுமை என் உயிரைக் குடித்தது.

என் செயலுக்காக பெரிதும் வருந்தினேன்.

பாவம் அவள்.

"ராசாத்தி, உனக்கு நான் சொல்லுறதுக்கு எதுவும் இல்லை. தயவுசெய்து பாங்க் நம்பர் எல்லாத்தையும் தா... என்ரை வாழ்க்கைக்கு இனியாவது ஒரு அர்த்தம் இருக்கிறது எண்டால் உன்ரை பிள்ளையளின்ரை நிம்மதியான வாழ்க்கைதான்..."

"தம்பி நீங்கள் பாவம் எண்டு இண்டைக்கு முழுக்க இருந்து அழுதவள். உங்கடை பயணம் நல்லபடியாய் இருக்க வேண்டும் எண்டு நீங்கள் வந்து போனது தொடக்கம் ஒருவேளைச் சாப்பாடுதான்... புல்லுப் பிடுங்கவும் போறேல்லை... அழுதுகொண்டு கிடக்கிறாள்..." செல்லன் கொட்டிலால் வெளியில் வந்து சொன்னான்.

"ராசாத்தி, இனியாவது நல்லபிள்ளையாய் இரு. என்னிலை மரியாதை இருந்தால் நான் சொல்லுறதைக் கேள். நானும் கண்காணாத தேசத்திலை போய் நல்லாய் இருப்பன். நீயும் உன்ரை பிள்ளையளும் நல்லாய் இருக்கலாம்... இல்லை... நீ நினைச்சபடிதான் இருப்பாய் எண்டால் நான் ஒரு அநாதை போலைதான் இலங்கையை விட்டுப் போவன்..."

என் குரல் கம்மியது.

ராசாத்தி பெருமூச்சு விட்டாள்...

படிப்பகம்

padippakam



"சரி... கவலைப்படாதையுங்கோ... நான் பாங்க் நம்பரைத் தாறன்... உந்தக் கொழுக்கட்டையை சாப்பிடுங்கோ..."

உள்ளே போய் பாங்க் துண்டைக் கொண்டு வந்து தந்தாள்.

நான் ஒரு கொழுக்கட்டையை எடுத்துவிட்டு மற்றதை தட்டுடன் அவளிடம் நீட்டினேன்.

அவள் மறுப்பேதும் சொல்லாமல் எடுத்துக் கொண்டாள்.

இப்பொழுதுதான் என் இதயத்தின் கனம் குறைந்தது.

அப்படியே இருந்து இரண்டொரு மணித்தியாலம் செல்லன், பாக்கியம், ராசாத்தியுடன் கதைத்துவிட்டு வீட்டை போவதுக்காக எழுந்து கொண்டன்.

"இனிமேல் உந்த சென்ரிமென்றுகள் பார்த்து விரதம் கிடந்து உடம்பை பழுதாக்காதை. நீ நல்லாய் இருந்தால் தான் இந்த நாலு பிள்ளையளையும் பார்ப்பாய்..."

ராசாத்தி எல்லாப் பிள்ளையளையும் வெளியில் கூப்பிட்டாள்.

நாலு பேரையும் தனித்தனியே குனிந்து கொஞ்சிவிட்டு நிமிர்ந்தபொழுது காலமை அம்மம்மா போட்டுவிட்ட அந்தப் பெரிய சங்கிலி வெளித் தொங்கியது.

ஒரு கணம்தான்.

அதைக் கழட்டி பாக்கியத்திடம் நீட்டினேன்.

"ஐயோ ராசா இதென்ன வேலை..."

மறுத்தபொழுது கையில் திணித்துவிட்டு, "எப்படியும் நாலைந்து மாதத்துக்கு இது போதும். அதுக்குப் பிறகு

படிப்பகம்

padippakam



என்றை காசு வந்திடும்" சொல்லிவிட்டு சைக்கிளை எடுத்துக் கொண்டேன்.

இனியும் நின்றால் நானும் ராசாத்தியும் பலவீனப்பட்டு விடுவோம் என்பதும் எனக்குத் தெரியும்.

வீட்டை நேரடியாக வந்து விட்டேன்.

ஆனால் அன்றிரவு தூக்கம் வரக் கஷ்டப்பட்டது – எனக்கும் சங்கானைக்கும் இருந்த தொப்புள் கொடியுறவு அறப் போகின்றது என்று போலும்.

வீட்டை வர அம்மா கொஞ்சம் படபடப்புடன் நின்றா.

நாலைந்து தரம் டெனிபோன்கள் வந்தது என்றும், தான் யார் யார் என்று கதைக்கவும் எதிர்முனையில் யாரும் கதைக்கவில்லை என்றும் சொன்னா. "நான் நினைச்சன் உனக்குத்தான் ஆஸ்பத்திரியில் இருந்து அப்பாவைப் பற்றிக் கதைக்க எடுத்திருப்பினம் எண்டு."

ஆஸ்பத்திரி என்றால் கட்டாயம் டெனிஷிலேயோ அல்லது ஆங்கிலத்திலேயோ ஏதாவது கதைத்திருப்பார் கள். தவிரவும் ஆஸ்பத்திரியில் எனது கைத்தொலைபேசி எண்ணையும் கொடுத்து வைத்திருந்தேன்.

எம் வீட்டுத் தொலைபேசியில் யாரிடம் இருந்து அந்த அழைப்பு வந்தது என்று பார்த்தேன் – இது இரகசிய எண்ணில் இருந்து டயல் செய்யப்பட்டிருந்தது. எனக்கு அன்று பகலில் ஆஸ்பத்திரியில் நடந்த வாக்குவாதம்... பின்னேரம் நித்திரையால் எழுந்தபொழுது மூர்த்தி செய்த எச்சரிக்கை இரண்டும் யார் இதைச் செய்திருக்கலாம் என்று கொஞ்சம் ஊகிக்கக் கூடியதாய் இருந்தது.

படிப்பகம்

padippakam



"எதுக்கும் ஆஸ்பத்திரிக்கு அடிச்சுப் பாரன்" — அம்மா தொணதொணத்தா.

ஆஸ்பத்திரிக்கு அடித்துப் பார்த்தேன்.

தாங்கள் எனக்கு றிங் பண்ணவில்லை என்றும், அப்பா நன்கு தூங்கிக் கொண்டு இருப்பதாகவும் சொன்னார்கள்.

இப்போதுதான் அம்மாக்கு நிம்மதி.

எனக்கொன்றும் நிம்மதி போகவில்லை. ஆனால் அரியண்டமாய் இருந்தது.

'எங்கள் போராட்டங்கள் கொரிலாப் போராட்டமாய் இருக்கட்டும். மனிதர்களே, நீங்கள் மட்டும் குரங்குகளாய் மாறி விடாதீர்கள்.'

எங்கோ வாசித்த வரிகள் என் நினைவில் வந்து தட்டிச் சென்றன.

அரசியல் என்பதினுள் என்றும் நான் அதிகமாகப் போன தில்லை. அதிலும் 83 கலவரத்தின் பின் ஊரில் போய் நின்றபொழுதும், பின்பு கொழும்பில் வந்து டென்மார்க் கிற்கு வர ஆயத்தங்கள் செய்து கொண்ட அந்தக் கடைசிக் கிழமையும் மூன்று வெவ்வேறு இயக்கங்களால் தொடர்பு கொள்ளப்பட்டேன். சொல்லி வைத்தாற்போல் மூன்று இயக்கங்களும் என் தமிழ் அறிவு தங்கள் பிரச்சாரப் பிரிவுக்கு பெரிதும் உதவும் என கேட்டுக் கொண்டார்கள்... நீங்கள் எல்லாம் நாட்டை விட்டுப் போனால் நாட்டுக்காக யார் போராடுவார்கள் என வேதனையோடு சொன்னார்கள்...

நானும் போராடத்தான் போகிறேன் என மனத்துள் சொல்லிக்கொண்டேன். ராசாத்தியும் அந்த நாலு பிள்ளைகளும் கண் முன்னே வந்து போனார்கள்.

படிப்பகம்

padippakam



"வெளிநாட்டுக்குப் போனாலும் எங்கள் உறுப்பினர்கள் உங்களைத் தொடர்பு கொள்வார்கள்."

"சரி பார்ப்போம்" என்றேன்.

"சரியெண்டு சொல்லாதையுங்கோ... கட்டாயம் செய்யுங்கோ..." இப்போ குரலில் கடுமை தெரிந்தது. அது எனக்குப் பெரிதாகப் பிடிக்கவில்லை.

ஒரு நாள் மூர்த்தியே சொன்னான்... "டே அரசியல் நல்ல ஒரு விசயம்தான்... உண்மையான ஜனநாயகம் இருக்கிற நாடுகளுக்கு... ஆனால் சர்வாதிகாரமும் அடக்குமுறையும் இருக்கிற எங்கடை நாடுகளுக்கு?... ராசாத்திக்கும் அவளின்ரை பிள்ளையளுக்குமாய் இருக்கிற உன்னாலை சரி... ஐஞ்சு சகோதரிகளைக் கரையேத்துறதுக்காக வந்த என்னாலை சரி... உதுக் குள்ள இருக்கிற தார்ப்பரியங்களை ஆராய ஏலாதடா..."

"ஆனால் யாரோ போராடத்தானே வேணும்... இன்னு மொரு 83 கலவரத்தை எங்கடை இனம் தாங்குமோ..."

"போராடுகிறான்கள்தான்... இல்லையெண்டு சொல் லேல்லை... சிங்களவனோடை போராடுறதைவிட... தங்களோடை அல்லோ தாங்கள் போராடுகிறான்கள்..."

"என்னடா செய்யுறது... காட்டிக் கொடுப்பதும் காலை வாருறதும் பதவி வெறியும் எங்களுக்கு கட்டபொம்மன் காலத்திலேயே தொடங்கீட்டுது... ஆனால் இந்தக் காலகட்டத்திலை போராட்டம் ஒன்று தேவை... இதுதான் ஒரு அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கும்."

இப்படியெல்லாம் பொழுதுபோக்குக்காகக் கதைத்து கனகாலம் இல்லை... இந்திய - இலங்கை ஒப்பந்தம்

படிப்பகம்

padippakam



எழுதப்பட்டு இந்திய இராணுவம் யாழ் மண்ணை மிதித்தது.

தொலைக்காட்சியில் திரும்பத் திரும்ப காட்டப்பட்ட ராஜீவ்காந்திக்கு பிடரியில் விழுந்த அடி மனதைக் கசிய வைத்தாலும் இந்திய ஆமியின் வருகை ஒரு அபசகுன மாகவே பட்டது.

ராசாத்தியின் கடிதங்கள்தான் எனக்கு யாழ்ப்பாண ஈழநாடு. உங்கள் காசு இந்த மாசம் இத்தனையாம் தேதி இத்தனை ரூபாய் இத்தனை சதம் கிடைத்தது என்பதில் தொடங்கி பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிறார்கள், விளையாட்டும் சந்தோஷமுமாய் இருக்கிறார்கள் என்பதாய் வளர்ந்து கடைசியாக அக்குவேறு ஆணிவேறாக அரசியல் நிலைமை கள் நாட்டு நிலைமைகள் வரும். அதில் எங்கெங்கு எத்தனை ஆமிகள் செத்தது தொடக்கம், எந்த இயக்கத்துடன் எந்த இயக்கம் அடிபட்டது என்பது வரை வந்திருக்கும்.

அம்மாவின் கடிதங்கள் பொதுவாக கோயில் திருவிழாக் கள்... கலியாணவீடுகள்... செத்த வீடுகள்... என்று தொடங்கி உன்னைப் பற்றி இன்னார் இன்னாரெல்லாம் விசாரித் தவர்கள் என முடியும். ஆரம்பம் - இடைவேளை - சுபம் என ஒரே மாதிரியாய் இருக்கும்.

அப்பாவிடம் இருந்து எந்தக் கடிதமும் வருவதில்லை. ஆனால் நான் ஏதாவது கொழும்பில் இருந்து வாங்கி அனுப்புங்கோ எனக் கடிதம் போட்டால் அடுத்த வினாடியே பதிவுத் தபாலில் என்னிடம் வந்து சேரும். அதுதான் அப்பா...

இந்திய ஆமி வந்தது பற்றி யாழ்ப்பாணமே ஆகா, ஓகோ என மகிழ்ந்து கொண்டிருந்த வேளையில் இன்குலாப்பின்

படிப்பகம்

padippakam



கவிதை ஒன்றை வாசித்த ஞாபகம்.

*நமது அவசரத்தில் அட்டைகளிடம் போய்*
*இரத்த தானம் கேட்டிருக்கின்றீர்கள்*

அந்தக் கவிதை வாசித்து ஒரு கிழமையுள் அந்தத் துன்ப மான நிகழ்ச்சி நடந்தது.

ஊரடங்குச் சட்டம் பிறப்பித்திருந்த ஓர் அதிகாலை வேளையில் எங்கள் சந்தியில் இருந்த தேநீர்க் கடைக்கு முன்னால் வைத்த கண்ணிவெடி மூலம் இந்தியச் சமா தானப் படையின் கனரக வாகனம் ஒன்று தகர்த்து எறியப்பட்டது. அதில் இருந்த அத்தனை இந்திய இராணுவத்தின் படையினரும் மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

அன்றுதான் எங்கள் ஊருக்கு சனியன் பிடித்திருக்க வேண்டும்.

உடனடியாக றோட்டு, ஒழுங்கை என்று இறங்கிய இந்தியன் ஆமி யார் யாரின் நடமாட்டங்கள் எங்கு எங்கு தென்பட்டதோ அங்கு எல்லாம் சுட்டுக்கொண்டு போகத் தொடங்கியுள்ளார்கள்.

எனக்குப் படிப்பித்த வேலுப்பிள்ளை மாஸ்டர், விதானையார் சிவக்கொழுந்து, கள்ளு இறக்கிக் கொண்டு போன கணபதி எல்லாரும் அவர் அவர்கள் வீட்டுக்குள் நின்று கேற் வழியாகவும்... தட்டு வேலிகளுக்குள்ளாகவும் எட்டிப் பார்த்த குற்றத்திற்காக அந்த அந்த இடங்களிலே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இதைக் கேள்விப்பட்டதும் ஊரே உறைந்து போனது.

அதன் உச்சகட்டம்தான், கயிற்றை அறுத்துக் கொண்டு பின்வளவு வேலி ஓட்டைக்குள்ளால் வெளிவளவுக்குள்

படிப்பகம்

padippakam



ஓடிய ஆட்டைப் பிடிக்கப் போன அம்மம்மாக்கு முன்னால் இந்தியன் ஆமி வந்திருக்கு...

கும்பிட்டுப் பார்த்திருக்கிறா... கெஞ்சிப் பார்த்திருக்கின்றா... ஒரு பிரயோசனமும் இல்லை... பேசிக் கொண்டு இருக்கும் பொழுதே ஒரு கூர்க்காக்காரனின் துப்பாக்கியிலிருந்து பாய்ந்த குண்டு அம்மம்மாவை எங்களிடம் இருந்து பிரித்துவிட்டது.

ஊரடங்குச் சட்டம் முடிந்தபின்தான் அம்மம்மாவின் பிரேதத்தை போய் வெளிவளவில் தூக்கினார்களாம். அப்போதே கண்களைக் காகங்கள் கொத்தத் தொடங்கி விட்டனவாம்.

அப்பா அம்மா மூன்றாம் நாள்தான் கொழும்பால் போய்ச் சேரக்கூடியதாய் இருந்ததாம். அம்மம்மா மணக்கத் தொடங்கி விட்டாவாம். அவலச் சாவு என்றதால் கற்பூரம் காட்டி தேவாரம் பாடி விட்டு எடுத்து விட்டார்களாம்.

அம்மம்மாக்கு ஆண்பிள்ளைகள் இல்லாததால் அப்பா தானாம் கொள்ளி வைச்சதாம்.

எனக்காகவோ என்னவோ... எல்லாத்தையும் மறந்து எந்தக் கோவமும் காட்டாமல் செல்லன்தானாம் மரங்கள் வெட்டி சுடலையிலை கொண்டு போய் அடுக்கி அம்மம்மா வின் இறுதிக் கடமையளுக்கு உதவி செய்ததாம்.

பிரச்சனைகள் வரும்பொழுது குறுக்காக வேலிகள் போடுவதும் பிறகு அதுகளை வெட்டி எறிவதும் யாழ்ப் பாணக் கலாச்சாரத்தில் ஒன்றும் புதிதில்லைத்தானே.

அம்மா ஏதும் சொல்லவில்லையாம். பறுவதமும் கிரியை நடக்கும்பொழுது மற்றப் பெண்களுடன் வந்து மாரடித்து

படிப்பகம்

padippakam



அழுதுவிட்டுப் போனதாய் ராசாத்தி பின்பு எழுதியிருந்தாள்.

இந்தச் சம்பவத்தில் இருந்து இந்தியன் ஆமி தங்கள் நாட்டுக்குத் திரும்பும் வரையும் எங்கள் ஊர்ச்சனங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்தார்களாம். கூர்க்காக்காரன்களுக்குப் பயந்து குமர்ப்பிள்ளைகள் எல்லாம் தொளதொளத்த சட்டையும் கட்டம் போட்ட சீலைகளையும் உடுத்துக் கொண்டு திரிஞ்சதுகளாம்.

நாலு பிள்ளைகள் இருந்தாலும் தானும் அப்பிடித்தான் திரிந்ததாக ராசாத்தி எழுதியிருந்தாள். பாவமாயும் இருந்தது... இருபது வயதில் டென்மார்க் வீதிகளில் திரியும் டென்மார்க் பிள்ளைகளுடன் அவளை ஒப்பிட்டுப் பார்க்க...

இந்தியன் ஆமி திரும்பும் வரையும் இதுதான் நிலைமையாக இருந்தது.

இந்தியன் ஆமி திரும்பியிருந்தாலும் அது மக்களின் மனங்களை, வாழ்க்கையைப் பிறாண்டிவிட்டுப்போன கொடூரம் அடுத்த சதாப்தங்களுக்கு மாறாது என்றே எண்ணிக் கொள்வேன்.

இப்போ டெலிபோன் மணி அடித்தது.

அம்மா படபடப்பானா.

“நீ எடுக்காதை” – தடுத்தா.

அவாவைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது.

டெலிபோனைத் தூக்கினேன்.

மறுமுனையில் மௌனம்.

படிப்பகம்

padippakam



"ஆள் நிக்கிறாரடா..." ஒருவருக்கொருவர் கதைப்பது கேட்டது.

"யார் கதைக்கிறீங்கள்..." நான் கேட்க முதலே டெலிபோன் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

"யார் அது விளையாடுறாங்கள்?" அம்மா கேட்டா.

'அவங்கள் விளையாடேல்லை... மத்தியானம் கொடுத்த அடி இப்பதான் நோகுது போலை...' எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

"என்னவோ ராசா... கவனமாய் இரு... எனக்கு ஏதோ உனக்கு பிரச்சனை கிடக்கிற போலை இருக்குது... அப்பிடி இல்லாட்டி உனக்கு கண் சிவக்காது..."

நான் சமாளித்துக்கொண்டு, "அப்பிடி எனக்கு ஒரு பிரச்சனையும் இல்லை... நீங்கள் சாப்பாட்டைப் போடுங்கோ..."

அம்மா பின்னேரத்துக்கு புட்டும் அவித்து நெத்தலி மீனும் பொரித்து வைத்திருந்தா.

இதெல்லாம் இன்னும் ஒரு மாதத்துக்குத்தானே... பின்பு பழையபடி கறுத்த பாணும்... அரை அவியல் இறைச்சியளும் தானே... அல்லது யாராவது வீட்டு நல்லது கெட்டதுக்குப் போனால் அங்கு தமிழ் சாப்பாடு சாப்பிட்டால் சரி...

சாப்பிட்டுவிட்டு கிழமைக்கு கிழமை இந்தியாவில் இருந்து வரும் ஆனந்த விகடன் சஞ்சிகையையும் எடுத்துக் கொண்டு படுக்கை அறைக்குப் போய்விட்டேன்.

எப்போதும் படுக்கும்போது ஏதாவது பொழுது போக்காக வாசிக்க வேண்டும். அந்த வாசிப்பின் ஊடாகவே

படிப்பகம்

padippakam



நித்திரையில் ஆழ்ந்து விடுவேன். அப்பிடி ஒரு பழக்கம்.

ஆனால் அன்று மட்டும் ஆனந்தவிகடனால் இலகுவில் என்னை அமிழ்த்த முடியவில்லை.

ராசாத்தியின் மகன் இயக்கத்துக்குப் போட்டான் என்று நேற்று வந்த கடிதம், மத்தியானம் நடந்த வாக்குவாதம், வீட்டுக்கு வந்த அனாமதேய ரெலிபோன் அழைப்பு, மேலாக நாளைக்கு அப்பாக்கு நடக்க இருக்கிற கால் ஒப்பிரேஷன்... ஒன்று மாறி ஒன்று வந்து என்னைக் குழப்பிக் கொண்டு இருக்கும்.

ராசாத்தியுடன் மனதுக்குள் செட்டை கட்டிப் பறந்த காலத்தில் நித்திரை வராது விட்டால் அவளை இன்னமும் இன்னமும் நினைப்பேன்... அவளுடன் கை கோத்துத் திரிவேன்... இரவு வெளிச்சத்தில் பனைமரத்தில் சாய்ந்தபடி அவள் நிற்க அவள் நெற்றியில் முத்தமிடுவேன்... அந்த சுகத்துடன் அவள் என் நெஞ்சினில் சாய்ந்திருக்க நான் அயர்ந்து விடுவேன்.

அடுத்த நாள் அம்மம்மா வந்து நித்திரையால் எழுப்பும்பொழுதும் முதல்நாள் இரவுக் கற்பனைகளில் இருந்து எழும்ப மனமில்லாமல் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருப்பேன்.

இந்த சுகம் எல்லாம் அவளை அச்சுவேலிக்கு கட்டிக் கொடுக்கும் வரைதான்... அதன்பின் ராசாத்தி என்பது என் வாழ்வின் தோல்வி... எனக்கு அம்மாவும் அம்மம்மாவும் செய்த துரோகம்... ஆனால் டென்மார்க்குக்கு வந்து அவளுக்கு உதவி செய்யத் தொடங்கிய பின் ராசாத்திக்கு நான் காவல்... அவ்வளவு தான்.

படிப்பகம்

padippakam



உங்கள் காசு கிடைத்தது எண்டது மட்டுமில்லாது ஒவ்வொரு சதத்தையும் தான் எப்படி செலவு செய்து கொண்டிருக்கிறாள் என்று ஓர் எக்கவுண்டன்டுக்கு கணக்கு காட்டும் போல் அவள் கடிதங்கள் இருக்கும். எத்தனையோ முறையாய் சொல்லிக் களைத்து விட்டேன் - எனக்கு உந்த கணக்கு வழக்குகள் வேண்டாம் என்று. அவள் கேட்பதாய் இல்லை... அவள் அதிகம் செலவு செய்தது மூத்த பையனின் படிப்புக்கும் அளவற்ற ரியூசன்களுக்கும்தான்... உங்களைப் போலை நல்ல படிப்பு படிப்பிக்க வேணும் எண்டு அடிக்கடி எழுதுவாள்... ஆனால் இப்ப முற்றாக உடைந்து போய் இருப்பாள்... பாவம் அவள்!

அவரைக் கொண்டு வந்து கிடத்தியது போல அவனையும் ஒருநாள் கட்டிலில் கொண்டு வந்து கிடத்துவார்கள்... விரக்தியின் விளிம்பில் நின்றால்தான் இப்பிடி எழுத முடியும்... ராசாத்தி உடைந்து விடாதே... உன்னை நம்பி இன்னும் மூன்று குஞ்சுகள் இருக்கு... சொல்லிக்கொண்டே அயர்ந்து விட்டேன் போன்றிருந்தது.

வீட்டுக்கு வெளியே ஏதோ உடைந்த சத்தம் கேட்டது போல இருந்தது.

கட்டிலில் இருந்து திகைத்து எழும்பி ஓடிப்போய் பார்த்தேன்.

ஒரு கார் எங்கள் வீட்டு வாசலில் நின்று சீறிக்கொண்டு புறப்பட்டது.

என் காரின் பின் கண்ணாடி உடைந்திருந்தது.

புரிந்து கொண்டேன்.

இது தண்டனையா? இல்லை எச்சரிக்கையா?

படிப்பகம்

padippakam



இது தண்டனை அல்ல. காரணம், இன்சூரன்ஸ் கம்பனி தான் இதற்கான சிலவை ஏற்கப்போகின்றது.

எனவே, இது எச்சரிக்கைதான். எங்களை நீ எதிர்த்துக் கதைக்கவோ என என்னை மிரட்டுவதற்கான தண்டனை தான்.

மனத்துக்குள் ஒரு தடவை ராசாத்தியின் மகன் வந்து போனான்.

தகப்பன் இல்லாத வீட்டுத் தலைச்சன் பிள்ளை தாயையும் சகோதரங்களையும் விட்டுட்டு நாட்டைக் காக்க காட்டுக்கை போயிருக்கு... இஞ்சை காருக்கு கல்லாலை எறிஞ்சு திரியுதுகள்.

மனம் நாட்டை நினைத்துக் கவலைப்பட்டது...

அம்மா எழுந்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் வீட்டுக்குள் போனேன்.

நல்ல வேளை அம்மா தூங்கியிருந்தா.

எனக்குத்தான் இன்று தூக்கம் போயிட்டுது. இனி நித்திரை கொள்வேன் என்றும் நான் நினைக்கவில்லை.

இரண்டு விடயங்கள் தான்.

ஒன்று, சம்மந்தப்பட்டவர்களை சந்தேகத்தின் பெயரில் பொலிஸில் காட்டிக் கொடுப்பது. காரணம் யாது என்று கேட்கும்பொழுதுதான் அந்த ராசாத்தியின் பச்சை மண்ணுகள் போல எத்தனையோ பச்சை மண்ணுகள் காட்டுக்குள்ளை போனதுக்கு அர்த்தம் இல்லாமல் போய் விடும்.

படிப்பகம்

padippakam



இரண்டு: எதுவும் தெரியாதது போல கார் இன்சூரன்ஸில் பதிந்து கார் கண்ணாடியை மாற்ற வேண்டியது தான்.

இரண்டையும் மாறி மாறி யோசித்தாலும் மனம் மட்டும் பட்ட காயத்துக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டது. ஆனாலும் அப்பாவின் ஒப்பிரேஷன் முடியட்டும்... அப்பாவும் அம்மாவும் ஊருக்கு சுகமாய் போய்ச் சேரட்டும்... என்று மனம் எனக்கு திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தது.

ஆனால் தூங்க முடியவில்லை...

சிவராசா அண்ணையின் 25வது கலியாண வீட்டில் அவர்களைக் கண்டது... அவர்களாக என்னை இழுத்தது... வாக்குவாதப்பட்டது. பின் ஆஸ்பத்திரியில் திரும்ப அவர்களை நான் மிரட்டியது... அனைத்தும் மாறி... மாறி... எதுவுமே தேவையில்லாதது... ஆனால் இப்போது... தேவை வந்த மாதிரி...

யார் உங்களை பிரதிநிதியாக்கியது? யாருக்காக நீங்கள் என்னுடன் மோதுகின்றீர்கள்? நீங்கள் ஓர் ஆதரவாளனைச் சேர்த்துக் கொள்ளவில்லை... ஒரு எதிரியை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றீர்கள். அதை மட்டும் மனம் உறுதியாகச் சொல்லிக் கொண்டது.

ஜனநாயகம் என்ற சொல் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்ட மாதிரி இருந்தது.

இந்த சலசலப்புகள்... விவாதங்கள்... அரியண்டங் களுடன்... நேரத்தைப் பார்த்தேன். விடியப்புறம் மூன்று மணியாகிக் கொண்டிருந்தது. அந்த இரவு நித்திரையில் லாமலே போகப் போவது போல இருந்தது... உடம்பு

படிப்பகம்

padippakam



முழுக்க ஒரு மயிர்க் கொட்டிப் பூச்சி ஊர்ந்து கொண்டிருந்த மாதிரி...

மயிர்க்கொட்டி ஊர்ந்தாலும் சுனைக்கும்... தட்டி விட்டாலும் சுனைக்கும்.

விடியப்புறத்துக்கு கிட்டவாகத்தான் நான் அயர்ந்து தூங்கியிருக்க வேண்டும். ஏதோ எல்லாம் சம்மந்தா சம்மந்தமில்லாத கனவுகள் வந்து யோய்க் கொண்டிருந்தன. நானும் என்ரை டெனிஷ் மேல் அதிகாரியும் அனலை தீவுக்கு லோஞ்சியில் போற மாதிரி... ராசாத்தியின் பையன் கடற்கோட்டைக்குக் கிட்டவாக நின்ற நேவிக்காரருக்கு துவக்கால் சுட்டுக்கொண்டு போற மாதிரி... அப்பா அம்மாவைக் கூட்டிக்கொண்டு காரைநகர் சிவன் கோவிலில் அங்கப் பிரதட்சணம் செய்து கொண்டு போவது போல... ராசாத்தி பின்னால் கற்பூரச்சட்டி கொண்டு போவது போல...

மனத்தில் அமைதியில்லாமல் இருக்கும்பொழுது இப்படிச் சம்மந்தா சம்மந்தமில்லாத கனவுகள் வருவது இது முதல் தடவை அல்ல. அந்தக் கனவுகளுக்கும் அடுத்த நாள் நடக்கும் சம்பவங்களுக்கோ அல்லது முதன் நாள் நடந்த சம்பவங்களுக்கோ எந்தச் சம்மந்தமும் இராது. ஆனால் என் மனம் மட்டும் அன்று ஏதோ அமைதியில்லாமல் இருக்கிறது என்பதைக் காட்டும். அவ்வளவு தான்.

அம்மா வந்து மெதுவாக கதவைத் திறந்து எத்தினை மணிக்கு நீ ஆஸ்பத்திரிக்கு போக வேணும் எனக் கேட்டா. அவாக்கு வடிவாய் தெரியும் நான் காலை எட்டு மணிக்கு ஆஸ்பத்திரியில் இருக்கவேண்டும் என்று. ஆனால் நேரமாகுது இனி எழும்பன் என்று சொல்லாமல் இப்படிச் சொல்வது அம்மாவின் இயல்பு.

படிப்பகம்

padippakam



நேரத்தைப் பார்த்தேன்.

காலை 7.15.

சரி... இனி எழும்பினால் போயிடலாம் என்றவாறு ரொயிலற்றுக்குள் போனேன்.

கண்ணாடியில் முகத்தைப் பார்த்தேன்.

கண்கள் இரண்டும் சிவந்து கண்களின் அடிப்பாகம் வீங்கியுமிருந்தது - குடிகாரர்களின் கண்கள் போல.

பார்த்துக் கொண்டிருக்க நேரமில்லை. அவசர அவசர மாகக் குளித்து விட்டு ரவுசரைப் போட்டுக் கொண்டேன்.

அம்மா கோப்பி ஊத்தி வைத்திருந்தா.

நின்று ஆறுதலாய் குடிக்க நேரமில்லை. கையில் கோப்பியை எடுத்துக் கொண்டு காரடிக்குப் போனேன்.

அம்மா வழியனுப்ப பின்னால் வந்தா. அப்பா வேலைக்குப் போனாலும் சரி, நான் கம்பசுக்கு போனாலும் சரி, தான் முன்னுக்கு வந்து நிற்பது அவாவின் வழமை.

"நீங்கள் ஏன் இப்ப வெறுங்காலோடை வெளியாலை வாறீங்கள்" என்று குரலைச் சற்று உரக்கமாகக் கூறிவிட்டு போய் காரை ஸ்ராட் செய்தேன்.

"ஏன்தான் உனக்கு இப்படி அடிக்கடி கோவம் வருகுதோ தெரியேல்லை" வாய்க்குள் மெதுவாய் சொன்னபடி வந்து வெளிக்கதவை உள்பக்கமா தாழ்ப்பாள் போட்டா.

அவா வெளியில் வந்து பின் கண்ணாடி உடைந்திருப் பதைப் பார்த்தால் நான் திரும்பி வரும் வரை மனம் சஞ்சலப்படுவா... அதனால்தான் அப்பிடி அவாவுடன் கதைத்து அவாவை வெளியே வராமல் தடுத்தேன்.

படிப்பகம்

padippakam



நல்ல காலம்... அவன்கள் உடைத்தது பின் கண்ணாடி. முன் கண்ணாடி ஆயின் இப்போது ஆஸ்பத்திரிக்குக் கூட போயிருக்க முடியாது.

ஐந்து நிமிடத்துக்குள் ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டேன்.

அப்பாக்கு குளிக்க வைத்து ஒப்பிரேஷன் தியேட்டருக்குச் செல்வதற்கான ஆடைகள் அணிவித்து இருந்தார்கள்.

என்னைக் கண்டதும் அவருக்கு முகம் மலர்ந்தது.

“எத்தினை மணிக்கெண்டு சொன்னவையோ?”

இல்லை எனத் தலையாட்டினார்.

கொஞ்சநேரம் மௌனமாக இருந்தவர்... “போய்க் கேட்டுக் கொண்டு வாவன்...”

நேர்ஸ்மார் இருக்கும் அறைக்குள் எட்டிப் பார்த்தேன்.

அப்பாக்குரிய நேர்ஸ் என்னைக் கண்டுவிட்டு சிரித்த முகத்துடன் எழுந்து என்னை நோக்கி வந்தாள்.

“எத்தினை மணிக்கு தன்னை ஒப்பிரேஷன் தியேட் டருக்கு அழைத்துப் போவீர்கள் என அப்பா அறிய விரும்பு கின்றார்.”

“எங்களுக்கு சரியாகத் தெரியாது... தியேட்டரில் எல்லாம் ஆயத்தம் என்னும்பொழுது எங்களுக்கு தகவல் அனுப்புவார்கள். அதுவரை நீங்கள்தான் அப்பாவை பொறுமையாக இருக்கச் சொல்ல வேணும்... நீங்கள் வர முதலே இரண்டு முறை எங்களிடம் ஆங்கிலத்தில் கேட்டவர்...”

படிப்பகம்

padippakam



நான் எனக்குள் சிரித்துக்கொண்டேன்... அப்பாக்கு எதற்கும் பொறுமையில்லை... எப்படி எல்லாவற்றையும் சரியாக யோசிப்பாரோ அவ்வாறே எல்லாம் சட்டுப்புட்டென முடிந்திட வேண்டும்.

நான் என்றால் கால்கள் என்னுடன் இன்னும் கொஞ்ச நேரம் இருக்கட்டும் என யோசிப்பேன். ஆனால் அவரோ, இல்லையென்று போகிற கால்கள் இப்போதே போகட்டும் என்றுதான் யோசிப்பார்.

நான் வாட்டுக்குத் திரும்பி வர, என்ன சொல்லுறாளவை என்பது போலப் பார்த்தார்.

நானும் புரிந்தவனாக, “என்னத்தை அவை சொல்லுறது... நீங்களும் கேட்டனீங்களாம்...”

“ஓமடா... சிலவேளை நீ கேட்டால் கெதியாய் செய்வினமோ எண்டுதான்...” இழுத்தார்.

“அப்பா... அப்பா... இது இலங்கை இல்லை... இன்புளுவன்சைப் பாவிக்க... நான் கேட்டாலும் சரி... நீங்கள் கேட்டாலும் சரி... பதில் ஒண்டாய்த்தான் இருக்கும்...”

சரி எனத் தலையாட்டியபடி மீண்டும் நிமிர்ந்து படுத்தார்.

நான் கீழே போய் காரை ஆஸ்பத்திரிக்குக் கிட்டவாக உள்ள காருக்கு கண்ணாடி போடுற கராஜில் கொண்டு போய் விடவேண்டுமென யோசித்தபடி கீழே இறங்கினேன்.

மூர்த்திக்கு ஒரு தடவை போன் போட்டுச் சொல்லுவமா என நினைத்தேன்.

படிப்பகம்

padippakam



ஆனால் அம்மாவை விட அவன் இன்னும் அந்தரப் படுவான் என மனம் சொல்லிக் கொண்டது. பின்னேரம் ஆஸ்பத்திரிக்கு வருவான்தானே, அப்போ பார்ப்போம் என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டு காரைக் கொண்டுபோய் விட்டேன்.

காரை விட்டுட்டு போகும்படியும், அன்று பின்னேரம் தருவதாகவும் சொன்னார்கள்.

ஆஸ்பத்திரிக்கு கெதி கெதியாய் நடந்தே வந்தேன்.

நேரமும் ஒன்பதரையாகிப் போய் விட்டது.

நல்லவேளை அப்பாவை இன்னமும் ஒப்பிரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போகவில்லை.

என் காலடிச் சத்தம் கேட்டு அப்பா கண் முழித்தார்.

“என்னடா சொல்லுறாளவை...”

“பொறுங்கப்பா கேட்கிறன்” என்று மீண்டும் நேர்ஸ்மாரின் அறையடிக்குப் போனேன். ஆனாலும் மனத்துள் ஒரு தயக்கம்... நெடுக வந்து தங்களைத் தொந்தரவு செய்கிறன் என்று அவர்கள் நினைப்பார்களோ என்று...

அவர்கள் அறைக்குள்ளும் போகாமல் அப்பாவின் வாட்டுக்குத் திரும்பாமலும் நடைபாதையிலேயே யோசித்துக் கொண்டு நின்றேன். நல்ல காலம்... அப்பாக்கு பொறுப்பான நேர்ஸ் என்னை நோக்கி வந்தாள்.

“இப்பதான் ஒப்பிரேஷன் தியேட்டரிலை இருந்து போன் வந்தது.”

எனக்கு அப்பாடா என்றிருந்தது.

படிப்பகம்

padippakam



"அப்பா கொஞ்சம் அயர்ந்து கொண்டு போறார்... போய் எழுப்பட்டா?"

"நோ... நோ... அவரை நித்திரை கொள்ள விடுங்கோ... நான் சொல்ல வந்ததை சொல்லி முடிக்கேல்லை... ஹைவேயிலை ஒரு பெரிய அக்சிடன்ற் நடந்து இப்பதான் அம்புலன்ஸ்களில் ஆட்களைக் கொண்டு வந்தவை. மேஜர் ஒப்பிரேஷன் நடந்து கொண்டு இருக்கு. இது முடியத்தான் உங்கடை அப்பாவை கீழே கூப்பிடுவினம்..."

நான் உள்ளுக்குள் சுருங்கிப் போனேன்... பாவம், ராத்திரியில் இருந்து சாப்பாடு தண்ணி ஏதும் இல்லை...

யாரை நொந்து என்ன பயன்?

மீண்டும் வாட்டுக்குள் போனேன்.

நேர்ஸ் சொன்ன மாதிரி அவர் மீண்டும் அயர்ந்து கொண்டு இருந்தார். அவரின் நாக்கு மட்டும் அவரின் உதடுகளைக் கொண்டு ஈரலிப்பாய் இருந்தது. பாவம்... தண்ணி விடாய்க்குது போலும்...

இப்பிடித்தான் இடம் பெயரேக்கை தண்ணி விடாயிலை அப்பா கஷ்டப்பட்டவர் எண்டு அம்மா கடிதத்திலை எழுதினவா...

95ம் ஆண்டு எண்டு நினைக்கிறன்... யாழ்ப்பாணத்திலை இருந்து சனம் எல்லாம் அள்ளுப்பட்டு இடம்பெயர்ந்து போய்க்கொண்டிருக்கிறார்கள் எண்டது மட்டும்தான் றேடியோக்களிலும், ரீ.வி.களிலும் சொல்லப்பட்டுக் கொண்டு இருந்தன. ஆனால் யார் எங்கு போனார்கள் என்ற தகவல்கள் யாருக்கும் தெரியவில்லை.

படிப்பகம்

padippakam



அந்த சம்பவத்துக்கு ஒரு மாதத்துக்குப் பின்னாலை அம்மாட்டை இருந்தும் ராசாத்திட்டை இருந்தும் ஒரே நேரத்தில் கடிதம் வந்திருந்தது.

முதலில் அம்மாவின் கடிதத்தைத்தான் உடைத்தேன். அதை எந்த அவசரத்திலும் வாசித்து முடிக்கலாம். ஆனால் ராசாத்தியின் கடிதம் அப்பிடி இல்லை. இன்பமோ துன்பமோ முத்து முத்தான அவள் கை எழுத்தில்... அதை எப்பவும் ரசித்துப் படிக்க வேணும்...

அம்மாவின் கடிதத்தில் இருந்து, இடப்பெயர்வுச் சமயத்தில் அப்பா கொழும்பில் இல்லாது யாழ்ப்பாணம் போயிருக்கிறார் எண்டு தெரிந்தது... தொடர்ந்து கடிதத்தை வாசித்தேன்.

“வீட்டிலை கிடந்த நெல்லு மூட்டைகளையும் கொஞ்ச சாமான் சக்கட்டுகளையும் எங்கடை லாண்ட்மாஸ்டர் றைக்றரிலை ஏத்திக்கொண்டு முதலிலை கொடிகாமத்துக்கு போனம். கிட்டத்தட்ட எங்கடை ஊர் ஆக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கு வசதியான இடத்துக்கு போச்சினம். உனக்குத் தெரியும்தானே. அப்பாக்கு உதெல்லாம் ஓட்டத் தெரியாது... என்ன செய்யிறது? உதவிக்கு வாற கதிர்காமன் தன்ரை குடும்பத்தோடை வறணிப்பக்கம் போட்டான் என்று கள்ளிறக்க வாறவன் சொன்னதுதான் தாமதம் கொப்பரே லாண்ட்மாஸ்டரை ஸ்ராட் பண்ணிப் பார்த்தார். அது சரிவர சாமான் சக்கட்டுகளை ஏத்தச் சொன்னார்... பிறகென்ன, வீட்டைப் பூட்டிப்போட்டு றோட்டிலை இறங்கினால்... றோட்டிலை திருவிழாப் போலை... சனம் எல்லாம் மாட்டு வண்டில்களிலையும்... சைக்கிள்களிலையும், கடகங்களை தலையில் வைத்துக்கொண்டு நடந்தும் போய்க்கொண்டு இருந்தார்கள்.

படிப்பகம்

padippakam



எங்கள் லாண்ட்மாஸ்டரும் றோட்டுக்கு குறுக்காகவும் மறுக்காகவும் மெதுவாக ஓடி ஓடி கடைசியிலை அப்பாவின் கொன்றோலுக்கு வந்தது. நல்லகாலம் ஓர் இரட்டை மாட்டு வண்டியை இடிக்கப் பார்த்தார். மானிப்பாயைத் தாண்டேக்கை ஒரு வயதான வருத்தக்கார மனுசி நடக்கேலாமல் போச்சு... உனக்குத் தெரியும்தானே அப்பாவின்ரை குணத்தை... என்னை சாமான்களுக்கு மேலை இருக்கச் சொல்லிப் போட்டு அந்த மனுஷியை தனக்குப் பக்கத்தில் இருத்திக்கொண்டு வந்தவர்.

லாண்ட்மாஸ்டர் றோட்டுப் பள்ளம் திட்டியளிலை விழுந்து விழுந்து எழும்ப எனக்கு உயிர் போய் உயிர் வந்தது. நல்லகாலம் எழுதுமட்டுவாளுக்குக்கிட்ட கிழவி இறங்கீட்டுது. இறங்கேக்கை, நீயும் உன்ரை பிள்ளை குட்டியளும் நல்லாய் இருப்பியள் எண்டு அப்பாவை கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு போச்சுது.

“பார்த்தியே உப்பிடிச் சனங்களின்ரை புண்ணியங்கள் தான் என்ரை பிள்ளையை கண்காணாத தேசத்திலை நல்லாய் வைச்சிருக்கும்... எப்பவும் அவர் அப்பிடித்தான்...” எப்பவும் அவர் உன்னை தன்ரை பிள்ளை எண்டு சொல் லுறதிலைதான் திருப்தி... எங்கடை பிள்ளை எண்டு சொல் லுறது வலு அருமை... அவர் எதிர்பார்த்தமாதிரி நீ நல்ல கெட்டிக்காரனாய் வந்ததாலோ என்னவோ எப்பவும் உன்னை தன் பிள்ளை எண்டுதான் சொல்லுவார்...

உனக்கு முந்தியும் எழுதினனான் எண்டு நினைக் கிறன்.... எப்பவும் உன் அடுத்த கடிதம் வரும் வரையும் உன் முதல் கடிதம் அவர் தலைமாட்டினுள் இருக்கும். ஒரு தரம் வாசித்துப் போட்டுத்தான் கண்ணயர்வார்.

படிப்பகம்

padippakam



இப்பவும் இடம் பெயரேக்கை காசு, காணி உறுதியோடை உன்ரை முழுக்கடிதங்களையும் எடுத்து வைச்சிருந்தவர்.

இரவு ஒன்பது மணி போலை கொடிகாமத்துக்கு வந்து விட்டம் - சரசு மாமி வீட்டைதான்... நல்ல இருட்டு... சாடையாய் மழையும் பெய்யத் தொடங்கீட்டுது...

அப்பா லாண்ட்மாஸ்டராலை இறங்கேக்கை குதிக் காலிலை ஒரு பெரிய ஆணி ஏறிவிட்டது. அவையின்ரை புதுவீட்டுக்கு கட்டிய சாளரத்திலை இருந்த ஆணி... அவரும் அதைப் பெரியதாய் எடுக்கவில்லை... வீட்டுக்கை போனபின்பு ஆணி குத்திய இடத்திலை சரசு மாமி உப்புக் கல்லு வைத்து சுட்டுவிட்டா...

அங்கையே இரண்டு மூண்டு நாள் நிண்டம். நிலைமை சரி வரும் மாதிரி இல்லை... வன்னிக்குப் போவம் எண்டு அப்பா சொன்னார்... கிளாலியாலை வள்ளத்தில் தான் போகவேணும்... ஆக, இரண்டு பைகளில் மிகத் தேவை யானதுகளை எடுத்துக் கொண்டம்... அப்பாக்கு கொஞ்சம் காச்சல் காயத் தொடங்கியது... ஆணி குத்தினதுக்குதான் காயுது... கசாயம் வைச்சுத்தாறன், குடிச்சால் சரிவரும் என்று சரசுமாமி கசாயம் வைக்க வெளிக்கிட்டா. ஆனால் அது பெரிசாய் உதவேல்லை.

எதுக்கும் ஒருக்கா தாரும் ஒரு டொக்டரைப் பார்ப்பம் எண்டு கொடிகாமச் சந்தியடியிலை இருந்த மயில் வாகனத்தாரிட்டை அப்பா போய்க் காட்டினார். ஆணி குத்தின புண் உள்ளுக்கை நல்லாச் சிதழ் பிடிச்சுப் போயிருந்தது... எதுக்கும் கையோடை ரத்தத்தையும் சோதிக்க குடுத்துப் போங்கோ என டாக்டர் சொல்ல அப்பாவும் பக்கத்திலை இருந்த லாப்பிலை இரத்தத்தையும் குடுத்துப் போட்டு வந்தார்.

படிப்பகம்

padippakam



வந்து கொஞ்ச நேரமில்லை... மயில்வாகனத்திராற்றை ஓடலிப் பொடியன் வந்து அப்பாவை உடனை வரச் சொன்னான்... எனக்கு திக் எண்டது... சீலையும் மாத்தேல்லை... நிண்ட சட்டையோடை அப்பாவோடை போனன்...

மயில்வாகனத்தார் வாசலில் எங்களுக்காகக் காத்திருந்த மாதிரி இருந்தது...

"என்ன இப்பிடி உடம்பிலை கவனமில்லாமல் இருந்திருக்கிறியள்... உங்களுக்கு சலரோகம் சரியாய் கூடவாய் இருக்கு... உடனை கொன்றோலுக்கை கொண்டு வரவேணும். அதுதான் காலிலை இருக்கிற புண்ணும் மாறேல்லை" என்றார்.

சரி கவனமாய் இருக்கிறன் என்று விட்டு அப்பா வீட்டை வந்தாலும் அன்று முழுக்க அவருக்கு மனம் சரியாய் இல்லை.

அன்று இரவு சாப்பிட்டுவிட்டு திண்ணையில் படுத் திருந்தபொழுதுதானே சொன்னார் உன்னை ஒருக்கா பார்க்க வேணும் போலை கிடக்கு என்று...

அடுத்த நாளே உனக்கு ஒரு கடிதம் எழுதிப் போடுவம் எண்டு நினைச்சிருந்தன்...

ஆனால் தொடர்ந்து இடம் பெயர்ந்து வன்னிப்பக்கம் போகச் சொல்லி பொடியங்கள் லவுட்ஸ்பீக்கரில் சொல்லிக் கொண்டு போனாங்கள்...

பிறகென்ன... றோட்டு முழுக்க நல்லூர் திருவிழா மாதிரித்தான்... குஞ்சு குருமன்கள்... கிழடு கட்டையள்...

படிப்பகம்

padippakam



ஆடு... மாடு... கோழியள்... மழை வேறை. சனங்களிற்றை காசிருந்தாலும் ஏதும் வேண்டேலாது... குடிக்கேலாது...

றோட்டுக்கரையிலை விழுந்து கிடந்த தேங்காய்கள்... குரும்பையள்... ஒண்டையும் சனங்கள் விட்டு வைக்கேல்லை... தேங்காய் சிரட்டைக்குள்ளை மழைத் தண்ணியை ஏந்திக் குடிச்சுதுகள்...

அப்பா சரியான பாவம்... புண்ணாலை சரியாய் கஷ்டப்பட்டார். சலரோகம் கூடியிருந்ததாலை நாக்கும் நல்லாய் வரண்டு போச்சு... காச்சல் வேறை... நான் தண்ணிக்கு எங்கை போறது?

அப்பா கடைசியாய் சொன்னார்... "உந்தக் குடைத்துணியை என்ரை வாய்க்குக் கிட்டவாக வைச்சு பிழிஞ்சு விடு" எண்டு... எனக்கு வயித்தை வறுகிச்சுதடா...

அப்போது அப்பா ஒண்டு மட்டும் சொன்னார்... "உப்பிடித்தானே அந்த முஸ்லீம் சனங்களும் காணி பூமியை விட்டுட்டு வேதனையோடை போயிருக்கும் எண்டு..."

எனக்கு அதுக்கு மேல் அம்மாவின் கடிதத்தை வாசிக்க முடியேல்லை...

எவ்வளவு கெதியிலை ரூரிஸ் விசாவிலை இரண்டு பேரையும் கூப்பிட முடியுமோ அவ்வளவு கெதியிலை கூப்பிட வேணும் எண்டு முடிவெடுத்தன்...

அம்மாவின்ரை கடிதத்தை வாசித்த கையோடை ராசாத்தியின் கடிதத்தைப் பிரித்தேன்.

இம்முறை அவள் அதிகம் எழுதவில்லை... அம்மாவும் நாங்களும் மூன்று நாள் மட்டும் கோயிலடியிலை

படிப்பகம்

padippakam



போயிருந்து விட்டு வீட்டை வந்து விட்டம். எங்கை ஆறு பேரும் போறது... யார் இருக்கினம்... எது எண்டாலும் நடக்கட்டும் என்று இருந்து விட்டோம். கடவுளின் அருளால் எதுவும் நடக்கவுமில்லை... ஆனால் மூத்தவன்ரை நடவடிக்கைகள் அவ்வளவு நல்லாய் இல்லை... வீட்டுக்கும் நேரத்துக்கு வாறதில்லை... சிலவேளை ரியூசனுக்கும் ஒழுங்காய் போறதில்லை எண்டு வாத்தியார் முறைப்பட்டவர்... தேப்பன் இல்லாத பிள்ளையெண்டு கண்டிக்காமல் வளர்த்திட்டனோ எனப் பயமாய்க் கிடக்கு என கவலைப்பட்டு எழுதியிருந்தாள்.

அத்துடன் வழமை போலை ஏதோ ஒரு கோயிலுக்கு எனக்காக விரதம் இருந்து நேர்த்திக்கடனும் செய்து அதற்குரிய விபூதி சந்தனமும் அனுப்பியிருந்தாள். எத்தனையோ தடவை எழுதி நானும் களைத்துவிட்டேன், உந்த விரதம்... நேர்த்திக் கடன்கள் வேண்டாம் என்று... ஆனால் ராசாத்தி கேட்டது போல் இல்லை.

ராசாத்தி மகனைப் பற்றி எழுதியிருந்தது மட்டும் மனதுக்கு கொஞ்சம் பயத்தைக் கொடுத்தது... இயக்கத்துக்கு கியக்கத்துக்கு போனால் என்ன செய்வது?... எனக்குள் பெருமூச்சு எழுந்து தாழ்ந்தது.

அவனை எப்படியும் டென்மார்க்குக்குக் கூப்பிட வேண்டும். மனம் உறுதியாகச் சொல்லிக் கொண்டது...

முதலில் அப்பா அம்மா ரூரிஸ் விசாவிலை வந்து காலையும் சலரோகத்தையும் சுகமாக்கிக்கொண்டு போகட்டும். அந்தக் கையோடை ராசாத்தியின்ரை மகனை இங்கை கூப்பிட்டு விட்டுவிடுவம். எக்ஸ்ராவாய் ஒரு வேலை எடுத்தால் சரி... எல்லாத்தையும் சமாளிக்கலாம்...

படிப்பகம்

padippakam



என்னிடம் நானே கேள்வி கேட்டு எனக்கு நானே சமாதானம் சொல்லி என்னளவில் அப்பா, அம்மாவின் அலுவல்களைப் பார்க்கத் தொடங்கினன்... காலமும் கடவுளும் செய்த உதவியோ, அப்பா அம்மாக்கு மூன்று மாதத்தினுள் விசா கிடைத்தது... அதேமாதிரி காலமும் கடவுளும் செய்த சதியோ, அப்பாக்கு புண்ணும் பெருத்து காலுக்கு இரத்தோட்டமும் குறைந்து போயிருந்தது... டென்மார்க்கில் அனைத்து வைத்தியங்களும் செய்து பார்த்தாச்சு... புண் மாறுவதாய் இல்லை... அதுவே அவருக்கு எமனாக மாற முன்பு காலை எடுக்க வேண்டும் என்று முடிவாகச் சொல்லி விட்டார்கள்...

இன்னும் கொஞ்ச நேரத்திலை அது நடக்கப் போகுது...

வெளியேயிருந்து என்னை ஒரு நேர்ஸ் வந்து அப்பா கூப்பிடுவதாக அழைத்தார்.

“என்னப்பா...”

“தண்ணி விடாய்க்குதடா...”

நேர்ஸிடம் சொன்னேன்.

ஒரு கிளாஸில் தண்ணியும் அதை தொட்டு அவர் நாக்கை நனைக்க பஞ்சு சுற்றிய ஒரு குச்சியையும் தந்துவிட்டுப் போனாள்.

நேர்ஸ் சொன்ன மாதிரியே அவரின் நாக்கில் தண்ணி தோய்த்த பஞ்சைத் தடவினேன்.

அவர் அதிலிருந்த தண்ணியை உறிஞ்ச முயற்சித்தார். பாவமாய் இருந்தது.

வேண்டாமப்பா என கிளாஸை தள்ளி வைத்தேன். அவர் என்னைப் பரிதாபமாய்ப் பார்த்தார்.

படிப்பகம்

padippakam



நான் என்னைக் கல்லாக்கிக்கொண்டு மீண்டும் அப்பா வின் கால்மாட்டடியில் இருந்த கதிரையில் போய் அமர்ந்தேன். சாப்பிட்டியோ என சைகையாலேயே கேட்டார்.

நானும் ஓம் எனத் தலையாட்டிவிட்டு இருந்தேன்...

நேரம் போய்க்கொண்டு இருந்தது.

மதியம் இரண்டரையைத் தாண்டி விட்டது.

காலையே ஒப்பிரேசன் நடந்திருந்தால் இப்பொழுது அப்பாக்கு தண்ணி விடாயும் இருந்திராது... பசியும் இருந்திராது... எதற்கும் போய் ஒப்பிரேசன் தியேட்டரின் நிலைமையைப் பற்றிக் கேட்போம் என எழுந்து வெளியில் வந்தேன்.

மூர்த்தி வந்து கொண்டு இருந்தான்.

"நீ ஏன் வீட்டுக்கு ரெலிபோன் பண்ணேல்லை... அம்மா பார்த்துக்கொண்டு நிண்டுட்டு எங்கடை வீட்டுக்கு அடிச்சவா... அதுதான் நான் வந்தனான்... அப்பா எப்படி இருக்கிறார்..."

"ஓமடா... இப்ப... அப்ப... பண்ணுவம் எண்டுட்டு மறந்திட்டன்... பொறு நேர்ஸோடை கதைச்சிட்டு வாறன்..."

இதுவரை நின்றிருந்த நேர்ஸ் கடமையிலிருந்து போய் மற்றொரு நேர்ஸ் வந்திருந்தாள்.

"அப்பாவுக்கு எத்தினை மணிக்கு..." என நான் இழுத்தேன்.

padippakam



"உங்களுடைய கஷ்டம் எங்களுக்கு விளங்குது... உங்கடை அப்பாவிட்டை பாட்ரைம்... இப்ப அக்சிடன்ற் பட்ட கடைசி ஆளுக்கு ஒப்பிரேசன் நடந்துகொண்டு இருக்கு... எப்பிடியும் இன்னும் இரண்டு மணித்தியாலம் எடுக்கும் எண்டு நினைக்கினம்..."

என் மனது கணக்குப் போட்டுப் பார்த்தது. இது முடிய எப்பிடியும் நாலரை மணியாகும்... இதுக்குப் பிறகு அவன்கள் பின்நேரச் சாப்பாடு சாப்பிட்டு... முடிச்சு... ஆறு மணிக்கு மேலைதான் அப்பாவைக் கூப்பிடுவினம்...

எனக்கு மனத்துக்கு கஷ்டமாய் இருந்ததும். வாழ்க்கையிலை நான் அறிஞ்சு யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாத ஒரு அப்பாவோடை காலம் எப்பிடி விளையாடுது எண்டு.

"நான் இஞ்சை நிக்கிறன்... நீ போய் அம்மாக்கு விசயத்தைச் சொல்லிப்போட்டு சாப்பிட்டுட்டு வாவன்..." மூர்த்தி நெருக்கினான்...

"அப்ப நீயும் வா..." என்றவாறு அவனையும் கூட்டிக் கொண்டு கீழே போய் அம்மாக்கு விசயத்தைச் சொன்னேன்.

"நீ சாப்பிட்டியோ" என்று கேட்டா.

"ஓம்" என்று இப்பொழுது மீண்டும் அம்மாக்கும் ஒரு பொய்யைச் சொன்னேன்.

"சரி வாடா கன்ரீனிலை ஒரு கோப்பியாவது குடிப்பம்" எண்டு மூர்த்தி என்னை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு போனான்.

கோப்பி குடித்துக்கொண்டு இருக்கும்பொழுது டக்கென்று

படிப்பகம்

padippakam



ஏதோ ஒன்று ஞாபகத்துக்கு வந்த மாதிரி மூர்த்தி, "நல்ல காலம். ஞாபகத்துக்கு வந்துச்சு... காரிலை நேரம் விடேல்லை... இல்லாட்டி 500 குறோன் தண்டம் தான்."

"சரி... நீ அடிக்கடி போய் நேரம் மாத்திறனியோ?"

காரைக் காலமை கொண்டு போய் கண்ணாடி மாத்த விட்ட கதையைத் தொடங்கினால் இவன் பதட்டப்படுவான் என்ற காரணத்தால் நான் ஓம் எனத் தலையாட்டி னேன்.

"சரி மச்சான் கோப்பியைக் கெதியாய்க் குடி..." என அவன் அவசரப்படுத்தி கோப்பியைக் குடிக்கப்பண்ணிவிட்டு என்னையும் கூட்டிக்கொண்டு தனது காரடிக்குப் போய் சரியான நேரத்தை மணிக்கூட்டுக்கம்பியில் பிடித்து விட்டான்.

பின் திரும்பும்போது, "பார்த்தியே மச்சான்... நேற்று வானிலை பனங்கிழங்கும் இராசவள்ளிக்கிழங்கும் கொண்டு வந்து வித்தது எண்டு வேண்டினனாங்கள்... இப்ப நான் வெளிக்கிட மனுஷிக்காரி உங்கடை வீட்டுக்கு எண்டு கொஞ்சம் தந்துவிட்டவா. உன்ரை காரின் டிக்கியைத் திற... இப்பவே வைச்சு விடுவம்..."

இனியும் இவனுக்கு மறைக்கேலாது என்ற நிலையில் மெதுவாய் மூர்த்திக்கு விசயத்தை உடைத்தேன்.

நான் எதிர்பார்த்த மாதிரியே அவன் படபடத்துப் போனான்.

அவனது படபடப்பும் என்னில் அவன் வைத்திருக்கும் அளவுக்கு மீறிய அக்கறையும் அவனுக்கு என் மேல் கோபமாய் மாறியது.

படிப்பகம்

padippakam



"இதுக்காகத்தான் தலைதலையாய் அடிச்சுக் கத்தின னான்... உவங்களோடை மிண்டாதை எண்டு... இப்ப பார்த்தியே... உன்னோடை நேருக்கு நேரே மிண்டேலாமல் போக மறைமுகமாய் தொடங்கீட்டாங்கள்... இனி நீயும் பொலிஸ் அது இது எண்டு வெளிக்கிடப்போறாய்... உது எங்கை போய் முடியப் போகுதோ தெரியாது..." மூர்த்தியின் கவலை எனக்கு நன்கு புரிந்தது.

என்னையும் அறியாமல் என் தலை இல்லை என்பது போல ஆட்டியது.

"எது இல்லை எனத் தலையாட்டுறாய்?" — மூர்த்தி கேட்டான்.

"நான் அவன்களை பொலிஸிலை காட்டிக் கொடுக்கப் போறதில்லை."

"அப்ப நீ அவன்களோடை முண்டப் போறியோ?"

"இருக்கலாம்... அல்லது இல்லாமல் போகலாம்... ஆனால் கடைசிவரை பொலிஸ் அது இது எண்டு போய் அங்கை போராடுற இயக்கங்களை இங்கை தடை செய்யுறதுக்கு நான் காரணமாக மாட்டன்."

மூர்த்தி என்னை அதிசயமாகப் பார்த்தான்.

என் கண் முன்னால் ராசாத்தியின் மகன் போய்க் கொண்டு இருந்தான்... தகப்பனின் பிரேதம் ஒரு பக்கத் தால் போகிறது... நான் விமானத்தில் டென்மார்க்குக்கு பறந்துகொண்டிருக்கின்றேன்... வீட்டுத் தாழ்வாரத்தில் ராசாத்தி தன் தாலிக்கொடியைக் கழற்றி எறிந்துவிட்டு மற்றைய மூன்று பிள்ளைகளையும் கட்டிக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். ராசாத்தியின் மகன் மட்டும்

படிப்பகம்

padippakam



யாரையுமே சட்டை செய்யாமல் தோளில் துவக் குடன் போய்க்கொண்டு இருக்கின்றான்... றோட்டுக் கரையில் வைத்து என் காரைக் கொளுத்திக்கொண்டு நிக்கிறான்கள்... அவன் அதையெல்லாம் பார்க்காமல் தாண்டிக் கொண்டிருக்கிறான்... அவன் இதுகளைப் பார்க்க வேண்டாம்.

மூர்த்தியுடன் கதைத்துக்கொண்டு நிற்கும்பொழுது நான் எங்கேயோ போனது போல இருந்தது.

"மூர்த்தி, அண்டைக்குச் சொன்னதைத்தான் இப்பவும் சொல்லுறன். எங்கடை விருப்பு வெறுப்புகளைத் தாண்டி... இந்தப் போராட்டம் வளர்ந்திட்டுது... இனி தனி நாடோ... இல்லை சிங்களவனிட்டை அடிமையாகிப் போறதோ அது அங்கை சனங்கள் தீர்மானிக்க வேண்டியது... இஞ்சை வந்து இயக்கங்களுக்கு காசு சேர்க்கிற இவையில்லை... ஆனால் இவை போலைத்தான் ஊரிலையும் இயக்கங் கள் இருக்குமெண்டால் சிங்களவனிட்டையே அடிமை யாக இருக்கலாமே... ஆனால் இது... ஐ மீன்... இவை யின்ரை போக்குகளும் நடவடிக்கைகளும் ஆரோக்கிய மானதில்லை... உங்களாலை ஐரோப்பாவிலை ஒரு போராளியை கடைசிவரை உருவாக்க முடியாது... ஆனால் உங்களுக்கு எதிரான எதிராளிகளை... அல்லது நீங்கள் சொல்லுற துரோகிகளை நீங்களே உருவாக்கிப் போடுவியள்..."

மூர்த்திக்கு கொஞ்சம் கண்கள் கலங்கின... "நீ கிரேட்டடா மச்சான்..."

"சரி... வா... அப்பா நித்திரையாலை சில வேளை எழும்பி தண்ணி விடாயிலை இருப்பார்... டே மூர்த்தி... அம்மா அப்பா ஊருக்குப் போகும் வரையும் இது அவைக்கோ

படிப்பகம்

padippakam



அல்லது உன்ரை மனுஷிக்கோ தெரியவேண்டாம்... பிளீஸ்... பிறகு அதுகள் ஊரிலை போயும் நிம்மதியாய் இருக்காதுகள்..."

மூர்த்தி என் தோளில் ஆதரவாய் கையைப் போட்டுக் கொண்டு வந்தான்...

அப்பாவின் வாட்டுக்குள நாம் மெதுவாய் போக எம் அசுமாத்தம் கேட்டு அப்பா கண்ணை முழித்தார்.

"என்ன தம்பி உவளவை சொல்லுறாளவை...?"

அப்பா மூர்த்தியிடம் கேட்டார்.

"எப்பிடியும் அங்கிள்... ஆறு மணிக்குப் பிறகுதான்..."

"சரியடா தம்பி... நடக்கிறது நடக்கட்டும்... என்னை நொண்டியாக்கிறதுக்கு அவசரப்படாமல்... மற்ற சனங்கள் நொண்டியாகாமல் பார்க்கிறது நல்லம் தானே..."

மீண்டும் அப்பா என்னுள் உயர்ந்துகொண்டு போகிறார்...

எப்பிடி அப்பாவால் எல்லாத்தையும் பொசிற்றிவ்வாய் எடுக்க முடியுது... அல்லது நேர்மையாய் சிந்திக்க முடியுது...

இப்பொழுது டென்மார்க்குக்கு வர முதல் ராசாத்தியை பிள்ளைகளுடன் கோயிலடியில் கண்டுபோட்டுச் சொன்ன வராம்... "நீ பாக்கியத்தின்ரை பெட்டையல்லோ... வீட்டிலை பின்னாலை தென்னங்காணிக்குள்ளை விழுகிற ஓலை யெல்லாத்தையும் நீ வந்து எடுத்து பின்னி வித்துக் காசாக்கு... எங்களுக்கு காசு ஏதும் தர வேண்டாம்" என்று... "கொப்பருக்கும் கொம்மாக்கும் வயதுபோற

padippakam



காலத்திலை உன்னையும் உன்ரை நாலு பிள்ளையளையும் வைச்சுப் பார்க்கிறது அதுகளுக்கும் கஷ்டம் தானே" என்று...

அம்மாவாலையும் என்னாலையும்தான் ராசாத்திக்கு இந்தக் கதியே என்று மனத்துக்குள் அப்பா எண்ணினாரோ தெரியாது... அதுதான் போலும் இந்தக் கழிவிரக்கம்... நான் டென்மார்க்குக்கு வந்தது தொடக்கம் ராசாத்திக்கு காசு அனுப்புவது... அப்பாவுக்குத் தெரியவே தெரியாது... ராசாத்திக்கு காசு தேவையில்லாவிட்டாலும் என் அப்பா அம்மாவுக்குச் செய்யுற உதவியாகவே அவள் அதைச் செய்தாள்.

ராசாத்தியின் விசயம் தெரிந்த ஒரே ஒரு ஆள் மூர்த்தி தான்.

ஆரம்பத்தில் கல்யாணம் செய் செய் என அவன் ஆக்கினைப்படுத்திக் கொண்டேயிருந்தான். ஒரு நாள் அவனின் மனைவி தன் ஊரில் இருக்கும் தங்கச்சியாரின் படத்தைக் காட்டிப் பேசுவமோ என்று கேட்டார்.

பொய் சொல்லுறது மட்டும் தப்பில்லை... உண்மையை உரிய ஆக்களுக்கு சொல்லாமல் மறைக்கிறதும் தப்பு எண்டு வேலுப்பிள்ளை மாஸ்டர் சொன்ன நினைவு.

நான் ஆதியோடு அந்தமாய் ராசாத்தியின் முழுக் கதையையும் மூர்த்திக்கும் அவன் மனுசிக்கும் சொன்னன். அன்றிலிருந்து எனக்கு அவர்கள் கலியாணம் பேசுவதை விட்டு விட்டார்கள்.

ராசாத்தியைப் பற்றி ஏதும் நானாக சொன்னால் சுவாரஸ்ய மாகக் கேட்பான்.

படிப்பகம்

padippakam



இப்பவும் ராசாத்தியின்ரை மகன் சின்ன வயதிலேயே இயக்கத்துக்குப் போட்டான் எண்டு சொல்ல அவன் கவலைப்பட்டான்...

"முதலிலை உன்னை... பிறகு புருஷனை... பிறகு தேப்பனை... இப்ப மகனை எண்டு எல்லா ஆம்பிளை உறவுகளுமே விட்டுட்டுப் போகுதுகள்... அப்பிடி உன்ரை ராசாத்திக்கு ஒரு தலைவிதி போலை... என்ன செய்யிறது..." சொல்லிவிட்டு கொஞ்ச நேரம் யோசித்தவன்... "ஏனடா மச்சான்... ராசாத்தியின்ரை மகன் இயக்கத்துக்கு போட்டான் எண்டு சொல்லுறாய்... ஏன் அங்கை எழுதி அங்கை இருக்கிறவை மூலம் இஞ்சை உன்னோடை சொறி கிறவையை எச்சரிக்கக் கூடாது..."

நான் எதுவுமே சொல்லாமல் சிரித்தேன்.

"என்ன சிரிக்கிறாய்?"

"டே நீ என்னைப் பற்றி சரியா யோசிக்கிறாய் எண்டு தெரியுது... முதலிலை ராசாத்தியின்ரை பொடியன் எந்த இயக்கத்துக்குப் போனவன் எண்டு தெரியாது. மற்றது... அப்பிடித்தான் இங்கை இருக்கிற... என்னோடை முட்டினவன்ரை இயக்கத்துக்குப் போயிருந்தாலும்... அவனை கடைசிவரை இந்த சில்லறை விசயங்களுக்கு இழுக்கக் கூடாது தெரியுமே... அவன் போராடப் போனவன்... ஆனால் இங்கை இருக்கிறவர்கள் போராடப் பிறந்தவர்கள் இல்லை... அவனையோ இல்லை அங்கை இருக்கிற தலைமையையோ இந்தச் சில்லறை விடயங்களுக்கு இழுக்கக் கூடாது. இதை நாங்கள்தான் செற்றில் பண்ண வேணும்."

மூர்த்தியும் ஓம் எனத் தலையாட்டினான்.

படிப்பகம்

padippakam



“மூர்த்தி நீ ஒண்டுக்கும் யோசியாதை... முதலிலை அப்பாக்கு சுகமாய் ஒப்பிரேஷன் முடிந்து அப்பாவும் அம்மாவும் ஊருக்குப் போகட்டும். அதுக்குப் பிறகு மிச்சத்தை யோசிப்பம்...”

“சரி மச்சான்... நான் பிள்ளையை பள்ளிக்கூடத் தாலை கூட்டிக்கொண்டு வரவேணும். நான் போட்டு வாறன். ஏதும் தேவையெண்டால் டெலிபோன் பண்ணு...”

மூர்த்தி விடை பெற்றுக் கொண்டான்.

நேரத்தைப் பார்த்தேன்.

பின்னேரம் நாலு மணியாகிக் கொண்டிருந்தது.

காரைப் போய் எடுத்துக் கொண்டு வரவேணும்.

அப்பாக்கு கிட்டப் போய், “வெளிக்கடையில் போய் சாப்பிட்டுட்டு வரப்போறன்” எண்டன்.

“ஓமப்பு... காலமை தொடக்கம் நீ பட்டினி... போய்ச் சாப்பிடு...” சந்தோஷமாய்ச் சொன்னார்.

என்னை சாப்பிட என்று அனுப்புவதில் அவருக்குத் திருப்தி. சாப்பிட என்று பொய் சொல்லி கார் கண்ணாடி உடைத்த கதையை மறைத்ததில் எனக்குத் திருப்தி.

நடந்தே கார் கராஜுக்குப் போனேன். வேலை முடித் திருந்தார்கள்... மெக்கானிக் ஒரு நல்ல கிழவர்...

நான் எந்த நாட்டைச் சேர்ந்தவர் எனக் கேட்டார்.

“சிறிலங்கா” என டெனிஷிலேயே பதில் சொன்னேன்.

“சிலோன்தானே” என திருப்பிக் கேட்டார்...

படிப்பகம்

padippakam



"ஆம்" என நான் சொல்ல ஒரு பெரிய மூச்செடுத்துக் கொண்டார்...

"சிலோனுக்கு போயிருக்கிறியளா" எனக் கேட்க... "ஓம்" எனத் தலையாட்டியபடி... "என்ன நல்ல ஒரு நாடு... எல்லாத்தையும் பழுதாக்கிப் போட்டியள்... 83க்கு முதல் ஒவ்வொரு வருசமும் ரூரிஸ்டாய் வாறனான்... எனக்கு ஒரு சிங்களப் பெட்டை கூட லவ்வராய் இருந்தவா... புத்த கோயில்கள்... தேமா பூமரங்கள்... யானைகள்... கடற்கரையள்... மலையள்... என்ன வடிவான நாடு... எல்லாம் வீணாக்கிப் போட்டியள்..."

எனக்கு அந்தக் கிழவனின் கதை கொஞ்சம் சுவாரஸ்யத்தை ஊட்டியது...

"அப்ப அந்தப் பிள்ளையை ஏன் கலியாணம் செய்து இங்கை கொண்டு வரேல்லை..."

"அப்பிடித்தான் பிளான் இருந்தது... ஆனால் 83 கலவரத்துக்குப் பிறகு அவளிட்டை இருந்து எந்தப் பதிலும் இல்லை... எத்தினையோ கடிதம் போட்டுப் பார்த்தன்... பதிலில்லை... நேரே போய்ப் பார்ப்பம் எண்டு போனன்..., அவளின்ரை தாய் சொன்ன கதையளை நம்ப முடியேல்லை...

தகப்பன் யாழ்ப்பாணத்திலை ஆமியாய் இருந்தவராம்... உங்கடை இயக்கம் வைச்ச கண்ணி வெடியிலை செத்த ஆட்களிலை அவரும் ஒரு ஆளாம்... அப்பதான் இனக்கலவரமும் வெடிச்சதாம்... தன்டை தேப்பனைக் கொண்ட தமிழ் இயக்கங்களை இலங்கையிலிருந்து ஒழிக்க வேணும் எண்டு ஆமியிலை போய்ச்சேர்ந்திட்டா ளாம்... உப்பிடி ஆள் மாறி ஆள் மாறி ஆளை ஆள் கொண்டு என்ன முடிவு காணப்போறியளோ தெரியாது..."

படிப்பகம்

padippakam



கிழவன் கண் கலங்கினார்.

எம் இனப்பிரச்சனையில் ஓர் டெனிஷ்காரரின் காதல் கூட கசங்கிப் போயிருக்கிறது என்பதனை நம்ப முடிய வில்லை...

பழி... பழிக்குப் பழி... இனவெறி... அதிகார வெறி...

காரை எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குத் திரும்பினேன்.

நேரம் இப்பொழுது பின்னேரம் ஆறு மணியாகிக் கொண்டு இருந்தது.

நன்கு இருட்டி விட்டது.

"வடியாய் சாப்பிட்டியோ..." அப்பா கேட்டார்.

"ஓம்" எனத் தலையாட்டினேன்...

"என்ன சாப்பிட்டனி..."

"பொரிச்ச கோழியும் உருளைக்கிழங்குப் பொரியலும்."

"எல்லாம் எண்ணையடா... கவனமாய் உடம்பை பார்..."

அது அப்பாக்கு என்மேல் எப்பொழுதும் உள்ள கரிசனை...

"உந்தத் துவாயிலை கொஞ்சம் தண்ணியை நனைத்து முகத்தைத் துடைத்து விடு... முகம் காய்ஞ்சு போச்சு..."

அப்பா என்னிடம் எந்த வேலையும் சொல்லுவதோ கேட்பதோ இல்லை.... இப்போ ஏன் இப்படிக் கேட்கிறார்...

கால் போகப்போகும் நேரம் நெருங்க நெருங்க என்னிடம் அவர் கூட நெருங்குகிறாரோ... அல்லது என்னை உரிமையாகக் கூட எடுக்கிறாரோ...

படிப்பகம்

padippakam



வடிவாய் முகத்தை ஈரத்துவாயால் துடைத்து விடுகின்றேன்.

இன்னும் இரண்டு மாதத்துக்குத்தானே... விசா முடிய இலங்கைக்குப் போய்விடுவார்கள்... கடைசிக்காலத்தில் அப்பாக்கு இதுகளை நான் செய்யப் போவதில்லை.

நினைக்க மனதுக்கு கஷ்டமாய்க் கிடக்கிறது.

நான் அழுது அப்பாவை பலவீனப்படுத்திப் போடுவனோ எனப் பயமாய்க் கிடக்க வாட்டுக்கு வெளியே வந்தேன்.

அப்பாவின் நேர்ஸ் புன்முறுவலுடன் என்னை நோக்கி வந்தாள்.

"இப்ப ஒப்பிரேஷன் தியேட்டரில் இருந்து டெலிபோன் வந்தது... எல்லாம் றெடியாம்... கொஞ்ச நேரத்திலை போட்டர் வருவார்... நீங்களும் வாசல் மட்டும் போய் மயக்க மருந்து கொடுக்கும் மட்டும் கீழே நிற்கலாம்... பின்பு இங்கு வந்து விடுங்கள்... ஒப்பிரேஷன் முடிந்து அவருக்கு மயக்கம் கலையும் பொழுது உங்களை அவர்கள் மீண்டும் கூப்பிடுவார்கள்."

நேர்ஸ் சொன்ன மாதிரி போட்டர் சிறிது நேரத்தில் வந்து அப்பாவுக்கு கை கொடுத்துவிட்டு... அப்பாவின் பெயர் சரியாக இருக்கிறதா என பேப்பர்களை சரி பார்த்துவிட்டு... அப்பாவின் கட்டிலை மெதுவாக நகர்த்தினான்.

"நான் போட்டு வாறனடா..." அப்பா சொல்லும்போது அவர் கண்கள் கலங்கியிருந்தன...

"நானும் வாறனப்பா..." எனப் பின் தொடர்ந்தேன்...

படிப்பகம்

padippakam



லிப்ட்... நீண்ட நடைபாதை... மீண்டும் இன்னோர் லிப்ட்...

ஒப்பிரேஷன் தியேட்டர் வாசலுக்குப் போனோம்.

தலையை வெள்ளை நிறத் தொப்பியால் மூடியபடி பச்சைநிற அங்கி அணிந்த டாக்டர்கள், தாதிமார்கள் எங்களுக்காகக் காத்திருந்தார்கள்.

எனக்கும் அவ்வாறு ஓர் அங்கியும் தொப்பியும் தந்து என்னையும் உள்ளே கூட்டிச் சென்றார்கள்.

அப்பாவை ஒப்பிரேஷன் கட்டிலுக்குத் தூக்கி மாற்றி னார்கள்.

அப்பாவுக்கும் எனக்கும் கை தந்துவிட்டு மயக்க மருந்து போடும் வைத்தியர் தான் மெதுவாக ஊசி போடுவதாயும் அப்பா மயக்கமாகும் வரை என்னை அங்கேயே நிற்கவும் சொன்னார்கள்.

அப்பாவுக்கு முதலில் குளுக்கோசை ஏற்றும் ஊசியை இடக்கையில் ஏற்றினார்கள்.

பின்பு வலக்கையில் மயக்க ஊசி ஏற்றப்பட்டது.

நான் அப்பாவின் தலையடியை வருடிக்கொண்டு நின்றேன்...

இப்பொழுது அப்பா அயரத் தொடங்கினார்...

"நீங்கள் வெளியே போய்க் காத்திருங்கள்... அல்லது வாட்டுக்கு போய்க் காத்திருங்கள்" என ஒரு நேர்ஸ் சொன்னா...

நான் குனிந்து அப்பாவின் நெற்றியில் கொஞ்சிவிட்டு வெளியில் வந்தேன்.

படிப்பகம்

padippakam



வாழ்க்கையில்... பள்ளிக்கூடங்களில்... கதைகளில்... கட்டுரைகளில் எல்லாம் படித்த அல்லது வாசித்த சூனியம் என்ற சொல்லின் அர்த்தத்தை இரண்டாம் தடவை இப்பொழுதுதான் உணர்கின்றேன். முதலாவது சின்ன வயதில் ராசாத்தியை என்னிடம் இருந்து பிரித்த நாட்களில்... இரண்டாவது இப்போ...

ஒப்பிரேஷன் வாட்டின் வெளியே நான் அமர்ந்திருக்கும் இடம் மிக அமைதியாக இருக்கிறது.

சுவரில் தொங்கியிருக்கும் மணிக்கூட்டின் செக்கன் கம்பியின் சத்தத்தைத் தவிர ஏதுமில்லை.

என் மனம் அதே சூனியச் சூழ்நிலையில்...

வாழ்க்கை என்பதுக்கு சிலவேளை சில அர்த்தங்கள் இருப்பதாய் படும்... சிலவேளை எதுவுமே இல்லாதது போலப்படும்...

அப்பாவின் வாழ்வின் அர்த்தம்தான் என்ன?... நான் அறிந்தவரையில் அது நான்தான்... என் முன்னேற்றங் கள்... என் வெற்றிகள்... என் தோல்விகள்... அவராக வாழ்வில் எதையும் விரும்பியதையோ... தேடியதையோ நான் அறியவில்லை. அவரின் இளமை யாழ்ப்பாணத்துக் கும் கொழும்புக்கும் இடையே ஓடும் மெயில் ரெயின் மாதிரி ஒரே சந்தத்துடன்தான் ஓடிக்கொண்டு இருந்தது என அம்மம்மா அடிக்கடி சொல்வா... நான் பிறந்தபிறகு தானாம் அப்பாவில் ஓர் உயிர்ப்பு வந்ததாம்...

லீவுக்கு அம்மாவுடன் யாழ்ப்பாணத்துக்கு ஊருக்கு வந்து நிற்கும்பொழுது... அப்பா அம்மாக்கு கொழும்பில் இருந்து எழுதும் கடிதங்களை எனக்கு அம்மா காட்டுவா...

padippakam



அன்புடன் என்று தொடங்கும் இடத்தில் என் குஞ்சனுக்கும் எனத் தொடங்கி பின்புதான் அம்மாக்கு சுகம் கூறியிருப்பார்... பின்பு கடிதம் முழுக்க என்னைப் பற்றிய விசாரணைகள்... என் படிப்புக் கதைகள்தான்... கடைசி யாக முடிக்கும்பொழுதும் அவனைக் கவனமாகப் பார்த்துக்கொள் என்றுதான் முடியும்.

இப்பிடிக் கடிதங்கள் ஒரு கிழமைக்கு எப்படியும் மூன்று தடவை வரும். தபால்கார கணேசண்ணை அம்மாவை பகிடி பண்ணுறவர்... என்ன மனுசனுக்கு மனுசியை விட்டுட்டு இருக்கேலாமல் இருக்கோ எண்டு... அப்பிடி எல்லாமே நானாய் இருந்த அப்பாவுக்கு இந்த நிலை... எனக்கு ஏதோ தலைசுத்துற மாதிரி இருக்கு... கண்ணை மூடிக்கொண்டு இருந்தால் சுகமாய் இருக்கும் போல் இருக்கு...

அப்பா என்று கூப்பிட்டுக்கொண்டு இருக்கவேணும் போலை இருக்கு...

நான் கண்ணயர்ந்து விட்டேன்...

ஒப்பிரேஷன் தியேட்டர் நேர்ஸ் வந்து என்னைத் தட்டி எழுப்பினாள்.

இரவு எட்டரையாகி இருந்தது.

“உங்கள் அப்பாக்கு நினைவு வந்துகொண்டிருக்கு... நீங்கள் உள்ளே போகலாம்...”

உள்ளே போனேன்.

அப்பாவை ஒப்பிரேஷன் கட்டிலில் இருந்து மற்ற கட்டிலுக்கு மாற்றியிருந்தார்கள்.

படிப்பகம்

padippakam



அவரது வாய் உளறிக் கொண்டிருந்தது... என்னைக் கூப்பிடுகிறார் என நன்கு விளங்கியது...

ஒப்பிரேஷன் தியேட்டரைச் சுத்தம் செய்யும் தொழிலாளி பெரிய கண்ணாடி நைலோன் பையை வெளியே எடுத்துக் கொண்டு போகிறான்.

என் கண்கள் அந்தப் பையை உற்றுப் பார்க்கிறது.

கடவுளே...

அதனுள் அப்பாவின் வெட்டப்பட்ட கால்.



படிப்பகம்

padippakam

இரண்டாவது பாகம்



# அப்பாவுக்கு

படிப்பகம்

padippakam

அப்பாவின் ஒப்பிரேஷன் நன்கு முடிந்து அம்மாவும் அப்பாவும் என்னுடன் சந்தோஷ மாய் இருந்த ஒரு மாதத்தையும் என்னால் என்றுமே மறக்க முடியாது.

ஒப்பிரேஷனுக்குப் பிறகு அப்பாவுக்கு எந்த காய்ச்சலோ மற்றும் முன்பிருந்த வேதனைகளோ எதுவுமே இருக்கவில்லை. மிகச்சந்தோஷமாய் இருந்தார். அதனால் அம்மாவும் சந்தோஷமாய் இருந்தா.

சக்கர நாற்காலி என்றாலும் நான் கூட்டிப் போன இடங்களுக்கு எல்லாம் அவர் மறுக்காமல் வந்தார். இப்பவும் அந்த இடங் களுக்குப் போகும்பொழுது அவர்கள் இருவரையும் நினைத்துப் பார்ப்பதுண்டு.

அவர்கள் இங்கு வராமல் இருந்தபொழுது தனிமை என்றால் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் ஊருக்குப் போன பின்புதான் தனிமை என்றால் என்ன என்று உணரத் தொடங்கினேன்.

படிப்பகம்

padippakam



அதிலிருந்து விடுபட பழையபடி சின்னச் சின்னக் கவிதைகள்... கதைகள் எழுதத் தொடங்கினேன்... கம்பஸில் துளிர்த்த அந்த இலக்கிய ஆர்வம் மீண்டும் எனக்குள் தலைகாட்டியது.

எனக்குள்ளேயிருந்த வெற்றிடங்களை அது நிரப்பியது... அதுதானே விதிமுறையும் — வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்...

ஒரு நாள் இரவு மீண்டும் என் கார்க் கண்ணாடி உடைந்தது போலக் கனவு கண்டேன்.

திடுக்கிட்டு எழுந்த வேகத்துடன் கை பேனையையும் கடதாசியையும் தேடியது.

*'ஓர் கண்ணாடியைத் தான்*
*உங்கள் கைகள் உடைக்கும்!*
*கவனம் தோழர்களே!!*
*ஆயிரம் கண்ணாடித் துண்டுகள்*
*உங்கள் கால்களில் குத்தும்!!!'*

அதிக நாட்களுக்குப் பின் கவிதை எழுதியிருந்தாலும் எனக்கு நன்கு பிடித்த கவிதையாக இருந்தது.

நானே எனக்கு நியூட்டன் என்று புனைபெயரும் வைத்து இந்தக் கவிதைக்கு நியூட்டனின் 3ம் விதி எனத் தலைப்பு இட்டு டென்மார்க்கில் இருந்து வெளிவரும் பத்திரிகைக்கு அனுப்பியிருந்தேன்.

பலர் பாராட்டினார்கள்... அதிகமானோருக்கு யார் இந்த நியூட்டன் என்று அறிய ஆவல் மேலிட்டது. இதனைப் பிரசுரித்தவர்களும் எனது சொந்தப் பெயர் நியூட்டன் என்றே எண்ணியிருந்தார்கள். மேலாக சிலருக்கு குடையத்

படிப்பகம்

padippakam



தொடங்கியது. காரணம், அதில் நான் பாவித்திருந்த தோழர்களே என்ற சொல்.

ஈழம் என்று எழுதினால் ஓர் இயக்கம், தமிழ் ஈழம் என்று எழுதினால் அது இன்னோர் இயக்கம், தமிழர் தாயகம் என்றால் அது மூன்றாவது இயக்கம் என்று சொல்லுக்கு சொல் வேறுபாடு கண்டு நீ இந்த இயக்கம்... நீ அந்த இயக்கம் என்று றப்பர் ஸ்டாம்ப் கொண்டு குத்தும் இந்த புலம்பெயர்வாழ் உலகத்திலை தோழர்களே என நான் பாவித்த சொல் பலருக்கு நியூட்டனைப் பற்றி பல சந்தேகங்களை எழச்செய்தது.

அதிலும் கண்ணாடி உடைத்த கதையும் வந்திருந்ததால் சிவராசா அண்ணையின் இருபத்தைந்தாவது கலியாண விழாவுக்கு வந்து என்னுடன் வாக்குவாதப்பட்ட என் உடன் பிறவாத சகோதரர்களுக்கு வயித்தைக் கலக்கியிருக்க வேண்டும்.

சஞ்சிகை வெளிவந்த அடுத்த நாளே வொலிபோல் கிறவுண்டடியில் இருந்து பெரிய வாக்குவாதமாம்... என்னைப் பற்றி. ஆனால் மூர்த்தியைக் கண்டபொழுது கதையை நிற்பாட்டி விட்டார்களாம்.

எனக்கு மூர்த்தி வந்து சொல்ல நல்ல சந்தோஷம்... கவிதை வேலை செய்யத் தொடங்கி விட்டது என்று...

அதுவே எனக்கு இன்னமும் எழுதவேண்டும் என்ற வெறியை உண்டாக்கியது.

மேலும் எழுதத் தொடங்கினேன்.

டென்மார்க் சஞ்சிகைகளுக்கு மட்டுமில்லாது ஐரோப்பாவில் உள்ள அனைத்து சஞ்சிகைகளுக்கும் எழுதத் தொடங்கினேன்.

படிப்பகம்

padippakam



ஓர் ஆறு மாத காலத்தினுள் நியூட்டன் என்ற பெயர் இரண்டாம் முறையாக மக்களுக்கு பரிச்சயமாகத் தொடங்கியது.

குறிப்பாக புலம் பெயர்ந்த மக்களின் வேதனைகளையும், தோல்விகளையும், போலிகளையும் தளமாகக் கொண்டு விடுதலைப் போராட்டம் - பாகம் 2 என்ற தலைப்பினில் எழுதத் தொடங்கிய மாதாந்தக் கட்டுரை அதிக வாசகரை நியூட்டனின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது.

விடுதலைப் போராட்டம் - பாகம் 1 எங்கே எப்போது யாரால் வெளியிடப்பட்டது என ஆளுக்கு ஆள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள்.

உண்மையில் விடுதலைப் போராட்டம் - பாகம் 1 என்னால் மட்டுமில்லை, யாராலும் முழுமையாக எழுதப்படவில்லை. அந்தந்தக்கால நிகழ்வுகளின் பதிவுகளாக... அந்தந்த விடுதலை இயக்கங்கள் தம்மை நியாயப்படுத்தி எழுதி வந்த பதிவுகளாய் இருந்ததே தவிர முழுமையான ஒரு வரலாற்றுப் பாடமாக இதுவரை எழுதப்பட்டுள்ளதா என எனக்குத் தெரியவில்லை.

உண்மையில் இந்த எழுத்துகள் வரவேற்பு பெறத் தொடங்கியவுடன் எனக்குள்ளே ஓர் ஆதங்கம் - நான் புலம் பெயர்ந்த மக்களின் வேதனைகளை எழுதுவது போல யாராவது ஊரில் உள்ள மக்களின், அவர்களின் துயரங் களை எழுத மாட்டார்களா என்று... இங்கு எனக்கிருக்கிற எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் அங்கு இருக் கிறதோ தெரியாது... ஆனால் அங்கிருந்து சில குரல்கள் வெளியுலகத்துக்குக் கேட்கக்கூடியவாறு வெளியே வர வேண்டும்... எந்தக் கலப்பும் இல்லாத குரல்கள் வெளியில் கேட்க வேண்டும்.

படிப்பகம்

padippakam



இங்கே எழுதுவதின் பிரதிகளை அப்பாவுக்கும் ராசாத்திக்கும் ஒவ்வோர் பிரதி அனுப்பத் தவறுவதில்லை... அப்பா ஒவ்வோர் வரியையும் ஆழ அகல விமர்சனம் செய்து கடிதம் போடுவார்... இடைக்கிடை கவனமடா என்று ஒரு வரி மட்டும் இருக்கும். ராசாத்தி பாவம்... நீங்கள் எழுதுகிறது ஒன்றுமே புரியுதில்லை... உங்களைப் போலை பெரிய படிப்பு படிச்சனானோ? எனப் பதில் வரும். எனக்கு அவளை நினைக்கப் பாவமாய் இருக்கும்.

ரெயினிங் முடிய ஒரு நாள் இயக்கப் பொடியளோடை மகன் லீவிலை வந்திருந்தானாம். வெளிக்குந்தில் இருந்த என் எழுத்துகளை வாசித்து ஆளுக்காள் பாராட்டினாங்களாம் என ராசாத்தி சந்தோஷப்பட்டு எழுதியிருந்தாள்.

ஆள் சரியாக மாறிவிட்டானாம்... ராசாத்தி எப்பிடிச் சீவியம் நடத்துறாள் என எதுவுமே கேட்கவில்லையாம்... மற்றவர்களுடன் எப்போதும் கட்டளையிடும் தொனியில்தான் கதைத்துக்கொண்டு இருந்தானாம்.

தங்கச்சிமார் இயக்கக் கதையள் கேட்க, அதெல்லாம் உங்களுக்கு எதற்கு? ஒழுங்காகப் படியுங்கோ என்று சொல்லிவிட்டானாம்... போகும்பொழுது மட்டும் தான் மட்டக்களப்பு போறன் என்ற சொல்லிவிட்டுப் போய் விட்டானாம்.

நாட்கள் இப்போ விரைவாக ஓடத் தொடங்கி விட்டது...

48வது தொடர் எழுதி முடித்த கையுடன் எனக்கு வழமையாக வரும் விமர்சனங்கள், வாழ்த்துகளிடையே இ - மெயில் மூலம் ஒரு கடிதம் வந்திருந்தது.

அதில் வழமையான விமர்சனப் பார்வையைவிட கவிதையின் அமைப்பு, அதற்கு கீறப்பட்டிருக்கும் நவீன

படிப்பகம்

padippakam



சித்திரங்களை, பெரிதும் பாராட்டியும், தான் இந்தியாவில் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவள் என்றும், தற்பொழுது இங்கிலாந்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. பெயர் அமுதா நாயர். வயது 32.

இலங்கையரும் இல்லாத, தமிழரும் இல்லாத, ஆனால் தமிழுக்கும் யாழ்ப்பாணக் கலாச்சாரத்துக்கும் கிட்டடிச் சொந்தமான மண்ணில் இருந்து ஒரு வாசகி கிடைத்தது மகிழ்ச்சியாக இருந்தது. வழமையாக எல்லா வாசகர் களுக்கும் தெரிவிக்கும் நன்றியைத் தெரிவித்து பதிலை அனுப்பியிருந்தேன்.

உண்மையில் அப்பா அம்மா வந்து என்னுடன் தங்கி பின் மீண்டும் இலங்கைக்குப் போனதால் வந்த பிரிவு அல்லது தனிமையைப் போக்கத்தான் எழுதத் தொடங்கினேன். ஆனால் அது இவ்வளவு வெற்றியைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கவேயில்லை... மூர்த்தி மட்டும் அடிக்கடி எச்சரிப்பான் - உன்ரை எழுத்துகளைப் பார்க்க சரியான றவிக்கான ஒரு றோட்டிலை சைக்கிளில் போற திறிலிங்காய் இருக்கு. ஆனால் தட்டுப்பட்டுப் போயிடுவியோ எனப் பயமாய் இருக்கடா என்று... நான் சிரித்து விட்டுப் போனேன்.

அவன் சொன்னது உண்மைதான். நானும் ஒரு சொகுசுக் காரிலை றோட்டிலை பயணப்பட்டிருந்தால் யாரும் திரும்பி என்னைப் பார்த்திருக்க மாட்டார்கள். பத்தோடு பதினொன்றாக என் எழுத்துகளும் போயிருக்கும்... சொல்லி வைத்த விமர்சனங்கள்... முகத்திற்கு முன்னான பாராட்டுகள்... விருந்துகள்... என்வலப்பில் காசுகள்... அத்துடன் இலக்கியப்பணிக்கு பெரும் தொண்டாற்றிக் கொண்டு இருக்கிறார் என்று முடிந்திருக்கும்.

படிப்பகம்

padippakam



இது சைக்கிள் பயணம். போக்குவரத்து நெரிசலில் எந்தக் காரில் இவன் மோதப் போகிறானோ... அல்லது எங்கள் வாகனத்தில் இவன் சைக்கிள் பெடல் கீறி விடுமோ... அல்லது எங்கள் வாகனத்தில் அடிபட்டு விடுவானோ எனத் திகிலுடன் அனைவரும் தம்தம் கார்களையும் லொறிகளையும் வாகனங்களையும் ஓட்டிச் செல்லும் மாலைநேரத்து றவிக் பயணம்.

யார் இந்த நியூட்டன்? ஏன் இந்த றோட்டுக்கு வந்து சைக்கிள் ஓடுகிறான்... மற்றவர்களைப் போல ஒழுங்கைப் பாதைகளில் ஓடிக்கொண்டேயிருக்கலாமே? இவனுக்கு இந்த தைரியத்தைக் கொடுத்தது யார்? இவன் எந்த இயக்கம்?

எனது நதிமூலம், ரிஷிமூலம் அறிய மற்றவர்கள் ஆவல் கொள்ளக் கொள்ள என் எழுத்துகள் மேலும் மேலும் புடம் போடப்படுவதை என்னால் அறியக்கூடியதாய் இருந்தது. அதுவே எனக்கு வாசகர் வட்டத்தைக் கூட்டியது. அதுவே சிலரின் வயிற்றில் புளியை வார்த்தது... எப்போ தங்கள் வாகனத்தில் என் சைக்கிள் முட்டிவிடுமோ என்று...

எனக்கு என்னளவில் ஒரு சிரிப்பு வந்து போகும்... சிவராசா அண்ணை வீட்டில் பீடா போட்டுக் கொண்டிருந்த ஓர் அசல் யாழ்ப்பாணியை இவர்கள் நியூட்டனாக ஐரோப்பியச் சஞ்சிகைகளில் உலவவிட்டிருக்கிறார்கள் என்று.

ஆனால் அப்படியல்ல... ஏதோ ஓர் தார்மீகக் கோபம் எனக்குள் இருந்திருக்க வேண்டும்... அப்பாவிக் கிழவனை அடித்துப் போட்டுப் போன தரகன் தம்பையா மீது... ராசாத்தியை என்னிடம் இருந்து பிரித்த அந்த இருமரபும் துய்ய வந்த வேளாளர் மீது... யாழ்ப்பாண நூலகத்தை

படிப்பகம்

padippakam



எரித்துப் போட்டுப் போன அந்த ஆமிக்காரர் மீது... தமிழர் என்ற காரணத்தால் வெட்டி எரித்த அந்த சிங்களக் காடையர்கள் மீது... அதை ஏவிவிட்ட அரசாங்கத்தின் மீது... அமைதிப் படையாய் வந்து என் அம்மம்மாவைச் சுட்டுப்போட்டுப் போன இந்தியப்படை மீது... கடைசியாக அமைதியாக வாழவந்த இடத்தில் மீண்டும் யாழ்ப்பாணச் சண்டித்தனம் காட்டும் இவர்கள் மீது... எனக்கு கோபம் இருந்திருக்க வேண்டும்... இல்லாவிட்டால் இந்த எழுத்து கள் தீச்சுவாலையாக எனக்குள் இருந்து எழுந்திராது.

பாவம் ராசாத்திக்குத்தான் என் எழுத்துகள் விளங்கு வதில்லை... அவளுக்குத் தேவையானது நான் சுகமாய் இருக்கின்றேன்... மூன்று வேளையும் ஒழுங்காய் சாப்பிடு கின்றேனா என்றதுதான்... நான் அவளுக்காகவும் அவள் பிள்ளைகளுக்கும் அனுப்பும் காசுகூட மூன்றாம் பட்சம்தான்.

அப்பா அம்மா வந்து போனதற்கு அடுத்த மாதம் என்று நினைக்கின்றேன். எனது பாங்கில் இருந்து ராசாத்தியின் வங்கிக்கணக்குக்கு அனுப்பிய காசு மூன்று தரமும் திரும்பி வந்திருந்தது.

எனக்கு திக்கென்றது.

எனது பாங்கை தொடர்பு கொண்டபொழுது, மூன்று தரமும் நான் ராசாத்தியின் வங்கி எண்ணில் ஓர் எண்ணைப் பிழையாக எழுதியிருக்கின்றேன் எனப் பதில் வந்தது. எனக்கு கொஞ்சம் மூச்சு வந்தது.

பிழை என்னில்தான். ஆனாலும் ராசாத்தி ஏன் இதைப் பற்றி எழுதவில்லை என மனம் கிலேசப்பட்டது. கேட்டு எழுதினேன்.

படிப்பகம்

padippakam



"உங்களிடம் இருந்து கடிதம் வராவிட்டால்தான் உங்களுக்கு உடம்புக்கு ஏதும் எனப் பயப்பட்டு கேட்டு எழுதியிருப்பேன். காசு வராத பொழுது, உங்கள் அப்பா அம்மா உங்களுடன் நிற்பதால் அதிக செலவாய் இருக்கும், அதுதான் அனுப்பவில்லை என நினைத்திருந்தேன். மற்றும்படி நீங்கள் முந்தி அனுப்பிய காசிலை இன்னமும் இருக்கு – தவிரவும் இப்ப மூத்தவன் வீட்டை இல்லைத்தானே... அதோடை பயணத்துக்கு முதல் உங்கடை அப்பா சொன்னமாதிரி ஒவ்வொருநாளும் போய் தென்னோலைகளையும் பொறுக்கி, வீட்டைக் கொண்டு வந்து ஊறப்போட்டு விக்கிறனான். நல்ல காசு... செத்தல் தேங்காய்களை மட்டும் உங்கள் வீட்டு பின் மாலுக்குள் குவித்து விட்டிருக்கிறேன்..."

எனக்கு வாசிக்க கஷ்டமாய் இருந்தது... அவளின் கடிதத்தைத் தொடர்ந்தேன்...

"உங்கள் வீட்டைச் சுற்றி வடிவாய்க் கூட்டி... தண்ணியும் தெளிச்சுப் போட்டு... வீட்டுக்குப் பின்னால் உள்ள அரசடி வைரவருக்கு வெள்ளிக்கிழமைகளில் விளக்கு வைத்துப் போட்டு வாறனான்..." எனது மூச்சு எழுந்து தாழ்ந்தது...

அந்த வீட்டில் என்னோடை வாழ்ந்திருக்க வேண்டிய சீவன்... இப்ப அந்த வீட்டிற்கே அடிமைக்குடி போலை... அப்பா ராசாத்தியிடம் அவளுக்கு உதவுகிற நோக்கத்தை மட்டும் வைச்சுக்கொண்டு சொன்னதால் நான் அதைத் தடுக்கவில்லை. ஆனால் இதையே அம்மா ராசாத்தியிடம் சொல்லியிருந்தால் வேண்டாம் என நான் தடுத்திருப்பேன்... ஆனால் அப்பாவின் பார்வையில் எப்பொழுதுமே ஒரு தூரப்பார்வை இருக்கும்.

படிப்பகம்

padippakam



இலங்கைக்குத் திரும்பியிருந்தாலும் நான் சொன்னபடி அப்பாவும் அம்மாவும் கொழும்பிலேயே வாடகை வீடு ஒன்றை எடுத்துத் தங்கியிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் அப்பாக்கு வேண்டிய உதவிகள் கிட்டாமல் போகலாம்... அத்துடன் ஏதாவது அந்தரம் அவசரம் என்றால் நானும் கொழும்புக்குப் போய் அவர்களை இலகுவில் பார்த்து வரலாம்... அம்மா ஒரு நாள் உதவிக்கு யாராவது தோட்டக்காரப் பிள்ளையை வைத்துக்கொள்ளவா எனக் கேட்டெழுதியிருந்தா. வேண்டாம் என உறுதியாகச் சொல்லிவிட்டேன். மேலும் அவர்களுக்கு வயது போய் ஏலாமல் போகும்பொழுது ஏதாவது ஒரு வயோதிக மடத்தில் இருக்கலாம் என்றும்.

கஷ்டமாய்த்தான் இருந்தது அப்படி எழுத.., நானே வைத்துப்பார்க்க வேண்டிய நிலையில் இருந்து அவர் களை அப்படி ஒரு வாழ்விற்குத் தள்ளும் நிர்ப்பந்தங்கள்...

டென்மார்க்கில் நிரந்தரமாக இருக்க அவர்கள் மறுத்துவிட்ட நிலையில்... பனிநாட்டில்... பாசை தெரியாத நாட்டில்... தனியே தமிழ் ரீ.வி.யையும் இரண்டொரு தொலைபேசித் தொடர்புகளையும் வைத்துக்கொண்டு வீட்டுக்கைதி போல் அவர்கள் வாழ்வதில் எனக்கு முழு உடன்பாடு இல்லாத தாலும்தான் அவர்களைப் போகச் சம்மதித்தேன்.

“இஞ்சை இரண்டு பேரும் இருந்தால் கன காசு வருமடா...” மூர்த்திதான் தடுத்தான்.

“தாருக்கடா காசு வேணும்...” வழமைபோல எனது தட்டிக் கழிக்கும் பதிலுக்கும் எனது புன்சிரிப்புக்கும் அர்த்தம் விளங்கியவாறு அவனும் மௌனமானான்.

இப்போ அவர்கள் போய் ஆறு மாதமாகி விட்டது.

படிப்பகம்

padippakam



அவர்களும் மீண்டும் கொழும்பு வாழ்க்கைக்குப் பழகி விட்டார்கள்... என்ன வித்தியாசம்? யாழ்ப்பாணத்தில் முருகையா கோயில்... கொழும்பில் ஜிந்துப்பிட்டி முருகன் கோயில்... அங்கு இடைக்கிடை மானிப்பாய் அந்தோனி யார்... கொழும்பில் கொட்டாஞ்சேனை அந்தோனியார் கோயில்... நம்பிக்கைகள் வாழ்க்கையின் அத்திவாரங் களாகும் பொழுது அது யாழ்ப்பாணமாய் இருந்தாலென்ன, கொழும்பாய் இருந்தாலென்ன?

கொழும்பிலும் அவர்களுக்கு கீரை விற்கும் தோட்டக் கார தமிழ்க்கிழவி... மீன் விற்கும் சிங்களக் கிழவன்... அலுமினியப் பாத்திரம் விற்கும் கொழும்பு பாய்... அப்பா வாசித்த வீரகேசரிப் பேப்பரை இலவசமாய் வேண்டிப் போகவரும் பக்கத்து வீட்டுக்காரர்கள்... அவர்களது ஆறு வயது நிரம்பிய சுட்டிப் பையன் என அன்றாடம் அவர்களுக்கு ஒரு சின்ன வட்டம் உருவாகியிருந்தது.

அவர்கள் அங்கு நிம்மதியாய் இருந்ததால் என்னாலும் எந்த தங்குதடையும் இல்லாது எனது தொடரை எழுத முடிந்தது.

அறுபதாவது தொடர் எழுதிக்கொண்டு இருந்தபொழுது என நினைக்கின்றேன்.

அந்த கேரள வாசகி அமுதா நாயரிடம் இருந்து மீண்டும் ஒரு இ - மெயில் வந்தது.

இந்த முறை அக்கடிதம் ஒரு வாசகர் - நேயருக்கு இடையில் என் தொடர் பற்றிய விமர்சனக் கடிதமாக இல்லாது கொஞ்சம் பிரத்தியோகக் கடிதமாய் இருந்தது.

இதில் தன்னைப்பற்றி ஒரு சின்ன அறிமுகம் வந்திருந்தது.

படிப்பகம்

padippakam



பிறந்தது கேரளா. வளர்ந்தது தமிழ்நாடு. தமிழ் சிறப்புப் பாடம்.

திருமணம் இலண்டனில் ஆறு வருடங்களுக்கு முதல்... திருமணப்பிரிவு மூன்று வருடங்களுக்கு முதல்... குழந்தைகள் இரண்டு. பொழுதுபோக்கு வாசிப்பு - குறிப்பாக ஈழத்து மற்றும் புலம்பெயர்ந்த இலக்கியங்கள். இந்திய எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி, ஜெயமோகன், மனுஷ்யபுத்திரன்.

வாழ்வில் ஏற்பட்ட தனிமையை இலக்கியத்தில் தான் மறப்பதாயும், நேரம் இருக்கும்பொழுது என்னுடன் இலக்கியம் பற்றியும் கட்டுரைகளில் நான் அடிக்கடி குறிப்பிடும் எம் நாட்டு அரசியல் - மக்களின் விருப்பம் அல்லது வெவ்வேறு இயக்கங்கள் பிரகடனப்படுத்தி யிருக்கும் மக்கள் போராட்டங்கள் பற்றியும் கணனியில் கலந்துரையாட விருப்பம் எனவும் தெரிவித்திருந்தாள்.

நான் அந்த மெயிலை வாசித்துவிட்டு எந்தப் பதிலும் போடவில்லை. போடக்கூடாது என்றில்லை. அன்று போட வேண்டும் என்று என் மனதுக்குத் தோன்றவில்லை. மனம் ஏதோ மூட்டமாய் இருந்தது.

பொதுவாய் என் மனம் மூட்டமாய் இருக்கின்ற நாட்களில் ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழ்ந்துவிடுவதுண்டு. அதற்காகவே அந்த நாட்களில் நான் எதுவுமே செய்வ தில்லை.

ராசாத்தியைக் கோயிலடியில் காணாது இரவோடு இரவாகப் போய் தனியே அவளைச் சந்தித்த நாள்... 83 கலவரத்துக்கு முதன்நாள் கம்பஸ் அரசமரத்தடியில் உள்ள புத்த விகாரைக்குப் பக்கத்தில் தனியே நின்றிருந்த

படிப்பகம்

padippakam



நாள்... சிவராசா அண்ணை வீட்டில் வாக்குவாதப்பட்ட நாள்... அப்பாக்கு கால் எடுத்தால்தான் அவரின் உயிரைக் காப்பாற்றலாம் என்று டாக்டர்கள் சொல்லிய நாள்... இந்த நாட்களில் எல்லாம் காலையில் இருந்தே என்னை அறியாமல் என் மனம் மூட்டமாய் இருந்திருக்கிறது... அப்பிடியே இன்றும்...

வீட்டுக்குள் இருந்தால் இன்னமும் மூட்டமாய் இருக்கும் என்பதால் ஜக்கற்றையும் போட்டுக்கொண்டு கழுத்தையும் மௌவுலரால் சுற்றிக்கொண்டு றோட்டுக்கு இறங்கினேன்.

வின்ரர் காலத்து சனிக்கிழமை மாலை என நன்கு தெரிந்தது... தவிரவும் இது மார்கழி மாதம்... டெனிஷ் காரர்கள் குடும்பம் குடும்பமாகக் காடுகளுக்குப் போய் அல்லது தோட்டங்களுக்குப் போய் தாங்களாகவே கிறிஸ்மஸ் மரத்தைத் தறித்து... கைவண்டிகளில் அல்லது கார்களில் இழுத்துக்கொண்டு வருவதைப் பார்க்க அழகாய்த்தான் இருந்தது.

தை மாதம் தொடங்கவே நாங்கள் புது அடுப்பு பிடித்துக் காய வைக்கத் தொடங்குவது போல மார்கழி மாதம் தொடங்கவே கிறிஸ்மஸ் பண்டிகைக்கான ஆயத்தங்கள் தொடங்கிவிடும்.

நாடே அமர்க்களப்படும்... வீட்டுக்கு வெளியே மின்சார விளக்குகளில் அலங்கரிப்பு... சோடனைகள்... வெவ்வேறு வகையான கேக்குகளும் பிஸ்கட்டுகளும் வீட்டினுள் செய்வதை வெளியே நின்று மணக்கக்கூடியதான வாசனைகள்... டெனிஷ்காரர்கள் கிறிஸ்தவ சமயத்தைக் கடைப்பிடிக்கின்றார்களோ... இல்லையோ... அவர்கள்

படிப்பகம்

padippakam



இந்த தினத்தை குடும்பங்களின் ஒன்றுகூடல் நாளாகக் கூடிக் குதூகலிக்கின்றார்கள்.

குடும்பங்கள் இல்லாதவர்கள்தான் பாவங்கள்... டென் மார்க்கில் அதிகமாகத் தனிமையுணர்வால் தற்கொலை செய்து கொள்ளும் மாதமும் இதுதான்.

எங்கள் மூன்றாம் உலகநாடுகளில் பணம்தான் பெரிய பிரச்சனை. இங்கு பணம் இருப்பதுதான் பல பிரச்சனை களுக்குக் காரணம்.

போராட்டம் எங்கும்தான் உண்டு. வடிவங்கள்தான் வித்தியாசம்.

வேலையிடத்தில் இனத்துவேஷம் கொண்ட ஒரு கிழவி கேட்டாள்.

"ஏன் நீங்கள் ஒரு நாட்டுக்குள்... ஓர் இனத்துக்குள்ளே அடிபடுகின்றீர்கள்" என்று...

நான் வழமைபோல சிரித்துவிட்டுச் சொன்னேன்.

"நீங்கள் வீட்டுக்குள் அடிபட்டுவிட்டு பிரிகின்றீர்கள்... நாங்கள் வீட்டுக்கு வெளியே அடிபட்டுக்கொண்டு பிரிய முடியாமல் இருக்கின்றோம்" என்று.

அதன்பின் அந்தக் கிழவி என்னுடன் அரசியல் கதைப்பதே இல்லை.

றோட்டின் கரையால் நடந்து கொண்டே போனேன்.

அடுத்த வாரம் இந்த நேரம் நான் தாய்லாந்தின் ஏதோ ஓர் றோட்டுக்கரையால் நடந்து கொண்டு இருப்பேன்.

படிப்பகம்

padippakam



இந்த வின்ரர் விடுமுறைக்கு தாய்லாந்திற்கும் பின் அங்கிருந்து சிங்கப்பூருக்கும் போய் வரத் திட்டமிட்டிருந் தேன்.

தாய்லாந்தைப்பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருக் கின்றேன். என்னதான் வறுமை... அதன் வடிவமான விபச்சாரக் கொடுமைகள் நிறைந்திருந்தாலும் எந்த ஐரோப்பிய அன்றில் அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கும் அடிபணிந்து தங்கள் சுயங்களை இழந்து விடாமல் அவர்கள் அவர்களாகவே இருக்கின்றார்கள்.

எங்களைப்போல் கொஞ்சம் யாழ்ப்பாணத்தான்... கொஞ்சம் கொழும்பான்... கொஞ்சம் இங்கிலீஷ்காரன்... இப்ப கொஞ்சம் டெனிஷ்காரன் என்று ஆங்காங்கே கொஞ்சம் கொஞ்சம் பச்சை பூசிக்கொண்ட பச்சோந்தி களாக இல்லாமல் அவர்கள் அவர்களாகவே இருக் கின்றார்கள்.

அந்த மக்களை... நாட்டைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இப்போதுதான் நிறைவேற இருக்கிறது.

கிறிஸ்மசுக்கு முதன் நாளே போய் தாய்லாந்தில் இறங்கி விடுவேன். நாலைந்து நாட்களுக்கு நின்றுவிட்டு சிங்கப்பூருக்குப் போவதாக பிளான். புதுவருட தினத்தில் சிங்கப்பூரில் வாண வேடிக்கை மிகப் பிரமாதம் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன்.

இப்பொழுது இன்னமும் இருட்டத் தொடங்கிவிட்டது. குளிர்காற்று முகத்தில்பட நன்றாய்த்தான் இருந்தது.

ஆனால் மனத்தில் இருந்த மூட்டத்தன்மை மட்டும் மறைந்த மாதிரித் தெரியவில்லை.

படிப்பகம்

padippakam



தொடர்ந்து நடந்துகொண்டு எமது ரவுணின் நாற் சந்திக்குக் கிட்டவாக வந்துவிட்டேன்.

வழமைபோல நாலைந்து டெனிஷ்காரர் கையில் பியர் போத்தலை வைத்துக்கொண்டு நிற்கின்றார்கள்... வழமை போல அவர்களுக்கு என் தலையாட்டலைத் தெரிவித்துக் கொண்டு அவர்களைத் தாண்டிச் செல்கின்றேன். அவர் களும் சலூட் அடித்துவிட்டு தம் சம்பாஷணைகளைத் தொடர்ந்து கொண்டு இருந்தார்கள்.

இவர்கள் எங்கள் நாட்டு ஆட்களைப் போல சண்டை பிடிப்பதற்காகக் குடிப்பதில்லை. சந்தோஷத்திற்காக கூடிக் குடிக்கப் புறப்பட்டு கடைசியில் அந்தக் குடியினால் அடிமைப்படுத்தப்பட்டவர்கள். அனேகமானோரை மனைவி மார் விட்டுப் பிரிந்து போய் இருப்பார்கள். கூடிக்குடிக்கும் நண்பர்கள்தான் அவர்களது குடும்பங்கள். சிலவேளை இக்கூட்டத்தில் ஓரிரு பெண்களும் இருப்பார்கள். அவர் களுக்கிடையேயான உறவுகளை எங்கள் கலாச்சாரக் கண்ணுடன் பார்த்து விளங்கிக் கொள்வது மிகக் கஷ்டம்.

அவர்களைத் தாண்டிச் செல்லும்போது தூரத்தில் நின்ற நாலைந்து பேர் கடைகளுக்கு நடுவில் அவசர அவசரமாகப் போய் மறைவது போல இருந்தது. நான் பெரிதாய் பொருட்படுத்தாவிடினும் அந்த சந்தைத் தாண்டும் பொழுது என்னையும் அறியாது என் கண்கள் அந்த சந்தினை நோட்டம் விட்டது. யாரையும் காண வில்லை.

ஒரு நூறு மீற்றர் தூரம் தாண்டிப் போயிருப்பேன் என நினைக்கின்றேன்.

“டே நியூட்டன்” என்று பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது.

படிப்பகம்

padippakam



ஒரு செக்கன் ஆடிப்போனேன்.

ஆனாலும் சுதாரித்துக் கொண்டேன்.

இப்பொழுது நான் திரும்பிப் பார்த்தாலோ அல்லது அவர்களிடம் போனாலோ நான்தான் நியூட்டன் என்பதை நானே அவர்களுக்குக் காட்டிக்கொடுத்து விடுவேன். அதனால் திரும்பிப் பார்க்கவில்லை.

ஆனால் உடம்பெல்லாம் நடுங்கியது.

ஏன் என்னுடன் வந்து திரும்பத் திரும்ப முட்டுகிறார்கள்... ஒவ்வோர் தடவை முட்டும்பொழுதும்... எனக்கு ஒவ்வோர் தடவை வலிக்கும்பொழுதும்... என் எழுத்துகள் புடம் போடப்படுவதை ஏன் இவர்கள் அறிகிறார்கள் இல்லை?

தொடர்ந்து நடந்து போய் ஒரு பிற்ஸா பாருக்குள் நுழைகின்றேன்.

என் படபடப்பை ஆற்ற இங்கு அமைதியாய் இருந்து சாப்பிட்டு விட்டுப் போவோம் எனத் தோன்றியது.

பிற்ஸாவை ஓடர் செய்துவிட்டு முன்னால் அமைதியாக எரிந்து கொண்டிருக்கும் அந்த மெழுகுதிரியைப் பார்த்துக் கொண்டு இருந்தேன்.

மனம் தியானத்தில் இருப்பது போல இருந்தது.

றோட்டால் ஆட்கள் கதைத்துக்கொண்டு போவது தெளி வாய்க் கேட்டது.

"உவன் நியூட்டன் இல்லை... அப்பிடியிருந்திருந்தால் ஆள் திரும்பி கொளுவலுக்கு வந்திருக்கும்..."

படிப்பகம்

padippakam



எனக்கு என்னை நினைக்கப் பெருமையாய் இருந்தது.

எனது கைகளில் இருந்த சாப்பாட்டுக் கத்தியும் முள்ளுக் கரண்டியும் பிற்ஸாவுக்குள் மெதுவாய் இறங்கின.

பிற்ஸாக்கு மேல் கடும் சாயம் கொண்ட ஒரு டெனிஷ் கோப்பியும் வேண்டிக் குடித்துவிட்டு வெளியில் வந்தேன்.

குளிருக்கு சூடான கோப்பி இதமாய் இருந்தாலும் மன மூட்டம் மட்டும் குறையவேயில்லை...

அப்பாக்கு ஏதுமோ... ராசாத்திக்கு ஏதுமோ என மனம் ஆதங்கப்பட்டது.

வீட்டை வந்தபொழுது ஏதாவது மெயில் வந்திக்கின்றதா என கம்பியூட்டரைத் திறந்து பார்த்தேன்.

நான் எழுதும் விடுதலைப் போராட்டம் - பாகம் 2 இன் அடுத்த தொடரை இம்முறை இரண்டு நாட்களுக்கு முன்பாக அனுப்ப முடியுமா என்று கேட்டு எழுதியிருந்தார்கள். நானும் ஆம் என பதிலைப் போட்டபொழுது இன்னமும் நான் பதில் போடாத அமுதா நாயரின் மெயில் என் கண்களில் தட்டுப்பட்டது.

நானும்... ஐரோப்பாவில் என் தனிமையான வாழ்வு... எனக்கு துணையாக இருக்கும் என் எழுத்துகள்... என்னைப் பற்றிய சிறு அறிமுகத்துடன் எனது பதிலை அனுப்பியிருந்தேன்.

அனுப்பிவிட்டு, அவர்கள் கேட்டபடி கம்பியூட்டரிலேயே எனது தொடரை எழுதத் தொடங்கியிருந்தேன்.

சுமார் ஒன்றரைப் பக்கம் எழுதிக்கொண்டு இருக்கும் பொழுது கம்பியூட்டரின் மூலை எனக்கு ஒரு மெயில் வந்திருப்பதாகக் கண் சிமிட்டியது.

படிப்பகம்

padippakam



மெயிலைத் திறந்தபொழுது சற்று முன்பு நான் அமுதா நாயருக்கு அனுப்பிய கடிதத்திற்கு பதில் வந்திருந்தது.

நான் எதிர்பார்க்கவேயில்லை... இப்படி கெதியாக ஒரு பதில் வந்திருக்கின்றது என்று.

தான் எனது பதிலால் மிக மகிழ்ச்சி அடைந்திருப்பதாகவும், அன்றைய சனிக்கிழமை ஒரு அர்த்தம் நிறைந்ததாக இருக்கின்றது எனவும், தன்னுடைய படத்தையும் இணைத்து அனுப்பியிருந்தாள். கூடவே எனது படத்தையும் கேட்டு எழுதியிருந்தாள்... அத்துடன் கட்டாயம் லண்டன் வரும் பொழுது தன்னைச் சந்திக்குமாறும் கேட்டுக் கொண்டாள்.

படத்தில் அழகாய்த்தான் இருந்தாள் அமுதா நாயர்...

அந்தப் பெண் எழுதியிருந்ததுபோல அவள் வாழ்க்கையின் சோகம் அவள் கண்களில் இருந்தது. அதையும் மீறி ஒரு புன்சிரிப்பு முகத்தில் தவழ்ந்தது.

ராசாத்தி போன்று இன்னோர் அழகிய பெண்ணின் வாழ்க்கையிலும் விதி விளையாடியிருக்கிறது என்று நினைக்க பாவமாயிருந்தது.

என்ன வித்தியாசம்... ராசாத்தியின் வாழ்க்கையின் சரிவுக்கு ஏதோ ஒரு விதத்தில் நானும் காரணம் என்ற குற்றவுணர்வு எனக்குள் இருந்துகொண்டு இருப்பது போல அமுதா நாயர் விடயத்தில் இருக்கவில்லை: ஆனாலும் என்னதான் இருபதாம் நூற்றாண்டில் பெண் விடுதலை பேசினாலும் எங்கள் நாடுகளில் பெண்ணடிமைத்தனம் அடுத்த எத்தனை நூற்றாண்டுகள் போனாலும் தீராது எனவே தோன்றியது.

எனது தொடர் இன்னும் ஆறு மாதத்தில் முடியும் வரையிலும் எவருக்கும் என் படத்தையோ என்னையோ காட்டு

படிப்பகம்

padippakam



வதில்லை என்றும்... மேலும்... அடுத்த வருடம் இலக்கியச் சந்திப்புக்கு லண்டன் வரும்பொழுது முடிந்தால் சந்திக் கின்றேன் எனவும் எனது பதிலை அனுப்பிவிட்டு எனது தொடருக்குள் மூழ்கிக் கொண்டேன்.

இந்தவாரத் தொடர் பலரைக் கவரும்... சிலரை வயிறு கலங்க வைக்கும் என நிச்சயமாக நம்பினேன்... எவ்வாறு புலம் பெயர்ந்த தமிழர்கள் அந்தந்த நாட்டு சி.பி.ஐ. ஊழியர்களால் கவனிக்கப்படுகிறார்கள்... இதில் ஆள் கடத்தல்... ஆயுதம் கடத்தல்... போதைவஸ்து கடத்தல்... பணம் கடத்தல்... என்பவற்றைக் கண்காணிக்க தமிழர் களையே கைப்பாவையாக வைத்து அவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்றும்... இலங்கையில் தொடங்கி ஐரோப்பா வரை தொடரும் இயக்கங்களுக்கிடையிலான போட்டிகள்... கால் வருடல்களை எவ்வாறு 'ரோ' தமக்குச் சாதகமாக மாற்றுகிறார்கள் எனவும் தெளிவாய் எழுதிப் போட்டு... மீண்டும் வாசித்துப் பார்க்கும்பொழுது எனக்கு மிகவும் திருப்தியாக இருந்தது.

நேரம் இரவு பதினொரு மணியைத் தாண்டிக்கொண்டு இருக்கும். கண்களும் களைத்துக் கொண்டு வந்தது.

கம்பியூட்டரை நிறுத்திவிட்டு எழுவோம் என நினைத்த போது என் கைகள் என்னையும் அறியாமல் அமுதா நாயரின் மெயிலைத் திறந்து அவள் படத்தை ஒரு முறை பார்த்தேன்.

தப்பு என ராசாத்தி சொன்னது போல இருந்தது... இல்லை, நான்தான் எனக்குச் சொல்லிக்கொண்டேன். தப்பு எனத் தெரிந்தும் என் தனிமை அவள் படத்தைக் கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டிருக்க வைத்தது.

படிப்பகம்

padippakam



பின்பு போய் படுத்துவிட்டேன்...

ஆனால் மன மூட்டம் மட்டும் ஏனோ குறையவில்லை.

நித்திரை வர மறுத்தது... வலிந்து வலிந்து அதனை இழுத்துப் பார்த்து அதனிடம் தோற்றுப் பின் நானாகத் தூங்கியபோது எத்தனை மணியென்று தெரியவில்லை. நிச்சயம் நடுச்சாமத்தைத் தாண்டியிருக்கும்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை. கொஞ்சம் பிந்தியே எழுந்தேன்.

பிந்திப்படுத்ததால் கண் எரிவும் தலையிடியும் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது.

நன்கு தோய்ந்துவிட்டு சுடச்சுட ஒரு கோப்பியையும் ஊற்றிக் கொண்டு போய் சோபாவில் உட்கார்ந்தேன்.

வாசல் மணி அடித்தது.

வாசலில் தபாற்காரன் பெரிய காகிதக் கட்டுடன் நின்றிருந்தான்.

இன்று ஞாயிற்றுக்கிழமை அல்லவா... எப்பிடிக் கடிதம் என எண்ண முதல் கிறிஸ்மஸிற்காக இந்த மார்கழி மாதம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடிதம் விநியோகிக்கப்படுவது ஞாபகத்திற்கு வந்தது.

அப்பாதான் பதிவுத் தபாலில் போட்டிருந்தார்.

கையெழுத்தைப் போட்டு வாங்கிக்கொண்டு மீண்டும் சோபாவுக்கு வந்தேன்.

கடிதம் கனக்கவே செய்தது...

திறந்து பார்த்தேன்...

படிப்பகம்

padippakam



எங்கள் காணி உறுதிகள் எல்லாம் என் பெயருக்கு மாற்றப்பட்டிருந்தன.

அத்துடன் அப்பாவின் கடிதமும் இணைக்கப்பட்டிருந்தது.

"எங்களுக்கு வயசும் போட்டுது... எந்த நேரத்தில் எதுவும் நேரலாம்... தவிரவும் நீயும் இங்கு வந்து வாழப்போவ தில்லை... சிலவேளை நாங்கள் செத்துப் போனால் இறுதிச் சடங்குக்கு மட்டும் நீ அவதி அவதியாய் வந்துவிட்டுப் போய்விடுவாய். அந்த நேரம் இதெல்லாம் யார் பார்த்து உனக்கு செய்கிறது... எனவேதான் நாங்கள் உயிரோடை இருக்கேக்கை எங்கடை சொத்துகள் அனைத்தையும் உன்ரை பேருக்கு மாற்றி இருக்கிறம்... இதிலை உனக்கு உடன்பாடு இராது... ஆனால் பிள்ளைக்குச் செய்ய வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கு. எனவேதான் இந்த ஏற்பாடு..."

எனக்கு கண்கள் கலங்கிக்கொண்டு வந்தன.

"மற்றது தம்பி... நீ டென்மார்க்குக்குப் போய் இரண் டொரு வருசத்துக்குப் பிறகு கொமேசல் பாங்க் மனேஜரைச் சந்திச்சனான். அவன் என்ரை பழைய கூட்டாளி. அவன் தான் சொன்னவன் நீ இப்பவும் செல்லன்ரை பெட்டைக்கு காசு அனுப்பி அதுகளைப் பாக்கிறனீ எண்டு... எனக்கு உன்னைக் கையெடுத்துக் கும்பிட வேணும் போலை கிடந்தது... என்ன ஒரு தெய்வப்பிறவி எண்டு... ஆனால் கொம்மாக்கு நான் எதுவும் சொல்லவில்லை... கட்டாயம் அவா உருக்கொள்ளுவா எண்டு... நீ அந்தப் பெட்டைக்கு அவ்வளவு உதவி செய்யேக்கை நானும் என்ரை பங்குக்கு ஏதும் செய்யக்கூடாதோ எண்டுதான் டென்மார்க்குக்கு வர முதல் தென்னந்தோட்டத்து வளவு வருமானங்களை எடு எண்டு சொல்லிப் போட்டு வந்தனான். பாவம் அந்தப்

படிப்பகம்

padippakam



பெட்டை, வீடு வளவை வடிவாய்ப் பார்த்து வைச்சிருந்த வளாம் எண்டு யாழ்ப்பாணத்தாலை வந்தவை சொல் லிச்சினம்... தென்னோலையை மட்டும் எடுத்துக்கொண்டு செத்தல் தேங்காய்களை வித்து அந்தக் காசுகளைக் கூட அந்த ஆட்களிட்டை குடுத்து விட்டிருந்தது.

என்னடா செய்யுறது... இந்தக்காலம் எண்டால் வேறு... அது அந்தக் காலம்... கொம்மாவை என்னாலை தடுக்க முடியேல்லை... இந்த வகையிலை நானும்தான் குற்ற வாளி... அதுக்காக மகன் எண்டாலும் நான் உன்னட்டை மன்னிப்புக் கேட்கிறனடா...

எனக்கு அதுக்கு மேல் வாசிக்க முடியவில்லை... கண்கள் எல்லாம் முட்டி வந்துவிட்டது... நானே எனக்குள் விம்மினேன்...

கடைசியாக... "இது அத்தனையும் உன் சொத்து... இதனை நீ அந்தப் பெட்டைக்கு குடுத்தாலும் குடுப்பாய் என என் அடிமனம் சொல்லுது... அப்பா என்ற முறையில் உனக்கு சொல்ல வேண்டிய ஒரு கடமை இருக்கிறது... விருப்பம் எண்டால் அம்மா இல்லாத காலத்தில் எல்லாத்தையும் வித்து எங்கள் சொந்தக்காரர் யாருக்கும் தெரியாமல் காசாய் குடு.

காணி பூமியாய் கொடுத்து அதுகளை வாழவைக்க நினைத்தால் இவ்வளவு காலமும் நீயும் அந்தப் பிள்ளை யும் கட்டிக் காத்த புனிதம் களங்கப்பட்டுப் போய்விடும்..."

நான் வாய்விட்டு அப்பா என அழுதுவிட்டேன்... அப்பா வின் காலடியில் போய் விழுந்து அழவேண்டும் போல் இருந்தது... டென்மார்க்கில் என்னுடன் இருந்தபொழுது ஒரு சொல்லுக்கூட ராசாத்தியைப்பற்றி என்னிடம்

படிப்பகம்

padippakam



சொல்லாமல், கதைக்காமல் இருந்துவிட்டு ஊருக்குப் போய் இத்தனை காலத்திற்குப் பின்பு இவ்வளவற்றையும் மனதில் வைத்துச் செய்திருக்கிறாரே என அந்த மலையைப் பார்த்துப் பிரமித்துப் போனேன்...

என்னால் கட்டுப்படுத்த முடியாது என் கண்களால் ஓடிக் கொண்டு இருந்தது...

அப்பா... அப்பா... அப்பா...

என் வாய்... மனது... சுவாசம்... உணர்வுகள்... இரத் தோட்டம்... அனைத்தும் அவரையே உச்சரித்தன.

அப்பா நான் உன் மடியில் படுத்திருக்க வேண்டும்...

கண்களால் கண்ணீர் ஓடிக்கொண்டிருக்க மனம் இளகியது...

ஊற்றி வைத்த கோப்பி ஆறிப்போயிருந்தது... ஆனாலும் சூடாக்கிக் குடிக்க வேண்டும் என மனம் ஏவவில்லை.

அப்படியே அப்பாவின் கடிதத்தை முகத்துக்கடியில் வைத்தபடி சோபாவில் படுத்துக் கொண்டேன்.

இன்னொரு பிறவி என்று ஒன்று இருந்தால் அப்பா நீ எனக்கு மகனாகப் பிறக்க வேண்டும். நான் உன்னைத் தாலாட்டி வளர்க்க வேண்டும்... நினைவுகளுடன் சோபா வில் அயர்ந்து விட்டேன்.

அன்று பின்னேரம் கொழும்புக்கு ரெலிபோன் எடுத்தேன்.

அப்பாதான் எடுத்தார்... உங்கடை கடிதமும் காணி உறுதியளும் கிடைச்சிட்டுது என்று சொல்லத் தொடங்க முதல் என் குரல் விக்கத் தொடங்கி விட்டது.

படிப்பகம்

padippakam



"டே... என்னடா... இது... குழந்தைப் பிள்ளை போலை..."

"இல்லையப்பா... நீங்கள்..." எனக்கு நா தழுதழுத்து வார்த்தைகள் வெளிவரக் கஷ்டப்பட்டது.

"டே விசர் பொடியா... நான் செய்ய வேண்டியதுகளைத் தான் செய்திருக்கிறன்... நாடு இருக்கிற நிலையிலை எல்லாத்தையும் முன்கூட்டித்தான் யோசிக்க வேணும்..."

"ஆனால் நீங்கள் இங்கை வர முதலே... எல்லாம் தெரிந்தும்... எப்பிடியப்பா..."

மீண்டும் எனக்கு குரல் தழுதழுத்தது...

"நல்ல பிள்ளையடா... உந்த சென்ரிமென்ற் யோசினை களை விடு... எவ்வளவு ஒரு வீரனைப் பெத்து வைச்சிருக் கிறன் எண்டு உன்னைப்பற்றிப் பெருமைப்படுகிறனான் தெரியுமோ... இப்ப நீயே கொம்மாட்டை என்னை மாட்டிவிடப் போறாய் போலை கிடக்கு..."

"என்ன என்னைப்பற்றி தேப்பனும் மகனும் கதை நடக்குது'' என்றவாறு அம்மா வந்து அப்பாவிடம் டெனிபோனைப் பிடுங்குவது கேட்கிறது.

"எப்ப ராசா வெளிக்கிடுறாய்..."

"வெள்ளிக்கிழமை ராவுக்கு அம்மா... சனிக்கிழமை பின்னேரத்துக்குப் போய்ச் சேருவன்..."

"கவனமடா... புது இடம்... புதுச் சனங்கள்... பிறகு ஒண்டு சொல்ல மறந்திட்டன்... நீ அங்கையிருந்து சிங்கப்பூருக்குப் போகேக்கை அப்பாக்கு ஒரு நல்ல பட்டு வேட்டி அனுப்பு..."

படிப்பகம்

padippakam



"காலில்லாத நொண்டிக்கு அதுதான் குறை..."

அப்பா பகிடியாகச் சொன்னாலும் எனக்குள் வலித்தது.

"நீங்கள் சொன்னாலும் சொல்லாட்டியும் வேண்டி அனுப்பத்தான் இருக்கிறன்... அல்லது அங்கை வேண்டிக் கொண்டு வந்து தந்திட்டு வரவோ..." சிரித்தபடியே கேட்டன்...

"வந்து போக கன காசோ முடியும்..."

"நீ என்ன பிள்ளையை சாகக்குடுக்க வழியே பண்ணு றாய்... நாடு இருக்கிற நிலையிலை... எவன் நல்லவன்... எவன் கொட்டவன்... எதுவுமே இஞ்சை தெரியுதில்லை யடா... தம்பி நீ எக்காலத்திலையும் இஞ்சாலைப் பக்கம் தலை வைச்சுப் படுக்க யோசியாதை... எங்களுக்கு ஏதும் எண்டாலும் என்றாலும்..."

"அப்பா தயவுசெய்து உந்தக் கதையளை நிற்பாட்டு றியளோ..."

அதற்குப் பிறகு மூவரும் சுமுகமாகக் கதைத்துவிட்டு தொலைபேசியை வைத்தோம்.

ஞாயிறு போய் திங்கள் வந்து வேலைக்கு அழைத்தது.

இன்னும் நான்கு நாட்கள்தான் என் பயணத்துக்கு... அதற்கிடையில் எப்படியும் இரண்டு தடவையாவது நியூட்டனாய் அவதாரமெடுத்து இரண்டு அத்தியாயங்கள் எழுதி முடிக்க வேண்டும்.

படிப்பகம்

padippakam



நான் எழுதும் சஞ்சிகைக்கு இ - மெயில் மூலமாக இப் போது அதிக மிரட்டல்கள் வரத்தொடங்கி விட்டதாம், எனது... சொறி... நியூட்டனின் தொடரை நிறுத்தும்படி.

உண்மைகளின் குரல்கள் எல்லாச் சரித்திர காலங்களிலும் அடக்கப்பட்டுத்தான் இருக்கின்றன. அதன் பிரதிபலன் யாதெனில் அது வெடிக்கும்பொழுது அதன் சத்தங்களும் தொனிகளும் அதிகமாகவே இருக்கும்.

எனவேதான், இந்த மேற்குலக நாடுகளில் அது அடக்கப்படுவதும் இல்லை... அதன் குரல்களும் கூக் குரலாக ஒலிப்பதும் இல்லை.

இதொன்றும் நான் புதிதாகச் சொல்லவில்லையே...

அறியப்படாத மறைபொருளும் இல்லை... அரங்கத் துக்கு வராத அந்தரங்கமும் இல்லை என பைபிளில் சொல்லப்பட்டதுதானே...

ஆனால் நியூட்டன் சொல்லும்பொழுது... யார் அந்த நியூட்டன் என்பதும்... உதைச் சொல்ல இவர் யார் என்பதும் தான் மேலோங்கி நிற்கிறது... 'எப்போ நாம் திருந்தப் போறோம்... துவக்குத்தான் காலத்தின் கட்டாய மாய் அமைந்துவிட்டது... ஒத்துக்கொள்கின்றேன்... என் தேசத்துக்குரிய என்னருமைச் சகோதரரே அதை ஏன் ஐரோப்பாவில் கொண்டு திரிகின்றீர்கள்?'

இந்த வரிகளை எழுதும்பொழுது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. மனம் பாரதிராஜாவை நினைத்துக் கொண்டது.

இணையத் தளத்தில் வெளிவந்த அடுத்த வாரத்தில் இந்தத் தொடரை ஏந்திவரும் சஞ்சிகைகளின் பிரதிகள்

படிப்பகம்

padippakam



நிச்சயம் ஏதோ இரண்டொரு நாடுகளில் கடைகளுக்கு வெளியே போட்டு எரிக்கப்படும்.

கை துரிதமாக எழுதிக்கொண்டேயிருந்தது. அவர்கள் இதனைக் கொளுத்துவார்கள் என்ற எண்ணமே என் எழுத்துகளுக்கு புடம் போட்டது.

வன்முறைக்கு எதிராக எம் மக்கள் வெகுண்டு எழுவார்கள் என்றது சிங்களத் தேசத்துக்கு மட்டுமில்லை... அனைத்துலகத்துக்கும் பொருந்தும்.

என் போன்ற சின்ன சின்னத் தீப்பொறிகள் ஆங்காங்கு உரசப்பட வேண்டும். அதிலிருந்து எழும் சிறு சிறு சுவாலைகள் பெரிய தீப்பந்தமாக வேண்டும். அவை எம்மையே சுட்டெரித்து எம்மையே புடம் போட வேண்டும்... உடம்பெல்லாம் வியர்க்க வியர்க்க தலையில் கீரைக் கூடையைக் காவிக்கொண்டு ஓடி வந்த அந்த ஏழைக் கிழவனின் கன்னத்தில் அறைந்த தரகுக்கார தம்பையன் தொடக்கம்... இருட்டினுள் என் காரின் கண்ணாடியைக் கல்லெறிந்து உடைத்த அனைவரும் புடம் போடப்பட வேண்டும்.

எழுதி விட்டு ஒரு தடவை மூச்சு விட்டேன்.

டெலிபோன் மணி அடித்தது.

மூர்த்திதான் மறுமுனையில்.

“கேள்விப்பட்டனியோ...”

“இல்லை மச்சான் சொல்லு...”

“உன்னோடை சிவராசாண்ணை வீட்டை முண்டின ஆளைத் தூக்கிட்டாங்களாம்...”

படிப்பகம்

padippakam



"ஏன்?"

"காசைக் கையாடி இருக்கிறார்... அதுதான்... பார்த்தியே, உன்னை தேவையில்லாம பிரச்சனைப்படுத்தினதுக்கு கடவுளாய் தண்டனை கொடுத்திட்டார்."

நான் சிரித்துக் கொண்டேன்.

"என்ன சிரிக்கிறாய்..."

"அவன்ரை இடத்துக்கு வேறு ஒருவர் வரத்தானே போறார்..."

இப்போ மூர்த்தி மௌனமானான்.

பாவம் மூர்த்தி...

எனக்கு ஓர் ஆண் சகோதரன் இருந்திருந்தால் இவனைப் போலைத்தான் இருந்திருக்க வேண்டும்.

அவனோடு கதைத்துக்கொண்டு இருந்தால் எனது எழுத்தின் வேகம் குறைந்துவிடும் என்பதால் மீண்டும் நான் கம்பியூட்டருக்குத் திரும்பினேன்.

வார்த்தைகள் விரல் வழியே விழத்தொடங்கின.

விடுதலைப் போராட்டம் - பாகம் 2 இன்னமும் வளர்ந்தது. செவ்வாயும் புதனும் பாடுபட்டு அடுத்த இரு அத்தியாயங் களையும் எழுதி முடித்துவிட்டேன். இனி தாய்லாந்தால் வந்து பார்த்துக்கொள்ளலாம்... இல்லாவிட்டால்... தாய்லாந்தில் இரவில் நேரமிருந்தால் எழுதிக்கொள்ள லாம். கையுடன் எனது லப்டப் கம்பியூட்டரை எடுத்துக் கொண்டு தானே போகப்போறன்.

படிப்பகம்

padippakam



வியாழக்கிழமை பின்னேரம் மீண்டும் கொழும்புக்கு ரெலிபோன் எடுத்தேன்.

"எப்ப ராசா வெளிக்கிடுறாய்..."

"இண்டைக்கு ராவுக்கு அம்மா... நாளைக்கு அங்கேத்தை பின்னேரத்துக்குப் போய்ச் சேருவன்..."

"சரியப்பு கவனமாய்ப் போயிட்டு வா..."

"அப்பா எங்கை..."

"உனக்கு அவற்றைக் குரலைக் கேட்காட்டி தொண்டைக் குழிக்குள்ளாலை தண்ணி இறங்காதே... இந்தாங்கோ உங்கடை செல்லம்" என அம்மா அப்பாவிடம் டெலி போனைக் கொடுத்தா.

"பாஸ்போட்... ரிக்கற் எல்லாம் கவனமாய் எடுத்து வைச்சிட்டியே... காசுகள் கவனம்... வீணாய் காசை செலவளிக்காதை..." என வழமையான அப்பாவாய்க் கதைத்துவிட்டுச் சொன்னார் – "அங்கை கொம்மாக்கு ஆக விலை இல்லாமல் கலியாண வீடுகளுக்குப் போறதுக்கு கூறைச்சேலை மாதிரி ஒரு பட்டுச்சேலை வேண்டி அனுப்பு. சரசுமாமியின்ரை மகளின்ரை கலியாணத்துக்கு தனக்கு நல்ல சீலை இல்லையெண்டு நேற்று முழுக்க நச்சரிப்பு... கொஞ்சம் குமரியள் கட்டுற மாதிரி வேண்டு..." சொல்லிப் போட்டுச் சிரிப்பது கேட்டது.

அப்பா உண்மையில் சிரிப்பது குறைவு. அப்படிச் சிரிக்கும் போது கேட்க ஆசையாய் இருக்கும்.

பயணத்திற்கு இன்னமும் நாலைந்து மணித்தியாலம் இருந்தது.

படிப்பகம்

padippakam



எல்லா சாமான்களையும் சரியாக எடுத்து வைத்திருக் கின்றேனா என ஒருதரம் சரிபார்த்துக் கொண்டேன்.

ஆக, கம்பியூட்டரை மட்டும் தோள் பைக்குள் வைக்க வேண்டியதுதான். மற்றும்படி எல்லாம் சரியாக இருந்தது.

கம்பியூட்டரைத் திறந்து ஏதாவது மெயில்கள் வந்திருக்கா என்று பார்த்தேன்.

இரண்டு மெயில்கள் வந்திருந்தன.

ஒன்று எனது தொடர் வரும் சஞ்சிகை ஆசிரியரிடம் இருந்து பாராட்டு தெரிவித்து வந்திருந்தது... கடைசியாக நான் அனுப்பிய இரண்டு அத்தியாயங்களும் இரண்டு நெருப்பு பந்துகள் என்று.

வாசிக்க சந்தோசமாய் இருந்தது.

இரண்டாவது அமுதா நாயரிடம் இருந்து... எனது ஒரு வாரப் பிரிவு தனக்கு ஒரு யுகமாக இருக்கும் என்று தொடங்கி ஆங்கிலத்தில் ஐ வில் கம் ரூ மிஸ் யூ என முடித்திருந்தாள்.

நான் ஒரு தடவை கண்களை மூடிப் பெருமூச்சு விட்ட படி எந்தப் பதிலும் எழுதாது கம்பியூட்டரை மூடிவிட்டு குளித்து வெளிக்கிடுவதற்காக பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டேன்.

ஏர்போட்டுக்கு கொண்டு சென்று விட மூர்த்தி இன்னமும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவான்.

படிப்பகம்

padippakam



தாய்லாந்திற்கு வந்து சேரும்பொழுது பின்னேரம் 3 மணியாகி விட்டது.

ஏர்போட்டினுள்ளே கிறிஸ்மஸ் சோடனைகள் டென் மார்க்கை மிஞ்சும் அளவுக்கு இருந்தன.

வெளியே வந்து நான் புக் பண்ணி வைத்திருந்த கடற் கரை ஹோட்டலுக்கு டக்ஸியைப் பிடித்துக்கொண்டு பயணப்பட்டேன்.

வீதியோரம் முழுக்க வெவ்வேறு நிறங்களில் போகன் வில்லா மரங்கள் அழகாக இருந்தன... சின்னச் சின்ன வீடுகள்... சின்னச் சின்ன அழகிய பெண்கள்... வீடுகளில் தொங்கும் ஓர்கிட் மலர்கள்... சாம்பிராணிக் குச்சிகள் அடங்கிய சட்டிகள்... வீதியோரம் இளநீர் விற்கும் ஆண்கள்... அவர்களைச் சுற்றி நின்று இளநீர் குடிக்கும் வெள்ளைக்காரர்கள்... அனைத்துமே அழகாகப்பட்டது...

வெக்கையும் இல்லாத... குளிரும் இல்லாத... ஒரு கதகதப்பான காலநிலை... கிட்டத்தட்ட ஒரு தடவை பெங்களூருக்கு நடுவில் காரில் பிரயாணம் செய்த ஞாபகம் போல இருந்தது...

டக்ஸிக்காரன் நன்கு ஆங்கிலத்தில் உரையாடினான்... நான் தாய்லாந்தில் நிற்கும் காலம் வரையில் தானே எனக்கு டக்ஸி ஓட விருப்பப்படுவதாயும் சொன்னான். விருப்பமானால் நோயில்லாத பெண்களிடம் என்னை அழைத்துச் செல்வதாயும் வாக்குறுதியளித்தான்...

நான் சிரித்துக் கொண்டேன்...

“யூ ஆர் சிமலிங் சிமாட்...” என்று கதைத்துக்கொண்டே ஹோட்டல் வாசலில் டக்ஸியை நிறுத்தினான்.

படிப்பகம்

padippakam



ஹோட்டல் ரிசப்ஷனுக்கு தானே என்னுடைய சூட் கேசைக் காவி வந்தான்.

ரிசப்ஷனில் ஒரு இந்தியப் பஞ்சாபிக் குடும்பம் ஏதோ தகராறுபட்டுக்கொண்டு இருந்தார்கள்... அவர்கள் அமெரிக்காவில் இருந்து வந்திருக்கிறார்கள் போலும்... அவர்களின் அழகிய இரண்டு பெண்குழந்தைகள் அழுதுகொண்டு நின்றார்கள்... பத்தும் எட்டும் வயதுப் பிள்ளைகள் போன்று இருந்தார்கள்.

இடைக்கிடை ரிசப்ஷனில் நின்ற ரிசப்ஷனிஸ்ற் பெண் என்னைக் காட்டி ஏதோ கதைத்துக் கொண்டு நின்றாள்...

என்ன விடயம் என்று கேட்டேன்.

அந்த பஞ்சாபிக் குடும்பத்தினர் தாம் இரண்டு அறை கள் பதிவு செய்திருந்ததாகப் பிடிவாதம் பிடித்தார்கள். அதற்கான ரசீதை அமெரிக்காவில் மறந்துபோய் விட்டு விட்டு வந்து விட்டதாயும்... தாம் நாடு திரும்பிய பின்பு அனுப்பி வைப்பதாயும்... விரும்பினால் தற்சமயம் மற்ற அறைக்கு காசு கட்டவும் தயார் எனச் சொன்னார்கள்...

ஹோட்டல் நிர்வாகமோ இங்கிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றரில் உள்ள ஹோட்டல் அறையை மலிவாக ஒழுங்கு செய்து தருவதாகச் சொன்னார்கள்... ஆனால் அந்தக் குடும்பம் கேட்குமாப்போல் இல்லை... அவர் களின் பிள்ளைகள் சுமார் ஒரு வருட காலமாக அந்த ஹோட்டலை அண்டியுள்ள கடற்கரையில் இந்த இரண்டு கிழமையும் வாழும் கற்பனையிலேயே இருந்தார்கள் என தகப்பனும் தாயும் பிள்ளைகளுக்காக வாதிட்டுக் கொண்டிருந்தார்கள்... அவர்களின் பக்கத்து அறை என்னுடையது என்பதால் என்னைக் காட்டி அவர்கள்

படிப்பகம்

padippakam



என்னுடன் சமரசம் செய்ய முடியுமா எனக் கதைத்துக் கொண்டு நின்றார்கள்.

நான் கிட்டவாகப் போனேன்... அந்தப் பஞ்சாபிக் குடும்பம் எனது அறையைத் தங்கள் குடும்பத்துக்குத் தந்து உதவ முடியுமா எனக் கெஞ்சாத குறையாகக் கேட்டார்கள்.

"அங்கிள் பிளீஸ்... அங்கிள் பிளீஸ்..." என அந்தச் சின்னப் பெண்கள் மன்றாடினார்கள்... பாவமாய் இருந்தது... சிரித்துக் கொண்டே ஒத்துக்கொண்டேன்.

ஹோட்டல்காரரும் மிக மனம் மகிழ்ந்து எனக்கு மற்ற ஹோட்டலையும் ஒழுங்கு செய்து தந்து தினசரி அந்த ஹோட்டலிலேயே வந்து உணவு அருந்தவும் வந்து போக இலவச போக்குவரத்து வசதியும் செய்து தந்தார்கள்.

அந்த இரு பிள்ளைகளும், "சுவீற் அங்கிள்" என ஆயிரம் தடவை நன்றி கூறிக்கொண்டே தாய் தகப்பனுக்குப் பின்னால் ஓடினார்கள்.

நான் மீண்டும் எனது டக்ஸியிலேயே மற்ற ஹோட்டலுக்குப் போனேன்.

"யூ ஆர் ஜென்ரில்மேன் சேர்..." இது டக்ஸிக்காரன்.

மற்ற ஹோட்டலுக்கு வந்தபொழுது அவனுக்கு பத்து டொலர்கள் ரிப்ஸாகக் கொடுக்க சந்தோஷமாகப் பெற்றுக் கொண்டான்.

தானே அறைக்கு வந்து எனது சாமான்களை வைத்து விட்டு தனது தொலைபேசி எண்ணையும் தந்துவிட்டுப் போனான்.

கதவைச் சாத்திவிட்டு உடுப்பைக்கூடக் கழற்றாமல் அப்படியே கட்டிலில் விழுந்தேன்.

படிப்பகம்

padippakam



என்ன சுகமாய் இருந்தது..

மணிக்கூட்டைப் பார்க்காமல்... இந்த இடத்தில் இத்தனை மணிக்கு நிற்க வேண்டும் என்ற அவசரம் இல்லாமல்... எதைப்பற்றியும் யோசிக்காமல்... இரண்டு வாரங்கள்... அந்த நினைப்பே என்னைக் கட்டிலில் தாலாட்டியது.

ஓர் அரைமணித்தியாலம் அப்படியே படுத்திருப்பேன் என நினைக்கின்றேன்.

பின் எழும்பி குளித்துவிட்டு உடுப்பையும் மாற்றிக் கொண்டு றோட்டில் இறங்கினேன்.

பின்னேரம் ஏழு மணிதான். ஆனாலும் முற்றாக இருட்டிவிடவில்லை... றோட்டால் எந்த எதிர்பார்ப்பும் இல்லாது ஓர் ஏகாந்திரி மாதிரி நடந்துகொண்டு போக நன்றாய்த்தான் இருந்தது...

மக்கள் அடுத்த நாள் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்கு கடைசிநேரத்தில் கடைகள் முழுக்கவும் நிறைந்திருந்தார் கள்... ஹோட்டலில் எனக்கு சாப்பாடு இருந்த பொழுதிலும் றோட்டோரக் கடையில் வாட்டிய இறைச்சி சாப்பாட்டுக்கு ஓடர் கொடுத்து விட்டு மக்களின் ஆரவாரத்தை ரசித்துக் கொண்டு இருந்தேன்.

மக்களிடம் இருந்து தனித்துப் போய் மெழுகுதிரி வெளிச்சத்தில் முள்ளுக்கரண்டியும் கத்தியும் கொண்டு சாப்பிடுவது ஒரு ரகம் என்றால் மக்களோடு மக்களாய் இருந்து இப்படிச் சாப்பிடுவது இன்னோர் சுகம் - சன்னதி தென்னந்தோப்பில் குருக்கள் மடத்தில் போய்ச் சாப்பிடு வது போல.

படிப்பகம்

padippakam



ராசாத்தியின் நாலு பிள்ளைகளுக்கும் அங்குதான் மொட்டை வழித்ததாம் என்று ஒரு தடவை அவள் எழுதினதாக ஞாபகம்.

எல்லாம் கடவுள்தான் என்றாலும் ஒரே கடவுளுக்கு வெவ்வேறு அடியார் கூட்டத்தை நான் கண்டது யாழ்ப் பாணத்தில்தான். பணக்காரருக்கு நல்லூர்... பஞ்சப் பட்டதுகளுக்கு சந்நிதி... அப்பிடியே பணக்கார வேதக் காரர் புரட்டஸ்டாந்திலையும் கஷ்டப்பட்டதுகள் கத்தோலிக் கத்திலும்...

ஏன் இந்த வியாக்கியானம் என என்னையே நான் கேட்டுக்கொண்டு என் ஆராய்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்...

இப்பொழுது நன்கு இருண்டு விட்டது...

இலங்கையில் பின்னேரம் நாலு மணியிருக்கும்.

பக்கத்தில் இருந்த டெலிபோன் பூத்தில் இருந்து அப்பா அம்மாக்கு டெலிபோன் எடுத்து நான் சுகமாய் வந்து சேர்ந்து விட்டதை சுருக்கமாய் தெரிவித்தேன்.

“சரி... சரி... இனி நெடுக நீ எடுக்க வேண்டாம்... வீண் காசு... இனி சிங்கப்பூருக்கு வந்து எடுத்தால் போதும்...”

இது அப்பாவின் அக்கறை...

அதனையே யோசித்துக்கொண்டு அறைக்குத் திரும்பினேன்...

ஹோட்டல் வாசலில் இருந்த பாரில் இருந்து அனேக பெண்கள் கையசைத்தார்கள்.

படிப்பகம்

padippakam



நானும் பதிலுக்குக் கையசைத்துவிட்டு அறைக்குள் போய் மீண்டும் அப்பாடா எனக் கட்டிலில் விழுந்தேன்.

உடுப்பு கூட மாற்றத் தோன்றவில்லை... நித்திரை தானாகவே என்னைத் தழுவிக் கொண்டது.

நடுச்சாமம் என்று நினைக்கின்றேன்.

எல்லாப்பக்கத்திலும் இருந்து கேட்ட தேவாலய மணி களின் சத்தத்தில் திடுக்கிட்டு எழுந்து கொண்டேன்.

பாலன் பிறப்புக்கு அடிக்கப்பட்ட மணி போலும்.

மணிச்சத்தத்தைத் தொடர்ந்து வானம் எங்கும் வர்ண வர்ண நிறங்களில் வாணங்கள் வந்து வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தன.

யன்னலினூடு எட்டி வெளியில் பார்த்தேன்.

மக்கள் குதூகலமாக றோட்டுகளில் ஆடிப்பாடிக் கொண்டிருந்தார்கள்... சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக கரோலில் சென்று கொண்டிருந்தார்கள்.

பார்த்துக் கொண்டேயிருக்க அழகாய் இருந்தது.

அம்மாவுடன் சின்ன வயதில் முருகையா கோயிலிலும்... அப்பாவுடன் யாழ் முற்றவெளியில் மாட்டுவண்டிச் சவாரியன்றும் பார்த்துப் பரவசப்பட்ட அதே குட்டிப் பையனாய் என்னை நான் உணர்ந்தேன்.

எண்பத்திமூன்று கலவரத்திற்குப் பின்பு நான் அறிந்த வரையில் வடக்கு கிழக்கு மக்கள் பொங்கலுக்குக் கூட வெடிகொளுத்தி மகிழ்ந்திருக்க மாட்டார்கள்... இந்த யுத்தம் எத்தனை எத்தனை சின்னச் சின்ன சந்தோஷங்

படிப்பகம்

padippakam



களை குழிதோண்டிப் புதைத்து விட்டது.

பெருமூச்சுத்தான் மிஞ்சியது.

அடுத்த ஒரு மணித்தியாலம் யன்னலினூடு பார்த்துக் கொண்டிருக்க கண்கள் நித்திரை எரிவைத் தந்தது.

சாடையாக பசிக்குமாப்போல் இருக்க இரண்டொரு பிஸ்கட்டுகளை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு தேநீரையும் குடித்துவிட்டு சாரத்தையும் எடுத்துக் கட்டிக்கொண்டு மீண்டும் கட்டிலில் படுத்துக்கொண்டேன்.

ஒரு மணித்தியாலத்துக்கு முன்பு இருந்தளவு இல்லா விட்டாலும் இப்பொழுதும் இடைக்கிடை வாணங்கள் வந்து வானத்தில் வெடித்துக் கொண்டிருந்தன.

எதையும் யோசியாது... எதையும் எதிர்பாராது... எதையும் கணக்குப் போட்டுப் பார்க்காது... இத்தனை மணிக்கு எழும்ப வேண்டும் என்று மணிக்கூட்டில் அலாரம் வைக்காது படுத்திருக்க அது சுகமாய்த்தான் இருந்தது.

மரணப்படுக்கையில் இருந்த ஒருவன் எழுதிய கவிதை ஏனோ என் நினைவிற்கு வந்தது.

*'நான் அமைதியாகக் கண் மூடவேண்டும்*
*அதன் பின்பு உள்ளே வாருங்கள்*
*வாய் முணுமுணுத்தது*

*நேர்ஸ் அமைதியாக வந்து*
*யன்னலைத் திறந்து விட்டு*
*என் தலைமாட்டில் மெழுகுதிரியை*
*ஏற்றிவிட்டுச் செல்லுகிறாள் போலும்...*

padippakam



*மெல்லிய காற்று மெதுவாக தழுவுகிறது*
*ஆறுதலாய் கண்ணயர்கின்றேன்*

*இன்றுதான் மணிக்கூட்டில்*
*அலாரம் வைக்கவில்லை*

*காற்றில் மெழுகுதிரி*
*அணைந்து விட்டது போலும்*
*திரி கருகி மணக்கிறது*
*அந்த மணம் எனக்குப் பிடித்திருக்கிறது'*

அந்தக் கவிதையின்... கவிஞனின்... ஏகாந்திர உணர்வைச் சுவைத்தபடியே என் கண்கள் அயர்கின்றன.

அம்மம்மாவைப் போலைத் தான் கிடக்கு...

ஓடிவந்து கட்டிக்கொண்டு அழுகின்றா... அம்மம்மா வைத் தொடர்ந்து அம்மா... மாமியாக்கள்... எல்லோ ரும் என்னைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுகின்றார்கள்.

செல்லன் பாடைகட்டிக்கொண்டு நிற்கின்றான்... ராசாத்தி வளவைக் கூட்டிக் கொண்டு நிற்கின்றாள்.

எனக்கு விளங்கவேயில்லை... அம்மம்மா... செல்லன்... எப்பிடி இவர்கள் எல்லாம்... என்னையே நான் கேட்க முதல்...

வீட்டு வாசலில் தென்னோலைப் பந்தல் போட்டிருக்கு... ஐயர் கிரியைக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்... பக்கத்தில் வாங்கு இருக்கு... அப்பாவைக் காண வில்லை...

'நீ வந்து பால் வார்த்தால்தான் உயிர் பிரியும் எண்டு அராலிச்சாத்திரியார் சொன்னவர்... விடியட்டும், உனக்கு

படிப்பகம்

padippakam



கொழும்புக்கு அறிவிப்பம் எண்டு இருந்தம்... நடுச்சாமம் தாண்டி கொஞ்சநேரம் இருக்கும்... ஒழுங்கையடியிலை நாய்கள் எல்லாம் குலைக்கத் தொடங்கீட்டுது... தலையைத் திருப்பி கொம்மாவைப் பார்த்து தம்பி வந்திட்டானோ என்று கேட்டவர்... அவ்வளவுதான்... அப்பிடியே போய்ச் சேர்ந்திட்டார்.'

அம்மம்மா சொல்லி முடிக்க முதல்... 'தான் செத்துப் போனால் நீ துடிச்சுப் போவாய் எண்டு திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே இருந்தவர்... அவனை டென்மார்க்கிலை இருந்து கூப்பிட்டு ஆக்கினைப்படுத்த வேண்டாம்... எண்டு சொல்லிக் கொண்டு இருந்தவர்...'

அம்மா என்ன சொல்லுறா... அம்மம்மா என்ன சொல்லுறா... நான் கொழும்பிலை இருக்கிறனா... டென்மார்க்கிலை இருக்கிறனா... தாய்லாந்தில் நிக்கிறனா...

'நீ போய் குளிச்சிட்டு வேட்டியை உடுத்துக்கொண்டு வா...' மாமா சொல்ல நான் கிணத்தடிப்பக்கம் போறன் போலும்... கதிரையிலை அப்பா நித்திரை கொண்டு கொண்டு இருக்கிறார் போலை கிடக்கு... யாரையும் பக்கத்தில் காணவில்லை... நான் கிணத்திலை தண்ணியை மொண்டு மொண்டு அள்ளி என்ரை தலையிலும் அப்பாவின்ரை தலையிலும் ஊத்துறன்... அப்பா அசையாமல் இருக்கின்றார்...

'கனக்க தண்ணி வாக்காதை... கொப்பாக்கு சன்னி பிடிச்சுப் போடும்...' அம்மம்மா கிணத்துக்கட்டில் இருந்து சொல்லிக் கொண்டு இருக்கின்றா போலும்...

நான் இன்னமும் நாலைஞ்சு வாளி தண்ணியை அள்ளி என்ரை தலையிலை ஊத்திப் போட்டு அப்பாவைத் தூக்கி

படிப்பகம்

padippakam



தோளில் போட்டுக்கொண்டு கிரியைப் பந்தலில் போடப் பட்டிருந்த வாங்கில் கிடத்திவிட்டு ஐயர் தந்த விபூதியை அவருக்கும் எனக்கும் பூசுகிறன்...

தொட்டிலடி சைவம் தேவாரம் பாடத் தொடங்குகிறார்...

நான் அப்பாவைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றன்...

ராசாத்தியின்ரை இயக்கத்துக்குப் போன பொடியன் போலை கிடக்கு... ஓடி வந்து சொல்லுறான்... ஆமி சுட்டுக் கொண்டு வருதாம்... கெதியாய் எல்லாத்தையும் முடிக்கச் சொல்லி...

எல்லாரும் பரபரக்கின்றார்கள்...

எல்லாரும் அவசரப்படுகிறார்கள்...

எல்லாமே கெதிகெதியாய் நடக்கிறது...

என்னையும் அம்மாவையும் வடிவாய் அழவிடவில்லை... அம்மாவின் தாலிக் கொடியையும் கழட்டிப் பெட்டிக்குள் போட நேரம் இருக்கவில்லை.

அப்பாவின் பெட்டியையும் கெதிகெதியாய் மூடி... பாடையில் வைத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாய் போகின்றார்கள்...

பின்னால் நானும் கொள்ளிக் குடத்துடன் ஓட்டமும் நடை யுமாக... கல்லு றோட்டு... காலிலை வேறு குத்துகிறது...

பின்னால் அம்மம்மாவும்... செல்லனும்...

அம்மம்மா நீங்கள் சுடலைக்கு வரக் கூடாது அல்லோ எனச் சொல்லுவம் எனத் திரும்ப, முன்னால் கிடந்த ஒரு பெரிய கல்லில் கால் தடுக்கி கொள்ளிக்குடம் நிலத்தில்

படிப்பகம்

padippakam



விழுந்து உடைய அப்பா என பெரிதாய் குழறியபடி கண்ணை முழித்தேன்...

எனக்கு உடம்பெல்லாம் வியர்த்திருந்தது...

என்ன பயங்கரக் கனவு.

லைற்றைப் போட்டு நேரத்தைப் பார்த்தேன்.

அதிகாலை மூன்றரை மணி.

விடியப்பறக் கனவுகள் பலிக்கும் என்று சொல்லுவார்கள்.

கனவு என்று தெரிந்தபின்பும் நெஞ்சின் படபடப்பு குறையவேயில்லை.

கட்டாயம் விடிந்தபின் கொழும்புக்கு அப்பா அம்மாவுக்கு டெலிபோன் பண்ணவேண்டும்.

எல்லோருக்கும் மரணம் என்ற ஒன்று ஒரு நாள் வரும் தான். அது எனக்கும் தெரியும். ஆனால் அப்பாக்கு ஒரு மரணம் என்பது... என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒன்று...

மூன்றரை மணிக்குப் பிறகு எழுந்திருந்து என்ன செய்வது? புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தேன்... நித்திரை வர மறுத்தது... மாறாக அந்த பயங்கரக் கனவுதான் மீண்டும் மீண்டும் வந்து பயமுறுத்திக் கொண்டிருந்தது.

எனது கம்பியூட்டரைத் திறந்து ஏதாவது மெயில்கள் வந்திருக்கின்றதா எனப் பார்ப்போம் என நினைத்துக் கொண்டு எழுந்து வந்து மேசையடியில் உட்கார்ந்து கொண்டேன்.

அமுதா நாயரின் மெயில் மட்டும் வந்திருந்தது - கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியுடன். அத்துடன் உடம்பைக் கவனமாகப்

படிப்பகம்

padippakam



பார்க்கவும்... அது இது என கொஞ்சம் அதிக அக்கறை யுடனும்... கடிதத்தைத் தொடர்ந்து, தான் அண்மைக் காலமாக இலங்கை அரசியலில் அதிக நாட்டம் கொண்டிருப்பதாகவும்... தான் வாசித்ததிலிருந்து... வெவ்வேறுபட்ட இயக்கங்களின் போக்குகள்... காலத்திற்குக் காலம் அவர்கள் பற்றிய பார்வைகளில் மக்களுக்கு ஏற்படும் மாற்றங்கள்... நம்பிக்கைகள்... ஏமாற்றங்கள்... குறிப்பாக ராஜீவ்காந்தியின் மரணம் இந்திய மக்களின் மனங்களில் ஏற்படுத்தியிருந்த மாற்றங்கள்... பற்றி ஓர் அரசியல் ஆய்வுக் கட்டுரை போல அது அமைந்திருந்தது... இறுதியாக இவைகள் பற்றி என் அபிப்பிராயங்களைக் கேட்டு எழுதியிருந்தாள்.

எனது விடுதலைப் போராட்டம் - 2 இன் ஒரு வாசகி... அதுவும் ஒரு மலையாள வாசகி... என்னமாதிரி எம் இலங்கைப் போராட்டத்தைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறாள் என்பதில் எனக்கு ஆச்சரியமாக இருந்தது... அதே வேளை அவள் என்னை நெருங்கிவரும் அந்த உணர்வை ஏனோ உதறித்தள்ள முடியாமல் இருந்தது... என் தனிமை யான இலக்கிய வாழ்வுக்கு அப்படி ஒரு துணை தேவைப் பட்டதோ என்னவோ...

தாய்லாந்தில் எனது முதல் நாள் அனுபவத்தையும்... என் மீது அக்கறை கொண்டு எழுதிய விடயங்களுக்கு நன்றியும் தெரிவித்துவிட்டு, இலங்கை இயக்கங்கள் மீது எனது பார்வைபற்றிய ஒரு விமர்சனத்தையும் அவளுக்கு அனுப்பி வைத்தேன்.

மெயிலை அனுப்பிய பின்பு, முன்பு அமுதா நாயர் அனுப்பியிருந்த அவளது படத்தை மெயில் பாக்ஸில் இருந்து எடுத்துப் பார்த்தேன்.

படிப்பகம்

padippakam



அதுதான் மலையாளக் கவர்ச்சி போலும்... ஏதோ ஒரு வித்தியாசம் தெரியத்தான் செய்தது... என் உணர்வு களிலும்.

ஏனோ இப்போது அடிக்கடி அவள் படத்தைப் பார்க் கின்றேன் என்று நினைக்கின்றேன்.

கட்டிலில் புரண்டு படுக்க வேண்டும் போல் இருந்தது.

போய்ப் படுத்துக்கொண்டேன்... ராசாத்தி... அமுதா நாயர்... முதல் நாள் பின்னேரம் எனக்குக் கையசைத்த தாய்லாந்துப் பெண்கள்... மாறி மாறி என் கண்கள் முன்னே வர தலையணையை இறுக்கிக் கட்டிக் கொண்டு அயர்ந்து விட்டேன்.

ஒரு மணித்தியாலம் படுத்திருப்பேன் என்று நினைக் கின்றேன்.

வெளியே வீதிகளில் ஆட்டோக்களின், மற்றைய வாகனங்களின் இரைச்சல் ஆரம்பமாகி விட்டது.

இப்போ சாடையாக விடியத் தொடங்கி விட்டது யன்னல் திரையூடு தெரிந்தது.

அதிகாலைப் பரபரப்பு கிழக்காசிய நாடுகள் எல்லா வற்றிலும் ஒன்று போலும்...

அது இலங்கை என்றால் என்ன... இந்தியா என்றால் என்ன... தாய்லாந்து என்றால் என்ன...

இன்று கிறிஸ்மஸ் விடுமுறை என்றாலும் அந்த இரைச்சல் பெரிதாகக் குறைந்தது போல் தெரியவில்லை.

யன்னலினூடு எட்டிப் பார்த்தேன்... கடைவாசலில் சிலர் தேநீர் குடித்துக்கொண்டு இருந்தார்கள்... சிலர் அந்த

படிப்பகம்

padippakam



அதிகாலை வேளையிலும் ஆவிபறக்க சோற்றுத்தட்டுப் பக்கத்தில் இருக்க இரண்டு குச்சிகளால் அதனை சூப்பினுள் போட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்... பாவங்கள்... இப்போதுதான் இரவு வேலை முடிந்து வீட்டுக்குப் போக முதல் சாப்பிடுகிறார்களோ என நினைத்துக் கொண்டேன்.

இன்று முதல்வேளையாக ராசாத்திக்கு கடிதம் எழுதிப் போட வேண்டும்... அடுத்தது நான் தங்கவிருந்த ஹோட்டலுக்குப் போய் அவர்கள் சொன்னபடி அங்கேயே சாப்பிட்டு அந்தக் கடற்கரையிலேயே நன்கு நீச்சலடித்துக் குளித்து வரவேண்டும் என மனத்துக்குள் எண்ணிக் கொண்டேன்.

தொடர்ந்து படுத்துக் கொண்டிருக்காமல் எழுந்து போய் முகத்தைக் கழுவிவிட்டு தேநீரையும் ஊற்றி எடுத்துக் கொண்டு போய் மேசையில் அமர்ந்தேன்.

அன்புடன் ராசாத்திக்கு என்று முதல் வரியை எழுதத் தொடங்கியவுடன் கை தானாகவே மற்றவையை எழுதிக் கொண்டு போனது... ராசாத்திக்கு எழுதும்பொழுது பெரிதாய் எதுவும் யோசித்து எழுதுவதில்லை. முதல் கடிதம் எழுதி அனுப்பியதற்குப் பிறகு இந்தக் கடிதம் எழுதும் வரை எனக்கு நடந்த அனைத்தும் சுயசரிதையாக அமையும். இந்தக் கடிதத்தில் அப்பா எனக்கு காணி பூமி உறுதி களைத் தந்தது... அவளுடனான தொடர்பு பற்றி அப்பா அறிந்து வைத்திருந்தது என எல்லாத்தையுமே என் கை எழுதிக்கொண்டு சென்றது. எனவே செத்தல் தேங்காய் களை பின் மாலுக்குள் குவிக்க வேண்டாம் என்றும், அதையும் ஓலை வித்துக் காசாக்குவது போல விற்றுக் காசாக்கும்படியும் எழுதினேன்...

padippakam



எதையும் ராசாத்திக்கு ஒளிக்காமல் நான் எழுதினாலும் இரண்டு விடயங்களை இதுவரை எழுதவில்லை. ஒன்று... டென்மார்க்கில் உள்ளவர்களுடன் முட்டி மோதிக்கொண்டது... மற்றது அண்மையில் ஏற்பட்ட அமுதா நாயரின் தொடர்பு... முதலாவதை மறைத்ததற்குக் காரணம் அவளின் பேதை மனம் எனக்காக துடிதுடித்துப் போகும் என்பதனால்... இரண்டாவதை மறைத்ததற்குக் காரணம் அதே பேதை மனம் தனக்காகத் துடிக்கும் என்பதால்...

மற்றும்படி ராசாத்திக்கு நான் எழுதும் கடிதங்கள் எப்பொழுதும் கிளீன் சிலேட்டுத்தான்.

கடிதத்தை முடித்துவிட்டுப் பார்த்தபொழுது காலை எட்டு மணியாகி விட்டது.

இலங்கையில் அதிகாலையில் ஐந்து மணியாக இருக்கும். ஏன் இப்போ வீணாக தொலைபேசியில் அழைத்து அவர் களையும் நித்திரையில் குழப்பி எனது கனவுக் கதையை யும் சொல்லி இன்னும் ஏன் குழப்புவான் என்ற எனது எண்ணத்தில் இன்னமும் ஒரு மணித்தியாலம் பொறுத் திருப்போம் அல்லது பீச் ஹோட்டலுக்குப் போய் தொலை பேசியில் கதைப்போம் என நானே எனக்குச் சொல்லிக் கொண்டாலும் அந்தக் கனவின் படபடப்பு இன்னமும் என்னுள் குறையவேயில்லை.

முதன்நாள் தனது டெலிபோன் நம்பரைத் தந்து வைத்திருந்த டக்ஸிக்காரனை வரும்படி தொலைபேசி யில் அழைத்தேன். அவனது மகிழ்ச்சி மறுமுனையில் தெரிந்தது. தான் பத்து நிமிடத்துக்குள் வந்துவிடுவதாகச் சொன்னான்.

படிப்பகம்

padippakam



எத்தனையோ நாட்களுக்குப் பிறகு கடலில் நீந்திக் குளிப்பதற்கான கனவு நிறைவேறப்போகும் மகிழ்ச்சி என்னுள். நீந்துவதற்கேற்ற காற்சட்டையையும் மெல்லிய சேட்டையும் அணிந்துகொண்டு, இரவு ஹோட்டலில் நடக்கவிருக்கும் கிறிஸ்மஸ் விழாவுக்கான நல்ல ஒரு சோடி உடுப்பையும், ராசாத்திக்கு எழுதி வைத்த கடிதத்தையும் கையில் எடுத்துக் கொண்டேன்.

இந்த கடல்குளிப்பு குளித்து எத்தனையோ நாளாகி விட்டது.

யார் யாரோ ஊரில் செத்தபோது... அவர்களின் உறவினர் கள் கீரிமலைக்கு அந்தியேட்டி செய்யப் போகும்போது... சின்ன வயதில் அப்பாவுடன் போய் அங்கு நீந்திக் குளித்தது... பின் கொழும்புக்கு வந்தபின்பு அப்பா வுடனும் நண்பர்களுடனும் வெள்ளவத்தை பீச்சில் போய் குளித்தது... பின் டென்மார்க்குக்குப் போனபின்பு வேலை செய்யும் ஆட்களுடன் கடற்கரையில் இறைச்சியும் வாட்டிச் சாப்பிட்டு கடலில் குளித்தும் வருவதாக ஒழுங்கு செய்து... இறைச்சிவாட்டத் தொடங்க... மழை கொட்ட... எல்லாத்தையும் சுருட்டிக் கட்டிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பியது...

ஒரு நனவோடை போல வந்து போனது.

கதவு தட்டப்பட்டது.

போய்த் திறந்தேன்.

பத்து நிமிடத்தில் வருகின்றேன் என்றவன் ஐந்து நிமிடத்தில் வந்து விட்டான்.

“ஹப்பி கிறிஸ்மஸ்” என தன் வாழ்த்தைத் தெரிவித்துக் கொண்டான்.

படிப்பகம்

padippakam



நானும் அவனுக்கு பதிலுக்கு "ஹப்பி கிறிஸ்மஸ்" சொல்லிக் கொண்டு கையில் கடிதத்தை எடுத்துக் கொண்டு கீழே இறங்கினேன்.

டக்ஸியில் ஏறும்பொழுது ஏதாவது ஒரு கடையில் முத்திரை வேண்ட வேண்டும் எனக் குறிப்பிட்டேன்.

"கடிதம் உங்கள் மனைவிக்கா?" எனக் கேட்டான்.

"இல்லை" எனத் தலையாட்டினேன்.

"அப்போ... உங்கள் லவ்வருக்கா..."

எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"யூ ஆர் ஓல்வேஸ் ஸிமல்லிங்... யூ சுட் என்ஜோய் அவ தாய்லாண்ட் கேள்ஸ் பிவோ யூ லீவ் தாய்லாண்ட்..." டக்ஸிக்காரன் சொல்லிக் கொண்டே வந்தான்.

டக்ஸி கடற்கரை ஹோட்டலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

கிறிஸ்மஸ் களை இன்னும் அதிகமாக றோட்டில் தெரிந்தது.

டக்ஸிக்குள் நிலவிய மௌனம் அவனுக்குப் பிடிக்க வில்லை போலும். தான் நடுச்சாமப்பூஜைக்கு சேர்ச்சுக்குப் போனது... பிள்ளைகளுக்கு பரிசுகள் வேண்டிக் கொடுத்தது... நான் டென்மார்க்கில் இருந்து வந்ததை பிள்ளைகளுக்குச் சொன்னது... எனக் கதை களாய் சொல்லிக் கொண்டு இருந்தான்...

கடற்கரை பீச் ஹோட்டலை அடைந்தபொழுது நேரத்தைப் பார்த்தேன். பகல் பதினொருமணி. இலங்கையில் காலை

படிப்பகம்

padippakam



ஏழு மணியாயிருக்கும். அங்கிருந்து கொழும்புக்கு டெலிபோன் பண்ணிவிட்டு பின் குளிக்கலாம் என எண்ணிக் கொண்டேன்.

நேரே கடற்கரைக்கு டக்ஸியைச் செலுத்தாது ஹோட்டல் வாசலில் நிறுத்தும்படி கேட்டுக்கொண்டேன்.

ஹோட்டலை நெருங்கியபொழுது, நான் சிங்கப் பூருக்குப் போக முன் கட்டாயம் தனது வீட்டுக்குச் சாப்பிட வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான்.

டென்மார்க்கில் எங்குமே காணமுடியாத... இலங்கையில் இருக்கும் வரை எங்கள் வீட்டுடன் ஒட்டியிருந்த அந்த ஆசியக் கலாச்சாரம்... அவனில் இருந்தது எனக்கு நன்கு பிடித்திருந்தது.

டக்ஸியை விட்டு இறங்கியபொழுது நான் பேர்சை எடுக்கப் போனேன்... தான் இரவு என்னைக் கூட்டிச் செல்ல வரும் பொழுது காசை வேண்டிக் கொள்வதாகச் சொன்னான்... தனது அடுத்த சவாரிக்கு என்னைத் தயார் செய்கின்றான் என நன்கு புரிந்தது.

யாரோ ஒரு டக்ஸிக்காரனுக்குக் கொடுக்கும் காசுதானே... அதனை அவனே என்னிடம் பெறுகின்றான்...

கிறிஸ்மஸ் பார்ட்டி ஆதலால் சுமார் இரவு இரண்டு மணிக்கு வந்து கூட்டிச் செல்லும்படி சொல்லிவிட்டு எனது துவாய் மற்றைய சிறிய சாமான்கள் அடங்கிய தோள்பையை எடுத்துக்கொண்டு ஹோட்டலுக்குள் நுழைந்தேன்.

நேற்று நின்ற அதே ரிசப்ஷனிஸ்ட் பெண்தான்.

படிப்பகம்

padippakam



என்னை அடையாளம் கண்டு கொண்டாள்.

முதன்நாள் நான் விட்டுக் கொடுத்துச் செய்த உதவிக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொண்டாள்.

நான் இலங்கைக்கு ஒரு தொலைபேசி எடுக்க வேண்டும் என்று கேட்டபொழுது அவளே நம்பரை டயல் செய்து ரிசீவரை என் கையில் தந்தாள்.

அப்பா தான் எடுத்தார்.

மனம் அப்பாடா என்று இருந்தது.

“ஏன் தம்பி டெலிபோனை எடுத்து வீணாய் காசை செலவழிக்கிறாய்...”

“இல்லையப்பா... சும்மாதான். எப்பிடிச் சுகமாய் இருக்கிறியளோ...”

“எனக்கென்னடா... நீ சிங்கப்பூருக்கு வந்து எடுத்தால் காணும் எண்டுதானே சொன்னனான்... உங்கை எத்தினை மணி...”

“இப்ப பதினொண்டு ஆகுது. கடற்கரையில் குளிக்கப் போறன்...”

“சரி... சரி... வீணாய் கதைச்சு காசைச் செலவளிக் காதை... இஞ்சை அம்மாவோடை இரண்டு வரி கதைச்சுப் போட்டு வை...”

“என்ன ராசா டெலிபோன் எடுத்தனி...”

“ஒண்டுமில்லை சும்மாதான் எடுத்தனான்...”

“அப்பா சொல்லிக் கொண்டு இருந்தவர் நீ சிங்கப்பூருக்குப் போன பிறகுதான் டெலிபோன் எடுப்பாய் எண்டு...”

படிப்பகம்

padippakam



"ஓம் அப்பிடித்தான் சொன்னனான்..." என்று சொல்லி விட்டு சாடையாக கனவு கண்ட விடயத்தை அம்மா விடம் உடைத்தேன்.

அம்மா பெரிதாகச் சிரித்தா...

"அவரோ... அப்பா சாகிறதோ... 58 கலவரத்துக்கையும் 83 கலவரத்துக்கையும் சாகாத வல்ல கட்டை அவர்... அவர் 90 வயது மட்டும் இருப்பர் எண்டு சிவதம்புச் சாத்திரியார் சொன்னவர்... காலமை எழும்பி, தாரோ டென்மார்க்குக்கு வருகினமாம், அவையிட்டை உனக்கு விருப்பமான புழுக்கொடியல் குடுத்து விடவேணும் எண்டு என்னோடை கதைச்சுக்கொண்டு இருந்தவர்... அவருக்கு எப்பவும் உன்ரை நினைப்புத்தாண்டா... உனக்கேதும் வருத்தம் துன்பம் வந்தால்தான் அந்தக் கட்டை ஆடிப்போகும்..."

"நான் சாகக் கனவு கண்டவனோ" என்றவாறு அம்மாவிடம் இருந்து அப்பா ரிசீவரை வேண்டினார்.

"டே தம்பி... விசர்ப் பொடியா... நீ நல்லாய் இருக்கும் வரை எனக்கு ஒண்டும் ஆகாதடா... ஒண்டுக்கும் பயப்பிடாதை... நீ நல்லாய் இருக்கிறதை நான் பார்க்க ஆசைப்பட்டன்... அதை டென்மார்க்குக்கு வந்து பார்த்திட்டனடா... எனக்கு நீ என்ன என்ன எல்லாம் செய்ய வேணுமோ அதையெல்லாம் சிறப்பாய் செய்திட்டாய்... மேலாக இண்டைக்கு வரை எவரும் உன்னைப்பற்றி எந்த இழிச்சொல்லும் சொல் லாமல் எங்களை கௌரவமாய் வாழவைச்சிட்டாய்... இதுக்குப் பிறகு என்னடா தம்பி கவலை... புத்தி சொல்லி வளர்க்கிற பிள்ளையில்லையடா நீ... அதுதான் இப்பவும் சொல்லுறன். ஏதாவது எனக்குச் சரி... கொம்மாக்குச் சரி

படிப்பகம்

padippakam



நடந்தால் நாட்டுக்கு வரவேணும் எண்டு நினைக்காதை... தாரோ எடுத்துச் சுட்டுப் போட்டுப் போவாங்கள்..."

"அப்பா உந்தக் கதைகளை நிப்பாட்டுங்கோ..." எனக்கு குரல் அடைத்து தொண்டையைக் கட்டியது...

"ஏன் இப்ப அவனைக் கவலைப்படுத்திறியள்..." அம்மா பின்னால் நின்று ஏசுவது கேட்கிறது...

"நான் எங்கை அவனைக் கவலைப்படுத்தினனான். என்ரை பிள்ளைக்கு சொல்ல வேண்டியதுகளை காலகாலத் திலை சொல்ல வேண்டியது என்ரை கடமை. தம்பி நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை... வடிவாய் சந்தோசமாய் உன்ரை லீவை உங்கை கொண்டாடு... இனி சிங்கப்பூருக்கு வந்து டெலிபோன் எடுத்தால் போதும்."

அப்பாவோடு கதைத்தது... அழுதது... பின் மீண்டும் கதைத்தது... எல்லாப் பாரமும் இறங்கின மாதிரிக் கிடந்தது.

கதைத்த களைதீர ஹோட்டல் ரிசப்ஷனுக்குப் பக்கத்தில் இருந்த பாரில் ஆற அமர இருந்து ஒரு பெரிய கிளாஸ் முட்ட ஒரேஞ்ஜ் ஜூஸ் வேண்டி அருந்தத் தொடங்கினேன்.

கனவால் குழம்பிய நித்திரைக் களைப்புக்கும் மனதில் குடி கொண்டிருந்த இறுக்கத்திற்கும் அது பெரிதும் உதவியது.

குடித்துக் கொண்டிருக்கும்போது அதை சேர்வ் செய்த பெண் என்னருகே வந்து மெதுவாய்க் கேட்டாள், "டு யூ வோன்ற் தாய் மசாஜ்?"

தாய் மசாஜுக்கு இன்னும் எத்தனையோ அர்த்தம் என சொல்லக் கேள்விப்பட்டிருந்தேன்.

"நொற் நவ்..."

படிப்பகம்

padippakam



"பிளீஸ் சே... இவ் யூ நீட்... வீ ஹாவ் மெனி கோர்ஸ் வித் அவுட் எனி சிக்னஸ்..."

"ஜெஸ் ஒவ் கோர்ஸ்" எனத் தலையாட்டிவிட்டு எழுந்து கடற்கரைப்பக்கம் போனேன்.

கடற்கரை முழுக்க வெள்ளைக்காரர்களால் நிறைந் திருந்தது. அதிகமானோர், வெள்ளைக்கார ஆண்கள் தாய்லாந்துப் பெண்களுடன்... இன்னும் பலர் தம்தம் குடும்பங்களுடன்... வெள்ளைக்காரப் பெண்கள் ஆசியாவை அசிங்கப்படுத்தாமல் அளவான உடுப்பே அணிந்திருந்தது மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"ஹாய் அங்கிள்..." என்று பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது.

முதன்நாள் சந்தித்த அந்த பஞ்சாபிப் பிள்ளைகள் இரண்டும் ஈர உடுப்புடன் தாய் தகப்பனுடன் இருந்து தர்ப்பூசினிப் பழம் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

நான் கிட்டவாகப் போய், "ஹோட்டலில் நன்றாகத் தூங்கினீர்களா?" என்று கேட்டேன்.

"அவர்கள் எங்கே தூங்கினாங்கள்... காலை எப்போது விடியும் எனப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு காலை எட்டு மணிக்கே இங்கு ஓடி வந்துவிட்டார்கள்" எனச் சிரித்தபடியே தகப்பன் சொல்ல தாயும் ஆமோதித்தார்.

"யூ ஆர் கிறேட் அங்கிள்... நீங்கள் உங்கள் அறையை விட்டுத் தராது இருந்தால் எங்கள் லீவே வீணடிக்கப் பட்டிருக்கும்" ஆங்கிலத்தில் என்னுடன் உரையாடத் தொடங்கி நானும் கதைத்துக் கொண்டிருக்க, நல்ல பிரண்ட்ஸ் ஆனது போல ஆகிவிட்டோம்.

படிப்பகம்

padippakam



சிறிது நேரத்துக்குப் பின் தாங்கள் மீண்டும் ஒரு தடவை கடலுக்குள் இறங்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு கடலை நோக்கி ஓடினார்கள்.

தாயும் தகப்பனும் பின்னால் செல்ல நான் நேரத்தைப் பார்த்தேன்.

பகல் ஒரு மணியாகி விட்டது...

நானும் உடுப்பை மாற்றிக்கொண்டு கடலினுள் குதித்தேன்.

எனது வயது... பட்டப்படிப்பு... பதவி... அந்தஸ்து... காதல்... அது தந்த தோல்வி... அத்தனையும் மறந்து... மாரிக்கால வயல் கிணற்றில் துள்ளி நீந்தும் மீனாக அந்தக் கடலில் நீச்சலடித்தேன்... சூரியனின் ஒளி நெற்றியில் பட கண்ணை மூடியபடி கடல் மீது படுத்துக்கொண்டு... பின் குப்புறப் படுத்துக்கொண்டு... பின் முடிந்தளவு மூச்சைப் பிடித்தபடி தண்ணீருக்குள் மூழ்கியபடி... இந்தக் கடலின் அலைகளை... அவை தந்த தாலாட்டை... அனுபவித்துக் கொண்டிருந்தேன்...

காலை... மதியம்... மாலை... இரவு என மணிக்கூட்டைப் பார்த்துப் பார்த்து வாழும் அந்த உலகத்தின் எல்லாத் தொடர்புகளையும் தூக்கி எறிந்துவிட்டு இப்படி ஆனந்த மாக... மனதும் உடம்பும் ஓய்வாக... நிச்சயம் எல்லோருக் கும் இது தேவை.

ஒவ்வொரு வருடமும் இது எனக்குத் தேவை என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டு நீந்திக் கொண்டு இருந்தேன்.

ஒரு தரம் திரும்பிப் பார்த்தபொழுது அந்தப் பஞ்சாபிப் பெண் பிள்ளைகள்... தகப்பன்... தாய்... அனைவரும்

படிப்பகம்

padippakam



ஒருவரை ஒருவர் நீந்திப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்...

“கமோன் அங்கிள்... கம் அண்ட் ஜோயின்ட் வித் அஸ்...”

அவர்கள் அழைக்க அவர்களுடன் நானும் இணைந்து கொண்டேன்...

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எவராய் இருப்பினும் மதராசி என அழைக்கும் ஒரு இனம் அந்த நாட்டு எல்லைகளை விட்டுத் தாண்டியபொழுது இப்படி அன்னியோன்னிய மாகப் பழகியது எனக்குச் சந்தோசமாய் இருந்தது.

நீந்திக் கொண்டிருக்க பசிக்குமாப் போல் இருந்தது.

“நீங்கள் சாப்பிடவில்லையா...”

“ஜெஸ் ஒவ் கோர்ஸ்...”

நானும் தண்ணியில் இருந்து வெளியேற அவர்களும் என்னுடன் சேர்ந்து வெளியே வந்தார்கள்.

மிதப்பான வெயிலும் அளவாக வீசும் காற்றும் தானாகவே உடம்பைக் காய வைத்தது. துவாய்க்கு பெரிய வேலை இருக்கவில்லை.

ஐந்துபேரும் உடுப்பை மாற்றிக்கொண்டு ஹோட்டலின் சாப்பாட்டு மண்டபத்துக்குப் போனோம்.

அங்கே அன்றிரவு நடைபெறவிருந்த கிறிஸ்மஸ் விழாவுக்கு பெரிதாய் ஆயத்தப்படுத்திக் கொண்டிருந் தார்கள்.

“வில் யூ ஒல்சோ பார்ட்டிசிப்பேற் அங்கிள்...”

படிப்பகம்

padippakam



“ஜெஸ்” எனத் தலையாட்டினேன்.

“நைஸ்... வி கான் டான்ஸ் ருகெதர்... டாடி இஸ் போறிங்...”

அந்தச் சிறுமிகள் தகப்பனைக் கிண்டல் செய்தபடி என்னுடன் நன்கு ஒட்டிக் கொண்டார்கள்.

அனைவரும் வெவ்வேறான தாய்லாந்து உணவுகளை வரவழைத்துச் சாப்பிட்டுக் கொண்டு நெடுநேரம் கதைத்துக் கொண்டு இருந்தோம்.

எனது, அவர்கள் குடும்பக் கதைகளைக் கதைத்தபடி சுமார் இரண்டு மணித்தியாலம் சாப்பாட்டு மேசையிலேயே இருந்தோம்.

ஆனால் பொறுமையாகக் கதைத்துக்கொண்டிருப்பது சிறுமிகளுக்குப் பிடிக்கவில்லை. தாம் மீண்டும் ஒரு தடவை குளிக்க வேண்டும் என அடம் பிடித்தார்கள்.

“எனக்கு சாப்பிட்ட களைக்கு சின்ன குட்டித்தூக்கம் போட்டால் நன்றாய் இருக்கும் போல் இருக்கு” என நான் பின்வாங்க, அவர்கள் மீண்டும் கடலில் குளிக்கப் போனார்கள்.

நான் கடற்கரை மட்டும் அவர்களுடன் சென்று ஒரு தென்னை மரத்தடியில் சாய்ந்துகொண்டு மெல்லிய காற்றின் சுகத்தை உள்வாங்கிக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு இருந்தேன்.

சின்ன நித்திரை என்னைப் பின்நோக்கி இழுத்துக் கொண்டு போனது.

எவ்வளவு நேரம் தூங்கியிருப்பேன் என்று தெரியாது.

படிப்பகம்

padippakam



இப்போ காற்றுக் குளிருமாப் போல் இருந்தது.

கண்ணைத் திறந்து பார்த்தேன்.

சூரியன் தாழ்ந்து கொண்டு போவது தெரிந்தது.

கடற்கரையிலும் சனங்களின் எண்ணிக்கை குறைந்து இருந்தது.

பஞ்சாபிக் குடும்பத்தினரையும் காணவில்லை.

நேரத்தைப் பார்த்தேன்.

மாலை 5.30.

இரவு எட்டுமணிக்குத்தான் கிறிஸ்மஸ் விழா ஆரம்பம ாகும்.

ஹோட்டலில் அடுத்த இரண்டு மணித்தியாலத்துக்கு கம்பியூட்டரை வாடகைக்கு எடுத்து அதில் தமிழ் புதினங்களையும் என் மெயில்களையும் பார்க்கலாம் எனத் தோன்றியது. எழுந்து மீண்டும் ஹோட்டலுக்குப் போய் இரண்டு மணித்தியாலத்துக்கு ஒரு கம்பியூட்டரை வாடகைக்கு எடுத்துக் கொண்டேன்.

கடைசியாக நான் எழுதி அனுப்பிய விடுதலைப் போராட்டம் - பாகம் 2ஐ எவ்வாறு பிரசுரித்திருக்கிறார்கள் என்ற ஆர்வத்தில் அதற்குரிய இணையத்தளப்பக்கத்தைத் திறந்தேன்.

அந்த இணையத்தளப்பக்கம் வேலை செய்யவில்லை.

எனக்கு எங்கேயோ இடித்தது.

உடனே எனது மெயில் பொக்ஸைத் திறந்து பார்த்தேன்.

படிப்பகம்

padippakam



விடுதலைப் போராட்டம் - பாகம் 2ஐப் பிரசுரிக்கும் இணையத்தள ஆசிரியர் எழுதியிருந்தார். அந்தப் பக்கத்தை யாரோ விசமிகள் ஹாக் பண்ணியிருக்கிறார்கள் என்றும்... இனி கிறிஸ்மஸ் முடியத்தான் அந்த இணையத்தளப்பக்கம் மீண்டும் இயங்கத் தொடங்கும் என்றும்... இப்படியான துரோகச் செயல்களால் தான் பத்திரிகையை நிற்பாட்டப் போவதில்லை என்றும், என்னையும் தொடர்ந்து மனம் தளராமல் எழுதும்படியும்... மக்கள்... மக்களால்... மக்களுக்காக... என்ற எல்லாக் கோஷங்களிலும் தனக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது என்றும்... அது இலங்கையில் ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சி என்றாலும் சரி... எதிர்க்கட்சிகள் என்றாலும் சரி... அல்லது அவர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் எந்த ஆயுதக்குழுவாயினும் சரி... மக்கள் இரண்டாம் பட்சம்தான் எனத் தெரிவித்திருந்தார்.

செல்லும் வழி இருட்டு என்று யாரோ எழுதிய நாவலின் பெயர் மட்டும் என் கண் முன்னே தோன்றி மறைந்தது.

அடுத்த மெயிலைத் திறந்தேன் - அமுதா நாயர் போட்டிருந்தாள். கிறிஸ்மஸ் வாழ்த்துகளுடன் தனது ஒரு புதுப்படத்தையும் இணைத்திருந்தாள். மெல்லிய சிவந்த சேலையில் அழகாய்த்தான் இருந்தாள். முதலே தனக்கு நான் தாய்லாந்து போவது தெரிந்திருந்தால் தனது பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு என்னுடன் வந்திருப்பாள் என்று தெரிவித்திருந்தாள்... உண்மையில் அமுதா நாயர் என்னை நோக்கி நெருங்கி வருவது நன்கு தெரிந்தது...

எனக்குத்தான்... என்னையே புரியாமல் இருந்தது... இத்தனை வருடமும் தனிமையே தவம் போலவும் ராசாத்தியின் எண்ணங்களுடனும் இருந்த எனக்கு அப்பா

படிப்பகம்

padippakam



அம்மா டென்மார்க்கிற்கு வந்து போகும் வரை எதுவுமே தேவைப்படவில்லை. ஆனால் அவர்கள் போன பின்பு தான் வீட்டை வரும் போதெல்லாம் யாராவது வீட்டில் நின்றால்... சமைத்து வைத்திருந்தால்... சேர்ந்து சாப்பிட்டு சந்தோஷமாய் இருந்திருக்கலாம் போல் இருக்கத் தொடங்கியது... அப்போதுதான் அமுதா நாயரின் மெயிலும் படமும் வர நானும் அடிக்கடி மெயில் போடத் தொடங்கியிருந்தேன்.

இந்த முறை வந்த மெயிலில் தனது தாய்லாந்துக்கு வரும் விருப்பத்தைத் தவிரவும் நான் தொடர் எழுதும் இணையத் தளம் ஹாக் பண்ணப்பட்டது மன்னிக்க முடியாத குற்றம் எனவும், 1981ல் ஈழநாடு அலுவலகத்தை சிங்கள இராணுவம் எரித்ததற்கும்... இப்பொழுது இணையத்தளப் பத்திரிகையை அழிக்க முயன்றமைக்கும் என்ன வித்தியாசம் எனக் கடுமையாக விமர்சித்திருந்தாள்.

இந்த சந்தர்ப்பத்திற்குப் பின்பு தானும் அதே இணையத் தளத்தில் வெவ்வேறு காலகட்டங்களில் இலங்கையிலும் இந்தியாவிலும் தோன்றிய இயக்கங்கள்... அவற்றின் தோற்றம் - வளர்ச்சி - மறைவு - மீண்டும் ஐரோப்பாவிலும் கனடாவிலும் அவுஸ்திரேலியாவிலும் அவற்றின் தலையெடுப்புகள் பற்றி ஆய்வுக் கட்டுரைகள் எழுத இருப்பதாகவும்... அதற்கு என் முழு ஒத்துழைப்பும் தேவையென கேட்டெழுதியிருந்தாள்.

நானும் என்னால் முடிந்தளவு உண்மையான தகவல்களைத் தந்து உதவுவேன் எனப் பதிலை எழுதி அனுப்பும் சமயத்தில் என்னையும் அறியாமல் என் விரல்கள் ‘இந்த முறை நீங்கள் அனுப்பிய படங்களில் மிக அழகாக இருக்கின்றீர்கள்’ என எழுதின.

படிப்பகம்

padippakam



தவறுகிறேனா என என் மனத்திடம் நானே கேட்டுக் கொண்டேன்.

ராசாத்தி மங்கலாக மனத்தின் ஓரத்தில் எங்கள் வீட்டைக் கூட்டிக் கொண்டு நின்றாள்.

எனக்கு ஏனோ சாடையாகத் தலையிடித்தது.

நேரத்தைப் பார்த்தேன்.

இரவு ஏழரை.

இன்னமும் அரை மணித்தியாலத்தில் கிறிஸ்மஸ் பார்ட்டி ஆரம்பமாகி விடும்.

உடுப்பு மாற்றுவதற்காய் அமைத்திருந்த பிரத்தியேக அறையில் போய் பார்ட்டிக்கு டை, கோட் சகிதம் தயாராகிக் கொண்டேன்.

மாடியில் இருந்து அந்த பஞ்சாபிக் குடும்பமும் கீழே இறங்கிக் கொண்டு வந்தார்கள்.

“ஹாய் அங்கிள் யூ ஆர் ஸோ சிமாட்...”

“யு ஆர் ஆல்சோ ஸோ பியூட்டிபுல்...”

மகிழ்ச்சியால் சிரித்துக் கொண்டார்கள்.

இப்போது எல்லோரும் மண்டபத்தில் அவரவர்கள் சாப்பாட்டு மேசையைச் சுற்றி அமர கிறிஸ்மஸ் பார்ட்டி ஆரம்பமாகியது.

முதலில் ஐரோப்பிய, தாய்லாந்து உணவுகள்... குடி வகைகள் என ஆறுதலாகத் தொடங்கிய விழா பத்து மணியைத் தாண்டியதும் ஆடல் பாடல்கள் என சூடு பிடிக்கத் தொடங்கியது.

படிப்பகம்

padippakam



என்னுடன் அந்த இரண்டு பஞ்சாபிச் சிறுமிகளும் சேர்ந்து ஆடினார்கள்... தகப்பனும் தாயும் கூட தனியாக இரு வரும் ஆடிக்கொண்டு நின்றார்கள்... நேரம் செல்லச் செல்ல ஆடுபவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு போனது... இப்போது அதிகமான தாய்லாந்துப் பெண்கள் வந்து என்னையும் இழுத்துக்கொண்டு ஆடத் தொடங் கினார்கள்... அந்த ஸ்பரிசம் எனக்கு வேண்டாத ஒன்றாயும் இருந்தது... வேண்டிய ஒன்றாயும் இருந்தது...

என்னுடன் ஆடிக்கொண்டிருந்த தாய்லாந்துப் பெண் என்னுடனேயே எனது ஹோட்டலுக்கு வரப்போவதாகப் பிடிவாதம் பிடித்தாள்.

“உனக்கு காசு வேண்டுமா?... சொல்லு!... ஹோட்டல் வரை வேண்டாம்” என்றேன்.

“இல்லை எனக்கு காசு வேண்டாம்... இந்த கிறிஸ்மஸை உன்னோடு சேர்ந்து என்ஜோய் பண்ண விரும்புறன்... யூ ஆர் ஸோ சிமாட்... ஐ லைக் ரு பி வித் யூ.”

அவள் விடுவதாய் இல்லை...

இன்னமும் நெருக்கமாய் ஆடினாள்... அவள் பூசியிருந்த கொலோன் மணம் எனக்குப் பிடித்திருந்தது... அவளின் உடல் என் மேல் உரச உரச ஆடினாள்...

இந்த ஸ்பரிசம் எனக்கு முற்றும் புதிதுதான்... அன்றைய சப்பறத் திருவிழா இரவின்பொழுது ராசாத்தி வீட்டுப் பின் கொட்டிலினுள் அவளோடு என்னை மறந்திருந்த பிறகு... இத்தனை வருடங்களுக்குப் பின்பு... வேறு ஒரு இனப் பெண்ணின்... வேறுபட்ட ஒரு ஸ்பரிசம்... அமுதா நாயரின் படத்தால் என் உணர்வுகள் கொஞ்சம் தடுமாறிப்

படிப்பகம்

padippakam



போயிருந்த நிலையில் இந்த தாய்லாந்துப் பெண்ணின் நெருக்கம்... கெஞ்சல்... உரசல்... எல்லாமே புதிதுதான்.

நேரம் இரவு ஒரு மணியை நெருங்கிக்கொண்டு இருந்தது...

இன்னமும் ஒரு மணி நேரத்தில் எனது டக்ஸிக்காரன் வந்துவிடுவான்.

அந்தப் பஞ்சாபிக் குடும்பம் குட்நைட் சொல்லிக் கொண்டு விடை பெற்றுக் கொண்டார்கள்.

இப்பொழுது மண்டபத்தில் சனம் குறையத் தொடங்கி விட்டது.

மேடையில் நடனத்துக்குரிய பாடல் நடந்து கொண்டிருந்தது.

ஆங்காங்கே தாய்லாந்துப் பெண்கள் வெவ்வேறு நாட்டு உல்லாசப் பிரயாணிகளுடன் ஆட்டத்தையும் தாண்டிய லீலைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தார்கள்... என்னுடன் நிற்கும் பெண் என்னைத் தன்னுடன் அழைக்கப் பிரயத்தனம் செய்வது போல்...

இப்போது இருவரும் ஆடிக் களைத்துவிட்டதால் கொஞ்சம் இளைப்பாற வேண்டும் போல் இருந்தது.

அவளுக்கு ஒரு பியரும் எனக்கு ஒரு ஆரஞ்சு ஜூசும் வேண்டிக்கொண்டு ஒரு மூலையில் அமர்ந்து கொண்டோம்.

அந்த இடம் கொஞ்சம் இருட்டாய் வேறு இருந்தது.

அவளுக்கு இப்போது போதை கொஞ்சம் ஏறியிருந்தது... என் தோளில் தானே சாய்ந்து கொண்டாள்.

படிப்பகம்

padippakam



"என்னை டென்மார்க்குக்கு கூட்டிப் போறியா..." என் முகத்தை நெருங்கினாள்...

சிரித்தேன்.

என் கைகளை எடுத்து தன் இடுப்பைக் கட்டிக் கொண்டாள்.

என்னால் விலத்த முடியவில்லை. அவள் கெட்டியாய் பிடித்துக் கொண்டாள்.

அவளின் ஸ்பரிசம் எனக்கு அந்த வேளையில் பிடித்திருந்தாலும் அவள் என்னை வீழ்த்துவதில் இருந்த குறி எனக்குப் பிடிக்கவில்லை.

மணிக்கூட்டைத் திருப்பிப் பார்த்தேன்.

இரவு மணி இரண்டு.

சொல்லி வைத்த மாதிரி ஹோட்டல் வாசலில் எனது டக்ஸிக்காரன் நின்றிருந்தான்.

அவனை நோக்கி நான் போக அந்தப் பெண்ணும் என்னைத் தொடர்ந்து வந்தாள்.

தாய்லாந்து பாஷையில் அவளிடம் ஏதோ சொல்லிவிட்டு என்னைத் தனியாகக் கூட்டிப் போய்... "சார் அந்தப் பெண் உங்களுக்கு வேண்டாம்... உங்களுக்கு மயக்க மருந்து தந்திட்டு உங்கடை பேர்சை அடித்துக்கொண்டு போய் விடுவாள்... நீங்கள் என்னோடை வாங்கோ..." என உரிமையுடன் என்னைக் கூட்டிக் கொண்டு போனான்.

நல்ல காலம் இவன் வந்து கடவுள் மாதிரி என்னைக் காப்பாற்றிக்கொண்டு போறான் என்பது போலத் தெரிந்தது.

படிப்பகம்

padippakam



என் ராசாத்திக்கு நான் துரோகம் செய்யப் பார்த்தேனா என என் காதலுக்கும்... அல்லது அவள் மீது நான் செய்து கொண்டிருக்கும் தவத்திற்கும்... உடல் உணர்வுகளுக்கும் இடையில் ஒரு தடவை குறுகிப் போனேன்.

இந்த டக்ஸிக்காரன் வந்திருக்காவிட்டால் நான் அந்த தாய்லாந்துப் பெண்ணுடன் ஓர் அறையுள் ஒதுங்கி யிருப்பேனோ!

டக்ஸி அமைதியாகப் போய்க் கொண்டு இருந்தது...

"இப்ப உங்களை ஒரு நல்ல பெண்ணிடம் அழைத்துப் போகட்டா..." என மீண்டும் கேட்டான்.

வேண்டாம் எனத் தலையாட்டினேன்.

அவனுக்கு என்னைப் புரியவில்லை... மௌனமாகக் காரை ஓட்டிக் கொண்டு இருந்தான்.

காரில் இருந்து இறங்கியதும் அவனுக்கு அளவுக்கதிக மான காசைக் கொடுக்க, கும்பிட்டு வேண்டிக் கொண்டான்.

தாய்லாந்துப் பெண்ணுடன் நெருங்கியிருந்த ஸ்பரிசம்... கடைசியாக அமுதா நாயர் அனுப்பியிருந்த படம்... என்றைக்குமே என்னுள் ஆழமாக இருக்கும் ராசாத்தி... உள்ளத்தில் இருந்த குற்ற உணர்வு...

என்னை உலட்டி... உலட்டி... தூங்கவிடாமல் செய்து... கடைசியில் அதிகாலை நாலு நாலரை மணிபோல் என் கண்கள் அயரத் தொடங்கின.

படிப்பகம்

padippakam



நான்கு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன்.

திடீரென வெளியே ஏதோ கலவரச் சத்தம் கேட்ட மாதிரி இருந்தது.

திடுக்கிட்டு எழுந்தேன்.

நன்கு விடிந்து பகலாகி விட்டிருந்தது.

யன்னலால் எட்டிப் பார்த்தேன்.

றோட்டால் அம்புலன்ஸ்கள் தாறுமாறாக ஓடிக் கொண்டிருந்தன.

சனங்கள் எல்லாம் ஒரே திசை நோக்கி ஓடிக்கொண்டு இருந்தார்கள்.

ஏதோ எங்கேயோ பெரிதாய் நடந்துவிட்டது என என் மனம் சொல்லியது.

சேட்டை எடுத்து மாட்டிக்கொண்டு மாடிப்படி வழிகளில் ரிசப்ஷனுக்குக் கீழே இறங்கி ஓடிப்போனேன்.

அங்கு எல்லோர் முகங்களிலும் சோகம்.

பரபரப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

என்ன நடந்தது என்று ஒருவரிடம் கேட்டேன்.

சுமார் அரை மணித்தியாலத்துக்கு முதல் பெரிய பெரிய சுனாமி அலைகள் எழுந்து வந்து கடற்கரைப்பக்கம் இருந்த ஹோட்டல்கள், வீடுகள், மக்கள் எல்லாரையும் அழித்துப் போட்டுது என்று சொன்னார்கள்.

கடவுளே!...

படிப்பகம்

padippakam



நான் நின்றிருந்திருக்க வேண்டிய ஹோட்டல்...

மூளையில் அந்த பஞ்சாபிச் சிறுமிகளின் பொறி தட்டியது.

திரும்பி மேலே போய் பாஸ்போட்டையும் பேர்ஸையும் மட்டும் எடுத்துக்கொண்டு கீழே வந்து எனது டக்ஸிக் காரனுக்கு தொலைபேசி அழைப்புக் கொடுத்தேன்.

பதில் இல்லை... ரிங் டோன் மட்டும் போய்க்கொண்டு இருந்தது.

இன்னோர் டக்ஸியைப் பிடித்துக்கொண்டு அந்தக் கடற்கரை ஹோட்டலுக்கு ஓடினேன்.

வழி முழுக்க அந்த டக்ஸிக்காரன் சுமத்திரா தொடக்கம் தாய்லாந்தின் மற்றைய இடங்கள் வரை சுனாமி ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிச் சொல்லிக் கொண்டு வந்தான்.

அத்துடன் தென் இந்தியா, இலங்கையின் கிழக்கு, தென்பகுதிகளிலும் சுனாமியின் அழிவு பற்றி ரி.வி.யில் சொல்லிக்கொண்டிருப்பதாகச் சொல்லி டக்ஸியினுள் இருந்த றேடியோவில் பி.பி.சி. செய்தியினைத் திருகி விட்டான்.

அவன் சொன்னது உண்மைதான்.

நாகப்பட்டினம்... மடுமாதா... முதன்நாள் கிறிஸ்மஸ் பூஜைக்காக வந்திருந்த மக்கள்... இலங்கையின் கிழக்கும்... தெற்கும்... புகையிரதத் தண்டவாளங்கள் சுருட்டி எடுக்கப் பட்டு... றேடியோ செய்தியினை என் மனம் புகைப்படம் போட்டுப் பார்த்துக் கொண்டது.

அழிவுகளை எண்ணிப் பார்க்கவே மனம் அச்சப்பட்டது.

படிப்பகம்

padippakam



டக்ஸிக்காரன் டக்ஸியை நிறுத்தியபொழுது எனக்கு முதல்நாள் இரவு நான் நின்றிருந்த அந்த ஹோட்டலை அடையாளம் காண முடியவில்லை... உயர்ந்து நின்ற அந்த மாடிக்கட்டடம் முன்னால் இருந்த ரிசப்ஷன் மண்டபத்தின் மேல் சாய்ந்திருந்தது...

ஆங்காங்கே கடற்கரையில் மக்கள் நித்திரை கொண்டு இருப்பது போல பிணங்கள்...

கடற்கரையில் நின்ற அத்தனை தென்னை மரங்களும் முறிந்து போய்...

ஏன் இந்த இயற்கை அழிவு? எப்படி நான் மட்டும் காப்பாற்றப்பட்டேன்...

அந்தப் பஞ்சாபிப் பெண்களுக்கு அறையை விட்டுக் கொடுக்காது போயிருந்தால்... அல்லது முதன்நாள் இரவு இந்த தாய்லாந்துப் பெண்ணின் வளைப்புக்குள் நான் வளைந்து போயிருந்தால்... நானும் இந்தக் கட்டட இடிபாடுகளுக்கிடையில்...

நினைத்துப் பார்க்கவே மனம் அஞ்சியது...

எங்கே அந்த பஞ்சாபிக் குடும்பம்... எங்கே அந்த சின்னஞ் சிறிய சிறுமிகள்...

இடிபாடுகளை அகற்றி பிணங்களை அப்புறப்படுத்திக் கொண்டு இருந்தார்கள்...

கடற்கரை எல்லாம் என் கால்களும் கண்களும் அந்தக் குடும்பத்தைத் தேடிச் சுற்றி வந்தது...

இடிந்த கட்டடங்களுக்கு வெளியே பிணங்களை எடுத்து வரும்போது இது அவர்களாக இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில் எட்டி எட்டிப் பார்த்தேன்.

படிப்பகம்

padippakam



பின்னேரம் இருட்டுப்படும் வரை நான் அங்கேயேதான் நின்றிருந்தேன்.

சாப்பாடு தண்ணீர் வெந்நீர் எதுவும் இன்றி... அல்லது அதுகளை மறந்து அவர்களைத் தேடிக்கொண்டு நின்றேன்.

அவர்களை... அல்லது அதுகளைக் காணவில்லை.

இனி நாளை வந்து பார்ப்போம் என்ற நினைப்பில் திரும்பி எனது ஹோட்டலுக்கு வருவதற்காக கைத்தொலை பேசியில் எனது டக்ஸிக்காரனை அழைத்தேன். இப் பொழுதும் வெறும் ரிங்டோன் மட்டும் போய்க்கொண்டு இருந்தது. ஆனாலும் யாரும் எடுக்கவில்லை... அவனுக் கும் ஏதாவது என மனம் பயந்தது... அப்படி ஏதும் இருக்கக் கூடாது என கடவுளிடம் மனம் மன்றாடியது.

வேறு ஒரு டக்ஸியைப் பிடித்துக்கொண்டு ஹோட்ட லுக்குத் திரும்பினேன்.

வரும் வழியெல்லாம் உலகம் முழுக்க சுனாமி ஏற்படுத்திய தாக்கங்களை சி.என்.என்.னும் பி.பி.சி.யும் பட்டியல் இட்டுச் சொல்லிக் கொண்டிருந்தன.

என் அறிவுக்கு எட்டியவரை நேற்றிருந்தார் இன்றில்லை என்பது இவ்வளவு தொகையில் இந்தச் சம்பவத்தில்தான் இடம் பெற்றிருக்க வேண்டும்.

இனம்... மதம்... நாடு என்ற பேதமின்றி... இயற்கை காவு கொண்டு இருந்தது.

இலங்கை மக்கள் பட்ட... படுகின்ற... துன்பங்கள் போதாது என்று... இந்த இயற்கையின் அனர்த்தங்கள் வேறு...

படிப்பகம்

padippakam



அதுவும் கிழக்கு மாகாண மக்கள்தான் யாழ்ப்பாண மக்களைவிட எப்போதும் பாதிக்கப்படுவது... மலையக மக்களுக்குப் பிறகு யாழ்ப்பாண மக்களால் சுரண்டப்பட்ட இனமும் அதுதான் என அடிக்கடி நினைப்பதுண்டு.

ஹோட்டலுக்கு வந்தபொழுது டெலிபோன் பூத்தைச் சுற்றி ஒரே கூட்டமாய் இருந்தது. எல்லா நாட்டு மக்களும் தங்கள் நாடுகளுக்கு தாம் தாம் சுகமாக இருப்பதைத் தெரிவித்துக் கொண்டு இருந்தார்கள்.

அப்பொழுதுதான் என் மரமண்டையில் உறைத்தது... அப்பா அம்மாக்குச் சரி... ராசாத்திக்குச் சரி அவர்கள் இருக்கும் பிரதேசங்களில் ஏதும் நடக்கவில்லை என எனக்கு உறுதியாகத் தெரிந்திருந்தபடியால் நான் கவலைப்படாமல் இருந்தேனே தவிர... அவர்கள் என்னை நினைத்துக் கவலைப்படுவார்கள் என நினைக்கவில்லையே என...

டெலிபோன் பூத் வரிசையில் நின்று டெலிபோன் எடுத்தால் மலிவு என்றாலும் எனக்கு அதுவரை காத்திருக்கும் பொறுமை இருக்கவில்லை.

எனது அறைக்கு ஓடிப்போய் ரிஷப்சனை அழைத்து இலங்கை நம்பருக்கு கனெக்ஷன் கொடுக்கச் சொன்னேன்.

உடனே கனெக்ஷன் கிடைத்து விட்டது.

அப்பாவா... அம்மாவா... யார் டெலிபோன் எடுக்கப் போகின்றார்கள் என்று மனம் பரபரத்தது.

டெலிபோன் மணி தொடர்ந்தும் அடித்துக் கொண்டிருந்தது.

படிப்பகம்

padippakam



யாரும் எடுக்கவில்லை.

நேரத்தைப் பார்த்தேன்.

இலங்கையில் மூன்று அல்லது நாலு மணிதான் இருக்கும்.

எங்கே போயிருப்பார்கள்...

அப்பாவுக்கு அல்லது அம்மாவுக்கு ஏதும் வருத்தம்?...

கடைசிவரை இல்லையென மனம் மறுதலித்தது.

இன்னும் கொஞ்ச நேரத்தில் றை பண்ணுவோம் என்று நினைத்தபடி டெலிபோனைத் துண்டித்து விட்டு ரி. வி.யை ஆன் செய்தேன்...

ஒரு புத்தவிகாரை தண்ணீருக்குள் மூழ்கிக்கொண்டு இருந்தது... கார் ஒன்று தண்ணீரில் அடித்துச் சென்றபடி... ரயில்வே தண்டவாளங்கள் சுருட்டி வைத்த பாய் போல... இலங்கையின் வெவ்வேறு பகுதிகள் கண் முன்னே மூழ்கிய காட்சிகளாக...

காட்சிகள் இந்தியாவுக்குத் தாவின... எல்லாமே எனக்குத் தெரிந்த இடங்கள்... கிறிஸ்மஸ்க்கு அன்னை வேளாங்கண்ணி கோயிலுக்கு வந்துவிட்டு அடுத்த நாள் காலையில் கடலில் குளித்துக்கொண்ட எத்தனையோ பக்தர்கள்... படத்தின் கீழ் செய்திகள் ஓடிக் கொண்டிருந்தன.

அடுத்தது... தாய்லாந்து... அதே ஹோட்டல்தான்... நான் இராத்திரி கிறிஸ்மஸ் கொண்டாடிய அதே ஹோட்டல் தான்... எழுந்து வந்த அலையுள் மூழ்கும் காட்சி... அதே வேகத்தில் அலைகள் பின்வாங்கும்பொழுது

படிப்பகம்

padippakam



எத்தனையோ மனிதர்களை இழுத்துக்கொண்டு... அதனுள் அந்த இரண்டு பஞ்சாபிச் சிறுமியரும் போயிருப்பரோ...

இப்போது அரைமணி நேரம் ஓடிவிட்டது.

மீண்டும் கொழும்புக்கு டெலிபோனை றை பண்ணி னேன்...

இப்போதும் மணியடிக்கிறது... யாரும் எடுக்கவில்லை...

எனக்குள் ஒரு சின்னப் பதற்றம்.

யாருக்கு கொழும்பில் டெலிபோன் அடித்து விசாரிப்பது என்று யோசித்துப் பார்த்தாலும் எவரும் என் மூளையில் படவில்லை. அம்மா அப்பாவுக்குத் தெரிந்த ஆயிரம் சொந்தக்காரரில் ஒருவரோடாவது நான் தொடர்பு வைத்திருக்காதது என் பிழைதான். சொந்தத்தில் திருமணம் அல்லது பெரியப்பா... சித்தப்பா... மாமா... மாமி... உறவுகள் என்று இருந்தாலும் கொஞ்சம் தொடர்பு கள் இருந்திருக்கும். அப்பா சரி... அம்மா சரி... நான் சரி... குடும்பங்களுக்கு தனிப் பிள்ளைகள்...

ரிசப்ஷனுக்குக் கீழே போய் இலங்கைத் தொலை பேசிக் கூட்டுஸ்தாபனத்துக்குத் தொடர்பு கொண்டு இந்த எண்ணைப் பற்றிக் கேட்டு உதவ முடியுமா எனக் கேட்டேன். அவர்களும் முயற்சித்துப் பார்த்துவிட்டு எனது அறைக்குத் தொடர்பு கொள்வதாகச் சொன்னார்கள்...

மீண்டும் நான் என் அறையில்... மீண்டும் ரி.வி.யில் சுனாமியின் அனர்த்தங்கள்...

நேரம் நத்தையாக ஊர்ந்தது...

படிப்பகம்

padippakam



சுமார் ஒரு மணித்தியாலத்திற்குப் பின்பு அறைக்கு டெலிபோன் வந்தது.

ரிசப்ஷனில் இருந்து கதைத்தார்கள்.

கொழும்புத் தொலைபேசிக் கூட்டுத்தாபனத்துடன் தாம் தொடர்பு கொண்டதாயும், அந்த எண்ணுக்கான தொடர்பில் எந்த பிழையும் இல்லை எனவும், ஆனால் யாரும் தொலை பேசியை எடுக்கிறார்கள் இல்லை எனவும் பதில் வந்தது.

எனக்கு பயமாய் இருந்தது.

எல்லாத்தையும் ரத்து செய்துவிட்டு கொழும்புக்குப் போகவேண்டும் போல் இருந்தது. ஆனால் என்னிடம் இருப்பது டெனிஷ் ரவல் டொக்குமென்ற்... டென்மார்க் பாஸ்போட் அல்ல... தவிரவும் ரவல் டொக்குமென்ற்றுடன் போய் இறங்கினால் எத்தனையோ கேள்விகளுக்குப் பதில் சொல்ல நேரிடும்... இலங்கையிலும் டென்மார்க் கிலும் எனது நதிமூலங்கள்... ரிஷிமூலங்கள் ஆராயப் படலாம்.

அது வேண்டாம்... அப்பாக்கு ஏதாவது சுகவீனமாக இருக்கலாம்... அம்மா ஏதாவது ஆஸ்பத்திரியில் கொண்டு போய் வைத்திருப்பா... என எனக்கு நானே சொல்லிக் கொண்டாலும் அடிமனதில் ஒரு பயம் இருந்துகொண்டு தான் இருந்தது.

அந்த வேதனையுடன் அன்றைய இரவு கழிந்தது.

அடுத்தநாள் காலை தாய்லாந்தின் அனைத்துப் புதினத் தாள்கள் முழுக்க சுனாமி பற்றிய செய்திகள்தான்.

றோட்டில் விற்றுக்கொண்டு இருந்த அனைத்து ஆங்கிலப் பத்திரிகைகளையும் வாங்கிக்கொண்டு, வாசிக்கத்

படிப்பகம்

padippakam



தெரியாவிட்டாலும் அங்கு தொங்கிக்கொண்டு இருந்த தாய்லாந்துப் பத்திரிகைகளின் முன்பக்கங்களைப் பார்த்துக்கொண்டு பிளாட்பாரம் வழியாக மெதுவாக நடக்கத் தொடங்கினேன்.

மூளையில் ஒரு பொறி... ஒரு தாய்லாந்துப் பத்திரிகையின் முன்பக்கத்தில் ஒரு படம்... இரண்டு சிறுமிகள் ஒருவரின் கைகளை ஒருவர் பிடித்தபடி ஒரு மரத்தில் தொங்கிக் கொண்டு கிடந்தார்கள்... கிட்டவாய்ப் போய்ப் பார்த்தேன்... கடவுளே... அதே பஞ்சாபிக் குழந்தைகள் இரண்டும் தான்...

ஒரு தரம் நிலைகுலைந்து போனேன்.

பக்கத்தில் இருந்த மின்சாரக் கம்பத்தை தட்டுத் தடுமாறிப் பிடிக்கப் போக கையில் இருந்த அத்தனை ஆங்கிலப் பத்திரிகைகளும் பக்கத்தில் இருந்த கழிவு வாய்க்காலுக்குள் விழுந்து விட்டன.

ஒரு கணம் அப்படியே நின்றேன்.

இனியொரு தரம் பத்திரிகை வேண்டி மரண அவலங் களை புதினங்களாக வாசிக்க வேண்டாம் என மனம் சொல்லிக் கொண்டது.

எதற்காக இந்த மரணங்கள்... எதற்காக இந்தப் பிரிவுகள்...

விடை தெரியாத இந்தக் கேள்விகளுக்குப் பதில்தானா விதி என்பது?

எதையும் என்னால் ஜீரணிக்க முடியவில்லை...

ஹோாட்டலுக்கு மெதுவாகத் திரும்பி வந்து மீண்டும் ஒரு தடவை கொழும்புக்கு றை பண்ணிப்பார்த்தேன். பலன்

படிப்பகம்

padippakam



எதுவுமில்லை... ரிங் மட்டும் போனது... யாரும் எடுக்க வில்லை.

ரி.வி.யைப் பார்க்கவும் விருப்பமில்லாது இருந்தது... எந்த சனல்களைத் திருப்பினாலும் அந்த அவலங்களைத் தானே காட்டப் போகின்றார்கள்...

எதுவுமே வேண்டாம் என்றுவிட்டு கம்பியூட்டரில் எனது மெயில் பாக்ஸைத் திறந்தேன்.

எனக்கு எந்த மெயில்களும் வந்திருக்கவில்லை.

கட்டாயம் அமுதா நாயரிடம் இருந்து சுனாமிக்குப் பின்பு எனது சுகத்தைக் கேட்டாவது மெயில் போட்டிருப்பாள் என நினைத்த எனக்கு அவளது மெயிலும் வராதது ஏனோ ஏமாற்றமாய் இருந்தது.

அதை அப்படியே விட்டுவிட்டு ஐரோப்பியச் செய்திகள் வரும் எம்மவர் தமிழ் இணையத்தளங்களை வாசிக்கத் தொடங்கினேன்.

அதிகமானவற்றில் மீண்டும் சுனாமி அனர்த்தங்கள்... நிதி சேமிப்பு... யார் யார் இதில் இறங்கி இருக்கிறார்கள்... இப்பணம் எங்கு எங்கு போகப் போகிறது என்று போராட்டத்துக்கு ஆதரவானதும்... எதிரானதுமான இணையத்தளங்கள் தங்கள் தங்கள் பாணியில் வழமை யான களச்சண்டையில் இறங்கியிருந்தார்கள்... இது ஒன்றும் எனக்கு ஆச்சரியமானதல்ல...

ஆனால் என்னை கொஞ்சம் அதிரவைத்த ஒரு செய்தி இங்கிலாந்தில் அமுதன் நாயர் என்ற நபர் கொலை செய்யப்பட்டு இருந்ததுதான்... அமுதா நாயரா... அமுதன் நாயரா என திரும்பத் திரும்ப வாசித்தேன்... இந்திய றோ

படிப்பகம்

padippakam



பிரிவுக்கு ஆதரவாகச் செயல்பட்டு ஐரோப்பாவில் இயக்கங்களின் செயல்பாடுகள் பற்றி அவ்வப்போது இலங்கை அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் தகவல்கள் அளித்துக் கொண்டிருந்தமையால்தான் இந்த தண்டனை என உரிமை கோராத ஒரு இயக்கம் இக் கொலையினைச் செய்திருந்தது எனத் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

எனக்கு எங்கேயோ இடித்தது...

உடனடியாக அமுதா நாயருக்கு என்னைத் தொடர்பு கொள்ளும்படி நானிருந்த ஹோட்டலின் தொலைபேசி எண்ணை இ - மெயில் மூலம் அனுப்பினேன்.

அதுதான் வாழ்க்கையில் நான் செய்த மிகப்பெரிய தவறு என்று இன்றும் நினைப்பதுண்டு.

ஒன்று... இரண்டு... மூன்று என மணித்தியாலங்கள் போய்க் கொண்டு இருந்தது.

அமுதா நாயரிடம் இருந்து எந்தத் தொலைபேசியோ... மெயிலோ வரவில்லை...

மனம் தளராத விக்கிரமாதித்தன் போல இடைக்கிடை கொழும்புக்கும் தொடர்பு கொண்டு பார்த்தேன். பதிலில்லை...

மீண்டும் இணையத்தளங்களின் செய்திகளின் பக்கம் போனேன்.

அமுதா நாயர் என்னும் அமுதன் நாயர் எனப் பெரிய தலையங்கமிட்டு எனக்கு அனுப்பப்பட்டிருந்த அதே படங்களையும், பக்கத்தில் உண்மையான அமுதன் நாயரின்

படிப்பகம்

padippakam



படங்களையும் பிரசுரித்து, றோவின் கைக்கூலியான அமுதன் நாயர், அமுதா நாயர் என்ற பெயரில் இலங்கையைச் சார்ந்தவர்களிடம் தான் ஒரு இளம் விதவையாகக் காட்டி அவர்களை மயக்கி அவர்களிடம் இருந்து முடிந்த அளவு இலங்கையில் உள்ள இயக்கங்கள் பற்றி... அவற்றின் செயல்பாடுகள் புலம் பெயர்ந்த நாடுகளில் எப்படி இருக்கின்றன... அவையுடன் தொடர்பு டையவர்கள் எப்போது இந்தியாவுக்கு அல்லது இலங்கைக்குப் போகின்றார்கள் என்ற தகவல்களைச் சேர்க்கும் பணியில் கடந்த பத்தாண்டுகளாய் ஈடுபட்டு வந்தான் என்று ஆதாரபூர்வமாக அந்த இணையத்தளம் எழுதியிருந்தது. இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்துநாடுகளுக்குப்போனபலதமிழர்கள்காணாமல் போனதற்கு அமுதன் நாயர் முக்கிய காரணம் என்றிருந்தது.

அமுதன் நாயருடன் தொடர்பு கொண்டிருந்த பலரின் விபரங்கள் அவரின் கணனிமூலம் பெறப்பட்டுள்ளன என்ற துண்டுச் செய்தியுடன் அந்த இணையத்தளம் அன்றைய செய்தியை முடித்திருந்தது.

இவ்வளவு ஒரு மூடனாய் ஒரு பொறிக்குள் போய்ச் சிக்கியிருக்கின்றேனே என நினைக்க தலை சுற்றியது...

சிவராசா அண்ணையின் இருபத்தைந்தாவது கலியாண வீட்டில் விழுந்த ஒரு வாக்குவாதம் எங்கே என்னைக் கொண்டு போய் விட்டுவிட்டது என நினைக்க ஆச்சரிய மாய் இருந்தது.

நானாக எந்த தப்போ துரோகமோ செய்யாவிட்டாலும் என்னைத் துரோகி என முத்திரை குத்த நானே றப்பர் ஸடாம்பை அவர்களுக்குக் கொடுத்தது போல் ஆகிவிட்டது.

படிப்பகம்

padippakam



வடிவாகத் தெரிந்தது எனக்கு நானே செக் வைத்து விட்டேன் என்று.

இப்போதைக்குத் தப்ப வேண்டும்... ராசாத்திக்குச் செய்ய வேண்டிய சில அலுவல்கள் செய்ய வேண்டும்... அப்பா அம்மாக்கு கொழும்பில் என்ன நடந்தது என்று அறிய வேண்டும்... அதுவரைக்கும் தப்ப வேண்டும்.

எவன் எவனின் காலில் விழுந்தும் உயிர்ப்பிச்சை கேட்கும் நிலை வராமல் என்னை நான் காப்பாற்ற வேண்டும்.

சிந்தனை தாறுமாறாக ஓடியது...

எனது அடுத்த மூவ் என்ன?

நான் யோசிப்பதற்குள் எனது அறைத்தொலைபேசி அடித்தது...

ரிசப்ஷனிஸ்ட் இலங்கைக்கு கோல் எடுத்து விட்டாள் என நினைத்துக்கொண்டு அம்மா அப்பாவுடன் கதைக்கும் ஆவலுடன் ரிசீவரை எடுத்தேன்.

“வணக்கம், விடுதலைப் போராட்டம் - பாகம் 2இன் ஆசிரியரே” குரலில் நளினம் தெரிந்தது.

“யார் நீங்கள்?”

“அமுதா நாயரின் புருஷன்... கம்மணாட்டி! நாங்கள் பாடுபட்டுப் போராடுறம்... நீ எங்களைக் காட்டிக் குடுக்கிறியா...”

டெலிபோன் வைக்கப்பட்டு விட்டது.

கடைசியாக அமுதா நாயருக்கு நான் அனுப்பிய மெயிலில்தான் ஹோட்டல் தொலைபேசி எண் கொடுத்

padippakam



திருந்தேன். அதையும் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். மொத்தத்தில் எல்லாம் அவர்களின் கைகளில்.

இனி சிங்கப்பூரோ... தாய்லாந்தோ எனக்குப் பாதுகாப்பு இல்லை... அவர்கள் எங்கும் இருக்கின்றார்கள்...

சிங்கப்பூரைக் கான்சல் பண்ணிவிட்டு நேரடியாக டென்மார்க்கிற்குப் போய்விடுவோமா... என யோசித்த பொழுது அப்பா கடைசியாக டெலிபோனில் சொன்னது ஞாபகம் வந்தது...

"இனி சிங்கப்பூருக்கு வந்து டெலிபோன் எடுத்தால் போதும். அங்கை கொம்மாக்கு ஆக விலையும் இல்லாமல் ஆக குமரியள் கட்டுறமாதிரியும் இல்லாமல் கலியாண வீடு களுக்குப் போறதுக்கு கூறைச்சேலை மாதிரி ஒரு பட்டுச் சேலை வேண்டி அனுப்பு."

எனக்குத் தெரியுது... சேலை விடயம் ஒரு பெரிய விடயம் இல்லை என்றாலும் அப்பா சொன்னதை முதலில் செய்வோம் எனவும் தோன்றியது. சில விடயங்களை சிங்கப்பூரில் உள்ள டென்மார்க்கின் தூதராலயத்தில் இருந்து செய்வது சுலபம் எனவும் எண்ணிக் கொண்டேன்.

நாளைக்காலை பத்துமணிக்குத்தான் சிங்கப்பூருக்கு பிளைற்... எப்படியும் 24 மணித்தியாலம் நான் தலைமறை வாக வேண்டும்.

எனது டக்ஸிக்காரனுக்கு டெலிபோன் பண்ணினேன்... பல தடவைகள் ரிங் டோன் போனது... அவனுக்கும் சுனாமியில் ஏதோ என எண்ணும் முன்பு அவன் டெலி போன் எடுத்தான்.

உடனே வரச் சொன்னேன்.

படிப்பகம்

padippakam



அவன் வர முதல் எனது எல்லா சாமான்களையும் பாக் பண்ணிக் கொண்டு ரிசப்ஷனுக்குப் போய் ஹோட்டலை விட்டு வெளியேறுவதாகச் சொன்னேன்.

அவர்கள் பில் முடித்ததும் காசைக் கட்டிவிட்டுத் திரும்பவும், டக்ஸிக்காரன் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

அவன் முகம் இருண்டு களைத்துப் போய் இருந்தது.

"என்ன நடந்தது" எனக் கேட்டேன்.

"ஓ" என அழத்தொடங்கினான்...

தாய் தகப்பன் வீட்டுக்கு கிறிஸ்மசுக்குப் போன தனது இளம் மனைவியையும் பிள்ளையையும் காணவில்லை என்றும், தேடிக்கொண்டு இருப்பதாகவும் சொன்னான். ஆனால் அவனின் பேச்சில் அவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கவில்லை.

"கவலைப்படாதே, கிடைத்துவிடுவார்கள்" என வாயளவில் அவனுக்கு ஆறுதல் சொன்னாலும், சுனாமிக்கு அவர்களும் பலியோ என்ற அச்சம் என்னுள் தொற்றியது.

"ஏர்போட்டுக்கு போக வேண்டுமா?"

"இல்லை, அது நாளைக்குத்தான்."

"அப்போ?"

"அடுத்த 24 மணித்தியாலமும் நான் உங்கள் நாட்டுப் பெண் ஒருத்தியுடன் இருக்க வேண்டும்."

அவன் என்னை ஒரு மிருகத்தைவிடக் கேவலமாகப் பார்த்தான்.

படிப்பகம்

padippakam



அப்படியான ஒரு மறைவிடம்தான் எனக்குப் பாதுகாப்பு என நான் முற்றாக நம்பினேன்.

அவனுக்கு என்னைப் புரியவேயில்லை...

வந்தது முதல் தாய்லாந்துப் பெண் வேண்டுமா... வேண்டுமா என அவன் கேட்டுத் தொந்தரவு செய்ய மறுதலித்த நான்... நாடே மரணஓலம் இட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் அதே தாய்லாந்துப் பெண் ஒருத்தியுடன் ஒருநாள் முழுக்க இருக்க வேண்டும் எனக் கேட்கும் என்னை அவனுக்குப் புரியவில்லை.

டக்ஸியில் ஏறி அமர்ந்தேன்.

அவன் எதுவும் என்னிடம் பேசவில்லை... என்மேல் வெறுப்பு போலும்.

நானும் எதுவும் பேசவில்லை.

நகரத்தின் ஒதுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு சின்னக் குடிசை வீட்டில் டக்ஸியை நிறுத்தி விட்டு உள்ளே போய் வெளியே வந்தான்.

வாசலில் வயதான ஒரு கிழவனும் கிழவியும் வந்து என்னைக் கூட்டிச் சென்றார்கள்.

“நாளை வா” எனச் சொல்லி அவனுக்கு அளவுக்கதிக மான காசு கொடுத்து விட்டேன்.

உள்ளே போனபொழுது அழகிய ஒரு இளம் பெண் கட்டில் மேலே இருந்தாள்.

இந்தக் கிழவனினதும் கிழவியினதும் பேத்தி எனத் தெரிந்து கொண்டேன்.

படிப்பகம்

padippakam



வறுமையின் மறுபக்கம்.

நான் நாளைக்காலை வரை அங்கு இருப்பதாகச் சொன்னேன்.

அதற்குரிய காசை வேண்டிக்கொண்டு கிழவனும் கிழவியும் வெளியே போனார்கள்.

அந்தப் பெண் தனது உடைகளை கழற்றப் போனாள்...

அந்தப் பெண்ணிடம் மீண்டும் உடுப்புகளைப் போடச் சொன்னேன்.

அடுத்த 24 மணித்தியாலத்துக்கும் உங்களைப் போல் ஒரு குடும்பத்துடன், சந்தோசமாகச் சாப்பிட்டு வாழ்ந்து பார்க்கத்தான் பிரியப்படுகின்றேன்... செக்ஸ் வேண்டாம் என்று அமைதியாகக் கூறினேன்.

நல்ல சாப்பாடு செய் என்று இன்னமும் காசு கொடுத்தேன்.

அவள் கிழவனையும் கிழவியையும் கூப்பிட்டு அந்தக் காசைக் கொடுத்தாள்.

அவர்கள் மகிழ்ச்சியாகக் கும்பிட்டு வேண்டிக் கொண்டார்கள்.

அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது... அடுத்த 24 மணித்தியாலமும் உயிர்வாழ்தலுக்கான பதுங்கு குழியை நான் தேடி வந்திருப்பது.

மத்தியானம் வகைவகையான மீன், நண்டு, கணவாய் என கடல் உணவுகளாகவே செய்திருந்தார்கள்.

படிப்பகம்

padippakam



தரையில் போடப்பட்டிருந்த அவர்கள் பாணியிலான வட்டமேசையைச் சுற்றியிருந்து நால்வரும் சாப்பிட்டோம்.

அந்தப் பெண் ஒரு கணவனைக் கவனிக்கும் பாணியில் என்னை விழுந்து விழுந்து கவனித்தாள்.

எனக்கு அதை ரசிப்பதா, அவர்களின் வறுமையை நினைத்து வேதனைப்படுவதா, அல்லது கிட்டவாகவோ அன்றில் எட்டவாகவோ என்னை நோக்கி நீட்டப்பட்டிருக்கும் ஒரு துப்பாக்கிக்கு பயப்படுவதா... இல்லை அதை எதிர்கொள்வதா என மனதுள் போராட்டமாய் இருந்தது.

பகல் சாப்பிட்டு முடிந்தபின்பு எனக்கு களையாக இருக்கிறது; கொஞ்சம் தூங்க விரும்புகின்றேன் என அவர்களிடம் சொன்னேன். தங்களிடம் இருந்த மிகச் சிறந்த படுக்கை விரிப்புகளைத் தந்து உதவினார்கள்.

தாம் வெளியே போய் வருவதாகவும் என்னை நிம்மதியாக நித்திரை கொள்ளும்படியும் சொல்லிவிட்டுப் போனார்கள்...

பாலியல் நோக்கத்துக்காக இல்லாது ஒரு விலைமாது வீட்டில் படுத்துக்கொண்டு இருப்பதைப் போலவே, இயக்கங்களுக்கு எந்த துரோகமும் செய்யாது நானும் துரோகியாகி விட்டேன்... அதுவும் இந்திய றோ பிரிவுக்கு இயக்கங்களை காட்டிக் கொடுக்கும் அளவுக்கு துரோகி ஆகிவிட்டேன் என என் சாவுக்குக் காரணம் கற்பிக்கப்படும் என்பதையும் நன்கு அறிவேன்.

இதிலிருந்து நான் தப்ப வேண்டும்... எங்கள் பரம்பரைக்கு எந்தக் களங்கமும் இல்லாது நான் தப்ப வேண்டும்.

படிப்பகம்

padippakam



எண்ணிக்கொண்டு இருக்க என் கண்கள் அயரத் தொடங்கியது...

நன்கு தூங்கி விட்டேன் என நினைக்கின்றேன்.

மெதுவாக அவர்கள் வீட்டினுள் வருவது தெரிந்தது.

செக்கலாகி விட்டது போலும்...

"நித்திரையைக் குழப்பி விட்டோமா?"

"இல்லை" எனத் தலையாட்டினேன்.

தலை நன்கு கனத்தது.

காய்ச்சல் காய்கின்றது போலும்...

என் முகவாட்டத்தைக் கண்டுகொண்ட அந்தக் கிழவி என் தலையில் கை வைத்துப் பார்த்துக் கொண்டு அவர்கள் பாஷையில் பேத்திக்கு ஏதோ சொன்னார்.

கொஞ்ச நேரத்தில் ஒரு சின்னக் குடுவையில் சுடச்சுட கசாயம் போன்ற ஒன்றைப் பேத்தி கொண்டு வந்து தந்தாள்... குடித்துக் கொண்டு இருக்கும் பொழுது தைலம் ஒன்றைக் கொண்டு வந்து என் நெற்றியில் தடவினாள்... பாவம் அந்த வயோதிபக் கிழவன் என் கால்களைத் தன் மடியில் வைத்து ஒவ்வோர் கால் விரல்களையும் மடக்கியும் நீட்டியும் நீவியும் விட உடம்பு இன்னமும் முறிக்குமாப் போலவும் அந்த முறிவின் முடிவில் எனக்கு நன்கு வியர்க்கவும் அரைவாசிக் காய்ச்சல் போய் விட்டது போல இருந்தது.

எனக்கு நம்பவே முடியவில்லை... விலைபேசி பேத்தியை அனுபவிக்க வந்த ஒருவனிடம் அவர்கள் காட்டும் பாசத்தை... பரிவை...

படிப்பகம்

padippakam



எனது இரண்டு கைகளையும் எடுத்து அந்த வயோதிபத் தம்பதிகளைக் கும்பிட்டேன்.

அவர்கள் புன்னகைத்துக் கொண்டார்கள்.

அந்தக் கசாயத்தைக் குடித்தபிறகு சரியாகப் பசிக்கத் தொடங்கியது.

ஏதாவது சாப்பாடு வேண்டி வருமாறு எனது பேர்சை எடுத்தேன்.

அவள் அந்தப் பேர்சை எடுத்து மீண்டும் எனது பொக்கற்றுக்குள் வைத்துவிட்டு, “இன்றிரவு நீங்கள் ஒன்றும் சாப்பிடக் கூடாது... நாங்கள் கொடுத்த கசாயத்தால் உங்கள் வயிறு நோ பட்டு இருக்கும்... இலைக்கஞ்சி மட்டும் தான் குடிக்க வேண்டும்... தாத்தா கீரை இலை பிடுங்கப் போயிருக்கின்றார்... தவிரவும் என்னை அனுபவிக்காமல் நீங்கள் கொடுத்த காசு மிக அதிகம்... இப்போ நீங்கள் எங்கள் விருந்தாளி... நாளை போகும் வரையும் நீங்கள் எதுக்கும் காசு தர வேண்டாம்...”

இப்படியும் மனிதர்களா... பேர்சைத் திறக்க முதலே அதனை வறுகி மொத்தமாக வத்த வைக்கும் மனிதர்களைத் தான் ஐரோப்பாவில் அதிகமாகக் கண்டிருக்கின்றேன்... இது எத்தனை வித்தியாசம்... மனிதரில் எத்தனை நிறங்கள்.

எனக்கு அவர்களின் விருந்தோம்பல் நன்கு பிடித் திருந்தது...

இரவுச் சாப்பாட்டுக்கு மீண்டும் கூடினோம்.

அவர்களும் என்னைப்போல் இலைக்கஞ்சியே குடித்தார்கள்.

படிப்பகம்

padippakam



“எனக்குத்தான் வருத்தம். நான் இலைக்கஞ்சி குடிக் கின்றேன். நீங்கள் ஏன் இலைக்கஞ்சி குடிக்கின்றீர்கள்...”

“நீங்கள் இன்று எங்கள் குடும்பத்தில் ஒருவர்... நீங்கள் வருத்தம் காரணமாக இலைக்கஞ்சி குடிக்க நாங்கள் எப்படி நல்ல உணவுகளை அருந்துவது?”

எனக்கு கண்கள் கலங்கின...

அதை அப்பெண் கவனித்து விட்டாள்...

“ஏன் கவலைப்படுகின்றீர்கள்...”

“என் அப்பா அம்மாவை நினைத்து விட்டேன்” எனப் பொய் சொன்னேன்...

“கவலைப்படாதீர்கள்... அவர்கள் இலங்கையில் சுக மாகவே இருப்பார்கள்” எனக் கூறியபடியே வந்து என் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

முந்தநாள் இரவு கிறிஸ்மஸ் பார்ட்டியில் என்னை விழுத்த, என்னை நோக்கி நீட்டிய கை இல்லை இது.

கண்களை மூடிக் கொண்டேன்.

குறிப்பிட்ட ஒரு கிழமையுள் எத்தனை வித்தியாசமான மனிதர்கள்... டக்ஸிக்காரன்... பஞ்சாபிக் குடும்பம்... இவர்கள்... மேலாக அமுதன் நாயர் என்னும் அமுதா நாயர்.

எனது ஓட்டப்பந்தயத்தில் கடைசி எல்லைக் கோட்டுக்குக் கிட்ட வந்து விட்டது போல ஓர் உணர்வு... அந்த வேளை யிலும் எத்தனை வித்தியாசமான மனிதர்கள்... இல்லா விட்டால் ஏன் இவர்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கின்றேன்?...

படிப்பகம்

padippakam



அவர்களுடன் கதைத்துக்கொண்டே அயர்ந்துவிட்டேன் என நினைக்கின்றேன்.

நடுநிசியில் முழித்துப் பார்த்தபொழுது என்னைப் போர்த்தி விட்டு இருந்தார்கள்...

கிழவனும் கிழவியும் பேத்தியும் மூலையில் தூங்கிக் கொண்டு இருந்தார்கள்.

மீண்டும் நான் கண்ணயர்ந்து படுத்துவிட்டேன்.

காலையில் எழுந்த பொழுது உடம்பு பஞ்சாகி இலேசாக இருந்தது.

இன்னும் மூன்று மணித்தியாலத்தில் நான் ஏர்போட்டில் இருக்க வேண்டும்.

காலை உணவை மூவரும் வேகமாகச் செய்தார்கள்.

எனக்கு குளிப்பதற்காக வெந்நீர் வைத்துக் கொடுத் தார்கள்.

எனது டக்ஸிக்காரனை அழைத்து எத்தனை மணிக்கு வரச்சொல்லுவோம் என நினைத்தாலும் என்னை தொலைபேசியில் மிரட்டியவர்கள் யாராவது அவனைப் பின் தொடர்ந்தாலும் தொடரலாம், இது வேண்டாம் என்ற நினைப்பில் அந்த வீட்டு வயோதிபரிடம் ஒரு டக்ஸியை ஒழுங்கு செய்யச் சொல்லியிருந்தேன்.

அந்தப் பேத்திப் பெண் இன்று தங்கள் தேசிய உடை யணிந்து அழகாக இருந்தாள் - சிவப்பிலும் வெள்ளையிலும் பெரிய கடற்பாம்பு படம் போட்ட அழகிய ஆடை.

நாங்கள் நால்வரும் மீண்டும் அமர்ந்து காலை உணவை அருந்தியபின்பு நான் புறப்படத் தயார் ஆனேன்.

படிப்பகம்

padippakam



நான் வெளிக்கிட்டு அவர்கள் முற்றத்துக்கு வந்தபொழுது மூவரும் வந்து என் கால்களில் விழுந்து எனக்கு மரியாதை செய்தார்கள்.

எனக்கு சங்கடமாகி விட்டது.

அவர்களை அணைத்துத் தூக்கிய பொழுது அவர்கள் மூவரின் கண்களுமே கலங்கியிருந்தன.

பொக்கற்றுக்குள் இருந்து பேர்ஸை எடுத்தேன்.

"தயவு செய்து அதை உள்ளே வையுங்கள்... உங்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டால் எங்களை நீங்கள் வறியவர்கள் என்று பார்ப்பது போல இருக்கும்."

அந்தச் சின்னப் பெண்ணின் வாயில் எத்தனை பெரிய வார்த்தை... எத்தனை பெரிய சுய கௌரவம்.

"இல்லை... உனது தாத்தாவையும் பாட்டியையும் நான் என் பெற்றோர்களாகப் பார்க்கிறேன்" என்றவாறு அந்தப் பெரியவரின் கையில் காசை வலுக்கட்டாயமாக எடுத்துக் கொடுத்தேன்.

மீண்டும் என்னைக் கும்பிட்டார்கள்.

கனத்த இதயத்துடன் காரில் போய் ஏறினேன்.

ஏர்போர்ட்டில் நின்றபடியே கொழும்புக்கு டெலிபோன் எடுத்துப் பார்த்தேன்.

இப்பவும் யாரும் டெலிபோனை எடுக்கவில்லை.

அதே கனத்த இதயத்துடன் சிங்கப்பூர் பிளேனிலும்...

படிப்பகம்

padippakam



சிங்கப்பூர் ஏர்போர்ட்டை அடைந்தபொழுது பிற்பகல் இரண்டு மணியாகியிருந்தது.

நேரே ஒரு டக்ஸியை அமர்த்திக்கொண்டு டென்மார்க் எம்பசிக்குப் போனேன்.

அங்கு எனது தந்தையாரின் வருத்த நிலை... சுனாமிக்குப் பின் தொடர்பு இல்லாத நிலை... எல்லாவற்றையும் எடுத்துக் கூறி, எனது றவலேர்ஸ் டொக்குமென்ற்றில் இலங்கைக்கு போக மாற்றம் செய்து தர முடியுமா எனக் கேட்டேன்... அது கட்டாயம் டென்மார்க்கில்தான் செய்ய வேண்டும் என மறுத்து விட்டார்கள்... அடுத்தது தனியே இருக்கும் எனக்கு சிங்கப்பூரில் அல்லது டென்மார்க்கில் ஏதாவது நடந்தால் எனது அசையும், அசையாத சொத்து கள் அனைத்தும் ராசாத்திக்கு போகக்கூடிய வகையில் ராசாத்திக்கு அற்றனி பவர் செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்...

அதை சுலபமாகச் செய்து தரலாம் எனச் சொன்ன போதும் "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?... டென்மார்க்குக்கு போய்ச் செய்யலாம் தானே?" என்று கேட்டார்கள்.

"டென்மார்க் போவதற்கு இடையில் அடுத்து சுனாமி வந்தால் என்ன செய்வது?" என்று அவர்களையே திரும்பக் கேட்டேன்.

அதிகாரி என்னை விநோதமாகப் பார்த்துவிட்டு அதற்கான படிவங்களை நிரப்பித் தரும்படி என்னிடம் தந்தார்.

எனக்கு சித்தசுவாதீனம் என நினைத்திருக்கக்கூடும்.

எல்லாம் சுமார் இரண்டு மணித்தியாலத்துள் முடிந்து விட்டது.

படிப்பகம்

padippakam



பெரிய வீடும் அதோடு சேர்ந்த காணிகள் மட்டும் அப்பா அம்மா காலத்திற்குப் பின்பு ராசாத்திக்கு எனவும், மற்றைய தென்னங்காணிகள்... பனங்காணிகள்... புகையிலைத் தோட்டம்... மிளகாய்த் தோட்டம்... அனைத்தும் இயக்கத் திற்குப் போன மகனுக்கும் மற்றைய மூன்று பெண் பிள்ளைகளுக்கும் சரிசமமாகப் பிரித்து எழுதியிருந்தேன்.

அதேபோல எனது டென்மார்க் சொத்துகள் அனைத் தும்... இலங்கைக் காசுக்கு எப்பிடியும் இரண்டு கோடி வரும்... போரால் கால் கைகளை இழந்து அகதி முகாம் களில் வாழும் இளம் பிள்ளைகளின் எதிர்காலத்திற்குப் பயன்படுத்த வேண்டும். அவர்கள் எந்த இயக்கங்களில் இருந்தவர்களாயும் இருக்கலாம்... அல்லது கிபீர் விமானங் களின் குண்டடிகளில் பாதிக்கப்பட்டவர்களாய் இருக்க லாம். அதனை ராசாத்தியும் அவள் இல்லாத காலங்களில் அவளின் பிள்ளைகளுமே நிர்வகிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தேன்.

நாள் குறிக்கப்பட்ட ஆயுள்கைதி போல எல்லாவற்றை யும் நடத்தி முடிக்க வேண்டிய தேவை... அதுவும் டென் மார்க்கிற்குப் போகும்பொழுது அங்கு நிலைமை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது.

றோவோடு சேர்ந்து இயக்கங்களைக் காட்டிக் கொடுக்க வெளிக்கிட்டவன் என்ற முத்திரைதான் குத்தப்படும்... உண்மையை யாருக்கும் விளங்கப்படுத்த முடியாது... அல்லது விளங்கிக் கொள்ளவும் மாட்டார்கள்... தவிரவும் அமுதா நாயர் என்ற மலையாளப் பெண்ணுடன் கள்ளத் தொடர்புக்கு முயற்சித்தவன் என்று எத்தனை எத்தனையோ வர்ணங்கள் பூசப்படும்.

படிப்பகம்

padippakam



இத்தனையிலும் இருந்து நான் தப்ப வேண்டும்... இந்த முத்திரைகளால் அப்பா துவண்டு போவார்... இன்று வரை என்மீது கொண்டிருக்கும் அபிமானத்தை ராசாத்தி இழந்து விடக்கூடும்... எங்கள் பரம்பரைக்குத் தீராத வடு வந்து விடும்.

அப்பா... அப்பா... அப்பா...

மீண்டும் அப்பாவையும் அம்மாவையும் தொலைபேசி தேடியது.

பதில்... வெறும் ரிங்டோன்தான்... எனது பெற்றோர் என்று யாராவது கடத்தி விட்டார்களா... எதுவும் நடக்கலாம் என என் மனது சொல்லிக் கொண்டது.

சங்கானைக்கு டெலிபோன் பண்ணி அங்கு வந்திருக் கிறார்களா என்று கேட்கலாம் என நினைத்தாலும் யாரைத் தொலைபேசியில் அழைப்பது?

ராசாத்தியின் பிள்ளைகளிடம் கைத்தொலைபேசி இருக்கலாம்... ஆனால் இன்று வரை என்னிடம் அவர் களின் நம்பர் தெரியாது. ஒருக்கால் கூட ராசாத்தியிடம் கதைத்ததில்லை.

எப்படித் தொடர்பு கொள்வது?

எப்படித் தொடர்பு கொள்வது??

எப்படித் தொடர்பு கொள்வது???

சங்கானைத் தபால் நிலையத்தைத் தொடர்பு கொண்டால்!

மூளைக்குள் ஒரு சின்னப் பொறி.

படிப்பகம்

padippakam



நேரத்தைத் திருப்பிப் பார்த்தேன்.

சிங்கப்பூரில் மாலை 6 மணி. அங்கு இரவு 9 மணி.

விடியட்டும்... றை பண்ணுவோம் என எனக்கு நான் சொல் லிக்கொண்டபோதும்.. ஏன் இதனையே நான் தாய்லாந்தில் வைத்துச் செய்யவில்லை என ஆச்சரியப்பட்டேன்.

தோல்விகளில் பாடம் கற்பதைத்தானே அனுபவம் என்கின்றோம்.

எம்பசியில் இருந்து ஒரு டக்ஸியை அமர்த்திக் கொண்டு, நான் டென்மார்க்கில் இருந்தே பதிவு செய்திருந்த ஹோட்டலுக்குப் போனேன்.

அது தமிழர்கள் அதிகம் இருக்கும் சிரங்கூன் பிரதேசம்.

முதல் வேலையாக போனவுடன் என் மெயில்களை செக்பண்ண வேண்டும்... குறிப்பிட்ட இணையத்தளங் களைப் பார்த்து நிலைமைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அறைக்குள் வந்ததும் எனது கம்பியூட்டரை இன்ரநெற் இணைப்புக்கு கொடுக்கப் போன சமயத்தில் மீண்டும் மூளைக்குள் ஒரு பொறி.

சிங்கப்பூரில் நான் எந்த ஹோட்டலில் இருக்கின்றேன் என்பதை நானே காட்டிக் கொடுத்த மாதிரிப் போய்விடும். எனவே ஏதாவது இன்ரநெற் கபேயில் போய்த்தான் செக் பண்ண வேண்டும்... அத்துடன் அப்பா சொன்ன அம்மாவுக்கான பட்டுச்சேலை..

குளித்து உடுப்பு மாற்றிக்கொண்டு கீழே இறங்கினேன்.

படிப்பகம்

padippakam



சிங்கப்பூர் அழகிய நியோன் விளக்குகளின் ஒளியில் மிளிர்ந்தது.

சிரங்கூன் வீதியில் காளிகோவிலை அடுத்ததாக இரு இன்ரநெற் கபே இருப்பதாகச் சொன்னார்கள்.

காளி கோயிலைத் தாண்டும்பொழுது உள்ளே சாயங்காலப் பூஜை நடந்து கொண்டிருந்தது. வீதிகளில் நின்றும் சிலர் கும்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவனாக நானும் நின்று தீபம் காட்டும் பொழுது கையெடுத்துக் கும்பிட்டேன்.

வழமைபோல அப்பா, அம்மா, ராசாத்தி சுகமாக இருக்க வேண்டும்... இதுதான் எப்போதும் என் பிரார்த்தனை... அதையே காளிகோயில் வாசலில் நின்றும் வேண்டிக் கொண்டேன்.

மற்றவர்களைப் போல் சப்பாத்துகளைக் கழற்றிவிட்டு பைப் தண்ணியால் கால்களைக் குளிர கழுவிவிட்டு வீதி சுற்றிக் கும்பிட்டு விட்டு விபூதியை வேண்டிப் பூசி விட்டு ஒரு தூணுடன் அப்பாடா என்று சாய்ந்திருந்தால்... நன்றாகத் தான் இருக்கும்.

ஆனால், மரணம் துரத்தும் மனிதனைப்போன்ற மன நிலையில் உள்ள என்னால் அமைதியாகக் கும்பிட முடியாது எனத் தெரியும்.

இப்போ, இன்ரநெற் கபேக்கு போவோம்.. நாளை மறுநாள் பயணம் செய்ய முதல் ஒரு தடவை இங்கு வருவோம் என நினைத்தபடியே இன்ரநெற் கபேக்குள் நுழைந்தேன்.

முதலில் எனது மெயிலைத் திறந்தேன்.

படிப்பகம்

padippakam



விடுதலைப் போராட்டம் - பாகம் 2 எழுதும் இணையத்தள ஆசிரியர் போட்டிருந்தார். தங்கள் இணையத்தளம் மீண்டும் இயங்கத் தொடங்கி விட்டதாயும்... தங்களுக்கு என்னைப் பற்றி அவதூறான ஒரு தகவல் வந்தது என்றும்... தாம் அதனைப் பொருட்படுத்தவில்லை என்றும்...

மனதுள் நன்றி தெரிவித்துக்கொண்டேன்... இந்தத் தொடருக்குள்ளால்தான் நான் குற்றமற்றவன் என்பதை ஊர் உலகத்துக்குக் காட்ட வேண்டும்.

மற்றையது ஓர் அனாமதேய மெயில் - ஆங்கிலத்தில் இருந்தது.

வெயிற்றிங் போர் யுவ அரைவல் இன் டென்மார்க்... என்றிருந்தது.

பின்பு இணையத்தளப் பக்கங்களைப் பார்த்தேன்.

அவர்களின் இணையத்தளங்களைப் பார்த்தேன்... அமுதன் நாயரின் வாழ்க்கை வரலாறு... எப்படி எப்படி இலங்கைத் தமிழரைக் கைக்குள் போட்டு அவர்களிடம் இருந்து இயக்கங்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டான்... றவல் ஏஜன்டாக... ஆட்களை ஐரோப்பாவுக்குள் கொண்டு வருபவனாக... இந்தியாவில் இருந்து மரக்கறி, சேலை வகைகள் இறக்குமதிக்கு உதவும் ஏஜன்டாக... இந்தியாவுக்கு நம்மவர் செல்லும்பொழுது பெண்கள் சப்ளை செய்யும் ஏஜன்டாக... எக்செற்றா எக்செற்றா.

தொடர்ந்து... எவ்வகையிலும் அவனுக்கு உதவி செய்தவர்கள் தமிழ் இனத்தின் துரோகிகள் எனவும் கட்டுரை முடிக்கப்பட்டிருந்தது.

படிப்பகம்

padippakam



என்னையே நான் பார்த்துக் கொண்டேன்.

“ஓகே! கோ அஹெட்...” எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

இன்ரநெற் கபேயில் இருந்து வெளியேறி முன்னே யுள்ள இந்திய சேலைகள் விற்கும் ஒரு பெரிய ரெக்ஸ்ரைலுக்குப் போனேன்.

அம்மாக்கு வேண்டச் சொல்லி அப்பா சொன்ன பட்டுச் சேலை ஒன்றை வாங்கினேன். பின் மனம் கேட்கவில்லை. மேலும் இரண்டு வேண்டினேன்... இனி அப்பாக்கு... அவருக்கும் ஒரு பட்டு வேட்டி சால்வை எடுத்தேன். கட்டாயம் சந்தோசப்படுவார்... இவை போய்ச் சேர்ந்ததும் இனி நாலைந்து நாட்களுக்கு இதுபற்றிய கதைகளாய்த் தான் இருக்கும்.

வாங்கிய அனைத்தையும் நாளைக்காலை விமானத் தபாலில் அனுப்ப வேண்டும்.

அதற்கு முதல் விடியப்புறம் சங்கானைத் தபால் கந்தோருக்கு எப்படியும் டெலிபோன் எடுக்க வேண்டும். நிச்சயம் சிங்கப்பூர் தொலைத்தொடர்புச் சேவை அதற்கு உதவும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அதற்கு அவர்களிடம் உயர்ந்த தொழில்நுட்பமும் சேவை மனப்பான்மையும் உண்டு... அல்லது இந்த நாடு இந்தளவு இங்குள்ள வானைத்தொடும் கட்டடங்களாக வளர்ந்திருக்க மாட்டாது.

இரவுச் சாப்பாட்டுக் கடைகள் துரிதமாக இயங்கின.

ஏதோ, பசிக்கு வேண்டி வாயில் போட்டுக்கொண்டு விரைவாக அறைக்குத் திரும்பினேன். எண்ணமும்

படிப்பகம்

padippakam



செயலும் எனக்கு இப்ப இரண்டு நாளாகத் தடுமாறத் தொடங்கியிருந்தது வடிவாய்த் தெரிந்தது... இல்லாவிடில் உணவு வகையை வகையாக ருசித்துத்தான் சாப்பிட்டு பழக்கம்... இப்போ... மரணம் துரத்தும் மனிதனாய்...

ஹோட்டலுக்கு வந்தபொழுது இரவு பத்தரைமணியாகி விட்டது.

சிங்கப்பூர் தொலைத்தொடர்பு சேவைக்குத் தொடர்பு கொண்டு, சுனாமிக்குப் பின்பு எனது பெற்றோர்களைத் தேடும் பிரச்சனைகளை விளக்கமாய்ச் சொல்லி, இலங்கை தொலைபேசிக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக சங்கானை தபால் நிலையத்துக்குத் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கு மாறும் அதற்குரிய அனைத்து செலவினங்களையும் நான் தங்கியிருக்கும் ஹோட்டலில் செலுத்துவதாயும் உறுதி அளித்தேன்.

“நோ புறப்ளம்... வி வில் றை ரூ ஹெல்ப் யூ” என மறு முனையில் சொல்லப்பட்டது.

நான் நினைத்தது வீண்போகவில்லை.

கடவுளுக்கு என் மனம் நன்றி சொல்லிக் கொண்டது.

அப்பா அம்மாக்கு வேண்டிய பட்டு சேலைகளையும் பட்டு வேட்டியையும் மீண்டும் ஒரு தடவை எடுத்துப் பார்த்த பின்பு கதிரையில் போட்டு விட்டு நானும் சாரத்துக்குள் நுழைந்து கொண்டேன்.

அடுத்தது என்ன என மனம் அங்கலாய்க்க முதல்... அப்பா, அம்மாவின் சுகத்தை அறிவோம்... பின்பு நடக்கவேண்டி யதைப் பார்ப்போம்... என கை தலைமாட்டில் இருந்த விளக்கை அணைக்க கண்கள் தானாக மூடிக்கொண்டன.

படிப்பகம்

padippakam



விடியப்புறம் நாலு அல்லது நாலரை மணியென்று நினைக்கின்றேன்.

தொலைபேசியின் சத்தத்தில் கண் விழித்தேன்.

“குட் மோர்னிங்” என்று சீனநாட்டுப் பெண் தொலை பேசி இலாகாவில் இருந்து பேசினாள்.

“வி ஹாவ் கொற் த லைன்...”

நன்றி கூறிக்கொண்டு இணைப்பை வேண்டிக் கொண்டேன்.

சங்கானை தபால் அலுவலகம்தான்.

வலுசுருக்கமாக என்னை அறிமுகம் செய்துகொண் டேன். அத்துடன் அப்பா, அம்மாவை கொழும்பில் தொடர்பு கொள்ளமுடியாததால் சங்கானையில் விசாரிக்கலாம் என்று டெலிபோன் எடுத்த விபரத்தைச் சொன்னேன்.

“தம்பி... உங்களை எனக்கு நல்லாத் தெரியும்... என்ரை மகனோடைதான் நீங்கள் படிச்சனீங்கள்... உங்களைத் தொடர்பு கொள்ள உங்கடை அம்மா எத்தினையோ முறை றை பண்ணினவா.. கடைசியாக... டென்மார்க்கிலை இருக்கிற ஒரு பையன்... பொறும்... பொறும்... பேர் ஞாபகத்துக்கு வருகுதில்லை... ஆ... மூர்த்தி... அந்தப் பையனுக்கு போன் பண்ணிக் கதைச்சவா... அவருக்கும் நீர் நிக்கிற விலாசம் எதுவும் தெரியேல்லை... உம்மை இனியும் தொடர்பு கொள்ள ஏலாது எண்ட பிறகு, மூண்டு நாளாய்ப் போச்சுது எண்டு நேற்றுத் தான் எடுத்தவை...”

“என்ன சொல்லுறியள்... யாருக்கு என்ன நடந்தது...”

படிப்பகம்

padippakam



"கவலைப்படாதையும் தம்பி... உங்கடை அப்பாக்கு தான்..."

நின்றுகொண்டு கதைத்த நான் அப்பிடியே நிலத்தில் உட்கார்ந்து விட்டேன்...

அவர் தொடர்ந்தார்.

"சுனாமி அடிச்ச அன்று பின்னேரம் போலை ஹாட் அட்டாக் வந்திருக்கு... கஷ்டகாலம் போலை... முதல் அட்டாக்கே அவருக்கு எமனாகிப் போட்டுது... அம்மாக்கு உம்மையும் தொடர்பு கொள்ள முடியேல்லை... பொம்பிளை தனிய கொழும்பிலை என்ன செய்வா... தான் செத்தாலும் உம்மை கொழும்புக்கு கூப்பிடக்கூடாது எண்டு முதலே சொல்லி வைச்சவராம்... அதுதான் தாரோ தூரத்து சொந்தக் காரராம்... மணியகாரமாமாக்களாம்... றெட் குறொஸ் வானிலை ஒழுங்கு செய்து கொண்டு வந்தவை.. நேற்று எல்லாம் முடிஞ்சுது... நானும் போட்டுத்தான் வந்தனான்..."

நான் எதுவுமே பேசவில்லை...

"என்ன தம்பி பேசாமல் இருக்கிறீர்... எல்லாருக்கும் கவலைதான்... அவனுக்கு என்ன சொல்லப்போறன் எண்டுதான் கடைசிவரை உம்மடை அம்மா அழுது கொண்டிருந்தவா... அம்மாக்கு என்ன சொல்லிவிட..."

எனக்கு கண்களால் ஓடிக்கொண்டிருந்தது.

"நான் அம்மாவோடை கதைக்க உதவி செய்வியளோ..."

எனக்கு குரல் அடைத்தது.

படிப்பகம்

padippakam



"கட்டாயம் தம்பி... இந்த உதவி செய்யாமலோ... இந்தாரும் எங்கடை கந்தோர் நம்பர்... ஒரு மணித்தியாலத்திலை அடியும். எப்பிடியும் நான் அம்மாவைக் கூப்பிட்டு வைச்சிருக்கிறன்..."

ரிசீவரை தொலைபேசியின் மேல் வைத்தேன்.

எழுந்திருக்க மனமில்லாது அப்படியே இருந்தேன்... எனக்கு எதுவுமே தோன்றவில்லை.

இந்த உலகத்துக்கும் எனக்கும் இருந்த தொடர்பு அற்றுப் போய் விட்டது போல இருந்தது.

தொப்புள் கொடி உறவுபோல இது தோள் மீதும் மார் மீதும் என்னைத் தாங்கிய உறவு... என் படிப்பையும் என் வளர்ச்சியையம் தவிர தனக்காக எதையும் அவர் ஆசைப்படவில்லை.

ஏன் இப்பிடி... இதுக்காகத்தானா தாய்லாந்தில் அந்தக் கனவு கண்டேன்... அம்மம்மாவும் செல்லனும் வந்து அப்பாவைக் கூட்டிப் போனார்களா? கனவில் செய்தது தானா நான் அப்பாக்குச் செய்த ஈமக்கிரியைகள்?... கிணற்றடியில் வைத்து தோயவார்த்து... என் தோள் மீது போட்டுக் கொண்டு ஓடி...

அப்பா நீ எனக்கு வேண்டும்!

நீ இப்போது இருந்திருந்தால் எனக்கு இன்னமும் தைரிய மாய் இருந்திருக்கும்... இல்லை... இல்லை... என்னை நினைத்தே தினம் தினம் செத்திருப்பாய்... மரணம் என்னை மட்டும் துரத்தியிராது... உன்னையும் சேர்த்தே துரத்தியிருக்கும்.

படிப்பகம்

padippakam



கதவுக்கு வெளியே காலைப்பேப்பர் போடும் சத்தம் கேட்டது.

விடிந்து விட்டது போலும்.

நேரத்தை திருப்பிப் பார்த்தேன் - இன்னமும் பத்து நிமிடம் இருக்கு நான் திரும்ப சங்கானை போஸ்ட் ஒவ்வீசுக்கு டெலிபோன் எடுக்க...

எதையும் செய்யத் தோன்றாமல் அறையைச் சுற்றி என் கண்கள் நோட்டம் இட்டுக் கொண்டு வந்தன.

நவீனமயம் என்பது ஒவ்வோர் மூலையிலும் தெரிந்தது.

இப்பிடி ஒரு சிங்கப்பூராக எப்போது எங்கள் யாழ்ப்பாணம்... எங்கள் வன்னி... எங்கள் மட்டக்களப்பு எல்லாம் மாறும்?

உலகநாடுகள் எல்லாம் எங்கெங்கோ போய்விட, எம்மை நாமே அடித்துக் கொண்டு சாவதில்தானே நாம் முன்னுக்கு நிற்கின்றோம்.

எனக்கே உரித்தான அந்த உலகக் கவலைகள்... அல்லது அக்கறைகள்... இந்த நேரத்திலும் என்னிடம் ஏன் வருகின்றது... இவைகளும் சேர்ந்து தானே அவர்களுடன் தீக்குச்சியாக உரசிக் கொண்டது... விடுதலைப் போராட்டம் பாகம் - 2ஐ எழுத வைத்தது... அமுதா நாயர் என்ற பெயரில் றோவின் கைக்கூலி ஒருவன் என்னைத் தளும்ப வைத்தது... இப்போது துரோகியாக நான் சித்தரிக்கப்படப் போகின்றேன்.

வேண்டாம்... இப்போது எந்த எண்ணங்களும்... ஆராய்ச்சிகளும்...

படிப்பகம்

padippakam



அம்மாக்கு டெலிபோன் எடுக்க வேண்டும்.

விரல்கள் எண்களில் பதிந்தன.

நல்ல காலம்... லைன் உடனே கிடைத்து விட்டது.

என்னையும் அறியாமல் கைகள் நடுங்கின... அம்மா அழப்போகின்றா என்ற நினைப்பு போலும்...

மறுமுனையில் போஸ்ட் மாஸ்டர்தான் டெலிபோனை எடுத்தார்.

"நான்தான் சிங்கப்பூரில் இருந்து எடுக்கிறன்" என்று சொன்னதும், "பொறுங்கோ தம்பி. அம்மா இங்கை நிக்கிறா கொடுக்கிறன்... இந்தாங்கோ மகன்தான்..."

அம்மா ரிசீவரை வேண்டுவது கேட்கிறது...

"அ... ம்... மா..." தயங்கித் தயங்கி... நான் கூப்பிட முதலே

"ஐயோ தம்பி அப்பா உன்னை விட்டுட்டு போட்டாரடா..."

நான் கண்களை இறுக மூடிக்கொண்டேன்.

குரல் வர மறுத்தது...

அம்மா அழாதையுங்கோ எனச் சொல்ல முடியாது நான் அழுதேன்.

இரண்டு பேருமே இருமுனையில் அழுதுகொண்டு நின்றிருப்போம்.

"அப்பாக்கு என்ன நடந்தது?"

"அவருக்கு ஒண்டுமே நடக்கேல்லையடா... உன்னோடை முதன் நாள் நல்லாய்தானே கதைச்சவர்... அடுத்தநாள்

படிப்பகம்

padippakam



ரீ.வி.யைப் பார்த்துக்கொண்டு இருந்தவர்... நீ நிண்ட இடத்திலை இருந்த ஹோட்டல்களை சுனாமி அடித்துக் கொண்டு போனதைப் பார்த்தவர்... கண் எல்லாம் கலங்க... தம்பியன் உங்கைதான் நிண்டிருக்க வேண்டும் எண்டு சொன்னவர்... பேந்தும் தம்பியன்... தம்பியன்... எண்டு ஏதோ சொல்ல வெளிக்கிட்டவர்... அவ்வளவுதான்... நெஞ்சுக்கை நோகுது எண்டு சொன்னார். நான் இஞ்சி தட்டி தேத்தண்ணி ஊத்திக்கொண்டு வாறதுக் கிடையிலை..."

மீண்டும் அம்மா அழத்தொடங்கினா...

"நான் பொம்பிளை தனிய என்ன செய்யுறது... மணியக் காரமாமாக்களை அடிச்சுக் கூப்பிட்டன்... டென்மார்க் மூர்த்திக்கு டெலிபோன் எடுத்து நீ நிக்கிற இடம் எதுவும் தெரியுமோ எண்டு கேட்டன். அந்தப் பொடியனுக்கும் எதுவும் தெரியேல்லை... அண்டைக்கு இரவே அப்பாவை சங்கானைக்குக் கொண்டு வந்திட்டம்... நேற்றைக்குத் தான் எல்லாம் செய்தது... அப்பாக்கு ஒரு குறையும் விடாமல் எங்கடை சனங்கள் வடிவாய் செய்தது... நீதான் இல்லாமல் போயிட்டாயடா..."

அம்மா மீண்டும் அழுதா.

"இப்ப தாரம்மா உங்களுக்கு உதவி..."

"இப்ப வீடு முட்ட இனம் சனம் நிக்குது... நாளைக்கு செலவு வைச்சிருக்கிறம்... அது முடிய எல்லாரும் போயிடுவினம்... பின் மாலுக்கை செல்லன்ரை பெட்டையும் அவளின்ரை பிள்ளையளும்தானே இருக்குதுகள்... அதுகள்தான் முறிஞ்சு முறிஞ்சு எல்லாம் செய்ததுகள்... நாங்கள் டென் மார்க்குக்கு வந்தது தொடக்கம் அதுகள்தானே வீடு

படிப்பகம்

padippakam



வளவைப் பார்த்ததுகள்... அதுகளை இனியும் எழுப்பக் கூடாது... இனியும் எனக்கு உதவியாய் இருக்குங்கள்..."

ராசாத்தியைத்தான் அம்மா செல்லன்டை பெட்டை என்று சொல்லுறா.

அப்பா செய்த ஒரு நல்ல காரியம்... அம்மாக்கு உறுதுணையாய் இருக்க வழிசெய்துவிட்டுப் போயிருக் கிறார்... வேறை யார் எண்டாலும் அம்மாவை ராசாத்தி போல பார்க்க மாட்டினம்.

"அம்மா..."

"சொல்லு ராசா..."

"இனி நீங்கள் கொழும்புக்கு வரவேண்டாம்... உங்கையே இருங்கோ... இனம்... சனத்தோடை இருந்தால்தான் உங்களுக்கும் ஆறுதல்... அப்பாட்டை பென்சன் காசு வரும்... அது உங்களுக்குக் காணும்... அதைவிட டென்மார்க் போன உடனை உங்கடை பாங் நம்பருக்கு குறைஞ்சது இருபது இருபத்தைஞ்சு இலட்சமாவது அனுப்புறன்... அதை பிக்ஸட் டிப்போசிற்றிலை போடுங்கோ..."

"எனக்கென்னத்துக்கடா காசு... தேவையள் எண்டால் நீ உடனை அனுப்ப மாட்டியே..."

அனுப்புறத்துக்கு நான் இருப்பனோ என அடி மனத்துக்குள் நானே எனக்குள் சொல்லிக் கொண்டேன். ஆனாலும் சுதாரித்துக் கொண்டு...

"அந்தரம் அவசரம் வரேக்கை இப்படி கண் காணாத இடங்களிலை நிண்டால் என்ன செய்யுறது..."

படிப்பகம்

padippakam



"சரி... நீ சரியெண்டு நினைக்கிறதை செய்... நெடுக அப்பா சொல்லுறவரடா... நான் இல்லாக் காலத்திலை நீ தம்பியன் சொல்லுறபடி செய்... என்னைவிட அவன் உன்னை நல்லாப் பார்ப்பன் எண்டு..."

"சரி, நாளைக்கு அப்பாவின்ரை செலவை வடிவாய்ச் செய்யுங்கோ... அப்பிடியே அந்தியேட்டியையும் செய்யுங்கோ..." என்று கதைத்துக் கொண்டிருந்த எனக்கு முதன்நாள் வேண்டிக் கதிரையில் போட்டிருந்த அம்மாவின் பட்டுச் சேலைகளும் அப்பாவின் பட்டு வேட்டியும் கண்களில் பட மேலும் குரல் கட்டிக் கொண்டது.

"என்னடா ராசா... எனக்கு ஆறுதல் சொல்லிப் போட்டு நீ...."

"இல்லையம்மா... அப்பா உங்களுக்கு வேண்டச் சொன்ன பட்டுச் சேலை..." சொல்லி முடிக்காமல் அழத் தொடங்கினேன்.

"ஏன் தம்பி உதுக்கு கவலைப்படுகிறாய்... தாராகிலும் ஏழை எளியதுகளுக்கு தானமாய்க் கொடு... அவர் இருந்த வரை எல்லாம் வடிவாய் வெளிக்கிட்டு அழகு பார்த்தது போதும்..."

அம்மாவை நினைக்க எனக்கு இன்னும் பாவமாய் இருக்கு...

இனி வெள்ளைச் சேலைகளில்... நல்லதுகளுக்கு பின்னாலையும்... கெட்டதுகளுக்கு முன்னாலையும் விடுவினம்.

படிப்பகம்

padippakam



கடவுளே...

“சரியப்பு நீ கவலைப்படாமல் இரு. நீ சந்தோஷமாய் இருந்தால் தான் அப்பா நிம்மதியாய் இருப்பார்.”

“சரியம்மா” என்று சொல்லி டெலிபோனை வைத்தேன்.

டெலிபோனை வைத்தபின்பும் எனக்கு நிலத்தில் இருந்து எழுந்திருக்கத் தோன்றவில்லை.

அம்மா என்னுடன் கதைத்ததுகளை என் மனம் மீண்டும் அசைபோடத் தொடங்கியது.

அப்பா உன்னை விட்டுட்டு போட்டாரடா... என அம்மா அழுதது திரும்பத் திரும்ப என் காதுகளில் ஒலித்தது. பொதுவாக எல்லா அம்மாமாரும் அப்பா எங்களை விட்டுப் போட்டார் என்றுதான் அழுவார்கள்... அம்மா மட்டும் அப்பா உன்னை விட்டுட்டு போட்டாரடா... என்று அழுதா... அவாவுக்கு வடிவாய் தெரியும்... நான் தன்மேல் இல்லாத... அல்லது அதற்கும் மேலான ஒரு பிணைப்பை அப்பா வோடை வைத்திருந்தனான் எண்டு... இப்போது தான் இருந்தும் கூட நான் தனிச்சுப் போட்டன் என்று கவலைப்படுறா என நன்கு தெரிந்தது... இதுதான் உண்மையும் கூட.

அம்மா சொன்னது போல நான் தனித்துதான் போய் விட்டேன்... என் வெற்றிகளை எல்லாம் பங்கு போட்ட என் அப்பா இப்போது என் தோல்விகளைப் பங்கு போட பக்கத்தில் இல்லாது தனித்து தான் போய்விட்டேன்.

ஆனால் ஒருவகையில் காலம் நல்லதைத்தான் செய்திருக்கு... அலையில் கொண்டு போட்டுது என்று

படிப்பகம்

padippakam



பயந்து அதாலை மாரடைப்பு வந்த அப்பா உயிருடன் இருந்து, நான் டென்மார்க்குக்குப் போனபின்பு சந்திக்க இருக்கின்ற போராட்டங்களை... தோல்விகளை... அவமானங்களைக் கேள்விப்பட உயிருடன் இருந்திருந் தால் அணு அணுவாய் செத்திருப்பார்... என் பிள்ளை அப்பிடிப்பட்டவன் இல்லை எனச் சொல்லிச் சொல்லியே உயிர் விட்டிருப்பார்.

எத்தனை மணித்தியாலம் அப்படியே யோசித்துக் கொண்டு இருந்தேன் எனத் தெரியவில்லை... ஆனால் ஒரு சமயத்தில் யோசனை என்ற ஒன்று மரத்துப்போய் தலையெல்லாம் விறைத்தமாதிரி இருந்தது.

எழுந்து போய் சவரைத் திறந்துவிட்டு தண்ணி யெல்லாம் தலைமேலும் மேன்மேலும் தானாகக் கொட்ட விட்டு நிலத்தில் இருந்து கொண்டேன்...

ஒரு தியானம் போல...

என்னில் படிந்திருக்கிற கறையெல்லாத்தையும் இந்த களங்கமில்லாத நீர் கழுவிச் செல்ல வேண்டும்...

அகலிகையின் மீது ஒரு கணம் சபலப்பட்டு இந்திரன் இமயத்தில் இருந்து இறங்கி வந்தது போல அமுதா நாயர் என்ற ஒரு பொய் மானினால் நானும் ஏமாற்றப்பட்டு விட்டேன் என்ற உண்மை என்னை நன்கு உறுத்தியது.

என்னில் படிந்துள்ள கறையெல்லாவற்றையும் இந்த நீர் கழுவவேண்டும்...

இந்தக் கறையை நீக்க நான் ஒரு புது அவதாரம் எடுக்க வேண்டும்... அதற்கு அப்பா உன் ஆசி வேண்டும்... உன்

படிப்பகம்

padippakam



பலம் வேண்டும்... அத்தனையையும் எனக்குத் தா... கோழைகளிடம் நான் தோற்றுவிடக்கூடாது... கோழை களிடம் நான் தோற்றுவிடக்கூடாது... திரும்பத் திரும்ப எனக்கு நான் சொல்லிக் கொண்டேன்.

தலை மீது தண்ணீர் கொட்டிக் கொண்டு இருந்தது.

உடம்பும் மனசும் இலேசாகிக் கொண்டு இருந்தது...

வெளியே சூரியன் உச்சிக்கு வந்து கொண்டிருந்தான்.

இனியும் ஹோட்டலுக்குள் அடங்கிக் கொண்டிருக்க இருக்க விசர் வரும் போல் இருக்கவே உடுப்பை மாத்திக் கொண்டு கீழே இறங்கிப் போனேன்.

சிரங்கூன் வீதிகள் முழுவதிலும்... காரணமின்றி என் கால்கள் திரிந்தன... அவ்வாறே கடைகளுக்குள்ளும் ஏறி இறங்கினேன்.

ஆனால் எங்கு திரிந்தாலும் அடிக்கடி திரும்பி பின்னால் பார்த்துக் கொண்டேன்... யாராவது சந்தேகப்படும்படி என்னைத் தொடர்கிறார்களா என்று... யாரும் அப்படித் தொடராவிட்டாலும் என்னை யாரோ... அல்லது எதுவோ... தொடர்கிறது என்பதில் உறுதியாய் இருந்தேன். அது மரணமாய்க் கூட இருக்கலாம்.

நிச்சயம் டென்மார்க்குக்கு எப்போது வருவேன் என்று அவர்கள் விபரம் எடுத்து வைத்திருப்பார்கள்... அவ்வாறே சிங்கப்பூரில் இருந்து எந்த பிளைட்டில் எத்தனை மணிக்கு ஏறுவேன் எனவும் விபரம் எடுத்து வைத்திருப்பார்கள்.

ஒரு இன்ரநெற் கபேயினுள் மீண்டும் போய் இணையத் தளங்களைப் பார்த்தேன்.

படிப்பகம்

padippakam



அமுதன் நாயரின் கொலை பல கோணங்களிலும் பல விதமாக மக்களைச் சிந்திக்க வைத்திருந்தது... எதிர் காலத்தில் முன்பின் தெரியாதவர்களுடன் பழகும் பொழுது மக்கள் எவ்வாறு விழிப்புணர்ச்சியாக இருக்க வேண்டும் என்று நடுநிலையான இணையத்தளங்கள் மக்களை எச்சரித்திருந்தன.

சுமார் இந்த இருபது இருபத்தைந்து வருட புலம்பெயர் வாழ்வில் அகதிமுகாமில் இருந்தபொழுது நிலவிய ஒற்றுமை இழந்துபோய் ஆளுக்காள் தனிமைப்பட்டி ருந்தபொழுது இப்படியான அமுதன் நாயர்கள் ஊடுரு வுவது சுலபமான காரியம் என அந்த இணையத் தளங்கள் சுட்டிக்காட்டியிருந்தன. இது ஐரோப்பாவில், அவுஸ்திரேலியாவில், கனடாவில் வாழும் அனைத்து மக்களுக்கும் பொருந்தும்.

எனக்கு நல்லாய் ஞாபகம் இருக்கு... இருபது வருடங் களுக்கு முதல் டென்மார்க்கில் எத்தனை தமிழ்ச் சங்கங்கள் இருந்தன... இப்போது அதில் கால்வாசி கூட இல்லை... அதுவும் நாலைந்து அங்கத்தவருடன்... அல்லது அவர் களின் குடும்பங்களுடன்... கேட்டால் தமிழருக்கை ஒற்றுமை இல்லை என்பது பதிலாயும் அமையும். விடுதலை இயக்கங்கள் ஒற்றுமையின்மையாலும் பதவி ஆசை யினாலும் எப்படி எப்படியெல்லாம் பிரிந்தார்களோ... அப்படிப் பிரிந்து போவதற்கு... அல்லது பிரிக்கப்படுவதற்கு இப்படியான அமுதன் நாயர்களின் சதி பெரிய பங்கு வகித்திருந்தது.

அது கடைசியில் என்னையும் பழிவாங்கி விட்டது... எனது இனத்திடமிருந்து என்னைப் பிரித்து என்னை ஒரு துரோகி என்ற முத்திரை குத்துவதற்கு ஏதுவாய் விட்டது.

படிப்பகம்

padippakam



ஆனால் என்னை நான் காப்பாற்ற வேண்டும்... நான் எழுதிவரும் விடுதலைப் போராட்டம் பாகம் - 2இன் கடைசி அத்தியாயம் அதுவாகத்தான் இருக்க வேண்டும். அது வரை நான் உயிர்வாழ வேண்டும்... அவர்களிடம் இருந்து தப்பிக்க வேண்டும்.

இனியொரு இலங்கைத் தமிழனுக்கு இந்த நிலை வரக் கூடாது... அதுக்கு அவர்களே காரணமாய் இருக்கக் கூடாது... இப்பவும் எனக்கு நூறு வீத நம்பிக்கை இருக்கு... அவர்கள் சிவராசா அண்ணை வீட்டு இருபத்தைந்தாவது கல்யாண விசேஷத்தில் என்னுடன் தாமாகவே முட்டி மோதாவிட்டால் இந்த நிலை கடைசிவரை ஏற்பட்டிருக் காது... அமுதன் நாயர் என்ற ஒரு றோவின் கையாளும் என்னிடம் நெருங்கியிருக்க மாட்டான்... இப்போது... எல்லாமே காலம் கடந்து போய்விட்டது...

போராளியாக யாரும் பிறப்பதில்லை... அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள் என்று பல இடங்களில் நான் கேட்டது, வாசித்தது போல... துரோகிகளும் உருவாவ தில்லை... அவர்களும் உருவாக்கப்படுகிறார்கள் என்பதே பொருந்தும்.

நேரத்தைப் பார்த்தேன்.

பிற்பகல் நாலு மணியாகி விட்டது.

இரவுச் சாப்பாட்டை இங்கேயே ஒரு தமிழ்க்கடையில் கட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டால் இனி நான் இறங்கி வரத் தேவையில்லை.

இன்றிரவு ஹோட்டலினுள்ளும் நாளை பிளேனிலுள்ளும் முடிந்தளவு விடுதலைப் போராட்டம்-2இன் கடைசி

படிப்பகம்

padippakam



அத்தியாயங்களை எழுதவேண்டும். இதில் அமுதன் நாயரைப் பற்றி அதிகமாக எழுதவேண்டும்... அதன் முடிவில், எவ்வாறு இயக்கங்களின் ஆதரவாளர்களினாலும், இயக்கங்களை அடியோடு ஒழித்துவிட திரைமறைவில் செயல்படும் அமுதன் நாயர் போன்றோர்களினாலும் தனிப்பட்ட ஒரு இலங்கைத் தமிழனின் வாழ்வு திசைமாறிப் போகின்றது என்பதை எழுதவேண்டும்.

சாப்பாட்டை எடுத்துக்கொண்டு ஹோட்டலுக்குத் திரும்பி விட்டேன்.

அதனை ஒரு மூலையில் வைத்துவிட்டு எனது லப்டப் கம்பியூட்டரை எடுத்துக் கொண்டு மேசையில் உட்கார்ந்து விட்டேன்.

எழுத்துக்களும் வார்த்தைகளும் தாமாக வந்து கொட்டிக் கொண்டு இருக்கத் தொடங்கின.

கற்பனைக் கதைகளுக்கோ அன்றிக் கட்டுரைகளுக்கோ தான் வார்த்தைகளைத் தேடிப் போக வேண்டும்... இது உண்மையின் குரல்... சத்தியத்தின் குரல்... அதற்கு நேர்ந்த சோதனைகள்... எனவேதான் வார்த்தைகள் தாமாக என்னிடம் ஓடி வந்துகொண்டிருந்தன.

என் எழுத்துகளில் என்றுமே கவர்ச்சி இருந்ததில்லை... வீர ஆவேசங்கள் இருந்ததில்லை... கோஷங்கள் இருந்த தில்லை... எனவேதான் வார்த்தைகளை நான் தேடிப் போகத் தேவையும் இருக்கவில்லை.

எழுதிக் கொண்டேயிருந்தேன்... நன்கு இருட்டி விட்டது... எழுதிக் கொண்டேயிருந்தேன்... கொஞ்சம் பசிக்கத் தொடங்கியது... நல்லாய்ப் பசிக்கட்டும் என விட்டுவிட்டு

படிப்பகம்

padippakam



எழுதிக் கொண்டு இருந்தேன். சாப்பிடுவதற்காய் இந்தக் கதிரையிலிருந்து எழுந்து போனால் அது என் எழுத்தின் வேகத்தைக் குறைத்துவிடும் போல் இருந்தது... அதனாலேயே பசிக்க பசிக்க இருந்து எழுதினேன்.

இம்முறை அமுதன் நாயரைப் பற்றி அதிகமாகவே எழுதினேன்... மண், பொன், பெண் இந்த மூன்றையுமே எவ்வாறு பயன்படுத்தி இலங்கைத் தமிழரை அமுதன் நாயர் விலைக்கு வேண்டியிருக்கிறான் என்பதை எழுதினேன்... இதில் என்னைச் சபலப்படுத்திய அமுதா நாயரைப் பற்றி எழுதியே ஆக வேண்டும் என்ற நினைப்பில் எழுதினேன். ராசாத்தியிடம் இவ்வளவு நாளும் மறைத்த தற்கு மனத்துக்குள் அவளிடம் மன்னிப்புக் கேட்டபடி... அமுதன் நாயர் இலக்கியத்தையும் ஒரு அழகான பெண்ணின் அழகையும் வைத்து எவ்வாறு என்னைத் தன்வசம் படிப்படியாக இழுத்துக் கொண்டான் என்பது பற்றி மனம் திறந்து எழுதினேன். இதை ஒளித்து என்னைக் காப்பாற்றுவதால் என் படைப்பு பூரணப்படும் என்பது இல்லை... எனவேதான் அனைத்து உண்மைகளையும் எழுதினேன். அத்துடன் நான் எங்கேயிருந்து இதனை எழுதுகின்றேன் எனக் குறிப்பிடாவிட்டாலும், தேதியிடப் படாத ஒரு மரணதண்டனைக் கைதியின் நிலையில் இருந்து எழுதுவதாக அதில் குறிப்பிட்டேன்...

ஆம்!

தேதியிடப்படாத ஒரு மரண தண்டனைக் கைதி!

ஆனால் யார் இந்த தண்டனையைத் தர முந்திக் கொள்ளப் போகிறார்கள் என்பதற்கு பதில் என்னிடமே இருக்க வில்லை. காரணம், அதற்குரிய துருப்புச் சீட்டுச் சரி...

படிப்பகம்

padippakam



துப்பாக்கிகள் சரி... இரண்டு மூன்று பேர் வசம் இருக்கிறது என்பதனை நான் நன்கு அறிவேன்...

ஒன்று மட்டும் உண்மை... நான் இன்று அநேகம் பேருக்கு வேண்டும்... ஒவ்வொருவரைப்பற்றி மற்றவர்களுக்குத் தெரியாமல் இருக்கும் தகவல்களைக் கறந்துகொள் வதற்காகவேனும் நான் வேண்டும்.

தொடர்ந்து கட்டுரை நீண்டு கொண்டு போனது.

நாட்டில் நடக்கும் விடுதலைப் போராட்டம் பாகம் -1இன் வெற்றியும் தோல்வியும் விடுதலைப் போராட்டம் பாகம் - 2இன் பாத்திரங்களான புலம் பெயர் தமிழர்களின் கைகளில் எவ்வளவு தூரத்தில் உள்ளது எனவும், துரோகிகளும் வெளிநாட்டுச் சக்திகளும் இரண்டையுமே மழுங்கடிக்க சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டு இருப்பார்கள் எனவும் மிக ஆணித்தரமாக எழுதினேன்.

எனது விடயத்தில் தவறு விட்டவர்கள் புரிவார்களோ என்னவோ... நாளைய சரித்திரத்தின் மூலக்கதைகளிலும் பிரதான கதைகளிலும் என்னைப் போன்றோரின் கதைகள் இல்லாவிட்டாலும்... கிளைக்கதைகளில் நிச்சயம் நான் இருப்பேன்.

மகாபாரதக்கதைகளில் பஞ்சபாண்டவரின் வெற்றியும் துரியோதனின் அழிவும் பேசப்பட்டாலும் ஒரு துரோணாச் சாரியாரின் சதிக்குப் பலியான ஏகலைவனின் கட்டை விரல் போன்று என் கதையும் சரித்திரத்தின் எங்கோ ஒரு மூலையில் தொங்கி நிற்கும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் விடுதலைப் போராட்டங் களுக்கு ஆதரவாகப் பாடுபடுவோர் எப்படி இருக்க

படிப்பகம்

padippakam



வேண்டும் என்று என் கட்டுரை சொல்லாவிட்டாலும், எப்படி இருக்கக்கூடாது என நான் சொல்லியிருக்கின்றேன் என்பதற்கு என் வாழ்க்கை சாட்சியமாகிறது என்று அமுதன் நாயர் பற்றிய அந்த நீண்ட அத்தியாயத்தை முடித்திருந்தேன்.

இனி பசியைப் பொறுக்க முடியாது.

எழுந்து போய் ரவுசரை மாற்றி சாரத்தைக் கட்டிக் கொண்டு சாப்பாட்டுப் பார்சலைத் திறந்தேன்.

அறையின் எயர்கொண்டிசனின் குளிரில் சாப்பாடும் கொஞ்சம் குளிர்ந்து போய் இருந்தது. ஆனாலும் ருசியாக இருந்தது.

அப்பா அம்மா டென்மார்க்குக்கு வந்து நின்ற ஆறு மாதமும் தமிழ்ச் சாப்பாடு சாப்பிட்டதற்குப் பின்பு நேற்றும் இன்றும்தான் இங்கு தமிழ்ச்சாப்பாடு சாப்பிடுகின்றேன். இல்லை, மூர்த்தி வீட்டிலும் ஒரு நாள் இரவு தோசை சாப்பிட்ட ஞாபகம். மூர்த்தியின் நினைப்பு வந்தபின்பு அம்மாவும் காலையில் டெலிபோனில் அவனுடன் கதைத்து என்னை விசாரித்தது பற்றிச் சொன்னது ஞாபகம் வந்தது... என்னை அவனும் தேடிக்கொண்டு இருந்திருக்கலாம்... அப்பாவைப் போல் நானும் சுனாமிக்குள் போய்விட்டதாய் அவனும் அந்தரப்பட்டிருக்கலாம்... ஆனால் இனி அவனுக்கு டெலிபோன் எடுக்க வேண்டாம்... அதுவே அவனுக்கு வேறு பிரச்சனைகளைக் கொண்டு வரலாம்... இச்சமயம் கொண்டு வந்ததோ தெரியவில்லை. எதற்கும் போய் நேரடியாகச் சந்திப்போம்.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழுந்து போய் கை கழுவிவிட்டு யன்னலினூடு கார்கள் வரிசை வரிசையாகச்

படிப்பகம்

padippakam



செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றேன்... இருட்டு ஆனதால் கார்களின் வெளிச்சமே பாம்பு மாதிரி ஊர்ந்து போவது அழகாகத் தெரிந்தது.

தொடர்ந்து எழுத வேண்டும் என மனம் மூளையை அவசரப்படுத்தினாலும் மூளை விறைத்து இருந்தது போலிருந்தது... இப்பொழுது படுத்துவிட்டு அதிகாலை எழுதினால் இன்னமும் நல்லாய் எழுதலாம் போலி ருந்தது.

எப்படியும் காலை எட்டு மணிக்கு இங்கிருந்து கிளம்பி விடவேண்டும். அப்பொழுதுதான் செக்கிங் அது இது என இரண்டு மணித்தியாலம் போக பிளேனுக்குள் போய் பதினொரு மணிக்கு இருக்க முடியும். பின்பு சுமார் பன்னிரண்டு மணித்தியாலப் பயணம். பின்பு டென்மார்க்... அங்கு...?

கேள்விக்குறி நிறைந்த இரவில் எத்தனை மணிக்கு அயர்ந்தேன் என நினைவில்லை.

நன்கு தூங்கி விட்டேன்.

அதிகாலை இருக்கும்.

டெலிபோன் மணி அடித்தது போலிருந்தது.

நித்திரை மூட்டத்தினிடையே மெதுவாய் முழித்துப் பார்த்தேன்.

டெலிபோன் மணிதான் அடித்துக் கொண்டிருந்தது.

வெளியே வெளிச்சம் விடியப்பறம் என உறுதிசெய்தது...

யார் இந்த நேரத்தில்...?

படிப்பகம்

padippakam



மனத்தினுள் ஒரு படபடப்புடன் ரிசீவரைக் கையில் எடுத்தேன்.

“பிளீஸ் வெயிற்... கோல் புறம் ஜவ்னா...”

எனக்கு ‘திக்’ என்றது.

நேற்றுத்தானே அம்மா கதைத்து விட்டுப் போனா...

தயங்கியபடி... “ஹலோ” என்றேன்.

மறுமுனையில் கொஞ்சம் மௌனம்.

“யார் கதைக்கிறீங்கள்?” திரும்பக் கேட்டேன்.

“நான் ராசாத்தி” கிணற்றின் அடியில் இருந்து குரல் வெளியில் வரும்போல் இருந்தது.

எனக்கு என்னையே நம்ப முடியவில்லை.

எண்பத்தி மூன்றாம் ஆண்டு கடைசியாகக் கேட்ட குரல்.

அவளுடன் எந்த ஒரு நாளும் ரெலிபோனில் நான் கதைத்ததில்லை. எல்லாம் கடிதமூலம்தான்.

அவளது குரலில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் ஏதோ ஒரு தடுமாற்றம் தெரிந்தது.

அம்மாவிடம் எனது தொலைபேசி நம்பரை வேண்டி யிருக்க வேண்டும்.

“என்ன ராசாத்தி... என்ன விசேஷம்...”

அவள் மௌனமாய் இருந்தாள்.

“சொல்லேன்... அப்பா மோசம் போனதுக்காக எடுத்தியா...”

படிப்பகம்

padippakam



"இல்லை..."

"அப்ப சொல்லேன்..."

"எனக்கு பயமாய் இருக்கு."

"ஏன்? என்ன நடந்தது? மகன் இயக்கத்துக்குப் போன தாலை வேறை இயக்கங்கள் அல்லது ஆமி வெருட்டுதோ..."

"இல்லை..."

"அப்ப என்னத்துக்கு பயப்பிடுறாய்?"

"நேற்று வெள்ளை வானிலை வந்த ஆட்கள் கோயிலடியிலை நிண்ட ஆட்களிட்டை உங்களைப் பற்றிக் கனநேரமாய் விசாரிச்சவையாம்... அதுதான் உங்களுக்கு ஏதுமோ எண்டு பயத்திலை உங்கடை அம் மாக்கும் சொல்லாமல் அவா எழுதி வைச்சிருந்த உங்கடை நம்பரை எடுத்துக் கொண்டு வந்தனான்..."

"எனக்கு ஒண்டுமில்லை... நீ யோசிக்க வேண்டாம்..."

"இல்லை நீங்கள் மறைக்கிறியள்..."

"இல்லையடா..." என நான் இழுத்தாலும் உண்மையைச் சொல்ல வேண்டிய வேளை வந்திட்டுது என எனக்குள் உணர்ந்தேன்...

"இல்லை சொல்லுங்கோ... உங்களுக்கு என்ன பிரச்சனை..." ராசாத்தி பிடிவாதமாகவே நின்றாள்...

"சொல்லுறன்" என்றுவிட்டு சிவராசா அண்ணையின் இருபத்தைந்தாவது திருமண வீடு தொடங்கி அமுதன் நாயர் கொலை செய்யப்பட்டது வரை மிகச் சுருக்கமாகச்

படிப்பகம்

padippakam



சொல்லி முடித்தேன்.

அவளின் அழுகை மறுமுனையில் கேட்டது.

“இப்ப எதுக்கு அழுறாய்...”

“எவ்வளவு பெரிய ஆபத்துக்கை மாட்டியிருக்கிறியள் தெரியுமே... மூத்தவனைக் கொண்டு மேலிடத்திலை யாரோடையும் கதைச்சுப் பார்க்கட்டோ...”

“விசர்க்கதை கதையாதை ராசாத்தி... அவன் போராடு றதுக்கு வீட்டை விட்டுப் போனவன்... இஞ்சை வெளி நாட்டுக்கு ஓடி வந்திட்டு வீரம் கதைக்கிறவைக்கும் எனக்கும் வந்த பிரச்சனைக்கு அந்தப் பிள்ளையை இழுக்காதை... அப்பிடி வெளிக்கிட்டால் உங்கை போராட வெளிக்கிட்டவை எல்லாருக்கும் இங்கை அப்புக் காத்து வேலை பாக்கிறதுக்குத்தான் நேரம் காணும்... அவனை நீ குழப்பவும் வேண்டாம்... எனக்காக ஏதும் கதைக்கவும் வேண்டாம்... அந்தப் பிள்ளை எந்தக் காட்டுக்கையோ... கடலுக்கையோ கிடந்து கஷ்டப் படுறானோ...”

“அவன் இனி வீட்டோடைதான்...”

எனக்கு மீண்டும் திக்கென்றது!

“அவனுக்கு என்ன?”

“சுனாமி வரேக்கை இவனும் முல்லைத்தீவு கடற்கரை யிலை சாமான் இறக்கிக்கொண்டுதானாம் நிண்டவன்... முதல் அலை வந்து இவனைத் தூக்கி எறிய மற்ற அலை வந்து ஒரு வள்ளத்தைத் தூக்கி எறிஞ்சிருக்கு... பிள்ளை யின்ரை வலது காலை அது உடைச்சுப் போட்டுது...

படிப்பகம்

padippakam



உங்கடை அப்பாவைக் கொண்டு வந்த அடுத்தநாள் தான் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலைப் போட்டு இருக்கு எண்டு செய்தி வந்தது... போய்ப் பார்க்க..." சொல்ல முடியாமல் அழுதாள்...

"என்ன நடந்தது?... சொல்லன்..."

"பிள்ளையின்ரை வலக்காலை எடுத்துப் போட்டினம்..." அழத் தொடங்கினாள்.

எனக்கு என்ன சொல்லுறது எண்டே தெரியேல்லை...

அவளைக் கடவுள் ஏன்தான் போட்டுச் சோதிக்கிறாரோ தெரியாது! என் மனம் அழுதது.

முதலில் நான்... அடுத்தது புருஷன்... அடுத்தது தகப்பன்... பிறகு பிள்ளை... இப்ப மீண்டும் நான்... இழப்புகளே அவளுக்கு வாழ்க்கையாய் ஆகிவிட்டது...

"ராசாத்தி ஒரு நிமிடம் அழாமல் நான் சொல்லுறதைக் கேள்... ஒருவிதத்திலை நீ இண்டைக்கு ரெலிபோன் எடுத்ததும் நல்லதாய் போச்சு... எல்லாம் கடிதத்திலை நான் எழுதத்தான் இருந்தனான்..."

அப்பா எனக்கு சொத்தை எழுதினது... நான் சிங்கப்பூருக்கு வந்தவுடனை ராசாத்தியின் பெயருக்கு அற்றணி ஒவ் பவர் எழுதியது... எதை எதை அம்மா இருக்கும் காலம் வரை விற்கக்கூடாது... என எல்லாம் விளக்கமாய்ச் சொல்லி, எப்பிடி இனி அவள் கால் இல்லாத மகனையும், அவன் போன்று பிள்ளைகளையும் வைத்துக் காப்பாற்ற வேண்டும் என அனைத்தையும் சொல்லி அத்தனை பத்திரங்களையும் நாளை பிளேன் ஏற முதல் பதிவுத்தபாலில் அனுப்ப இருக்கின்றேன் என்பதையும் சொன்னேன்.

படிப்பகம்

padippakam



அவள் அழத் தொடங்கினாள்.

எனது டென்மார்க் சொத்துகள் எப்படியும் இலங்கைப் பெறுமதிக்கு 2 கோடிக்கு வரும். அதை பாங்கிலை போட்டு... அதன் வட்டியிலை எப்பிடி போரால் பாதிக்கப் பட்ட அநாதைக் குழந்தைகளைப் பராமரிக்க செலவு செய்யப்பட வேண்டும் என விளக்கமாகச் சொன்னேன்.

மீண்டும் அடக்க முடியாது அவள் விக்கி விக்கி அழுதாள்...

"நீங்கள் என்ன வேலையெல்லாம் செய்து வைச்சிருக் கிறியள்... நான் யார் உங்களுக்கு?... இத்தினை வருசமும் எங்களைப் பார்த்தது போதாமல்... ஏன் உங்களை இப்பிடி வருத்தி... எந்தப் பிறப்பிலை நானும் என்ரை பிள்ளையளும் உங்களுக்குக் கைமாறு செய்யப் போறம்..." தொடர்ந்து அழுதாள்...

அவளது அழுகை என்னை உள்ளுக்குள் கரைத்துக் கொண்டிருந்தது.

"ராசாத்தி... ஒரே ஒரு கைமாத்து மட்டும் செய்... அது போதும்... எனக்கு ஏதாவது டென்மார்க்கிலை நடந்தால் அம்மாவை கடைசிவரை கவனமாய் பார்த்துக்கொள்... இப்ப அவாக்கு அதிகமாய் உன்ரை உதவி தேவைப் படாட்டியும் வயது போகப் போக யாராவது பக்கத்திலை இருந்து பார்க்க வேணும்... அந்த உதவியை உன்னட்டைத் தான் நான் கேட்க முடியும்..."

இப்பொழுது என் கண்களில் கண்ணீர்... என் தொண்டையை அடைக்கிறது...

படிப்பகம்

padippakam



"ஏன் சின்னப் பிள்ளை மாதிரி அழுகிறியள்... நான் அம்மாவை வடிவாய் பார்ப்பன்... உங்களுக்கும் ஒண்டும் நடக்காது... வடிவாய் போய்ச்சேருங்கோ... ஒண்டுக்கும் பயப்பிட வேண்டாம்.... உங்களுக்கு ஒண்டும் நடக்காது..."

"சரி... அம்மாக்கு எதுவும் தெரிய வேண்டாம்... போய் மகனை கவனமாய்ப் பார்..."

"கட்டாயம் டென்மார்க்குக்குப் போன உடனை தகவல் தாங்கோ..."

"சரியடா... போயிட்டு வா" சொல்லி விட்டு டெலிபோனை வைத்தேன்.

இளவயதினில் இயக்க வீரனாகி... ஒரு காலை சுனாமி யில் இழந்து... தன் வாழ்வைத் தொலைத்த மகன் ஒரு பக்கம்... எந்த இயக்கக்காரனின் கண்களுக்குமே றோவுடன் சேர்ந்து இயக்கங்களைக் காட்டிக் கொடுத்தவன் என்ற முத்திரையுடன் இருக்கும் பழைய காதலன் மறுபக்கம் என ராசாத்தி நொந்துதான் போயிருப்பாள்.

நிலைமை கட்டாயம் கொஞ்சம் மோசமாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எதற்காக இத்தனை வருடங் களுக்குப் பின்னால் போய் ஊரில் என்னைப் பற்றி விசாரிக்க வேண்டும்?

நிச்சயமாக அவர்கள் எனது நதிமூலம், ரிஷிமூலம் ஆராயப் புறப்பட்டு இருக்கிறார்கள். இவர் என்ன இயக்கம்?... போராளியா?... இல்லை ஆதரவாளரா?... அல்லது துரோகியா?...

சரி... இதுகளை ஆராய்ச்சி செய்வதற்கு இது நேர மில்லை... ஆராய்ச்சி செய்வதினால் எந்தப் பலனும் இல்லை...

படிப்பகம்

padippakam



இன்னும் இரண்டு மணித்தியாலத்தில் ஏர்போர்ட்டில் இருக்க வேண்டும்.

கட்டிலின் மேல் இருந்த அனைத்து உடுப்புகளையும் எடுத்து சூட்கேசினுள் அடைத்துக் கொண்டேன். கதிரையில் கிடந்த அம்மாவின் பட்டுச் சேலைகளையும் அப்பாவின் பட்டு வேட்டியையும் மட்டும் கசங்காமல் எடுத்து வைத்தேன்.

வேண்டும்பொழுது அதற்கு இருந்த அர்த்தங்கள் இப் பொழுது இல்லாமல் போய்விட்டன.

ராசாத்திக்கு ஏர்போர்ட்டில் வைத்து பதிவுத் தபாலில் அனுப்புவதற்காக அனைத்து அற்றனி ஒவ் பவர் கடிதங்களையும் புறம்பாக எடுத்து வைத்தேன்... நானில்லாக் காலங்களில் அவற்றில் நாலைந்து சீவன் களின் வாழ்க்கை அடங்கி இருக்கிறது.

லப்டப் கம்பியூட்டரையும் தோள்பையினுள் வைத்தா யிற்று.

இனி வெளிக்கிட வேண்டியது தான்.

கொஞ்சம் படபடப்பாக இருக்கின்றேன் போலும்... பல பிரச்சனைகளை நேருக்கு நேர் சந்திக்கப் போகின்றேன் என்பதாலோ என்னவோ... இல்லை முன்பொருக்கால் நினைத்தது போல மரணம் துரத்தும் மனிதன் என்றால் இப்படித்தானோ...

எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அறையைச் சுற்றி ஒரு தரம் நோட்டமிட்டேன் – ஏதாவது தவறவிட்டு விட்டேனா என்று...

படிப்பகம்

padippakam



அப்படி ஏதுமில்லை.

லிப்ற்றில் கீழே இறங்கி ரிசப்ஷனில் திறப்பை ஒப்படைத்து விட்டு வாசலில் நின்ற டக்ஸியை நோக்கிப் போனேன்.

டக்ஸிக்காரன் ஒரு தமிழனாய் இருக்க வேண்டும்... அல்லது மலையாளியாக இருக்க வேண்டும்.

ஏறிக்கொண்டேன்.

டக்ஸிக்காரன் திடீரென றோட்டில் டக்ஸியை இறக்க, நல்ல காலம் பின்னால் வந்த லொறிக்காரன் பிறேக் போட்டு விட்டான்.

இவனும் ஒரு கணம் தடுமாறிவிட்டான்.

நான் கொஞ்சம் பயந்து தான் போய் விட்டேன்.

லொறிக்காரன் சீனப்பாஷையில் இவனைப் பார்த்துப் பேசுகிறான் என்பது விளங்கியது.

என்னைப் பார்த்து அசடு வழியச் சிரித்துவிட்டு பின் அவதானமாக வண்டியை ஓட்டத் தொடங்கினான்.

எனக்கு கோபம் கோபமாய் வந்தது.

வெளியே பார்த்துக் கொண்டு இருந்தேன்.

தாய்லாந்து வீதிக்கரைகள் போலவே சிங்கப்பூர் வீதிக் கரைகளும் பச்சைப் பசேலென அழகாக இருந்தன. ஆனால் சிங்கப்பூரில் கொஞ்சம் துப்பரவு கூடத்தான்.

மனதுக்கு இயற்கை எப்போதும் அமைதியைக் கொடுக்கும் என்பது இங்கும் உண்மையாய் இருந்தது.

படிப்பகம்

padippakam



எனது மௌனம் அவனுக்குக் கஷ்டமாய் இருந்திருக்க வேண்டும் போலும்.

"எப்பிடி சார்... சிங்கப்பூரை நல்லாய் என்ஜோய் பண்ணினீங்களா?"

எனக்கு எரிச்சலாக வந்தது.

"பிளீஸ் றோட்டைப் பார்த்து கவனமாய் ஓட்டுங்க."

எனது மௌனக்கோபம் அவனுக்குப் புரிந்திருக்க வேண்டும். அவன் அதுக்குப் பிறகு ஏதும் பேசவில்லை.

கொஞ்ச தூரம் போனதும் தனது ரேப் றெக்கோடரைத் திருகிவிட்டான்.

அதில் இருந்து ஏதோ குத்தாட்டப் பாட்டுப் பாட அவனும் விசிலடிக்கத் தொடங்கி விட்டான்.

எனக்கு இன்னமும் எரிச்சல் வந்தது.

"பிளீஸ் ஸ்ரொப் இற்..."

அவன் நிறுத்திக் கொண்டான்.

தாய்லாந்தில் போன டக்ஸிப் பிரயாணத்துக்கும் இதற்கும் எத்தனை வித்தியாசம்... அல்லது இரண்டிற்கும் இடையில் என்னில் வித்தியாசமா?... இருக்கலாம் என மனம் ஆமோதித்துக் கொண்டது.

ஏர்போர்ட் போய்ச் சேரும் வரை அவன் எதுவும் கதைக்கவில்லை.

நானும் என் மௌனமும்... சிங்கப்பூரின் இயற்கைக் காட்சிகளும்... வானுயர்ந்த கட்டடங்களும்...

படிப்பகம்

padippakam



ஏர்போர்ட்டில் செக்குறுட்டி செக்கிங்... போர்டிங் பாஸ்... இமிக்கிறேசன்... கஸ்டம்ஸ் செக்கிங்... அனைத்தும் முடிய உள்ளேயிருந்த தபால் நிலையத்தில் ராசாத்திக்குரிய அந்தக் கடிதத்தை பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தேன்.

இன்னமும் அரைமணித்தியாலம் இருக்கிறது.

பிளேன் ஏறும் வாசலுக்குக் கிட்டவாகப் போய் அமர்ந்திருந்தேன்.

கொஞ்ச நேரத்தில் ஒரு எழுபது வயது மதிக்கத்தக்க வயதான தமிழ் அம்மாவும்... என் வயதை ஒத்த ஒரு ஆணும்... அவரின் மகன் போலும்... வந்து எனக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்கள்.

நான் எனது லப்டப்பில் நேற்று இரவு எழுதியவற்றில் எழுத்துப் பிழைகள் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"எக்ஸ்கியூஸ் மீ..." பக்கத்தில் வந்தவர் அழைத்தார்.

திரும்பிப் பார்த்தேன்.

"நீங்கள் ஜேர்மனிக்கோ... டென்மார்க்கிற்கோ..."

"டென்மார்க்கிற்கு..."

"நான் ஜேர்மனியிலை இறங்கிவிடுவன்... அம்மா டென்மார்க்கிலை தங்கச்சியோடை இருக்கிறவா... அது தான்... அங்காலை நீங்கள் கொஞ்சம் உதவி செய்தால்... தங்கச்சியும் புருஷனும் வெளியிலை நிற்பினம்..."

"நோ... அது எனக்குச் சரிவராது..." என்று கொஞ்சம் எரிந்து விழுந்து சொல்வது போலச் சொல்லிவிட்டு எனது தோள்பாக்கையும் லப்டப்பையும் எடுத்துக்

படிப்பகம்

padippakam



கொண்டு வேறு சீற்றில் போய் உட்கார்ந்து கொண்டேன்.

கடவுளே எனக்கு என்ன நடந்தது?

முதலில் டக்ஸிக்காரன்... இப்போ இவர்கள்... இதுதான் நானா?... இல்லை... திரைமறைவில் நடந்துகொண்டிருக்கிற சம்பவங்களுக்கு இது என் எதிர்வினையா?... டென்மார்க்கில் இருந்து வெளிக்கிட்டதற்கும் டென்மார்க்கிற்குப் போவதற்கும் இடையில் எத்தனை மாற்றங்கள்...

கம்பஸில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அம்மா கலியாணம் பேசியபொழுது கோபப்பட்டு சாப்பாட்டுக் கோப்பையையும் உடைத்து... அது என் கையில் வெட்டியதுக்குப் பிறகு... இன்றுதான் இப்படிக் கோபப் பட்டிருக்கின்றேன்.

திரும்பி அவர்களைப் பார்த்தேன்.

மகன்காரன் தாய்க்கிழவியைப் பேசிக்கொண்டிருக்கிறான் போலும்... தாய்க்கிழவி கவலையுடன் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு இருக்கிறாள்...

என்னில் பிழைதான்... ஏர்போர்ட்டை விட்டு உடனே வெளியில் போகவேண்டும்... ஆகவே குறை நினையாதையுங்கோ என தன்மையாகச் சொல்லியிருக்கலாம்... அதுவும் இல்லாட்டி, “சொறி எனக்கு ஏலாது” என தன்மையாகச் சொல்லிவிட்டு அதே ஆசனத்தில் இருந்திருக்கலாம்... இது நான் அவர்களைத் தண்டித்தது போல...

அம்மாவுக்கும் இப்படித்தானே... இன்று இல்லாவிட்டாலும் இன்னும் கொஞ்சக் காலம் போக யார் யாரோவின் உதவிகள் தேவைப்படலாம்... அவர்கள் சீறிப்பாய்ந்தால்

படிப்பகம்

padippakam



அம்மா என்ன செய்வா? நான் டென்மார்க்கில் இருந்து என்ன செய்வது...?

நிச்சயம் நான் அவர்களிடம் மன்னிப்புக் கேட்கவேணும் என நினைத்தபொழுது விமானத்தினுள் வந்து அமரும் படி அழைப்பு வந்தது.

அனைவரும் எழுந்து கொண்டார்கள்...

கிழவியும் மகனும் முன்னால் போய்க் கொண்டிருந் தார்கள்.

தோல்விகள் மனிதனைத் தடுமாறச் செய்யும் என பகவத்கீதையில் படித்தது எனக்கு ஞாபகம் வந்தது... எனக்குத் தோல்வியா?... அவமானமா?... இல்லை இரண்டுமா?... நல்லகாலம்... அப்பா நீங்கள் போய்ச் சேர்ந்து விட்டீங்கள்.

நான் விமானத்தினுள் போனபொழுது கிழவியும் மகனும் முதல் நாலைந்து வரிசையுள் அமர்ந்திருந்தார்கள்.

நான் குனிந்து மகனிடம்... "ஐ ஆம் சொறி... ஐ ஆம் லிற்றில் பிற் அப்செற்..." என்றேன்.

அவரும் பார்த்தும் பார்க்காதது போல, "ஓகே" என்றார்.

பதிலில் அலட்சியம் இருந்தது... இதை நான் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் தாய்க்கிழவியோ மகன் தன்மீது காட்டிய கோபத்தை ஓர் ஈனப்பிறவியைப் பார்ப்பது போல என்னை முறைத்துப் பார்த்துத் தீர்த்துக் கொண்டா...

தவறுகளை வேண்டும் என்று யாரும் செய்வதில்லை...

படிப்பகம்

padippakam



தவறு எனத் தெரிந்து மன்னிப்புக் கேட்டால் எல்லோருக்கும் அதை மன்னிக்கும் மனப்பான்மையும் இல்லை... நான் என் இருக்கையில் போய் உட்கார்ந்து கொண்டேன்.

டென்மார்க் பற்றிய எண்ணங்கள் அல்லது பயங்களுடன் நான் ஆசனத்தில் அமர்ந்திருக்க, எதற்காகவும் காத்திராத காலம் போல விமானமும் எழுந்து பறக்கத் தொடங்கியது.

ஜேர்மனிக்கு விமானம் சென்றடைய சுமார் பன்னிரண்டு மணித்தியாலங்கள் செல்லும். இந்த நேரத்தினுள் விடுதலைப் போராட்டம் பாகம் - 2இன் கடைசி அத்தி யாயத்தை எழுதி முடித்து விடலாம்... இதுதான் சிலவேளை எனது கடைசி அத்தியாயமாக இருக்கலாம்... நான் ஒரு வேளை இந்த உலகத்தில் இருந்து இல்லாமல் போனால் என்னைப் பற்றிய உண்மைகளை உலகத்துக்குச் சொல்லும் அத்தியாயமாக இது அமையலாம். எந்த துரோகிப் பட்டத்தையும் இந்த அத்தியாயம் துடைக்கும்... துடைக்க வேண்டும்.

இந்த அத்தியாயத்தில் நான் யார் என்று வெளிப்படுத்த வேண்டும்... 83 கலவரம் தந்த பாடங்களினால் நாட்டை விட்டு வெளியேறி ஐரோப்பாவில் தஞ்சம் கோரி தான் உண்டு... தன் வேலை உண்டு என்று வாழ்ந்த ஓர் இளைஞனின் வாழ்வு எப்படி எப்படி திசைமாறிப்போனது.. எவர் எவர் கைகளில் சிக்கினான்... அரசியல் சதுரங்கத்தில் பார்வையாளனாய் கூட நிற்காதவனை வலிந்து இழுத்து வந்து பகடைக்காயாக வெட்டி விழுத்திடும் சோகங்களைப் பற்றி... மொத்தத்தில் அனைத்தும் ஜனநாயகம் என்ற பெயரில்...

மக்கள்... மக்களால்... மக்களுக்காக...

படிப்பகம்

padippakam



இனி இந்தக் கோஷங்கள் வேண்டாம்... நாங்கள் அடக்குமுறையாளர்கள் என்று எல்லோரும் சேர்ந்து கூக்குரலிடுங்கள்... உண்மை ஒரு நாள் மட்டுமாவது வாழட்டும்.

துப்பாக்கிகளின் முனைகளில் யாருமே ஜனநாயகம் கதைக்க வேண்டாம்...

அடிபாடு இல்லாத தேர்தல்களை இலங்கை எப்போது கண்டது? அது யாகலையாயினும் சரி... யாழ்ப்பாணம் ஆயினும் சரி...

வெள்ளை வேட்டிகளுக்குள் மறைத்து வைத்திருந்த வெட்டறுவாக்களைத்தானே இளைஞர்களிடம் கொடுத் தீர்கள்... அதுக்கு உங்களையும் பலி கொடுத்தீர்கள்...

ஒரு கூட்டுப் பறவைகள் திசைமாறிய பறவைகள் ஆனதேன்?... கூண்டுக்கிளிகள் கொத்துப்பட்டு இறந்த தேன்?

யாருக்காக இந்த குருக்ஷேத்திரம்?... அண்ணன் - தம்பி - மாமா - மச்சான்... எல்லோருமே சகுனியிடம் அல்லவா அடைக்கலம் கேட்டீர்கள்.

கொரிலாத்தாக்குதல் என்ற வனவாசமும் சரி... அமைதிப் பேச்சு என்ற அஞ்ஞானவாசமும் சரி... உங்களுக்கு எத்தனை அடி நிலத்தை மீட்டுத் தந்தது?

மனிதநேயத்தைப் பற்றி எல்லோருமே அதிகமாகக் கதைத்து முடித்துவிட்டதாலோ என்னவோ அதன் அர்த்தத்தை எங்குமே காணமுடிவதில்லை...

இந்தக் கேள்விகளும் அவற்றின் பதில்களுமே எனது கட்டுரையின் கடைசி அத்தியாயமாக வேண்டும்... அதுவும்

படிப்பகம்

padippakam



ஜேர்மனியை விமானம் அடையும்பொழுது எழுதி முடித்திருக்க வேண்டும். ஜேர்மன் ஏர்போர்ட்டில் உள்ள ஏதோ ஒரு இன்ரநெற் கபேயில் இருந்து இதனை அனுப்ப வேண்டும்.

விமானப் பணிப்பெண் சாப்பாடும் குளிர்பானமும் கொண்டு வந்து நீட்டினாள்.

சாப்பாடு வேண்டாம் என்றுவிட்டு குளிர்பானத்தை மட்டும் வேண்டிக் கொண்டேன்.

சாப்பிடும் நேரமும்... சாப்பிட்ட பின்பு தோன்றும் களையும் எனது எழுத்தின் வேகத்தைக் குறைத்துவிடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தேன்.

கணனியில் கை விரல்கள் பதியத் தொடங்கின.

கரைபுரண்டு ஓடும் வெள்ளம் போல... என் எண்ணங்களுக்கு எழுத்து வடிவம் வந்து புரண்டு கொண்டிருந்தது... அடக்கு முறைக்கும் அநியாயங்களுக்கும் எதிராக என்னுள் எரிந்து கொண்டிருந்த தீ என் எழுத்துகளை புடம் போட்டுக் கொண்டிருந்தது.

சின்ன வயதில் என் கண்முன்னே நனைந்து தோய்ந்து வந்த கீரைக்காரக்கிழவனின் கன்னத்தில் அறைந்த தரகன் தம்பன் தொடக்கம்... எங்கள் கொழும்பு வீட்டைக் கொளுத்திய சிங்கள பேக்கறி மாமா வரை என்னுள் தீயை வளர்த்து விட்டிருந்தார்கள். அந்த சுவாலைதான் என் எழுத்துகள்... அவையேதான் சிவராசா அண்ணை வீட்டு திருமணநாளில் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்... ஐரோப்பியக் குளிரில் அணைந்திருக்க வேண்டிய நெருப்பில் எண்ணையை ஊற்றியது யார்?...

படிப்பகம்

padippakam



எழுதிக் கொண்டேயிருந்தேன்... எந்த ஒரு வரியை ஆயினும் அடித்து அழித்து மீண்டும் எழுதத்தேவை யில்லாமல் எழுதிக் கொண்டிருந்தேன்... சத்தியத்தை தணிக்கை செய்யத் தேவையில்லை... அதனாலோ என்னவோ எழுதிய எதையுமே அழித்துத் திருத்தாமல் எழுதிக்கொண்டு இருந்தேன்...

எனக்கே வடிவாகத் தெரிகிறது... இவ்வளவு காலமும் எழுதியவற்றில் சம்பவங்களும் ஆதாரங்களும்தான் அதிகமாக இருந்தன... ஆனால் இந்த அத்தியாயத்தில் ஒரு பிரச்சார நெடி அடிக்கிறது... அணையப்போகிற சூடாமணி விளக்கு பிரகாசமாக எரிவது போல என் முடிவுக்குக் கிட்ட நின்று நான் எழுதுவதாலோ என்னவோ அந்த நெடி கொஞ்சம் தூக்கலாகவே இருக்கிறது... இருந்துவிட்டுப் போகட்டும்... மரபுகளைக் காத்து எத்தனை உண்மைகளைக் கொன்று விட்டிருக்கிறோம்... இந்தக் கடைசி அத்தியாயத்திலாவது மரபுகளைக் கொன்றுவிட்டு உண்மைகளைப் பாதுகாப்போம்...

எழுதிக்கொண்டேயிருந்தேன்... பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டேயிருந்தேன்...

என்னுடைய இந்த எழுத்து குறிப்பிட்ட யாருக்குமாக இருக்கவில்லை... உண்மையை எவர் எவர்கள் தரிசிக்க விரும்புகிறார்களோ அவர்களுக்காகவே எழுதினேன்... உண்மையை எவர் எவர்கள் மறைக்க விரும்புகிறார்களோ அவர்களுக்காகவும் எழுதினேன்... நல்லவேளை இது இணையத்தளத்தில் வெளிவருகிறது... அவ்வாறு இல்லாது ஒரு புத்தகவடிவில் இது வெளிவந்தால் ஐரோப்பியக் கடைவீதிகளில் இது கொளுத்தப்படும்... அப்போதும் உண்மை பிரகாசிக்கின்றதெனவே என் ஆவி இறுமாப்பு எய்தும்...

படிப்பகம்

padippakam



எழுதிக்கொண்டிருந்த களையில் கை உளைந்தது... விமானப்பணிப் பெண்ணை அழைத்து ஒரு கிளாஸ் ஜூஸ் வேண்டிக் குடித்தேன்.

விமானத்தில் அதிகம் பேர் தூங்கிக்கொண்டு இருந்தார்கள்.

கொஞ்சம் தள்ளி ஒரு ஆடவனும் அவன் காதலியும் ஒரு வரை ஒருவர் கட்டி அணைத்தபடி தங்களை மறந்து தூங்கிக்கொண்டு இருந்தார்கள்... பார்க்க ஆசை யாய்த்தான் இருந்தது... ஒரு நாள்... ஒரு இரவு... ஒரு தரம்... ராசாத்தியும் நானும்... அதுவே குற்றமாய்... ஆயுள் தண்டனையாய்... என்னுள் மூச்சு எழுந்து தாழ்ந்தது.

மீண்டும் கட்டுரைக்குள் நுழைந்தேன்.

இப்பொழுது கடைசி பந்திக்குக் கிட்டவாக வந்து விட்டேன்.

என்னை வெளிப்படுத்தும் நேரமும் வந்து விட்டது...

என் வாழ்வில் கடைசி அத்தியாயத்தில் நான் நிற்கின்றேன் என்பதனையும் வெளிப்படுத்தினேன்.

எங்கோ ஒரு துப்பாக்கி என்னை நோக்கி குறி வைத்துக் கொண்டிருக்கும் என்பதனையும் எழுதினேன்.

சிலவேளைகளில் என் அஸ்தி கரைக்கப்பட்டபின்புதான் வாசகர்கள் இந்தக் கட்டுரையை வாசிக்க நேரிடும் என்பதைக் குறிப்பிட்டேன்.

அப்பொழுது என் மறைவுக்கான காரணங்கள் மக்களால் நியாயப்படுத்தப்பட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

படிப்பகம்

padippakam



இந்தக் கடைசி அத்தியாயத்தில் கட்டாயம் என்னை நான் வெளிப்படுத்த வேண்டும்... அல்லது யாவும் கற்பனை எனப்போடும் ஒரு கற்பனைக் கதையாக இது மாறிவிடும்... சங்கானைக் கோயிலடிவரை போய் என்னைப்பற்றி விசாரிக்கும் அளவுக்குத் தகவல்களைத் திரட்டிய பின்பு என்னை மறைத்துப் பலனில்லை. எனவே என்னைப் பற்றி நானே எழுதத் தொடங்கினேன்.

கடைசியாக நான் யார்? எத்தனையாம் ஆண்டு டென் மார்க்குக்கு வந்தேன்? சிவராசா அண்ணை வீட்டு இருபத்தைந்தாவது கலியாண விழா எப்போது தொடங்கியது? எதற்காக விடுதலைப் போராட்டம் - பாகம் 2 எழுத வேண்டி வந்தது - எப்படி அமுதன் நாயரின் வலைக்குள் விழுந்தேன் என்பதனைத் தெளிவாக எழுதினேன். மேலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் றோவின் கைக்கூலியான அமுதன் நாயரிடம் விலைபோகவில்லை என்பதையும், யாரையும் காட்டிக் கொடுக்கவில்லை என்பதையும் உறுதியாகச் சொல்லியிருந்தேன்.

எனது களம் யாழ்ப்பாணமோ... மட்டக்களப்போ... வன்னிக்காடுகளோ இல்லை... புலம் பெயர்ந்த பூமிகள் தான்... அங்கு நடைபெறும் அடக்குமுறைகள் அல்லது அசண்டையீனங்கள்தான்... அவைகள் இல்லாது போதல் வேண்டும்... நாளைய விடியல்களின்போது நம் நாட்டில் ஆரோக்கியமான சூரியக்கதிர்கள் விழவேண்டும்... கிரகணங்கள் அல்ல... ஏர்லங்காவில் எடுத்துச் செல்லப்பட இருப்பவை ஆரோக்கியமான அப்பிள்களாய் இருக்க வேண்டுமே தவிர... புகையடித்த கறுத்த கொழும்பான் மாம்பழங்களும்... காய்ந்துபோன முருங்கைக்காய்களும் அல்ல.

படிப்பகம்

padippakam



எப்பொழுதும் கதையின் ஆரம்பத்தில் பெற்றோருக்கு... அல்லது பெரியவர்களுக்கு... அல்லது படித்த பாடசாலை களின் கால்களில் செலுத்தும் சமர்ப்பணத்தை நான் என் கட்டுரையின் இறுதியில் செலுத்தியிருந்தேன்.

'சரியான வழிகாட்டலின் பின்னாலோ... அன்றிப் பிழை யான வழிகாட்டல்களின் பின்னாலோ... நாட்டுக்காக வீட்டை விட்டு வெளியேறி தம் வாழ்வை அர்ப்பணித்த அனைவருக்கும் இது சமர்ப்பணம்.'

எழுதி முடித்த பின்பு கைகளை நீட்டி பஞ்சி முறித்த பொழுது இன்னும் ஒரு மணிநேரத்தில் விமானம் தரை யிறங்கும் என்ற அறிவிப்பும் அதனைத் தொடர்ந்து எல்லா லைற்களும் போடப்பட்டன.

முகத்தைத் துடைப்பதற்கான கைத்துண்டை விமானப் பணிப்பெண் அனைவருக்கும் கொடுக்கத் தொடங்கினாள்.

நானும் எனது லப்டப்பை மூடி வைத்துவிட்டு ரொயி லற்றுக்குப் போய் முகத்தைக் கழுவிக் கொண்டேன்... இரவு முழுக்க நித்திரையில்லாது எழுதியதால் கண்கள் சிவந்து போய் இருந்தன... பறவாயில்லை... எழுதி முடித்தது சந்தோஷம்... மனதிலிருந்த வலிகளை இறக்கி வைத்தாயிற்று...

இனி ஆகப் பாக்கியிருப்பது... அம்மாக்கு ஒரு கடிதம்... அது என் கடைசிக் கடிதமாகக் கூட இருக்கலாம்... ஒருவகையில் பிரியாவிடைக்கடிதம் போல...

சீற்றில் வந்து இருந்தேன்...

காலைச் சாப்பாடு கொண்டு வந்தார்கள்... இப்பொழுது மறுக்காது வேண்டிச் சாப்பிட்டுக் கொண்டேன்... சூடான

படிப்பகம்

padippakam



கோப்பி மிகவும் நன்றாக இருந்தது... இன்னும் ஒரு கப் வேண்டிக் குடித்துக் கொண்டேன்...

இன்னும் தரையிறங்குவதற்கு அரை மணித்தியாலம் இருக்கிறது.

ஜேர்மன் ஏர்போர்ட்டிலும்... ஜேர்மனியில் இருந்து டென்மார்க்கிற்குப் பயணம் செய்யும் அடுத்த ஒரு மணித்தியாலப் பிளேனிலும் வைத்து அம்மாக்கு கடிதம் எழுதி விடவேண்டும்...

கடிதத்தை எப்படி எழுத வேண்டும் என கண்ணை மூடிக்கொண்டு யோசிக்கத் தொடங்கினேன்...

யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது சற்று அயர்ந்து விட்டேன் என நினைக்கின்றேன்.

இப்பொழுது விமானம் தரையில் இறங்கி ஓடிக் கொண்டிருந்தது.

பயணிகள் கைகளைத் தட்டி தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள் – தம்மைப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்ததற்காக பயணிகள் செய்யும் இந்தச் சின்னக் காரியங்கள் விமான ஓட்டிகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என நினைக்கின்றேன்.

சின்னச் சின்ன புன்சிரிப்புகள்... எதற்கும் நன்றி சொல்லும் பழக்க வழக்கங்கள்... இவர்களிடம் இருந்து நாம் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டும்.

விமானம் வந்து மெதுவாக நிற்க இருக்கை விளக்குகள் அணைக்கப்பட்டன.

படிப்பகம்

padippakam



எல்லோரும் எழுந்து கொண்டார்கள்...

மெதுமெதுவாக எல்லோரும் வெளியேறி அடுத்த விமானத்திற்கோ அல்லது ஜேர்மனுக்குள் போகிறவர்கள் எக்சிட் காட்டிய அம்புக்குறியின் வழிச் செல்ல நான் அவசர அவசரமாக இன்ரநெற் கபேயைத் தேடினேன்.

நல்ல காலம். ரான்சிற் ஹோலை அடுத்து ஒரு இன்ரநெற் கபே இருந்தது. அடுத்த ஒரு மணிநேரத்திற்கு அதனைப் பாவிப்பதற்காகக் காசைக் கட்டிவிட்டு உட்கார்ந்து கொண்டேன்.

முதல்வேலையாக எனது தொடரின் இறுதிப் பாகத்தை அனுப்பினேன்.

அப்பாடா என்று இருந்தது.

இணையத்தளங்களில் அமுதன் நாயரைப் பற்றி வேறு ஏதாவது வந்திருக்கிறதா எனப் பார்த்தேன்... ஓர் இணையத்தளத்தில் வந்திருந்த செய்தி கொஞ்சம் அருவருப்பாய்த்தான் இருந்தது... அமுதன் நாயருக்குத் திருமணம் ஆகாத ஆண்களுடன் ஓரினச்சேர்க்கை உள்ளது என்றும், அவ்வாறு தொடர்புடைய ஆண்களிடம் இருந்து இரகசியங்களை அறிவதற்கு அவர்களின் வங்கி இலக்கங்களுக்கு பெரும் தொகையான பணங்கள் மாறி யிருப்பதாகவும் இருந்தது... கட்டாயம் இந்தத் தொப்பியை டென்மார்க்கில் உள்ளவர்கள் எனக்குப் பொருத்திப் பார்த்திருப்பார்கள்... அது நன்கு பொருந்தியிருக்கும்...

ஒரு கணம் பற்களைக் கடித்துக் கொண்டு கண்களை இறுக மூடிக்கொண்டேன்.

படிப்பகம்

padippakam



அடுத்தது எனக்கு ஏதாவது மெயில்கள் வந்திருக்கிறதா எனப் பார்த்தேன்.

மூர்த்தியிடமிருந்து வந்திருந்தது.

"நீ எவ்வளவு தூரம் டென்மார்க்கிற்கு வராமல் வேறு நாடு ஒன்றுக்குப் போவதுதான் தற்சமயம் உசிதம்... இங்கு நிலைமை சரியில்லை... இதற்குமேல் விபரமாக நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை... இலங்கைக்குப் போவது கூட உன் உயிருக்கு ஆபத்தாய் அமையலாம் என்றபடியால்தான் உன் அப்பாவின் செய்தியைக்கூட நான் உனக்கு மெயில் மூலம் அறிவிக்கவில்லை. இப்பொழுது சிங்கப்பூரை விட்டு வெளிக்கிட்டிருப்பாய் என்பதனால் இதை எழுதுகின்றேன் — அன்புடன், மூர்த்தி"

அவனையும் யாரும் பிடித்து என்னைப் பற்றி விசாரித்து வெருட்டினார்களோ தெரியவில்லை... பாவம் அவன்... எனக்காகத் துடித்திருப்பான்... இல்லாவிட்டால் எல்லா ஆட்களையும் போல ஐஞ்சையோ பத்தையோ கொடுத்துப் போட்டு பேசாமல் இருந்திருக்கலாம் தானே என என்னைப் பேசிக்கொண்டு இருப்பான்.

ஆனால் இனி எதற்கும் பின்வாங்குவதில்லை என்று மட்டும் தீர்மானித்தேன்...

எங்கு ஓடுவது?... எல்லா இடங்களிலும் எங்கோ ஒரு ஆதரவாளனோ... எதிரியோ... காட்டிக் கொடுப்பவனோ இருக்கத்தான் செய்வான்... இவர்களுடன் எல்லாம் தாச்சி மறித்து என் உயிரைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் எனக்கில்லை... நிறைவேற்ற வேண்டியவை எல்லாம் நிறைவேற்றியாயிற்று...

படிப்பகம்

padippakam



அம்மா... ராசாத்தி... எனது தொடரின் கடைசி அத்தியாயம்... எல்லாம் நிறைவேற்றியாயிற்று... இதில் என்னை நம்புபவர்கள் மட்டும் நம்பட்டும்... மற்றவர்களுக்கு கொஞ்ச நாள் ஓசியில் அவல்தான்.

இனி அம்மாக்கு கடைசி கடிதம் எழுதுவதுதான் பாக்கி.

எந்தத் தாயும் கவலைப்படுவார்கள்தான்... செத்தபின்பு கொண்டு வந்து போடும் பிரேதங்கள் வேறு... இது சாகமுதல் எழுதும் மரணசாசனம்... நான் தற்கொலை செய்தால் சில வேளை மூர்த்தி என்னை ஊருக்கு அனுப்பலாம்... கொலை செய்யப்பட்டால் காணாப்பிணமாகக் கூடப் போகலாம்...

தோள் பையுள் கிடந்த பெரிய கொப்பியை எடுத்தேன்.

பிளேனில் இருந்து யோசித்தமாதிரியே கடிதத்தைத் தொடங்கினேன்.

“அன்புள்ள அம்மாவுக்கு

இந்தக் கடிதம் உங்கள் கைகளில் கிடைக்கும்பொழுது நான் தற்கொலை செய்துகொண்டிருப்பேன். அல்லது கொலை செய்யப்பட்டிருப்பேன்.

ஒரு கோழை என்ற பெயருடன் தற்கொலை செய்வதா அல்லது கொலை செய்யப்பட்ட பின்பு அவர்கள் எனக்கு சூட்ட இருக்கும் துரோகி என்ற அவப்பெயருடன் எங்கள் சந்ததி முழுக்க வாழ வேண்டுமா என்று தெரியவில்லை...”

இந்தக் கடிதம் உங்கள் கைகளில் கிடைக்கும் பொழுது... என ஆரம்பித்து எல்லாத்தையும் எழுதினேன்... எனக்குத்

படிப்பகம்

padippakam



தெரியும் எல்லாமே எழுதியும் முடிக்க முடியாது... ஆகவே எனது டயரியை இணைப்பது என முடிவுசெய்தேன்...

அம்மா தான் சாகும் காலம் வரை ஒரு புத்தகத்தை வாசிப்பது போல... தொடர்கதையை வாசிப்பது போல... திரும்பத் திரும்ப வாசிக்கட்டும்...

கட்டாயம் நான் எடுக்க இருக்கும் என் முடிவை நினைத்து... அல்லது அவர்கள் எடுக்க இருக்கும் எனக்கே தெரியாத என் முடிவை நினைத்து வாழ்க்கை முழுக்க கவலைப்பட்டுக் கொண்டுதான் இருப்பா... ஆனால் என்னைப்பற்றிய உண்மைகள் அடங்கிய டயரியை அவாவிடம் கொடுப்பது தான் முறை... அப்பா இருந்திருந்தால் அவரிடம் அனுப்பி யிருப்பேன்... இப்ப அம்மாக்கு அனுப்புவதுதான் முறை... இதை வைத்து உலகத்துக்கு முன்னாலை எனக்காக அவா வாதிடத் தேவையில்லை... அவாவின் வாதங்களும் உலகத்துக்குத் தேவையில்லை... அவாக்கு மட்டும் உண்மைகள் தெரிந்தால் போதும்...

கடிதத்தையும் டயரியையும் ஏர்போர்ட் போஸ்ட் ஒவ்வீசில் பதிவுத் தபாலில் அனுப்பினேன்... அவற்றைக் கையளிக்கும்போது மனது கொஞ்சம் கலங்கத்தான் செய்தது.

ஆனால் அதை அனுப்பிப் போட்டு வந்திருக்கும்போது ஒரு தொப்புள் கொடி உறவுக்குப் பிரியாவிடை கொடுத்து விட்டு வந்திருந்தது போல இருந்தது... அல்லது எனது சாவீட்டுக்கு நானே போய்விட்டு வந்திருந்தது போல இருந்தது.

இனியென்ன?...

டென்மார்க் போய் இறங்கியதும்தான் அடுத்த அத்தியாயம்...

படிப்பகம்

padippakam



மணிக்கூட்டைப் பார்த்தேன்.

அடுத்த பிளைற்றுக்கு அரை மணித்தியாலம் இருந்தது.

மெதுமெதுவாய் கேற்றுக்குக் கிட்டவாய் போய் உட்கார்ந்திருந்தேன்.

அந்த வயோதிக அம்மாவும் மகனும் கதைத்துக் கொண்டு இருந்தார்கள்... தாய்க்கு உதவிக்கு யாரும் கிடைக்க வில்லை போலும்... மகன் பிளேன் வெளிக்கிடும் வரை கதைத்துக் கொண்டிருக்கிறார் போலும்.

என்னைக் கண்டதும் இருவரும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.

நான் என்ன செய்வது?

நானும் போய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டேன்.

மனத்தினுள் ஒரே அமைதி... முப்பந்தைந்து வயதுக்குள் ஞானியாகி விட்ட ஒரு அமைதி... வாழ்வின் பந்தபாசங் களை கொஞ்சம் கொஞ்சமாய் இழந்து... நிறையவே துறந்து... அப்படி ஒரு அமைதி... அந்த அமைதிக்குள் இன்னமும் இன்னமும் உள்ளே போய்க் கொண்டு இருக்க வேண்டும் போல இருந்தது... அது எனக்குப் பிடித் திருக்கிறது... இந்த அமைதியே இவ்வளவு சுகம் என்றால் மரணத்தின்பின் வரும் அமைதி இன்னமும் எவ்வளவு சுகத்தைத் தரும்... குளிர் மலைகள்... சில்லென்ற காற்று... அங்கு அப்பாவும் நானும்...

என்னைச் சுற்றி இருந்த ஆட்கள் எல்லாம் எழுந்து கொண்டு ஆரவாரப்பட்டது போல இருந்தது.

படிப்பகம்

padippakam



நான் கனவு கண்டு கொண்டு இருந்திருக்கின்றேனா?

எல்லாரும் பிளேனுக்குள் ஏறுவதற்காக எழுந்து விட்டிருந்தார்கள்.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு இந்தக் கனவுகள் வந்திருக்கு... அப்பாவை ஆஸ்பத்திரியில் வைத்திருந்த நேரத்தில்தான் இப்படி முந்தி நடந்தவைகள் தொடர்பாயும் தொடர்பில்லாமலும் வந்திருக்கு... இப்ப கனகாலத்துக்குப் பிறகு? மனமும் உடலும் சரியாய் களைத்திருக்கும் பொழுதுதான் இப்படிக் கனவுகள் முந்தி வந்திருக்கு... இப்பவும் மனத்தாலும் உடம்பாலும் அதிகமாய் களைத் திருக்கிறேன் போல...

எல்லோரும் பிளேனுக்குள் போய் அமருகிறார்கள்... தாய்க்கிழவிக்கு மகன் கையசைத்துவிட்டுப் போகின் றான்... கடைசியாய் நானும் உள்ளே போகின்றேன்.

விமானப் பணிப் பெண்கள் வணக்கம் சொல்லி வரவேற்கின்றார்கள்...

மீண்டும்... சீற்... இருக்கைப் பட்டிகள்... தற்பாதுகாப்பு அறிவிப்புகள்... ரன்வே... பறப்பு என எனது பயணத்தின் அடுத்த... இல்லை... கடைசி அத்தியாயம் தொடங்கி விட்டது...

ஒரு மணித்தியாலத்தினுள் தரையைத் தொட்டுவிடும் என்றாலும் இந்த ஒரு மணித்தியாலத்தினுள்ளும் நல்லாய் நித்திரை கொள்ள வேண்டும் போல் இருந்தது... கனவு கள் வராத நித்திரை வேண்டும்... கனவுடன் கொள்வது நித்திரையில்லை... அது மன அலட்டல்... இது முழித் திருப்பதை விட இன்னமும் களைக்க வைக்கும்...

படிப்பகம்

padippakam



எனவேதான் கனவில்லாத நித்திரைக்கு ஆசைப்பட்டபடி என் கழுத்தை யன்னலோடு சாய்த்துக் கொண்டேன்...

அந்த வயதான அம்மா தனியத்தான், இரண்டு டெனிஷ்காரர்களுக்கு நடுவில் அமர்ந்திருந்தா... எனக்கு யாரோ ஒரு அம்மாவின் மடியில் தலை வைத்துப் படுக்க வேண்டும் போல இருக்கிறது... சின்ன வயதில் அதிகமாய் நான் நித்திரை கொண்டது அம்மம்மாவின் மடியில் தான்... அது எனக்கு இன்று வேண்டும் போல இருக்கிறது...

“அம்மம்மா...”

“மடியிலை சாய்ஞ்சு படு”

அயர்ந்து விட்டேன்.

அடுத்த ஒரு மணித்தியாலத்தில் விமானத்தின் சில்லுகள் குலுக்கலுடன் தரையைத் தொட்டு ஓடத் தொடங்கிய பொழுதுதான் திடுக்கிட்டு முழித்தேன்.

டென்மார்க்கின் கொடிகள் ஏர்போர்ட்டைச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன.

மீண்டும் டென்மார்க்...

விமான நிலையத்தின் உள்ளே பெல்ட்டில் பெட்டிகள் அசைந்து வந்து கொண்டிருந்தன... எல்லோரும் முண்டி அடித்துக் கொண்டு நின்றார்கள்... அந்த வயதான அம்மா உட்பட...

எனது பெட்டிகள் இரண்டும் கொஞ்சம் வேளையுடன் வந்தன... அதனைத் தள்ளுவண்டியில் வைத்துவிட்டுப் புறப்பட வெளிக்கிட்ட எனக்கு அந்த வயதான

படிப்பகம்

padippakam



அம்மாவைத் தனியே விட்டு விட்டுப் போக மனம் கேட்க வில்லை.

திரும்பிப் பார்த்தேன்.

இந்த அம்மா பெல்ட்டில் இருந்து தனது பெட்டியை வெளியே தூக்க மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு இருந்தா. பக்கத்தில் நின்ற ஆப்கானிஸ்தான்காரன் தனக்கும் இதற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பது போல நின்றான்.

நான் விரைந்து போய் அந்தப் பெட்டியை எடுத்து எனது வண்டியிலேயே வைத்துக்கொண்டு அவாவின் தோள் பையையும் வேண்டிக் கொண்டேன்.

''வாங்கோ நான் வெளியிலை கொண்டு வந்து விடுகிறன்...''

“ஓம் ராசா... இளையவளும் புருஷனும் வெளியிலை நிப்பினம்...”

இப்போ அவாக்கு என்மீது கோபம் இல்லை.

“சரி வாங்கோ...” கூட்டிக்கொண்டு வெளியில் வந்தேன்.

வெளியில் வந்து சுற்றும் முற்றும் பார்த்தேன்...

“அங்கை வருகினம் ராசா...”

அவரின் முகம் தாமரையாக மலர்ந்தது.

மகளும் மருமகனும் கிட்டவாக வந்தார்கள்...

கிட்ட வந்ததும் கிழவியின் மருமகனினதும் எனது முகமும் இருண்டன...

படிப்பகம்

padippakam



என்னுடன் ஆஸ்பத்திரி கன்ரீனில் இருந்து வாக்கு வாதப்பட்டதில் ஒரு ஆள் அவர்.

வந்து சேர்ந்திட்டியா டென்மார்க்கிற்கு... என்பது போல இருந்தது அவன் பார்வை.

இந்தா உன் வயதான மாமியாரை கவனமாகக் கொண்டு வந்து உன்னிடம் தந்திருக்கிறேன் என்பது போல இருந்தது என் பார்வை.

“தம்பி... நீ கனகாலம் நல்லாய் இருப்பாய்” என்றவாறு மகளுடனும் மருமகனுடனும் அந்த அம்மா ஏர் போர்ட்டை விட்டு வெளியேறினார்... மருமகன் மட்டும் இடைக்கிடை என்னைத் திரும்பிப் பார்த்தபடி...

அந்தப் பார்வையின் அர்த்தம் எனக்கு நன்கு புரிந்தது...

நானும் டக்ஸியை அமர்த்திக்கொண்டு வீட்டுக்கு விரைந்தேன்...

வழியெல்லாம் அந்த வயதான அம்மா சொன்னதை நினைத்துச் சிரித்துக் கொண்டேன்.

‘தம்பி நீ கனகாலம் நல்லாய் இருப்பாய்.’

அடுத்த அரைமணிக் கார் ஓட்டத்தின் பின்பு டக்ஸி என் வீட்டு வாசலில் நின்றது...

டக்ஸிக்குரிய பணத்தை கிறடிட் காட்டால் செலுத்தி விட்டு எனது பெட்டி, தோள்பை அனைத்தையும் எடுத்துக் கொண்டேன்.

இரண்டு கிழமைதான் வீட்டில் இருந்திருக்கவில்லை... ஆனால் வெளியே கூட்டாது இலைகள் விழுந்து கிடந்தது

படிப்பகம்

padippakam



போலிருந்தது... நான் போகும் போது பொதுவாக மரங்கள் எல்லாத்திலும் இருந்து இலைகள் கொட்டி முடிந் திருந்தன... இது காற்றில் எங்கேயோ இருந்து வந்திருக்க வேண்டும்.

டென்மார்க்கிற்கு வந்த இந்த பதினாறு வருடத்துள் நான் செய்த ஒரே நல்ல காரியம்... இந்த வீட்டை இன்ஸ் ரோல்மென்றிலை வேண்டி பதினைந்து வருடத்துள் முழுக்காசையும் கட்டி முடித்து ஒரு பெரிய தேட்டமாய் எனக்கு இருப்பதுதான்...

இதுதான் நாளைக்கு ராசாத்தியின் பராமரிப்பில் போரினால் பாதிக்கப்பட்ட அநாதைப் பிள்ளைகளுக்கும் ஏதோ ஒரு சின்ன உதவியாக இருக்கப் போகுது... எண்ணியபடியே வீட்டுக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனேன்...

அதிகமாக குளிருமாப் போல இருந்தது... ஹோலின் பின்பக்கக் கதவு திறந்திருந்தது.

எனக்குள் ஒரு கிளிக்!

கிட்டப் போய்ப் பார்த்தேன். பின்கதவை யாரோ இரும்புக் கம்பியால் தெண்டித் திறந்திருந்தார்கள்... ஹோலினுள் யாரும் பெரிதாய் வந்து போனதற்கான அடையாளம் தெரியவில்லை... ரீ. வி., வீடியோ எல்லாம் அந்த அந்த இடத்திலேயே இருந்தன... யாரும் எதையுமே எடுத்துச் சென்றிருக்கவில்லை.

எனது அறையை எட்டிப் பார்த்தேன்... கட்டில் மெத்தை... அலுமாரியில் இருந்த உடுப்புகள் எல்லாம் புரட்டிப் போடப்பட்டிருந்தன. நான் என்ன என்னவற்றை எங்கே ஒளித்து வைத்திருக்கிறேன் என்று தேடிப்பார்த்திருக்

படிப்பகம்

padippakam



கிறார்கள்... அதன் மூலமாக எனது மூலத்தைத் தேடிப் பார்த்திருக்கிறார்கள். எனக்கும் அமுதன் நாயருக்கும் இருந்த தொடர்புகளின் ஆழங்களைத் தேடிப்பார்த் திருக்கிறார்கள்... மொத்தத்தில் நான் யார்? யாருக்கு நான் ஆதரவு?... யாருக்கு நான் எதிரி?... நான் சிவப்பா?... கறுப்பா?... எந்த றப்பர் ஸ்டாம்பைக் கொண்டு எந்த முத்திரையை எனக்கு குத்தலாம் என்ற நோக்கத்துடன் தேடியிருக்கிறார்கள்...

அப்பிடியே எனது ஒவ்வீஸ் அறையைப் பார்த்தேன்.

ஒரு புத்தகம், கொப்பி எதுவும் விடாது எல்லாத்தையும் புரட்டிப் புரட்டி ஆராய்ந்திருந்தார்கள்... எனது மேசையில் இருந்த சி.டி.க்கள்... டி.வி. டி.க்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றிருந்தார்கள்...

எனது மனதுக்குள் சின்னவயதில் இருந்தே ஆணி அடித்ததுபோல படிந்துவிட்ட காயங்களை அல்லவா அவர்கள் தோண்டிப் பார்க்க வேண்டும்...

மக்கள்... மக்களால்... மக்களுக்காக... என்று சொல்லிச் சொல்லி காலகாலமாக வேட்டுக்களாலும், வோட்டுக் களாலும் ஏமாற்றப்பட்ட மக்கள் வாழ்க்கையை அல்லவா நீங்கள் பார்க்க வேண்டும்...

அமுதன் நாயர்கள் போன்றவர்கள் எதற்காக என் போன்றவர்களை நாடினார்கள் என்று... எனது சி.டி.க் களும், டி. வி. டி. க்களும் உங்களுக்கு என்ன சாட்சியத்தைத் தரப்போகின்றன?...

சுனையில் கீழே நின்ற வெள்ளாடு தண்ணியைக் கலக்கிப் போட்டுது என்று சொல்ல உங்களுக்கு ஒரு காரணம்

படிப்பகம்

padippakam



வேண்டும்... அவற்றுக்கேன் சி.டி.க்களும் டி.வி.டி.க்களும்... நீங்களே ஒரு காரணத்தைக் கற்பிக்கலாமே... அது ஒன்றும் புதிதில்லையே... நம்புவதற்கு... அல்லது நம்பாமல் இருந் தாலும் மௌனம் சாதிப்பதற்கு... மக்கள் இருக்கும் பொழுது ஏன் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கின்றீர்கள்...

பாவங்கள் அவர்கள் வீணாய் தங்களது நேரத்தை வீணாக்கப் போகிறார்கள் என மனதுள் சிரித்துக் கொண்டாலும்... என்னைச் சுற்றி... அல்லது எனக்குப் பக்கத்தில்... ஒருவர் மட்டுமில்லை... பலர் நிற்கிறார்கள் என்பது புரிந்தது... அதுவும் வெறும் கையுடன் இல்லை... துப்பாக்கிகளுடன் நிற்கிறார்கள் என்று நன்கு புரிந்தது.

அடுத்தது என்ன?

யோசிக்க கொஞ்சம் கஷ்டமாய்த்தான் இருந்தது.

ஏர்போர்ட்டில் என்னைக் கண்டவன் இப்போதுக்கு மேலிடத்துக்கு தகவல் சொல்லியிருப்பான்... இப்பொழுது ஆளுக்காள் அடுத்த நடவடிக்கை பற்றி அலசிக் கொண்டு இருப்பார்கள்... அமுதன் நாயருக்கும் எனக்கும் தொடர்பு இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு நான் துரோகிதான்... துரோகிக்கு என்ன தண்டனை என்பதுதான் அடுத்தது?... இலண்டனில் அமுதன் நாயரைத் துப்பாக்கியால் சுட்டு தீர்த்துக் கட்டியவர்களுக்கு டென்மார்க்கில் என்னை... பெரிய வேலையே இல்லை...

இரவு இங்கு நிற்பது புத்திசாலித்தனம் இல்லை எனத் தெரிந்தது...

சரி... பார்ப்போம்... முதலில் ஒரு தரம் மூர்த்தி வீட்டை போவோம்... என நினைத்துக் கொண்டு கராஜினுள் நின்ற

படிப்பகம்

padippakam



எனது காரை எடுத்துக் கொண்டு வீதிக்கு இறங்கினேன்... நல்ல காலம் அவர்கள் முன்போல காருக்கு ஏதும் செய்திருக்கவில்லை.

போகும் வழியில் பாங்குக்கு முன் காரை நிறுத்தி அம்மாக்குச் சொன்ன அந்த இருபத்தைந்து இலட்சத்தை யும் அவாவின் கணக்குக்கு மாற்றினேன்.

மூர்த்தி வீட்டை போனபோது அவன் இன்னும் வேலையால் வந்திருக்கவில்லை... மூர்த்தியின் மனைவிதான் வந்து கதவைத் திறந்தாள்.

ஒரு கணத்தினுள் அவளின் முகத்தில் ஆயிரம் உணர்ச்சி கள் தோன்றி மறைந்ததை நன்கு கவனிக்கக் கூடியதாய் இருந்தது.

ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு, “வாங்கோ அண்ணா... அவர் இப்ப வந்திடுவார்... தேத்தண்ணி ஊத்திக்கொண்டு வாறன்...” என குசினிக்குள் போக வெளிக்கிட்டவள்... என்ன நினைத்தாளோ திரும்பி... “அப்பாவின் விசயங்கள்...” என இழுத்தாள்...

“ஓம். சிங்கப்பூரில் நிற்கேக்கை அறிஞ்சிட்டன்...”

“இவர் எத்தனையோ விதமாய் உங்களைத் தொடர்பு கொள்ள யோசித்தவர்... பேந்தும் நீங்கள் அங்கை போனால் உங்கடை உயிருக்கு ஏதும் நடந்தாலும் எண்டுட்டு நேற்றுத்தான் உங்கடை மெயிலுக்கு மெசெஜ் போட்டவர்...”

“எனக்கு மூர்த்தியைப் பற்றித் தெரியும்தானே...”

படிப்பகம்

padippakam



நான் சொல்லி முடிக்க முதல் மூர்த்தி வீட்டுக்குள் வந்தான்.

உள்ளே வந்ததும், "மத்தியானமே வந்தனி... வா வெளியிலை போய் கதைப்பம்."

மூர்த்தியின் மனைவியும் நானும் ஒன்றும் விளங்காமல் முழித்தோம்...

"நீ குறை நினையாதை மச்சான்... இப்ப என்ரை பிள்ளையள் பள்ளிக்கூடத்தாலை வந்திடும்... அவன்களும் உன்னைத் தேடிக்கொண்டு திரிகிறான்கள்... எங்கடை வீட்டுக்கை வந்து கைகலப்பு ஏதாவது நடந்தால் பிள்ளையள் பயந்து போகும்... அதுதான் வெளியிலை போய்க் கதைப்பம் மச்சான்..."

அவனுக்கும் கண் கலங்கியது... எனக்கும் கண் கலங்கியது...

எனக்கிருந்த அடுத்த உறவுக்கும் பிரியாவிடை சொல்லும் நேரம் வந்திட்டுது என்று...

ஆனாலும் சுதாரித்துக் கொண்டேன்...

"அண்ணா அவர் அப்பிடிக் கதைக்கிறார் எண்டு குறை நினையாதையுங்கோ... இவற்றை வேலையிடத்துக்குப் போய் இவர் வேலையாலை வரேக்கை இவரைப் போட்டு வெருட்டி இருக்கினம்... தூஷணத்தாலை எல்லாம் பேசி உங்களைப்பற்றி விசாரிச்சு இருக்கினம்... அதுதான் டென்மார்க்குக்குத் திரும்பி வரவே வேண்டாம் என்று மெயில் போட்டவர்..."

மூர்த்தி மௌனமாகவே நின்றான்.

படிப்பகம்

padippakam



"நீ ஒண்டும் யோசியாதை... இனி என்னாலை உனக்கு எந்தப் பிரச்சனையும் வராது மச்சான்... இப்ப பெரிசாய் கதைக்கிறதாலையோ அமுதன் நாயர் பற்றி உனக்கு எல்லாம் விளங்கப்படுத்துறதாலையோ எதுவும் பிரயோசனம் இல்லை... ஆனால் எப்பிடி ஆரம்பம் முதல் இந்தப் பிரச்சனை வரை நான் எதுக்குமே காரணம் இல்லையோ... அது போலவே இந்த முடிவுக்கும் நான் காரணம் இல்லை... இதை நீ எண்டைக்கும் நம்பினால் போதும்... நான் வாறன்..."

அவனைக் கட்டிப்பிடித்து விடைபெறும்பொழுது... "இப்ப எண்டாலும் நீ பொலிசுக்குப் போய் பாதுகாப்புக் கேளன்..." மூர்த்தியின் தொண்டை அடைத்தது...

"எதைச் சொல்லியடா பாதுகாப்பு கேட்கிறது... எங்கடை நாட்டிலை நடக்கிற போராட்டத்தைக் காட்டியா?... இந்த விசரங்கள் மோட்டுத்தனமாய் என்னோடை மோதுறாங்கள் எண்டதுக்காக... நான் பொலிசிட்டைப் போனால் என்ன நடக்கும் தெரியுமா?... அங்கை காட்டுக்கை கிடந்து போராடுற எல்லாத்தையும் ஒரு நிமிடத்திலை நியாயமில்லாமல் பண்ணுறதுக்கு நானும் ஒரு சாட்சியம் ஆக மாட்டன்.

"மூர்த்தி... போராட்டம் சரியோ... பிழையோ... போராடுகிறவர்களின் பாதை சரியோ... பிழையோ... இதெல்லாம் யோசிக்கிற நேரமில்லை இது. 58இலை சிங்களவனோடை தொடங்கின இனப்பிரச்சனை ஏதோ ஒரு முடிவுக்கு வரட்டும்... அதுக்குப் பிறகு நல்லதோ கெட்டதோ எங்கடை சனங்கள் ஒரு பாதையை வகுக்கட்டும்... இப்ப என்னைப் போலை பத்து பேர் வெளிக்கிட்டு என்னினத்திடம்

படிப்பகம்

padippakam



இருந்து நான் பாதுகாப்புக் கேட்டால் ஐரோப்பாவே எல்லாத்தையுமே தடைசெய்து போடுமடா... அப்பிடியே... கனடாவும் அவுஸ்திரேலியாவும்... அதுக்கு நானும் ஒரு காரணம் ஆகவேண்டாமடா...”

மூர்த்தியும் அவன் மனைவியும் என்னைக் கை எடுத்துக் கும்பிட்டார்கள்.

நான் இனியும் அங்கு நின்றால் பலவீனப்பட்டு விடுவேன் என்பதால் கடகடவென்று படிகளில் இறங்கிக் கீழே வந்தேன்.

மூர்த்தி வீட்டைத் திரும்பிப் பார்க்காமலே காரில் போய் ஏறினேன்...

மனம் அதிகமாகவே கனத்தது... பால்ய நண்பன் ஒருவனை விட்டு விலகிச் செல்கிறேன் என்று... இனி எப்படியடா... நீயும்... நானும்... எப்படா... நானும்... நீயும்...

அவனால்தான் நான் டென்மார்க்கிற்கு வந்தது... நல்லாய் இருப்பது... ராசாத்தியையும் பிள்ளைகளையும் வாழ வைத்தது.

இப்போ... இப்போ... செத்தவீடு ஒன்றிற்குப் போய்விட்டு கனத்த மனத்துடன் மயானத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருப்பது போல இருந்தது...

காரின் திறப்பைப் போட்டு வண்டியை ஸ்ராட் பண்ணக் கஷ்டமாய்த்தான் இருந்தது... எங்கே போவது...?

எங்கே போவது... என்ற கேள்வியை என்னிடம் நானே கேட்டுக்கொண்டே சுமார் ஒரு மணித்தியாலம் எங்கள்

படிப்பகம்

padippakam



நகரை இரண்டு, மூன்று தரம் சுத்தி வந்திருப்பேன் என நினைக்கின்றேன்...

கடைசியாய் நடப்பவை நடக்கட்டும் என்று வீட்டுக்கு காரைத் திருப்பினேன்...

வழியில் உள்ள ஒரு தமிழ்க் கடையில் காரை விட்டு இரவுச் சாப்பாட்டை ஓடர் செய்துவிட்டு கவுண்டரில் இருந்த ஐரோப்பிய புதினத்தாளை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன்.

அமுதன் நாயர் எனக்கு அனுப்பிய அதே பெண்ணி னதும், இன்னும் பல பெண்களினதும் படங்களுடன் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது... எவ்வாறு ஆரம்பத்தில் அமுதன் நாயர் போதை வஸ்தை பம்பாய்... பாகிஸ்தான் ஊடாக ஐரோப்பாவுக்குள் கடத்தினான்... இலங்கைப் பெண்களையும், இந்தியப் பெண்களையும் வெளிநாடு களுக்குக் கொண்டு செல்கின்றேன் என முதலில் இந்தியாவிலும் பின் ரஷ்யாவிலும் வைத்து எப்படிக் கொடுமைப்படுத்தினான்... பின் இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது எப்படி றோவின் கையாளாக மாறினான் எண்டும்... அவன் ஆட்களைக் கடத்திய பொழுது அவனிடம் கொடுத்த அந்தப் பெண் போன்ற பல பெண்களின் படங்களை வைத்து இணையத் தளங்களில் பலரை ஏமாற்றி உண்மைகளைக் கறக்க முயன்றிருக்கின்றான் எனவும் அந்தக் கட்டுரை அமைந் திருந்தது.

கடைசியாக அமுதன் நாயருக்கு இங்கிலாந்தில் கொடுக்கப்பட்ட மரண தண்டனை இங்கிலாந்துச் சட்டத்தின் பிரகாரம் கொலையாயினும் அப்படியான

படிப்பகம்

padippakam



சங்காரங்களால்தான் எம்மினம் தலையெடுக்கும் என கட்டுரை முடிந்திருந்தது.

நான் வாசித்து முடிய நான் ஓடர் செய்திருந்த சாப்பாடு தயாராய் இருந்தது. காசைக் கொடுத்துவிட்டு சாப்பாட்டுப் பார்சலை கையில் வாங்கியபொழுது அந்தக் கவுண்டரில் இருந்தவர் என்னை நன்கு கவனித்துக்கொண்டு இருந்தது போல இருந்தது...

நான் வந்து மீண்டும் காரில் ஏறியபொழுது அந்தக் கவுண்டரில் இருந்தவர் இப்பொழுதும் என்னைப் பார்த்தபடி யாரோ ஒருவருக்கு டெலிபோனில் என்னைப் பற்றிச் சொல் லிக் கொண்டு இருப்பது போல இருந்தது.

காரை ஸ்ராட் செய்து நேரடியாக வீட்டுக்குப் போனேன்...

வருவது எதையும் வீட்டில் வைத்தே சமாளித்துக் கொள்ளலாம்... அல்லது எதிர்கொள்ளலாம்... அல்லது அதில் தோற்றுப் போகலாம்...

வீடு இருண்டு போய் இருந்தது...

லைற்றைப் போட்டேன்... மத்தியானம் பயணத்தால் கொண்டு வந்து போடப்பட்ட சூட்கேசும் தோள்பையும் சோபாவில் அப்படியே இருந்தன. அதனை எடுத்து ஒரு கரையில் போட்டுவிட்டு போய் முகத்தைக் கழுவிக் கொண்டேன்.

எத்தனையோ நாட்களுக்குப் பின்பு சாமிபடத்தின் முன் இருந்த குத்துவிளக்கைக் கொளுத்திக் கும்பிட வேண்டும் போல் இருந்தது.

அப்படியே செய்தேன்...

படிப்பகம்

padippakam



ஆனாலும் எனக்கே ஆச்சரியமாய் இருந்தது... ஏன் கடவுளின் காலடியில் போய் நிற்கிறேன் என்று... அப்பாவும் மூர்த்தியும் என்னை விட்டுப் போன பின்பு... இன்று கடவுள் மட்டும் தானா துணை...

கடவுளைக் கும்பிடும்பொழுது எப்பொழுதும் எல்லோரை யும் நல்லாய் வைச்சிரு என்றுதான் கும்பிடுவது வழக்கம்... ஆனால் இன்று மட்டும் வழக்கத்துக்கு மாறாக அமைந்திருந்தது.

அம்மாவை நல்லாய் வைச்சிரு...

ராசாத்தியையும் பிள்ளைகளையும் நல்லாய் வைச்சிரு...

மூர்த்தியையும் அவன் குடும்பத்தையும் நல்லாய் வைச்சிரு... என்று எல்லோருக்குமாகத் தனித்தனியே கும்பிட்டுவிட்டு மீண்டும் சுவாமிபடத்துக்கு முன்னால் இருந்த விளக்குகளை அணைத்தேன்.

மனத்தினுள் தடுமாற்றம் அல்லது தனிமை ஏற்படும் பொழுது ஏதோ ஒரு துணை தேவைப்படுகிறது... அது இப்போது கடவுள் ஆகிறது... இதுவே ஒருக்கால் என் எழுத்துகள் ஆயின... அதுவே அமுதன் நாயர் என்னை நெருங்கக் காரணமாயிருந்தது.

வெளியே பார்த்தேன்... நன்கு இருட்டி விட்டது. எப்படியும் இந்த ஜனவரி முழுக்க இப்படித்தான் இருக்கும். இல்லை. ஜனவரி பின்னடியில் காலமை ஆறு மணிக்கு நிலம் நன்கு தெரியத் தொடங்கிவிடும். அவ்வாறே பின்னேரமும் பிந்தித்தான் இருட்டு வரும்.

கடையில் கட்டிக்கொண்டு வந்த சாப்பாட்டைப் பிரிப்போம் என்று நினைத்தபொழுது, கடையில் வாசித்த அந்த

படிப்பகம்

padippakam



அப்பாவிப் பெண்களின் படங்கள் என் ஞாபகத்துக்கு வந்தன.

பாவங்கள்... அதுகளையும் யாரோ ஒருத்தி ஒரு பத்து மாதம் சுமந்து பெற்று... கன்னிப் பருவத்து கனவுகளோடும்... கல்யாணக் கனவுகளோடும் வளர்ந்து... இப்படி என்னைப் போலை முன்பின் தெரியாத ஆண்களைச் சபலப்படுத்த அப்பிள்ளைகளின் படங்களை அவன் பயன்படுத்தியிருக்கிறான் என நினைக்கும் பொழுது அவனுக்குக் கிடைத்த தண்டனையை என் மனம் நியாயப்படுத்தத்தான் செய்தது.

யாரோ ஒருவனைத் திருமணம் செய்து எங்கையோ குழந்தை குட்டிகளுடன் இருக்கும் இந்த அப்பாவிப் பெண்களின் படங்கள் என் போன்றவர்களின் கணனிகளில் இருக்கவே கூடாது. சாப்பிட முதல் அவற்றை என் கம்பியூட்டரில் இருந்து அழிக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டு கம்பியூட்டரைத் திறந்தேன்... அமுதன் நாயரின் மூன்றாவது அல்லது நாலாவது மெயிலில்தான் அந்தப் படம் இருக்க வேண்டும்... தேடினேன்... தேடும் பொழுது எனது இலக்கிய ஆர்வத்தை வைத்து எப்படி அவன் என்னைத் தன்வசம் இழுத்துக் கொண்டு போனான் என்று நினைத்துக்கொண்டேன்... அல்லது நான் முட்டாளாக்கப்பட்டிருக்கிறேன் என்று நன்கு உணரத் தொடங்கினேன்...

என்ன செய்வது?... சில விடயங்கள் காலம் கடந்த ஞானங்கள்தானே?... சூதாடுவது பிழையென தருமனுக்குத் தெரியாதா?... அப்படித் தெரிந்தும் அறிவு மயக்கத்தால் போனபடியால்தானே பாரதப்போர் மூண்டது... பகவத் கீதையும் கிடைத்தது...

படிப்பகம்

padippakam



அப்படியே என் கதையும் ஆகட்டும்... என்னைப் போல புலம் பெயர்ந்த தமிழர்களும் நிம்மதியாக வாழ இந்த உலகத்தில் ஒரு இடம் வேண்டும்...

கடைசி அத்தியாயத்தில் எழுதியது போல என் தேசத் துக்குரியவர்களே... இனியொருவனைத் துரோகியாக்கி விடாதீர்கள் என்ற வரி என்முன்னே வந்து நின்றது.

கை கம்பியூட்டரில் அந்தப் பெண்ணின் படத்தைத் தேடிக் கொண்டிருந்தது... இதோ... இதோ இந்தப் படம் தான்... கம்பியூட்டர் திரையை அவள் படம் நிறைத்திருந்தது...

இந்தப் படத்தை வைத்துத் தானே...

வெளியில் ஒரு கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

யாராக இருக்கலாம் என நினைக்கு முன்பு வாசல் மணி அழுத்தப்பட்டது.

எதுவோ பார்ப்போம் என நினைத்துக்கொண்டு போய் வாசல் கதவைத் திறந்தேன்.

நாலு பேர் நின்றிருந்தார்கள்

மனம் ஒரு கணம் தள்ளாடியது...

“உங்களோடை ஒருக்கா கதைக்க வேணும்... உள்ளுக்கை வரலாமோ...”

வரவேண்டாம் என்று நான் சொல்வதால் மட்டும் அவர்கள் வராமல் விடப்போவதில்லை.

“வாங்கோ” என்றுவிட்டு மேசையில் இருந்த கம்பியூட்டரை மூடி ஒரு கரையில் வைத்தேன்.

படிப்பகம்

padippakam



அதை மூடும் பொழுது அந்தப் படத்தை ஒருவன் பார்த்து விட்டான்... பின்பு மற்றவனுக்கு சமிக்ஞை காட்டினான்.

அதை நானும் கவனிக்கத் தவறவில்லை...

அவர்கள் மேசையைச் சுற்றி வட்டமாக அமர்ந்து கொண்டார்கள்...

தாங்கள் ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்... அவர்களில் யாரையுமே நான் முந்தி இந்த சிற்றியில் சந்தித்து இருக்கவில்லை.

“சொல்லுங்கோ என்ன கதைக்கப் போகின்றீர்கள்...”

“எங்களுக்கு உங்களிட்டை இருக்கிற எல்லாம் வேணும்...”

“காசா...”

“மண்ணாங்கட்டி காசு... அது எங்களிட்டை போதுமான அளவு இருக்கு... வேணுமெண்டால் உங்களுக்கு எவ்வளவும் தாறம்...” இதைச் சொல்லும்போது சொன்ன வனின் வாயில் இருந்து விஸ்கி நெடி அடித்தது...

“மச்சான் சும்மா இரு...” என ஒருவனை மற்றவன் அடக்கியபடி... “நீங்கள் கோவியாதையுங்கோ... அவர் அப்பிடித் தான்... கொஞ்சம் போட்டால்...”

“காசுக்காக வராட்டி... நீங்கள் என்னத்தை எதிர்பார்த்து வந்திருக்கிறியள்...” நானே கேட்டேன்.

“உங்களிட்டை எங்களைப்பற்றி... எங்கடை நாட்டு மற்றைய சக இயக்கங்கள் பற்றி என்ன என்ன எல்லாம்

படிப்பகம்

padippakam



இருக்கோ... அது அத்தனையும் வேண்டும்...”

இதை ஒருவன் சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுது விஸ்கி அடித்தவன் குறுக்கிட்டு... “மச்சான்” என சிம்பிளாய் அழைத்தவாறே, “அந்த அமுதன் நாயர் தேவடியாள் பயலுட்டை என்ன என்ன எல்லாம் எங்களைப் பற்றிச் சொல்ல வைச்சிருந்தியளோ... அவ்வளவும் எங்களுக்கு வேணும்...”

அமுதன் நாயரிடம் இருந்து வந்த மெயில்கள் அனைத்தை யும் நிச்சயமாய் அவர்கள் வாசித்து விட்டார்கள்.

அடிமனத்துள் ஒரு பயம் தொட்டாலும் என்னைச் சுதாரித்துக் கொண்டேன்.

இது அவர்களைப் பார்த்து ஏற்பட்ட பயம் இல்லை... என் நிலையில் இருந்து ஒருகால் நான் கீழே இறங்கி விட்டேன் என்ற பயம் தான்... அவமானப் பயம்!

“நீங்கள் நிச்சயமாய் எனது மெயில்களைப் பார்த்து இருப்பியள்... அதுகளிலை எந்த ஒன்றிலும் யாரைப் பற்றியும் தவறாகவோ... இல்லை தவறுகளை நியாயப் படுத்தி சரியாகவோ நான் எழுதியிருக்கவில்லை...”

“ஓம் ஆமோதிக்கிறம்!... ஆனால், தான் இலங்கை இயக்கங்களைப் பற்றி ஆய்வு செய்யப் போறன்... அதுக்கு உங்களாலை முடிஞ்ச உதவியளைச் செய்யுங்கோ என்று இந்த ‘றோ’க்காரன் கேட்க... நீங்களும் ஓம் எண்டு பதில் போட்டனீங்கள்... கட்டாயம் உங்களிட்டை தகவல்கள் இல்லாமல் ஓம் எண்டு பதில் போட்டிருக்க மாட்டியள்... அதனாலைதான் நாங்கள் இப்ப பணிவாய் கேட்கிறம்...

படிப்பகம்

padippakam



உங்களிட்டை எங்களைப் பற்றியும் மற்றவை பற்றியும் இருக்கிற எல்லா விபரங்களையும் தரவேணும்...”

பணிவாய் கேட்கின்றோம் எனச் சொன்னாலும் ஒவ்வோர் வார்த்தையிலும் மிரட்டலின் தொனி இருந்தது.

“நான் ஓம் எண்டு சொன்னது உண்மைதான்... ஆனால் எதுவுமே என் கையில் இல்லை... வெப்சைட்டுகள்... வெளிவந்த புத்தகங்கள்... தமிழைவிட ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளிவந்த அநேக புத்தகங்களிலை தமிழருக்கே தெரியாத எத்தனையோ விடயங்கள் ஆதார பூர்வமாய் இருக்கு... அதுகளை எல்லாம் திரட்டித் தர முடியும் என்ற நம்பிக்கையில்தான் சொன்னேன்.”

அதுதான் உண்மையும்.

“தம்பி... உங்களிட்டை கதாப்பிரசங்கம் கேட்டுப் போட்டு வெறும் கையோடை அவலைச் சப்பிக்கொண்டு போக நாங்கள் வரேல்லை... அமுதன் நாயரும் உப்பிடித்தான் விட்டவன்... காலிலை முதல் வெடி விழத்தான் கொஞ்சம் வெளியிலை வந்தது... பிறகு கை... இன்னும் கொஞ்சம் வெளியிலை வந்தது... தலைக்குக் கிட்டவாக துவக்கு வந்த பொழுதுதான் றோ என்று தெரிய வந்தது... அதுக்குப் பிறகு எங்களுக்கு எதுவுமே அவனிடம் இருந்து தேவைப்படேல்லை...”

இது எனக்கு மிரட்டல்...

“நீங்கள் என்னை மிரட்டி என்னிடம் தகவல்கள் ஏதும் கிடைக்குமோ எண்டு பார்க்கிறியள்... ஆனால் உண்மை இது தான்...”

படிப்பகம்

padippakam



"அப்ப நாங்களும்... என்ன பெயர் அந்த தேவடி யாளுக்கு... ஆ... அமுதா நாயர். அது மாதிரி... அல்லி ராணி... ஆசை நாயகி எண்டு உங்களிட்டை கதை விட்டாத்தான் உங்களிடம் இருந்து ஏதும் கறக்கலாமோ..."

"பிளீஸ்... கொஞ்சம் மரியாதையாய் கதையுங்கோ... நீங்கள் நினைக்கிற மாதிரி நான் உங்களைப் பற்றியோ மற்ற ஆட்களைப் பற்றியோ யாருக்கும் எதுவும் சொல்ல வில்லை."

"நீங்கள் இதுவரை சொல்லேல்லை எண்டதும் தெரியும்... இப்ப நாங்கள் கேட்கிறதெல்லாம்... எங்களைப் பற்றி நீங்கள் தெரிஞ்சு வைச்சிருக்கிறது எவ்வளவு தூரம்... மற்றவைப் பற்றி அறிஞ்சு வைச்சிருக்கிறது எவ்வளவு தூரம்..."

"சொன்னா நம்புங்கோ... எந்தக் காலகட்டத்திலும் நான் யாரின் நதிமூலங்கள் ரிஷிமூலங்களை அறிய வெளிக்கிடேல்லை... அதுக்கான தேவையும் எனக்கு இருக்கேல்லை..."

"அப்ப ஏன் அமுதன் நாயர் உன்னைப் பிடிச்சவன்..."

"இஞ்சை புலம்பெயர்ந்த நாடுகளிலை இயக்க ஆக்கள்... அல்லது அவையின்ரை நடைமுறைகள் பற்றி நான் எழுத வெளிக்கிட்டதாலை என்னிடம் இன்னும் ஏதும் இருக்கலாம் என என்னை நாடி வந்திருக்கலாம்..."

வெறியில் இருந்தவன்... "நீங்கள் சொல்லுறதுகளை நாங்கள் நம்ப வேண்டுமாக்கும்!" என்று சொல்லிக் கொண்டே தனது இடுப்பில் சொருகியிருந்த துப்பாக்கியை எடுத்து முன் வைத்தான்.

படிப்பகம்

padippakam



“மச்சான் அவசரப்படாதை...” மற்றவர்கள் தடுத்தார்கள்...

“நீங்கள் மிரட்டி என்னட்டை ஏதும் உண்மை கிடைக்குமோ எண்டு பார்க்கிறியள்... ஆனால் என்னிடம் எந்த உண்மையும் இல்லை...”

“சும்மா அதையே சொல்லிச் சொல்லி எங்களை வெறுப்பேத்தாதை... இப்ப சொல்லு... நீ ஊரிலை எந்த இயக்கம்?... இஞ்சை எந்த இயக்கத்தை நீ ஆதரிக்கிறனி?...”

“இல்லை... நான் ஊரிலை எந்த இயக்கமும் இல்லை... இங்கை எந்த இயக்கத்துக்கும் நான் பண உதவி செய்யிறேல்லை...”

என்னுடன் கதைத்துக்கொண்டு இருந்தவன் ஒருவன் கம்பியூட்டரை நிமிர்த்தி அதில் இருந்த பெண்ணின் படத்தைக் காட்டி... “அவளுக்கு மாதா மாதம் எவ்வளவு காசு கொடுத்தாய்... இப்பிடி எத்தனை பேரோடை கிடந்தெழும்பி எங்களை இந்தியாக்காரனுக்குக் காட்டிக் குடுத்திருக்கிறாய்...”

“தயவு செய்து மரியாதையாய் கதையுங்கோ... இவ்வளவு நேரமும் நீங்களும் மரியாதையாய் கதைச்சியள்... நானும் பதில் சொல்லிட்டன்...” — என் கண்கள் சிவந்தன...

“என்ன மண்ணாங்கட்டி... நாட்டைக் காட்டிக் குடுக்கிற துரோகிக்கு மரியாதை...” சொன்னபடியே துப்பாக்கியை எடுத்து எனக்கு நேரே பிடித்தான்...

“சொல்லு... உனக்குத் தெரிஞ்சதுகளை எல்லாம் சொல்லு... எந்தெந்த இயக்கங்களிட்டை எவ்வளவு காசு இருக்கு? எந்தெந்த இயக்கம் எந்தெந்த நாடுகளோடை தொடர்பு

படிப்பகம்

padippakam



வைச்சிருக்கு? எந்தெந்த இயக்கம் எந்தெந்த நாடுகளிட்டை ஆயுதம் வேண்டுது... எப்பிடி அது நாட்டுக்கை வருகுது..."

"எனக்குத் தெரியாது..."

அவன் துப்பாக்கியை அழுத்தினான்...

என் பின்னால் இருந்த கண்ணாடி யன்னல் தூள் தூளாய் ஆனது.

வேண்டுமென்றே அவன் என்னை மிரட்டுவதற்காக என் தலையைக் குறிபார்த்த திசையை மாற்றியிருக்கிறான்.

மற்ற நால்வரும், "பொறு... பொறு மச்சான் அவசரப் படாதை" எனத் தடுத்தார்கள்...

இப்போ அவன் பாய்ந்து என் தலையைப் பிடித்து மேசை மீது அழுத்தினான்.

அழுத்திப் பிடித்தபடி துப்பாக்கியை என் தலையடியில் நெருக்கிப் பிடித்தான்...

"சொல்லடா... நீ யார்ரை ஆள்?"

நான் நோ தாங்க முடியாது பற்களைக் கடித்துக் கொண்டு முகம் அழுத்தப்படுவதின் நோவைத் தாங்கிக்கொண்டு இருக்க... முன்பு என் கம்பியூட்டரைப் பார்த்து கொமன்ற் அடித்தவன் நான் பயணத்தால் கொண்டு வந்த சூட்கேசைத் திறந்து... "பாத்தீங்களா மச்சான்... ஐயா தனக்கும் இந்த மலையாள வேசைக்கும் கலியாணத்துக்கு உடுப்போடை வந்திருக்கிறார்..."

அம்மாக்கும் அப்பாக்கும் வேண்டிய அந்த பட்டுச் சேலைகளையும் பட்டு வேட்டியையும் நிலத்தில் போட்டு

padippakam



காலால் மிதித்தான்... அப்பிடிச் செய்யாதை எனச் சொல்ல வாய் முயன்றது.... ஆனால் வாய் திறக்க முடியாதபடி என் முகம் அழுத்திப் பிடிக்கப்பட்டிருந்தது...

சேலையைக் காலால் மிதித்தவன் இப்பொழுது எனது சாப்பாட்டுப் பார்சலையும் அதன்மீது கொட்டி "இந்தா உனக்கும் அவளுக்கும் பூதாக்கலச்சோறு..." என்றுவிட்டு தனது ரவுசரைக் கீழே இழுத்து அவற்றின் மேல் மூத்திரம் பெய்ய முற்பட்டான்...

எங்கிருந்து வந்தது அப்படி ஓர் பலம்...

தலையடியில் நெருக்கிப் பிடித்திருந்த துப்பாக்கியை யும் அதைப் பிடித்திருந்தவனின் கைகளையும் இழுத்துக் கொண்டு அப்பா அம்மாவின் பட்டு உடுப்பில் மூத்திரம் பெய்ய முற்பட்டவன் மேல் பாய்ந்தேன்.

யாரும் எதிர்பார்க்கவில்லை.

டுமீல்!

துப்பாக்கி வெடித்தது!

மூத்திரம் பெய்தவனின் தலையில் வெடி விழுந்திருந்தது.

அவன் கதை அவ்வளவு தான்.

துப்பாக்கியை என் கைகளும் என் தலையை அழுத்திப் பிடித்திருந்தவனின் கைகளும் பிடித்திருந்தன... ஆனால் அவனே வெலவெல என்று நடுங்கினான்... அவ்வாறே மற்றைய மூவரும்...

துப்பாக்கியை இழுத்துப் பறித்து அவனை நோக்கிப் பிடித்தபடி வெளியே ரவைகள் தீரும் வரை சுட்டேன்.

படிப்பகம்

padippakam



அவன் பயந்து நடுங்கினான்...

அச்சமயம் அவன்களில் ஒருவன் பின்னால் இருந்து என் பிடரியில் போத்தல் ஒன்றினால் அடித்தது நினை விருக்கு. நிலத்தில் விழுந்த என்னை ஏறி மிதித்து என்னை உழக்கி... மீண்டும் மீண்டும் அடித்து என்னைத் தூஷணங்களால் பேசியபடி... என்னைப் புரட்டிப் பார்க்கிறார்கள்... புரட்டியவன் கைகளில் என் தலையில் இருந்து வடிந்த இரத்தம்...

“ஆள் சரியடா...”

“எங்கடை ஆளைத் தூக்கடா” என்று செத்தவனை இழுத்துக் கொண்டு போனார்கள்...

ஏன் என்னைக் கொல்லாமல் விட்டுவிட்டுப் போனார் கள்... செத்துப் போனேன் என்று நினைத்தார்களா...

எனக்குள் குளிர்ந்துகொண்டு வருகிறது... கண்கள் மயங்கும் போலை இருக்கிறது... பக்கத்து வீட்டு டெனிஷ்காரர்கள் நிக்கிறமாதிரி இருக்கு... பொலிஸ்காரர் வீட்டைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு நிக்கிறார்கள் போலும்...

அம்புலன்ஸ் வந்து கொண்டிருக்கு...

“ஹன் ஸ்குவ டுத்... ஏ டே இங் நொக் டி ஹா ஸ்லோத் மெ ஹினன் இ ஸ்ரீலங்கா... டி போசெற்ற ஓசோ ஹிய...” ***(“ஆள் முடிஞ்சிருக்க வேண்டும்... ஸ்ரீ லங்காவில் அடிபட்டது போதா மல் இஞ்சை வந்தும் அடிபட்டுச் சாகிறாங்கள்...”)*** ஒரு பொலிஸ்காரன் மற்றவனுக்குச் சொல்லுகின்றான்...

படிப்பகம்

padippakam



பொலிஸ் சொல்லி இரண்டு நிமிடம் சென்றிராது...

வீட்டு வாசலில் சைலன்சர் ஒலியுடன் வந்து அம்புலன்ஸ் நிற்கும் சத்தம் கேட்டது...

அவசர அவசரமாக என்னை ஸ்ட்ரெச்சரில் வைத்து ஏற்றினார்கள்...

"வோடன் எய சிற்றுவேஷன்?" ***(நிலைமை எப்படியிருக்கு?)*** பொலிஸ்காரன் அம்புலன்ஸில் வந்த டாக்கடரிடம் கேட்கிறான்.

"ஹன் லிவ... ஹன் பிளிவ பிவிஸ்லுஸ்ற்... மொஸ்கி க ஹன் கம ரில் ஹோாம ஸ்ரேஜ், இன் வீ கம ரில் ஹொால் பிற்டல்... ***(ஆளிலை உயிர் இருக்கு... அறிவுதான் மயங்கிக் கொண்டு போகுது... சிலவேளை நாங்கள் கொஸ்பிற்றலுக்குப் போக முதல் ஆள் கோமா ஸ்ரேஜுக்குப் போனாலும் போயிடலாம்...)***

"டொக்டர்... புறோவ் ஔ றீத ஹம். டெ ஏ இன் மோவ போசூ..." ***(டாக்டர் எப்பிடியும் காப்பாற்றப் பாருங்கள்... இது மேடர் அட்டம்ப்ட கேஸ்...)***

எனக்கு கண்ணயர்கின்றது போல இருக்கின்றது.

உடம்பெல்லாம் இன்னும் குளிர்ந்துகொண்டு வருகிறது.

அந்தப் பனி மலையுள் போகின்றேன் போல இருக்கு...

அப்பாவும் அம்மம்மாவும் என்னைக் காட்டிக் காட்டிக் கதைத்துக் கொண்டு நிற்கின்றார்கள்...

அம்மாவும் ராசாத்தியும் வீட்டு வாசலில் இருந்து புளி உடைத்துக் கொண்டு இருக்கிறார்கள்...

படிப்பகம்

padippakam



ராசாத்தியின் மகள்மார் கிணற்றில் இருந்து தண்ணீர் மொண்டுகொண்டு வந்து முன்னே நிற்கும் ரோஜாச் செடிக்கும் குறோட்டன்ஸ் செடிகளுக்கும் நிலம் செழிக்க ஊற்றிக் கொண்டு இருக்கின்றார்கள்...

ராசாத்தியின் மகன் ஒற்றைக் காலுடனும்... கெவர் தடிகளுடனும்... நான் ராசாத்திக்குச் சொல்லிவிட்ட அநாதை இல்லங்களுக்குப் போய் அநாதையான... கை காலை இழந்த அந்தப் பிள்ளைகளுக்கு என்னென்னவோ எல்லாம் கொடுக்கிறான்... அந்தப் பிள்ளைகளின் முகத்தில் சந்தோஷம் தெரிகிறது... அது போதும்...

அம்புலன்ஸ் போய்க் கொண்டிருக்கிறது...

என் கைகள் சோர்ந்து கொண்டு போகுது...

"ஹன பிளிவ ரில் ஹோம ஸ்ரேஜ், டெ கோ ஹேட்டிற்... ***(ஆள் கோமா ஸ்ரேஜுக்கை கெதிகெதியாய்ப் போய்க் கொண்டு இருக்கிறார்...)*** டாக்டர் பொலிஸ்காரனிடம் சொல்லுவது கேட்கிறது.

என்ரை கடிதம் போன உடனை பதறிக்கொண்டு கட்டாயம் அம்மா எனக்கும் மூர்த்திக்கும் டெலிபோன் பண்ணுவா... கட்டாயம் மூர்த்தி சொல்லுவான்... அவன் தற்கொலையும் செய்யேல்லை... அவனை யாரும் கொலை செய் யேல்லை... அவன் துரோகியும் இல்லை... சாதாரண மனுஷன்... கோமாவிலை ஆஸ்பத்திரியிலை இருக்கிறான் எண்டு சொல்லுவான்... அழுது அழுது சொல்லுவான்... அது போதும் அம்மாக்கு... எண்டைக்கோ எனக்கு நினைவு வரும் எண்ட நம்பிக்கையோடு கோயில்களில் உள்ள

padippakam



சாமிகளோடு வாதாடிக் கொண்டே தன் வாழ்வைக் கழிப்பா...

எனக்கு இன்னும் ஏலாமல் வருகிறது...


என் வாய் பிதற்றுமாப் போல் இருக்கு...

"ரா... சா... த்... தி...!"

டாக்டரும் பொலிஸ்காரனும் தங்கள் முகத்தை எனக்குக் கிட்டவாகக் கொண்டு வருகிறார்கள் போலும்... நான் சொல்வதைக் கேட்க...

"அ... ம்... மா... வை... ப்... பா... ர்... த்... து... க்... கொ... ள்..."

இதற்குப் பின் எனக்கு எதுவுமே தெரியவில்லை.



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

சரியான வழிகாட்டலின் பின்னாலோ...

அன்றில்,

பிழையான வழிகாட்டலின் பின்னாலோ...

வீட்டை விட்டு வெளியேறி வீதிக்கு வந்து

தமது வாழ்வை நாட்டுக்காக

அர்ப்பணித்த

அனைவருக்கும்

இந்தப் புதிய தமிழ் நாவல்

சமர்ப்பணம்...



மித்ர
வெளியீடு

ISBN 978 8189748739
9 788189 748739

படிப்பகம்